# தந்தப்பேழை

சாயிசசி



சிங்கம் பதிப்பகம்

# தற்றுப் பேழை

கதைத் தொகுப்பு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
Jaffna Central College Library
நூலகம்

சாயி சசி

7611
F

வெளியீடு
**பூபாலசிங்கம் பதிப்பகம்**
202, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.

| | | |
|---|---|---|
| நூல் | : | தந்தப்பேழை (கதைத் தொகுப்பு) |
| ஆசிரியர் | : | சாயி சசி |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பு | : | பங்குனி 2006 |
| மொழி | : | தமிழ் |
| வெளியீடு | : | பூபாலசிங்கம் பதிப்பகம் |
| முகப்போவியம் | : | என். எஸ். ஞானகுருபரன் |
| அமைப்பும் அச்சும் | : | 'கிறிப்ஸ்' |
| விலை | : | ரூபா. 250.00 |

# "தந்தப் பேழை"

## தமிழ் வாழுமிடமெல்லாம் செல்லட்டும்

**உடுவை எஸ். தில்லைநடராசா**

*இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் வதிவிடம் தேடிய நாடுகளில் தமிழார்வம் காரணமாகவும், தமிழ் வாசகர்களின் தேடல் காரணமாகவும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பல்கிப் பெருக ஆரம்பித்தன. வெளிவந்த - வெளிவரும் சஞ்சிகைகள் சில இலங்கையில் வாழும், இந்தியாவில் வாழும் எழுத்தாளர்களின் படைப்புக்களைத் தாங்கி வெளிவர - சில சஞ்சிகைகள் புலம் பெயர்ந்தவர்களுக்கு களம் அமைத்தன. புலம் பெயர்ந்தவர்களில் பலருக்கு ஏற்கனவே அறிமுக மான படைப்பாளிகளும் அடங்கியிருந்தனர். ஆர்வத்தினால் எழுத்தாற் றலை வளர்த்தும், வளப்படுத்தியும் களம் இறங்கியவர்களும் உண்டு. அவர்களில் 'சாயிசசி' என்னும் பெயரில் அறிமுகமான திருமதி இராச லட்சுமி சிவஞானப்பிரகாசம் (இராஜி) குறிப்பிடத்தக்கவர்.*

*யாழ். கைதடியில் பிறந்த இவர் மாணவப் பருவத்திலேயே கலை யார்வமும் தமிழ்ப் பற்றும் மிக்கவராக நாடகம், விவாதம் ஆகியவற்றில் அதீத ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். கல்வியிலும் சிறந்து விளங்கியதால் இலங்கை வங்கியில் உயர் பதவி இவரைத் தேடி வந்தது. நாட்டுச் சூழ்நிலையால் அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்த போதும், அறிவும் புலமையும் அவுஸ்திரேலிய அரசில் வரியியல் சட்ட வல்லுனர் பதவியைப் பெற்றுக் கொடுத்தது.*

*'கலப்பை' சாயிசசியின் எழுத்தாக்கத்திறனை இனங்கண்டு ஊக்குவிக்க பல கதைகள் பிறந்தன. இராமநாதன் கல்லூரி பழைய மாணவர் சங்க சிட்னி கிளையின் 'பத்தாவது ஆண்டு நிறைவு மலர்' இவரது திறமைக்கு இன்னோர் எடுத்துக்காட்டாகும்.*

*இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா எனப் பல்வேறு நாடுகளில் பல மனித முகங்களைப் பார்த்தவர்; பல மனித எண்ணங்களைப் புரிந்து கொண்டவர். மாறாத முகங்களையும், மாறாத எண்ணங்களையும் கண்டுகொண்ட வேளையிலும், சந்தர்ப்ப சூழலுக்கேற்ப தம் நிலை*

மறந்தவர்களையும் கண்டு ஆதங்கப்பட்டுள்ளார். சற்று வித்தியாசமான மொழிநடையும் இவரது கதைகளுக்கு மெருகேற்றுகின்றது.

பழம்பெரும் நூல்களில் படித்து நயந்த அறிவுரைகள், ஆன்மிகப் பெரியார்களின் வழிகாட்டல்கள், நற்சிந்தனைகள் 'சாயிசசி'யின் எழுத்துக்களில் பொதிந்துள்ளது இன்னொரு சிறப்பம்சமாகும்.

உதாரணமாக, ஒரு கதையில் 'நட்பு என்பது வெறுமனே சிரித்து மகிழ்வதற்கு மட்டுமல்ல - வேண்டிய சமயத்தில் யானைப் பாகனின் கையிலிருக்கும் அங்குசம் போலச் சரியான வழியில் இட்டுச் செல்லவும் உதவவேண்டும்' என எழுதுகின்றார்.

சில ஆசிரியர்களைப் பற்றி அறிந்து கொண்ட 'சாயிசசி' இப்படி எழுதுகின்றார். 'அமுதசுரபி' எனும் கதையில்,

> **'ஹெலனிடமுள்ள ஒரு கெட்ட பழக்கம் ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்லி மாணவர்களுக்குச் சலிப்பூட்டுவது. அது எப்பொழுதும் சத்யா போன்ற கற்பூர புத்தியுள்ள மாணவரின் பொறுமைக்கு மிகப் பெரிய சோதனையாக அமையும்.'**

நெஞ்சைத் தொட்டு கண்களை ஈரமாக்கிய கதை - 'நீயெனதின் னுயிர் கண்ணம்மா'.

பரவலாக பல நாடுகளைக் கதைப்புலமாகக் கொண்டு எழுதும் ஆற்றல் எல்லோருக்கும் கைவரப்பெறுவதில்லை. பல்வேறு குணநலன் கொண்ட பாத்திரங்களைப் படைக்கும் திறனும் சிலருக்கே உண்டு. சிக்கலான கருக்களை, சிக்கல் இல்லாத நடையில் கதைகளாக்கிய சிறப்பு 'சாயிசசி'யைச் சேரும்.

நல்ல நாடொன்றில் அதி உயர் பதவி வகிக்கும் திருமதி இராசலட்சுமி சிவஞானப்பிரகாசத்தின் பன்முக ஆளுமை வளரவும் வாழ்த்தி, அவரது ஆக்கங்கள் தொடர்ந்து தமிழ் வாழுமிடமெல்லாம் சென்றிடவும் வாழ்த்துகின்றேன்.

**உடுவை எஸ். தில்லைநடராசா**
மேலதிகச் செயலாளர்

கல்வி அமைச்சு
'இசுருபாய', பத்தரமுல்ல,
இலங்கை.
05. 08. 2005

# முன்னுரை

'**த**மிழ்' ஒரு மொழியா? இனமா? உணர்வா? எனச் சிந்தித்தால் 'தமிழ்' என்பது ஓர் உணர்வே எனலாம். அதனால்தான் மகாகவி பாரதியாரும் 'தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!' எனப் பாடி வைத்தான். தமிழ் உணர்வும் தமிழார்வமும் இரட்டைக் குழந்தைகள் எனின் மிகையாகாது.

சிறு வயதிலிருந்தே தமிழார்வத்தை என்னுள் வளர்த்த பெருமதிப் பிற்குரிய எனது தந்தையார் யாழ் கைதடி வடக்கில் வாழ்ந்து மறைந்த பிரபல வர்த்தகர் திருவாளர் முருகேசர் அம்பலவாணர் தம்பிஜயா அவர்களுக்கும் என் அன்பு அன்னை திருமதி தெய்வானைப் பிள்ளை தம்பிஜயா அவர்களுக்கும் அஞ்சலி செலுத்துகின்றேன்.

'தந்தப்பேழை' என்ற இந்த அழகிய நூல் இன்று சிறப்புற வெளியா வதற்கு ஆக்கமும் ஊக்கமும் ஆதரவும் அளித்த அனைத்து நல்லிதயங் களுக்கும் என் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

இந்நூல் சிறப்பாக வெளிவருவதற்குத் தோன்றாத் துணையாக இருந்து அருள் புரிந்த எமது இஷ்ட தெய்வம் பகவான் ஸ்ரீசத்யசாயி பாபாவின் மலர்ப் பாதங்களில் இச்சிறு நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.

**அன்புடன்**
**சாயிசசி**

சிட்னி
அவுஸ்திரேலியா
2006

# பதிப்புரை

**சா**யிசசி என்கின்ற புனைபெயரில் எழுதி வருகின்ற திருமதி இராஜி சிவஞானப்பிரகாசம் அவர்களுடைய சிறுகதைத் தொகுப்பான 'தந்தப்பேழை' என்கின்ற நூல் எமது பூபாலசிங்கம் பதிப்பகத்தினூடு வெளிவருகிறது. வெறும் வர்த்தகராய் மட்டுமன்றி இலக்கியவாதிகளின் நண்பனாயும், காவலனாயும் விளங்கிய எங்கள் தந்தையார் அமரர் பூபாலசிங்கம் அவர்களின் கனவுகளில் ஒன்றை நனவாக்குகிறோம் எனும் உண்மையில் எமது மனம் எல்லையற்ற மகிழ்ச்சியடைகின்றது.

புலம்பெயர் தேசங்களிலும் தமிழை நிலைநிறுத்துவதற்காக எழுத்துப் பணியில் ஈடுபட்டு வரும் புலம்பெயர் ஈழத் தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவரே அவுஸ்திரேலியாவில் வசித்து வரும் சாயிசசி ஆவார். அவுஸ்திரேலிய சிட்னி தமிழ்ப் பட்டதாரிகள் சங்கத்தினரால் தொடர்ச்சியாக வெளியிடப்பெற்று வரும் 'கலப்பை' என்கின்ற சஞ்சிகையினூடாக இலக்கிய உலகத்தினுள் ஆர்வத்தோடு புகுந்த இவரது சிறுகதைகள் இங்கே தொகுப்பாகியுள்ளன. புலம்பெயர் நாடுகளில் எமது தமிழர்கள் அனுபவிக்கும் இன்னல்களை எடுத்துக்காட்டுவதில் பின்னிற்காத இவருடைய சிறுகதைகள் சமவேளையில் இரண்டு தொகுப்புகளாக வெளிவருவது மகிழ்ச்சிக்குரியதே. ஒன்று இப்பொழுது நீங்கள் கரமேந்தியுள்ள 'தந்தப்பேழை' மற்றையது 'சுநாதங்கள்' என்கின்ற தலைப்பிலான பன்னிரண்டு சிறுகதைகளின் தொகுப்பு நூல்.

இரண்டு தொகுப்புகளுக்கும் நாடறிந்த எழுத்தாளரும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளருமான எஸ். தில்லைநடராசா அவர்கள் அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

தமது இரண்டு தொகுப்புக்களையும் எமது பதிப்பகத்தின் சார்பாக வெளிக்கொணரும் சாயிசசி அவர்களுக்கும் அச்சிட்டுத் துணை செய்த 'கிறிப்ஸ்' நிறுவனத்தினருக்கும் எமது பதிப்பகத்தின் சார்பில் நன்றிகள்.

வழமைபோலவே தமிழ் வாசக அன்பர்கள் இந்நூல்களையும் பெற்றுப் பயனடையுமாறு வேண்டுகின்றோம்.

நேசமுடன்
பூ. ஸ்ரீதரசிங்

அதிபர்,
பூபாலசிங்கம் பதிப்பகம்
202, செட்டியார் தெரு, கொழும்பு - 11

## உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | அணைக்கும் கரங்கள் | 9 |
| 2. | அமுத சுரபி | 23 |
| 3. | அன்பெனும் அங்குசம் | 40 |
| 4. | இக்கரைப் பச்சை | 54 |
| 5. | காக்கைச் சிறகினிலே நந்தலாலா | 68 |
| 6. | நீயெனதின்னுயிர் கண்ணம்மா | 94 |
| 7. | தேவரிஷி நாரதர் தரிசித்த கலைக்கோயில் | 106 |
| 8. | நேசம் மறக்கவில்லை நெஞ்சம் | 117 |
| 9. | பனிப்படலம் | 137 |
| 10. | தந்தப் பேழை | 149 |

# அணைக்கும் கரங்கள்

**அ**க்ஷயா மிகுந்த மனக்குழப்பத்தில் இருந்தாள். கடந்த இருபது வருடங்களாக அவள் ஒரு சிட்டுக்குருவி, பெற்றோரின் செல்லப் பெண். தங்கையின் ஆசை அக்கா. அவள் வந்த பின்தான் தங்களுக்கு சொத்துச் சுகம் தங்கை ஆருத்ரா எல்லாம் வந்ததாகப் பெற்றோர் வாய்க்கு வாய் சொல்லும்போது அவளுக்குள் ஒரு சிறு கர்வம் தலைகாட்டும். ஆனாலும் அவள் அதை அப்படியே அமுக்கிவிடுவாள். அவள் எல்லோராலும் விரும்பப்படுபவள். அக்ஷயா தங்கம் என அயலவர்களும், மிகவும் கெட்டிக்காரி என ஆசிரியர்களும் பெருமையாகக் கூறுவார்கள். "எல்லாம் உன் அம்மா மாதிரி" என அவள் அன்னை சில சமயம் கூறும் போது அவளுக்குப் புரியாது. 'நீ எல்லாவற்றிலும் என்னைப் போல' என்று சொல்லாமல் என்ன இது எதிர்மறை? 'உன் அம்மா மாதிரி?' அது அவளுக்குப் புரிவதே இல்லை அதை அவள் மனத்துள் போட்டுக் குழப்பவுமில்லை. அதன் போக்கிலேயே விட்டுவிட்டாள்.

ஆனால், அண்மையில் அவள் பெற்றோர் "நீ நாங்கள் பெற்ற பெண் ணில்லை. எனது சினேகிதியிடமிருந்து உன்னைத் தத்தெடுத்தோம்" எனச் சொன்னபோது அவள் அதிர்ந்தாள். ஆனால் அவர்கள் "இதனால் எந்த மாற்றமுமில்லை கண்ணம்மா. இது உனக்குத் தெரிந்திருக்க வேணும் என்பதற்காகச் சொல்லி வைத்தோம். ஆருத்ராவுக்கு இது தெரியாது. அவளுக்கு என்றைக்கும் தெரிவிப்பதாக இல்லை" என்றனர். இருந்தாலும் ஏன் சொன்னார்கள் என வேதனையாக இருந்தது. தன்னைப் பெற்றவளை அறிய முனைந்தபோது "நானாகச் சொல்ல மாட்டேன். எனக்கு அவள் இருக்குமிடமும் தெரியாது. என்னிடம் சத்தியம் வாங்கியிருக்கிறாள். ஆகவே, அவளாக வந்தால் உன்

அதிர்ஷ்டம் கண்ணம்மா. அதற்காகத்தான் இந்த உண்மையை உனக்கிப்போ சொல்ல வேண்டி வந்தது. ஒரு வேளை அவள் உன்னைத் தேடி வரும்போது நானும் உன் அப்பாவும் இல்லாவிட்டால் அவள் ஏமாந்து விடுவாள், ஆனால் அவளை என்றைக்கும் வெறுக்காதே அவள் ஓர் உத்தமி, சந்தர்ப்ப சூழ்நிலையும் இந்தச் சமூகமும் சதி செய்ததால் அவளுக்கு இந்தக் கதி நேர்ந்தது" என்றனர். அதன் பின் அக்ஷயா என் அப்பா யாரென்று உதடுவரை வந்த வார்த்தையையும் தனக்குள் அமுக்கிக்கொண்டாள்.

அதிலிருந்து ஒருவாறு அவள் மீண்டெழும் வேளையில் தான் அவள் அருணைச் சந்தித்தாள். மாணவர்கள் மாற்றுத் திட்டத்தின் கீழ் கனடாவி லிருந்து வந்திருந்தான். இருவரும் ஒரே பாடங்கள் படித்ததால் அவர்களி டையே நட்பு மலர்ந்தது. அந்த நட்பு நாளடைவில் காதலாக மலர ஆரம்பித்த வேளையில் ஒரு நாள் அவனை வீட்டுக்கு அழைத்துச் சென்று தன் பெற்றோருக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

அருண் தான் ஒரு ரயில் விபத்தில் பெற்றோரை இழந்ததாகவும் அதே ரயிலில் வந்த ஜானகி தன்னை எடுத்த வளர்த்ததாகவும் சொன்னான். ஜானகி பற்றி அக்ஷயாவின் அம்மா வைதேகி அருணிடம் பல கேள்விகள் கேட்டார். என்ன படித்தவர், என்ன செய்கிறார், திருமணமாகியதா என்பதிலிருந்து உயரம், பெருப்பம், நிறம் வரை எல்லாம் கேட்டார். அக்ஷயாவுக்கு வியப்பாக இருந்தது. ஏன் இதெல்லாம் கேட்கிறார் என வியந்தாள். பதில் சொல்லி ஆற்றமாட்டாத அருண் தன் பர்ஸ்ஸிலிருந்த படத்தை எடுத்து 'இதோ என் அம்மா ஜானகி' என்றான். அதைப் பார்த்த வைதேகி 'ஜானு' எனக் கண் கலங்கினாள். பின் "ஜானகி என் சினேகிதி அவளுடன் எனக்கு அதிக காலமாகத் தொடர்பில்லை" என்ற குண்டைத் தூக்கிப் போட்டாள். அக்ஷயா அதிர்ந்தாள். அப்படியானால் அது அம்மாவா என நினைத்தாள். அவளுக்கு என்னவோ செய்தது. ஆனால் அருணை வைத்துக் கொண்டு கேட்க வேண்டாமெனப் பொறுமையாக இருந்தாள். அவன் போனதும் அன்னை அவள் ஊகத்தை உறுதி செய்தார்.

அப்படியானால் அருண் அவளைப் பெற்றவளின் வளர்ப்பு மகன். அவளுக்கு அண்ணனல்லவா? அவனை அவள் எப்படிக் காதலிக்கலாம். இதை அருணிடம் எப்படிப் புரிய வைப்பது எனத் திகைத்து நின்றாள். தன் பிறப்பின் ரகசியத்தை அருணிடம் முதலே சொன்னதால் இதையும் சொல்லலாம். அவன் புரிந்து கொள்வான் என நினைத்தாள். ஆனால் தனக்கு மட்டும் ஏன் இப்படி என மனம் மிக வருந்தினாள்.

அருணிடம் சொன்னபோது 'அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்' என்றான். "புரியாமல் பேசவேண்டாம் அருண். எல்லாவகையிலும் ஜானும்மாதான் உனக்கு அம்மா. அம்மா மட்டுமல்ல அப்பாவும். நீ என்னைத் திருமணம் செய்து அவரை உன் மாமியாராக நினைக்க முடியுமா? அல்லது என்னால்தான் என்னைப் பெற்ற தாயை இத்தனை வருடம் கண்ணிலே படாவிட்டாலும் அவங்கள் தான் என் அம்மா எனத் தெரிந்த பிறகு மாமியாராக நினைக்கவோ அழைக்கவோ முடியுமா? இதே நிலை அவர்களுக்கும் வரும் அருண். இதெல்லாம் வெறும் சமூக அமைப்புக்கள்தான் எனக் கூறலாம். ஆனால் அவை உயிரும் உணர்வும் நிரம்பியவை அருண். இத்தனை வருடம் அம்மா என நினைத்த ஒருவரை உன்னால் இனி ஆன்ட்டி என அழைக்க முடியுமா? என்னதான் வைதேகி அம்மாவும், முகுந்தன் அப்பாவும் என்மேல் அன்பைப் பொழிந்தாலும், அவர்கள் என்னைப் பெற்றவர்கள் இல்லை எனத் தெரிந்தபின் என்னைப் பெற்றவளைக் காணமாட்டோமா என நான் நாளும் பொழுதும் ஏங்கிக் கொண்டிருக்கிறேன். உடனே கனடா போய் அம்மாவின் மடியில் விழுந்து கதற வேணும் போல இருக்கு அருண். அந்த உறவை எப்படி மாமியாராக்க முடியும்? ஆன்ட்டி எனக் கூப்பிட முடியும். என்னால் முடியாது அருண். எனக்கு என் அம்மா அம்மாவாக வேணும், மாமி யாராக அல்ல. எத்தனை காலம் ஆனாலும் அதற்காகக் காத்திருப்பேன். ஆனபடியால் இனி நமக்குள் இந்த எண்ணம் வேண்டாம். நீ எனக்கு அண்ணா. உன்னை அண்ணா எனக் கூப்பிடும்போது எனக்கு அம்மா வுடன் இருப்பது போல இருக்கு. தயவுசெய்து எதையாவது சொல்லி அனைத்தையும் கெடுக்காதே. எதுவோ ஒன்று நம்மை ஈர்த்தது. ஒருவர் மேல் ஒருவர் அன்பு செலுத்த வைத்தது. அது இந்தச் சகோதர பாசமாகவும் இருக்கலாம்தானே! அம்மாவின் ரத்தம் என் உடம்பிலும் அம்மாவின் அன்பு உன் உள்ளமெங்கும் வியாபித்திருப்பதாகவும் இருக்கலாம் இல்லையா? காதலாக மட்டும் தான் இருக்கவேண்டுமா?" எனக் கேட்டாள்.

அருணும் கண்கலங்கினான். பின் "நீ சொல்வதும் சரி தான் அக்ஷயா. ஒரு ஆணும் பெண்ணும் அன்பு செலுத்தினால் அது காதலாக மட்டும் தான் இருக்க வேண்டுமென்றில்லையே. நாமிருவரும் சகோதரர்கள் எனத் தெரிந்த பின்னும் நான் உன்னை அடைய நினைத்தால் அது மிருகத்தனம். உண்மை அன்பல்ல அக்ஷயா. ஆனால் நீ என் தங்கை. அதுவும் என் அம்மா பெற்ற மகள் என நினைக்கும்போது மிகவும்

மகிழ்ச்சியாக இருக்கிறது. நீ சொல்வது போல உன்னைப் பார்த்ததும் எனக்கு ஓர் ஈடுபாடு ஏற்பட்டது. நீ என் அம்மாவின் மகளாக இருப்பது காரணமாக இருக்கலாம். நல்லவேளை எதுவும் தவறாக நடப்பதற்கு முதலே உண்மை தெரிந்தது. நீ வா அக்ஷயா நானே உன்னை அம்மா விடம் அழைத்துப் போகிறேன்" என்றான்.

ஜானகிக்கு இப்போதெல்லாம் தனிமை கொன்றது. அருணை அவள் ஆஸ்திரேலியா போக வேண்டாம் எதுவானாலும் கனடாவிலேயே படி என்றுதான் சொன்னாள். ஆனால் அவன் கேட்கவில்லை. அங்கு போய்ப் படித்தால் நல்ல எதிர்காலம் இருக்கு அந்தக் கல்விக்குக் கனடாவில் மதிப்பு அதிகம் என ஏதேதோ சொல்லி அவளைச் சம்மதிக்க வைத்து விட்டான். இந்த நான்கு மாதங்களும் எப்படிப் போனதென்று அவளுக்குப் புரியவில்லை. ஆனால் அருண் இல்லாவிட்டால் என் நிலை என்னவாகி இருக்கும் இத்தனை காலம் வாழ்ந்திருப்பேனோ என வியந்தாள். அவள் எண்ணங்கள் பின்னோக்கிச் சென்றன.

ஜானகி, வைதேகி, மைதிலி என்றால் அந்தப் பல்கலைக்கழகத்தில் அனைவருக்கும் தெரியும். அவர்களின் பெயர்ப் பொருத்தம். மூவரே ஒருவரா ஒருவரே மூவரா எனக் குழம்பி நிற்பார்கள். மூவரும் சிறப்புப் பட்டம் பெற்றனர். படிப்பு முடிந்தவுடன் பெற்றோர் காத்திருந்து வைதேகிக்கும், மைதிலிக்கும் திருமணம் செய்து வைத்தனர். அது மட்டுமா இருவரும் தம் கணவன்மாருடன் வெளிநாட்டுக்கும் போய் விட்டனர். அந்த நாட்களில் ஜானகி அழுத கண்ணீர் வெள்ளமாகியது. அப்படியெல்லாம் செய்து வைக்க அவளுக்குத்தான் யாரும் இல்லையே. ஆனால் அதுவரை அவள் அதுபற்றிச் சிந்திக்கவோ வருத்தப்படவோ இல்லை. அரணாக இரு தோழியரும், தேவைப்பட்டால் சாய்வதற்கு அவர்களின் நான்கு தோள்களும் இருந்தன.

இப்பொழுதுதான் என்ன செய்வதென வருந்தினாள்; 'நீயும் வந்துவிடு ஜானு' என ஆஸ்திரேலியா போன வைதேகியும் கனடா போன மைதிலி யும் கூறினர். ஆனால், அவள் கஷ்டப்பட்டுப் படித்ததன் பலன் முதல் வகுப்புப் பட்டம் அதற்கான விரிவுரையாளர் பதவி அதையெல்லாம் ஒரு சில நாட்களுக்காவது அனுபவிக்க வேண்டுமென நினைத்தாள். அதனால் அங்கேயே இருந்துவிட்டாள். அவ்வப்போது தோழியர் அனுப்பும் வேலை வாய்ப்பு மனுக்கள் குடிபுகல்வு விண்ணப்பங்கள் யாவையும் ஒரு பக்கத்தில் வைத்தாள். அதற்காக அவர்கள்

அவ்வப்போது தொலைபேசி மூலம் கொடுக்கும் அர்ச்சனையையும் மனமுவந்து சிரித்துச் சிரித்து ஏற்றுக்கொண்டாள்.

தன் கடமையில் அவள் ஒன்றிப் பல சாதனைகள் புரிய முற்பட்ட வேளையில் தான் அங்கே சித்தார்த் புலமைப் பரிசிலில் ஆஸ்திரேலியா சென்று முதுநிலைப் பட்டம் பெற்றுக் கொண்டு வந்து சேர்ந்தான். ஒருவரின் அறிவால் மற்றவர் ஈர்க்கப்பட்டனர். அதனால் அங்கே பல நன்மைகள் விளைந்தன. பேராசிரியர், பகுதித் தலைவர் ஆகியோரின் பாராட்டுக்களும் கிடைத்தன. அதற்கு ஜானு கொடுத்த விலை தன்னைச் சித்தார்த்திடம் இழந்ததுதான். உண்மை உறைத்தபோது அறிவின் மயக்கத்தில் இருவரும் ஒருவரை ஒருவர் மறந்து ஒன்றியதற்கு யாரை யார் குறை சொல்வது?

ஆனால் உண்மை வெளியே வந்தபோது பல்கலைக்கழக வட்டாரம் முழுப் பழியையும் அவள் மேல் சுமத்தியது. 'சித்தார்த் முதலே இங்கு வேலை செய்தவர். ஒழுக்கத்தில் தங்கக் கம்பி எல்லாம் இந்த ஜானகி செய்த வேலைதான்' என அவள் காது படவே பேசினர். சிலர் அவளிடமே 'சித்தார்த் மாணவர் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய நன்மைகள் ஆயிரம் இருக்கின்றன. வெளிநாட்டில் பட்டம் பெற்றவர். அதனால் அவரை விட்டு நீ ஒழிந்து போ' எனக் கூறினர். இத்தனைக்கும் சித்தார்த் தன் மனைவி குழந்தைகளுக்கு நல்லவனாகி மௌனம் சாதித்தான். ஜானகிக்கு ஆதரவுக்குத் தோழியரும் இல்லாத நிலையில் அந்த இடத்தை விட்டு அகல்வதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. தனிமையில் போய் இருந்து குழந்தை பெற்றுக் கொண்டாள். தங்கச் சிலை போல் அழகாக இருந்த மகளுக்கு அக்ஷயா என அன்பாகப் பெயரிட்டாள்.

இவள் என்னிடம் இருக்கக் கூடாது இருந்தால் பிற்காலத்தில் பல பிரச்சசினைகள் தோன்றும், அப்பா யாரென்று குழந்தை கேட்கும்போது தப்பித் தவறி உளறி வைத்தால் பின் சித்தார்த்தின் குடும்பத்தில் மீண்டும் பிரச்சினை வரலாம் என்ன செய்யலாம் எனச் சிந்தித்த வேளையில்தான், வைதேகி திருமணமாகி மூன்று வருடங்களாகக் குழந்தை இல்லை, மாமியார் ஒரு பிள்ளையைத் தத்தெடுக்கச் சொல்கிறார் என வந்தாள். 'ஒரு பிள்ளையைத் தத்தெடுக்க ஒழுங்கு செய் ஜானு' எனக் கேட்டாள். அவளிடம் "உனக்கு நான் ஒரு குழந்தை தருகிறேன் நீ என்ன ஏது எப்படி வந்தது என்றெல்லாம் கேட்கக் கூடாது" எனச் சத்தியம் வாங்கிக் கொண்டு குழந்தையைக் காட்டினாள். ஆனால் பார்த்ததும் வைதேகி

வெகுண்டெழுந்தாள். "இதுதானா நீ பல்கலைக்கழகத்தை விட்டுப் படிப்பிக்கிறேன் பேர்வழி என்று மன்னாரில் போயிருக்கக் காரணம். ஏனடி அங்கே நீதி நியாயம் பேச யாருமே இல்லையா? எப்படி உன்னை மட்டும் அவர்கள் குற்றம் சாட்டலாம்" எனச் சீறினாள்.

ஜானகி எதுவுமே பேசவில்லை. இதைப் பார்த்தவள் "ஜானும்மா எப்படிடா தனித்து எல்லாவற்றையும் தாங்கினாய்?" எனக் கண்ணீர் உகுத்தாள். பின் "ஏனடி நாங்களெல்லாம் இருந்தோம் தானே எங்களுக்குச் சொல்லத் தெரியவில்லையா வந்து எல்லோரையும் ஒரு கை பார்த்திருப்போமே, இரு இரு இப்போ போய்க் கேட்கிறேன்" என வெகுண்டாள்; அவளின் நிமிடத்திற்கு நிமிடம் மாறும் உணர்வுகளைப் பார்த்து ஜானகிக்குச் சிரிப்பாக இருந்தாலும் அவள் அன்பை நினைத்து நெகிழ்ந்து நின்றாள்.

ஆனால் பின் தன் தோழியிடம் உறுதியாக "இதோ பார் வைதேகி, உனக்கு ஒரு குழந்தை தேவை. நான் பெற்ற குழந்தை உன்னிடம் வளர்ந்தால் எனக்குச் சிறிது நிம்மதி கிடைக்கும். உனக்கும் இது யார் குழந்தையோ என்ற சந்தேகம் எல்லாம் வராது. இனி அவள் உன் குழந்தை. எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் அவள் அம்மா என்று நீ அவளிடம் சொல்லமாட்டேன் என்று எனக்குச் சத்தியம் செய்து தா" எனக் கூறினாள். தன் தோழியின் குணம் நன்கு தெரிந்ததால் வைதேகியும் அவள் கேட்டபடியே சத்தியம் செய்து கொடுத்தாள். பெற்ற பிள்ளையுடன் உயிர்த் தோழியரையும் பிரியப் போகிறேன் என்ற வேதனை இதயத்தை அழுத்துவதை வெளிக்காட்டாமல் அவர்களுடன் இருந்து ஆவன செய்து ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பிவிட்டு, மன்னாரில் போய் அந்த வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு எங்காவது ஆச்சிரமத்தில் போய்ச் சேர வேண்டும் வைதேகி, மைதிலிக்குத் தெரியாமல் இருக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் ரெயினில் போய்க் கொண்டிருக்கும்போது அந்த ரெயின் புரண்டு பல உயிர்ச் சேதங்கள். இதில் நானும் போயிருக்கலாமே என அவள் நினைத்தாள். ஆனால், எதுவித காயமுமின்றி முழு ஆளாக எழுந்து நின்றாள். அப்பொழுதுதான் இரண்டு வயது அருண் 'அம்மா' என அவள் காலைக் கட்டிக்கொண்டு அழுதான். அள்ளி அணைத்துக் கொண்டாள்.

விபத்தில் காயப்பட்டவர்களுக்கு ஓடி ஓடி உதவி செய்தாள். அருணை யும் கவனித்துக் கொண்டாள். இறுதியாக இறந்தவர் பட்டியல் தயாரிக்கப் பட்ட போது அதில் அருணின் பெற்றோரின் பெயர்களும் இருந்தன.

'கடவுளே!' எனக் குழந்தையை அணைத்துக் கொண்டு கண்ணீர் உகுத்தாள். புகையிரத நிர்வாகம் குழந்தையை எங்காவது அநாதை இல்லத்தில் விடவும் அல்லது முறைப்படி தத்தெடுக்கவும் எனக் கூறியது. தன் மகனாகத் தத்தெடுத்துக் கொண்டாள். இவனை நான் வளர்ப்பதால் சித்தார்த்துக்கு எந்தப் பிரச்சினையும் வராது. இவன் நான் பெற்ற பிள்ளை இல்லைத்தானே என நினைத்தாள். கையில் ஒரு குழந்தையும் இருந்த தால் நினைத்தவுடன் வேலையை விட முடியவில்லை. மன்னாரிலேயே போய் இருந்தாள். ஆனால் வைதேகி விடுவதாக இல்லை. ஆஸ்திரேலி யாவுக்கு வந்துவிடு எனத் தொந்தரவு செய்தாள். இது சரி வராது என உணர்ந்தவள் அங்கிருந்து ஹற்றனில் போய் தோட்டத் தொழிலாளரின் குழந்தைகள் படிக்கும் பாடசாலையில் ஆசிரியப் பணியை ஏற்றாள். அருணும் அங்கேயே படித்தான். அவளது ஆலோசனையால் பல தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகள் படித்து இன்று நல்ல நிலையில் உள்ளனர். ஜானகிக்கு என்றும் நன்றி உடையவர்களாக உள்ளனர்.

அருணுக்கு எட்டு வயது இருக்கும்போதுதான் கார்த்திக் கனடாவி லிருந்து வந்தான். அவன் அருணின் அப்பா குமரனின் தம்பி. கனடாவில் படித்துக் கொண்டிருந்தான். விபத்தில் அண்ணாவின் குடும்பமே இறந்ததாக நினைத்து வருந்தி ஓய்ந்து இருந்தவன் மீண்டும் மனம் கேளாமல் இலங்கை போய் இறந்தவர் பட்டியலை வாங்கிப் பார்த்தான். அதில் குழந்தையின் பெயர் இருக்கவில்லை. குழந்தையாவது தப்பி யிருக்குமா என்ற ஒரு நப்பாசையில் அதை விசாரித்துப் பின் ஜானகியைத் தேடி அவள் இருக்குமிடத்தைக் கண்டு பிடிக்க ஐந்தாறு வருடங்கள் ஆகிவிட்டன. அதற்கிடையில் அருணுக்கும் எட்டு வயதாகி விட்டது.

அருண் - ஜானகி பாசத்தைப் பார்த்தவன், "என் அண்ணாவின் மகன் உயிருடன் இருப்பதைப் பார்க்க எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. அவனையும் உங்களையும் நான் பிரிக்க மாட்டேன். எனக்கும் வேறு யாருமில்லை. நீங்கள் என்னுடன் கனடாவுக்கு வந்தால் நான் அருணைப் பார்க்கலாம்" என்றான். மைதிலி அங்கே இருக்கிறாள் என நினைத்துச் சிறிது தயங்கினாள். ஆனால் அவன் "நான் குவிபெக்ல் ஒரு கிராமத்தில் வசிக்கிறேன் அங்கே நம்மவர் யாரும் இல்லை நீங்கள் எதற்கும் யோசிக்க வேண்டாம். நான் ஆவன செய்கிறேன்" என்றான். ஜானகிக்கு வேறு வழிதெரியவில்லை. ஒரு குடும்பத்தின் வாரிசு தன்னிடம்

வளர்வதால் தான் பிகு பண்ணக்கூடாது எனத் தீர்மானித்தவள் அவனுடன் சென்றாள். தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் வருந்தினர். "உங்களால் தான் பிள்ளைகள் படித்தார்கள். எங்களுக்குச் சுத்தம், சுகா தாரம், கடவுள் நம்பிக்கை, வாரம் தோறும் பிரார்த்தனைக் கூட்டங்கள், பஜன் எல்லா வற்றையும் ஆரம்பித்துவிட்டு இப்படிப் போகலாமா?" எனச் சிலர் கண்ணீர் சிந்தினர். "இப்பொழுது உங்களுக்கு எல்லாம் தெரியும் தானே எதையும் விடாமல் தொடர்ந்து நடத்துங்கள். நான் விரைவில் திரும்பவும் வருவேன்" எனக் கூறிச் சென்றாள். அவ்வப்போது ஆலோ சனை கேட்டும் நன்றி கூறியும் வரும் கடிதங்களைப் பார்த்து மகிழ்வாள்.

கார்த்திக் சொன்னது போல இல்லாமல் அங்கே பலராலும் மதிக்கப் படுபவனாகத் தெரிந்தான். அந்தக் கிராமம் ஒருவகை ஆதிவாசிகளைக் கொண்டது. அவர்களுக்கு ஆசிரியராகத்தான் அவன் அங்கு நியமிக்கப் பட்டிருந்தான். கனடா நாட்டவர்கள் இப்படியான கிராமங்களுக்குப் போவதற்குத் தயங்குவார்கள். போனாலும் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி இரண்டொரு மாதத்தில் நகரத்திற்கு மாற்றல் வாங்கி விடுவார்கள். அதனால் அகதிகள் போல இருப்பவர்களுக்கு இத்தகைய வேலைகள் அதிஷ்டம் மாதிரி. போனவுடன் ஜானகிக்கும் ஆசிரியர் வேலை கிடைத்தது. இருவரதும் சேவை மனப்பான்மை இருவரையும் நல்ல நண்பர்களாக்கியது. இருவரும் இணைந்து அப்பகுதி மக்களுக்குப் பல நல்ல வழிகளைக் காட்டினர். பல பிள்ளைகளைப் படிக்கச் செய்தனர்.

அருணும் அங்குதான் பத்தாம் வகுப்புவரை படித்த பின் நகரத்தில் உள்ள பாடசாலையில் போய்ச் சேர்ந்தான். அருணைப் பிரிய முடியாத ஜானகி இரண்டு இடங்களுக்கும் நடுவே இருந்துகொண்டு இருவரும் நீண்ட நேரம் பிரயாணம் செய்தனர். போக்குவரத்துச் சாதனம் சிறப்பாக இருந்ததால் தினமும் அதிக தூரம் பிரயாணம் செய்வது அவ்வளவு கஷ்டமாக இருக்கவில்லை. ஜானகியின் கவனத்தாலும் அன்பினாலும் அருண் மிகச் சிறப்பாகச் சித்தியடைந்திருந்தான். ஜானகி கனடா வந்த விபரம் எதுவும் வைதேகிக்கோ, மைதிலிக்கோ தெரியாது. ஆனால், சில வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் கோவில் கும்பாபிஷேகம் பார்க்கும் ஆவலில் மொன்றியேல் போய் அங்கே மைதிலியிடம் அகப்பட்டுக் கொண்டாள். "ஜானு" என ஓடிவந்து அணைத்துக் கொண்டவள் ஆயிரம் கேள்விகள் கேட்டாள். அனைத்திற்குமே மௌனம் சாதித்த ஜானகி கூட்டத்தோடு கூட்டமாக அவளிடமிருந்து நழுவி உடனேயே

அருணையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போய்விட்டாள். அங்கே தனிமையில் 'என்னை மன்னித்துவிடு மைதிலி' என விம்மி விம்மி அழுதாள். ஜானுவா இப்படியென மைதிலியும் வியப்படைவாள். கண்ணீர் வடிப்பாள் ஏன். இப்படி என்ற கேள்வி அவளை நண்டாகக் குடையும். கனடாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே பல தொலைபேசிப் பரிவர்த்தனைகள் நடந்திருக்கும் என நினைத்து வருந்தினாள்.

நினைவுகளில் மூழ்கி இருந்தவளைத் தொலைபேசி மணி நிகழ் காலத்திற்கு இழுத்தது. ஓடிச்சென்று எடுத்தால் அருணின் "அம்மா" என்ற குரல், கன்றின் குரல் கேட்ட தாயாகி உருகினாள். "கண்ணா எப்படி இருக்கிறாய்?" எனக் கண்கலங்கக் கேட்டாள். "நான் விரைவில் கனடா வருகிறேன் நான் வரும்போது உங்களுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருக் கிறது" என்றான். வழமையான அருணின் கேலி என நினைத்தவள் அவன் வரும் திகதி, நேரம் போன்றவற்றைக் கேட்டுக் கொண்டு தொடர்பைத் துண்டித்தாள். உடனே கார்த்திக்குக்குச் சொன்னால் சந்தோஷப்படுவார் என நினைத்து அவனைத் தொலைபேசியில் அழைத்து விபரம் கூறினாள். இருவருக்கும் அருண்தானே ஆதரவு. கார்த்திக்கும் ஏனோ திருமணம் செய்யவில்லை. ஜானகி பல தடவை கேட்டபோதும் 'அண்ணா அண்ணி செய்து வைப்பார்கள் என இருந் தேன். அவர்களும் இல்லை. அண்ணன் மகனைத் தேடியதில் வயதும் போய் விட்டது இனி எதற்கு?' எனத் தட்டிக் கழித்துவிட்டான். ஓரளவுக்குத் தானே வற்புறுத்தலாம் அதனால் ஜானகியும் பேசாமல் விட்டு விட்டாள்.

அவர்களின் நெருங்கிய நண்பர்கள் பலர் 'ஏன் நீங்கள் இருவரும் இப்படித் தனித்தனியே இருக்கின்றீர்களோ தெரியாது. இருவருக்கும் கடந்த காலத்தில் என்ன நடந்தாலும், அதையெல்லாம் மறந்துவிட்டு நிகழ்காலத்தில் ஒருவருக்கு ஒருவர் துணையாகக் கணவன் மனைவி யாக வாழலாமே' எனக் கூறினர். அப்படியானால் நீங்கள் இன்னும் எவ்வளவோ சேவைகள் செய்யலாம் என்றனர். "கடந்த காலம் மறக்கக் கூடியதா?" என்ற எண்ணம் ஜானகிக்குள் ஓடும். ஆனால் வெறும் புன்னகையே பதிலாகும். 'சேவை செய்வதற்குக் கணவன் மனைவி யாகத்தான் இருக்க வேண்டுமா? இப்பொழுதும் சேவை செய்து கொண்டேதானே இருக்கிறோம். ஒரு முறை நட்புடன் பழகி என்னையே இழந்துவிட்டேன். இப்பொழுது கார்த்திக் எனக்குக் கிடைத்த அரிய நண்பர். ஓர் ஆணும் பெண்ணும் நண்பர்களாக இருக்கக் கூடாதா? உடனே அவர்களைத் திருமண பந்தத்துள் இணைத்துவிட வேண்டுமா'

என நினைப்பாள். 'என்றைக்கும் சித்தார்த் தான் என் இதயம் நிறைந்த கணவர். அவர் நலனுக்காக அவரையும் அவர் குழந்தையையும் பிரிந்து வாழ்கிறேன். இது ஒரு வகையில் ஒரு திருமணமானவர் மேல் நான் ஆசை வைத்ததற்கான தண்டனை. இது போதும்' என நினைத்துக் கொள்வாள்.

அருண் வரும் நாளை எண்ணிக் கொண்டிருந்தாள். அருண் கடைசி வரை என்ன ஆச்சர்யம் என்று சொல்லவில்லை. போன இடத்தில் கண்டது எதையோ ஆசையாக அம்மாவுக்கென வாங்கிவிட்டுப் பையன் பூச்சாண்டி காட்டுகிறான் என நினைத்து விட்டுவிட்டாள். ஆனால் விமான நிலையத்தில் சித்தார்த்தின் மறு உருவமாக அக்ஷயா அருணுடன் இணைந்து வருவதைக் கண்ட ஜானகிக்கு மயக்கமே வந்துவிட்டது. ஒரு மாதிரி சமாளித்துக்கொண்டாள். அருண் "அம்மா இது அக்ஷயா, என்னுடன் படித்தவள். கனடா பார்ப்பதற்காக வந்திருக்கிறாள்" என்றான். அக்ஷயாவிடம் "இது அம்மா, இது சித்தப்பா" என அறிமுகம் செய்து வைத்தான். அக்ஷயா அன்னையை ஆவலுடன் பார்த்தாள். "வாம்மா" என ஜானகி அவளை இழுத்து அணைத்துக் கொண்டாள்.

வீட்டுக்குப் போகும் வழியில் ஜானகிக்குள் ஏதேதோ கேள்விகள். 'அக்ஷயாவுக்கு என்னைப்பற்றி என்ன தெரியும்? எவ்வளவு தெரியும்? வைதேகி எப்படி இருக்கிறாள்?' போன்றன. மெதுவாக "உன் அம்மா அப்பா எல்லாம் சுகமா? அக்ஷயா" எனக் கேட்டு வைத்தாள். அவளும் "நன்றாக இருக்கின்றார்கள், உங்களையும் கேட்டதாகச் சொல்லச் சொன்னார்கள்" என்றாள். "என்னையா?" என வியப்புடன் கேட்டபோது "ஆமாம் அருணின் அம்மாவைக் கேட்டதாகச் சொல்லச் சொன்னார்கள். அது நீங்கள்தானே?" என வேடிக்கையாகக் கூறிச் சமாளித்தாள். "அருண் உங்களைப்பற்றி நிறையச் சொன்னார்" என்றாள். "பிரயாணம் நீண்ட தூரம் அலுப்பாக இருந்தால் என் மேல் சாய்ந்து படுத்துக்கம்மா" என்றாள். இது தான் தருணமென அன்னையின் தோளில் சாய்ந்து கொண்டாள். இருவருமே தமக்குள் எழுந்த கேவலை மறைக்கப் பெரும் பிரயத்தனப்பட்டனர்.

'அருண் அதிசயமென்றானே என்ன அதிசயம்? ஒரு வேளை இருவரும் காதலிக்கின்றனரோ என்ற பயமும் தோன்றியது. கடவுளே அப்படி இருக்கக்கூடாதே. இருந்திருந்து இவன் ஆஸ்திரேலியா போனானே. அருணின் அம்மா நான் என்று வைதேகிக்குத் தெரியுமா? அக்ஷயாவை

ஏன் அனுப்பினாள்? என்ன சொல்லி அனுப்பினாள்?' போன்ற எண்ணங்கள் அவளை அலைக்களித்தன. எதை எப்படிக் கேட்பதெனத் தெரியவில்லை. நடக்கும்போது பார்ப்போம் எனப் பேசாமல் இருந்து விட்டாள். தன் மடியில் அசந்து தூங்கும் மகளின் கன்னத்தில் குனிந்து முத்தமிட்டாள். கண்ணீர்த் துளி பட்டு அவள் எழுந்திடக் கூடாதே என மிகவும் கவனமாக இருந்தாள். இருப்பினும் அவளிடம் சிறு அசைவு. மெதுவாக அணைத்துக் கொண்டாள். அழகுப் பதுமையாக வளர்த்து, நன்கு படிக்க வைத்த வைதேகிக்கு மனசார நன்றி சொன்னாள். இவள் அப்பாவைப் பற்றிக் கேட்பாளா? கேட்டால் என்ன செய்வேன் என்ற பயமும் தோன்றியது. ஆனால் சித்தார்த் பற்றி என்றைக்கும் எதுவும் சொல்ல மாட்டேன் அது எனக்குள் புதைந்த ரகசியமாகவே இருந்து என்னுடனேயே மடியட்டும் என மனத்துள் உறுதி செய்து கொண்டாள்.

பிரயாணம் அதிக தூரம் என்றதால் வழியில் அக்ஷயா நன்றாகத் தூங்கி விட்டாள். மெதுவாக அவளைத் தன் மடியில் சாய்த்துக் கொண்டாள். அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவளுக்குப் பழைய நினைவுகள் கிளர்ந்தெழுந்தன. மனம் மிகப் பாரமாக இருந்தது. பெண் ஜன்மம் ஏன் எடுத்தேன் எனத் தன்னைத் தானே நொந்து கொண்டாள். வீட்டை அடைந்து மகளை மெதுவாக எழுப்பியபோது "என்னம்மா" என மீண்டும் அவள் மடியில் ஒடுங்கிக் கொண்டாள். ஜானகி சிலிர்த்துப் போனாள். அருணின் ஆயிரம் அம்மாக்கள் ஒன்று சேர்ந்தாற்போல அவள் பெற்ற மகளின் அந்த ஒரு வார்த்தை அவளை பேரின்பத்தில் ஆழ்த்தியது. விழிநீருக்கு அணை போட்டாள். வலிந்து சிரிப்பை வரவழைத்துக் கொண்டு "வீடு வந்துவிட்டது அக்ஷயா" என்றாள். அப்பொழுதுதான் சுயஉணர்வு பெற்றவள் 'ஓ' என எழுந்தாள்.

அக்ஷயா மெதுவாகப் பேச்சைத் தொடங்கினாள். "என் அம்மா வைதேகிக்கும் ஜானகி, மைதிலி என இரு சினேகிதிகள் இருந்தாங் களாம். நான் ஆச்சர்யப்படுவேன். அதெப்படி அன்னை சீதாதேவியின் பெயர் கொண்ட மூவர் நண்பர்களாவது என்று. அதுதான் எங்கள் நட்பின் சிறப்பு என அம்மா பெருமைப்பட்டுக் கொள்வார். ஆனால் அந்த ஜானகியுடன் பல வருடங்களாகத் தொடர்பே இல்லையாம். ஆனால் மைதிலி ஆன்ட்டி இங்கேதான் ரொறொன்ரோவில் இருக்கிறார். அம்மா அங்கேயும் போகச் சொன்னார். அவர்கள் போனில் அரைவாசி நேரம் ஜானு, ஜானு என்று தான் பேசுவார்கள். ஒருவேளை அந்த ஜானு நீங்களா ஜானும்மா?" எனக் கேட்டாள். "என்னம்மா குடிக்கிறாய்?" என

ஜானகி பேச்சை மாற்றினாள். அருண் அக்ஷயாவைப் பாரத்துக் கண்களால் பாராட்டினான். ஜானும்மா என்ற அழைப்பு இன்பமாக இருந்தது. இவள் நான் பெற்ற மகள் எனப் பெருமையாக இருந்தது. அருணை வளர்த்ததில் கொண்ட பெருமையைப் போல மகளைப் பெற்றேன் எனப் பெருமை கொண்டாள்.

இருவரின் உறவு நிலை தெரியாமல் எதையுமே வெளிக்காட்டக் கூடாது என இருந்தாள். ஆனால் பெற்ற மகளைக் கண்முன்னே எத்தனை நாட்களுக்கு யாரோ போல நடத்துவது என்றும் தெரியவில்லை. வைதேகி யுடன் போனில் பேசுவோமா எனவும் நினைத்தாள். ஆனால் அந்தக் குரலே அவளை அழ வைத்து எல்லாவற்றையும் காட்டிக் கொடுத்து விடுமே சோதனை மேல் சோதனை போதுமடா சாமி என நினைத்துக் கொண்டாள். கார்த்திக்கிடம் அருணைக் கேட்கும்படி சொன்னாள். கார்த்திக் விபரம் சொன்னபோது ஜானகி உறைந்து போனாள். எல்லாம் தெரிந்து வந்த மகளின் முகத்தில் எப்படி விழிப்பதெனத் தெரியவில்லை. கூனிக் குறுகிப் போனாள். ஆனால் கார்த்திக் "அவர்கள் இருவரும் மிகவும் தெளிவாக இருக்கின்றார்கள். ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். பெற்ற மகளை யாரோ மாதிரி எத்தனை நாட்களுக்கு நடாத்தப் போகிறாய். அவர்கள் விரைவில் ரொறொன்ரோ போகின்றார்களாம், தெரிந்து வந்த மகளும் நாடகமாடுகின்றாள். இருவரும் ஏன் இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடுகின்றீர்கள்?" என உரிமையுடன் கோபித்துக் கொண்டான்.

அவன் கூறுவது ஜானகிக்கும் சரியாகத்தான் தெரிந்தது. அதனால் அன்று இரவு தனிமையில் இருந்த மகளிடம், "உன் அம்மா வைதேகி யுடன் நான் பேச வேணுமே அக்ஷயா" என்றாள். "எதற்கு?" எனக் கேட்டு அன்னையை ஆவலுடன் பார்த்தாள். மகளை அன்புடன் அணைத்தவள் "என் பெண்ணை என்னிடம் அனுப்பி வைத்ததற்கு" என விம்மலிடையே கூறிமுடித்தாள். இதுவரை காத்திருந்ததுபோல அக்ஷயா "அம்மா, அம்மா" என உடைந்து அழுதாள். அங்கே பெற்ற தாயும் மகளும் சங்கமித்தனர். மன்னிப்புக் கேட்பது, அன்புப் பரிமாற்றங்கள், ஆறுதல் வார்த்தைகள் யாவும் அந்த ஒரு அணைப்பிலேயே எத்தகைய வார்த்தை களுமின்றிப் பரிமாறப்பட்டன.

அக்ஷயா சொன்னவுடன் வைதேகி, மைதிலி இருவருமே ஜானகி யுடன் தொலைபேசியில் கதைத்தனர். அங்கே பழையபடி கேலியும்

கிண்டலும் எழுந்தது. நட்பு புதுப்பிக்கப்பட்டது. ஜானகியைப் பார்க்கும் ஆவலில் இருவரும் உடனே புறப்பட்டு வந்தனர். வைதேகியுடன் ஆருத்திராவும், மைதிலியுடன் அவள் மகன் அஸ்வினும், அவள் தங்கை மாதவியும் வந்திருந்தனர். மாதவி கணவனை இழந்தவள். இங்கே கார்த்திக், ஜானகியுடன் இணைந்து சேவை செய்ய உத்தேசிப்பதாக மைதிலி சொன்னாள். ஜானகிக்கு ஓர் எண்ணம் ஓடியது. மைதிலியிடம் சம்மதம் கேட்டபின் "ஒரு விதவைக்கு வாழ்வளிப்பது எவ்வளவு புண்ணியம், அவளும் சேவை மனப்பான்மை உள்ளவர். நீங்கள் இருவரும் இணைந்தால் நான் திரும்ப ஹற்றன் போய் விடுவேன் அங்கிருந்து அழைப்புக்கள் வந்து கொண்டிருக்கின்றன" எனக் கார்த்திக்கைச் சம்மதிக்க வைத்துத் திருமணத்தை நடத்தி வைத்தாள்.

அதன் பின் தோழியர் இருவரும் ஜானகியிடம் "நம் நட்புக்கு இலக்கணமாக நீ உன் பிள்ளைகளை எங்கள் பிள்ளைகளுக்கு மணம் செய்து வைக்கின்றாயா ஜானு" எனக் கேட்டனர். ஜானகி வியப்புடன் தன் தோழியரைப் பார்த்தவள் "என் பிள்ளைகளா யாரடி அது?" எனக் கேட்டாள். பின் கண் கலங்க, "அக்ஷயா வைதேகி - முகுந்தனின் மகள். அருண், கார்த்திக்கின் அண்ணா மகன். எனக்கெங்கே பிள்ளைகள்?" என்றாள். "சரி அப்படியே இருக்கட்டும், அஸ்வின் - அக்ஷயா, அருண்-ஆருத்ரா திருமணங்களில் உனக்குச் சம்மதமா ஜானு?" எனக் கேட்டனர். வார்த்தைகள் வராமல் தடுமாறியவள் இருவரையும் அணைத்துக்கொண்டு விம்மினாள். இருவர் கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டாள். பல வருடங்களின் பின் தான் மீண்டும் உயிர் பெற்றது போல ஜானகி உணர்ந்தாள். அங்கே அவர்கள் நட்பு மீண்டும் சங்கம மாகியது. மூவரும் ஒருவராயினர்.

குறித்த நாளில் இரு திருமணங்களும் மிகச் சிறப்பாக நடந்தேறின. ஜானகி முதலே சொன்னது போல இலங்கை செல்ல ஆயத்தமானாள். அக்ஷயா "இது சரியே இல்லை அம்மா. என்னுடன் சில நாட்களாவது இருக்கக்கூடாதா?" எனக் குறைப்பட்டுக் கொண்டாள். ஆனால், "உனக்குத்தான் எத்தனை பேர் இருக்கின்றார்கள் அக்ஷயா. அங்கே சுனாமி கடல் கொந்தளிப்பினால் தாக்கப்பட்டு எத்தனை குழந்தைகள், பெற்றோர், உற்றார் யாருமே இல்லாமல் தவிக்கின்றார்கள். அவர் களுக்குத்தான் இப்பொழுது ஒரு அம்மா வேணும். அன்று ஒரு அருண். ஆனால், இன்று ஆயிரம் ஆயிரம் குழந்தைகள் ஆதரவின்றித் தவிக்கின் றார்களாம். அவர்களையெல்லாம் அணைக்க என்னைப் போலுள்ள பல

கரங்கள் முன்வரவேணும் அக்ஷயா. அம்மா சொல்வது உனக்குப் புரியும் என நினைக்கின்றேன். என்னை மன்னித்து விடு கண்ணம்மா" என மகளிடம் கெஞ்சினாள்.

"ஆமம்மா. என்றும் உங்கள் கரங்கள் அணைக்கும் கரங்கள்தான்" எனப் பெருமையுடன் நினைத்த மகள், அன்னையை அன்புடன் அணைத்து முத்தமாரி பொழிந்தாள். அது ஜானகியை இந்த உலகின் எல்லைக்கே அழைத்துச் சென்றது. இவள் என்னைப் புரிந்துவிட்டாள். இதுபோதும் என்ற புளகிதம் அவளுள் எழுந்து அவளை மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்த்தியது.

• • •

கலப்பை - தை - 2005

# அமுத சுரபி

அந்தப் பல்கலைக்கழக வளாகத்துள் ஆங்காங்கே இருந்த நிழல் தருக்களும் பூஞ்செடிகளும் பூத்துக் குலுங்கி வசந்தத்திற்கு வாழ்த்துக் கூறின. பல வகையான புஷ்பங்கள் மனத்திற்கும் கண்ணுக்கும் மிகவும் ரம்மியமாக இருந்தன. பிரசித்தி பெற்ற கொழும்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுப் பொன் விழாவையும் கண்டு இன்றும் சிறிதும் மெருகு குன்றாமல் அனைத்துத் துறைகளிலும் சிறந்த பட்டதாரிகளை நாட்டுக்கும் உலகிற்கும் வழங்கிவரும் சிட்னியின் மிகப் பிரபல்யமான நியூ சவுத் வேல்ஸ் (New South Wales) பல்கலைக்கழகத்தின் சட்டப் பிரிவின் ஒரு விரிவுரை மண்டபத்திற்குள் விரிவுரையாளர் ஹெலன் மில்லர் கடந்த இரண்டரை மணித்தியாலங்களாக "ஆஸ்திரேலிய வருமானவரிச் சட்டத்தில் குடியிருக்கும் வீடுகளுக்கு வருமான வரி விலக்கு" என்ற பகுதியை மாணவர்க்கு விளக்கிக் கொண்டிருந்தார். காலை வகுப்பின் மிகுதி நேரத்தையும் அதற்குத்தான் செலவிடப் போகிறார் என்பது அங்கிருந்த மாணவர்க்கு நன்கு புரிந்தது. ஹெலனிடமுள்ள ஒரு கெட்ட பழக்கம் ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்லி மாணவர்களுக்குச் சலிப்பூட்டுவது. அது எப்பொழுதும் சத்யா போன்ற கற்பூர புத்தியுள்ள மாணவரின் பொறுமைக்கு மிகப் பெரிய சோதனையாக அமையும்.

அன்றும் அப்படித்தான், வகுப்பிலிருந்த சத்யாவுக்குச் சலிப்பாக இருந்தது. இதற்கிடையில் ஹெலனைப் பல்வேறு கோணங்களில் படம் வரைந்து வகுப்பிற்குள் உலா வர விட்டு தனது ஓவியத் திறமைக்கான பாராட்டுக்களைச் சேகரித்துக் கொண்டாள். அத்துடன் அன்றைய

பாடமும் அவளுக்குப் பிடிக்கவில்லை. "என்ன இது ஒவ்வொரு ஆஸ்திரேலியப் பிரசையும் சொத்து ஆதாய வரி செலுத்தாமல் ஒரு வீடு வைத்திருக்கலாம் என வேலையைச் சுலபமாக்குவதை விட்டுவிட்டு வீட்டில் வசித்த பின் விற்றால் வரிவிலக்கு. வசிக்காமல் வாங்கியவுடனோ அல்லது வாடகைக்கு விட்ட பின்னரோ விற்றால் வரி என அனைத்தையும் சிக்கலாக்கி இருக்கின்றார்களே!" எனச் சலித்துக் கொண்டாள். 'எப்படா ஹெலன் இதற்கொரு முடிவு கட்டும்' எனக் காத்திருந்தாள்.

அவர்களின் குறும்புகள் அனைத்தையும் கண்டும் காணாமல் அன்றைய பாடத்தைத் திறம்பட நடத்தி முடித்த ஹெலன் இந்தப் பகுதி பரீட்சைக்குக் கட்டாயம் வரும் என்ற குண்டையும் மிகவும் லாவகமாகத் தூக்கிப் போட்டு விட்டுப் போனாள். எப்படா வெளியேறுவோம் என ஆயத்தமாக இருந்த மாணவர் பட்டாளம் ஒரு நொடியில் வகுப்பை விட்டு வெளியேற அந்த மண்டபத்தில் மேசை கதிரைகள்தான் எஞ்சி யிருந்தன. சத்யா எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வெளியே போகத் திரும்பியபோது பின் வரிசையில் ஒரு மேசையில் யாரோ இன்னும் கவிழ்ந்து படுத்திருப்பதைக் கண்டாள். ஹெலனின் தாலாட்டில் யாரோ நல்ல தூக்கம் போலும் எனச் சத்யாவுக்கு வேடிக்கையாக இருந்தது. பாவம் எழுப்பி விடுவோம் என அங்கே சென்றவள் "ஹலோ" என அந்த மேசையின் விளிம்பில் மெதுவாகத் தட்டினாள். "ம்" எனத் தலையை நிமிர்த்திய பெண்ணைப் பார்த்ததும் சத்யா அதிர்ந்தாள். அது அவளுடன் மேல் வகுப்பில் படித்த ஜஸ்மின். கலைந்த தலையும் கசங்கிய உடை யுமாக அவளைப் பார்த்த சத்யாவுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. அவளிடமிருந்து மது வாசனையும் வந்த மாதிரி இருந்தது. தன்னை அறியாமல் சத்யா, "ஜஸ்! இது என்ன கோலம்!" என அலறினாள்.

வகுப்பிற்கு வெளியே சத்யாவுக்காகக் காத்திருந்த அவள் அறைத் தோழி பூர்ணிமா 'பேசாமல் விட்டு விட்டு வா' எனச் சைகை காட்டினாள். ஆனால் அது சத்யாவின் சுபாவத்திற்கு எதிர்மாறானதே! கஷ்டத்தில் இருப்பவரைத் தவிக்க விட்டுவிட்டுப் போனால் அது சத்யா இல்லையே! அதுவும் ஜஸ்மின் அவளுடன் சிட்னியின் மிகச் சிறந்த தேர்ந்தெடுக்கப் பட்ட மாணவர்கள் படிக்கும் பாடசாலையில் படித்தவள். சிறந்த திறமை சாலி, பெற்றோரின் ஒரே மகள், அன்பான பெற்றோர், அவளைக் கண்ணுக்குள் வைத்துக் காத்தனர். சத்யாவும் ஜஸ்மினும் பாடசாலை யில் நெருங்கிய நண்பர்களாகத்தான் இருந்தனர். பல்கலைக்கழகம்

சென்ற பின்னர் பாடங்கள், வகுப்புக்கள் மாறப் படிப்படியாகத் தொடர்பும் விட்டுப் போனது. இப்பொழுது காணுமிடத்தில் "ஹாய் ஜஸ்!" என்பதுடன் சரி. அவளும் "ஹாய் சத்தி!" என்று விட்டுப் போவாள். அதனால் ஜஸ்மினின் கஷ்ட நஷ்டங்கள் வாழ்வில் நடந்த மாற்றங்கள் எதுவும் அவளுக்குத் தெரியாது. ஆனால், இப்படியா போதையில் வந்து வகுப்பில் படுத்திருப்பது? சத்யா அறிந்த ஜஸ்மின் இப்படிச் செய்ய மாட்டாள். இவள் வாழ்வில் பயங்கரமாக என்னவோ நடந்திருக்க வேண்டும் என நினைத்தவள். "என்ன ஜஸ் நீ எப்பவும் இப்படி இருக்க மாட்டாயே! என்னம்மா நடந்தது?" என அவள் கைகளைப் பற்றினாள். அவளை மிகவும் வேதனையுடன் பார்த்த ஜஸ்மின், "ஓ சத்தி, I lost my parents ( நான் என் பெற்றோரை இழந்து விட்டேன்)" என்றாள். அதிர்ந்த சத்யா, "what!!" ('என்ன') எனக் கத்தினாள். ஜஸ்மின் பதில் கூறுவதற்கு முன்னரே சத்யாவின் எண்ணங்கள் வாயு வேகத்தில் சென்றன. கிறிஸ்ஸும் நான்சியும் எத்தனை நல்ல மனிதர்கள், இருவருக்கும் ஒரே நேரத்தில் என்ன நடந்திருக்கும் ஏதாவது விபத்தாக இருக்குமோ? இந்த இழப்பை இவள் எப்படித் தாங்குவாள் பாவம் என நினைத்தாள். சத்யாவின் கண்களும் கலங்கின. ஜஸ்மினை அன்புடன் அணைத்தவள், "என்ன நடந்தது ஜஸ்?" எனக் கேட்டாள்.

ஜஸ்மின் பதில் சொல்லச் சிறிது நேரம் எடுத்தது. அது ஒரு யுகமாகச் சத்யாவுக்குக் கழிந்தது. பின் ஒருவாறு மென்று முழுங்கி "அவர்கள் விவாகரத்தாகிப் பிரிந்துவிட்டார்கள்" என்றாள். சத்யாவுக்கு 'அப்பாடா' என்றிருந்தது. 'கடவுளே உனக்கு என் நன்றிகள்' எனப் பெருமூச்சு விட்டாள். 'இவ்வளவுதானா?' என ஆறுதல் அடைந்தாலும் இதை இவள் மனம் ஏற்காது. அதைச் சுற்றியே ஒரு துயர வலையைப் பின்னி அதற்குள் இருந்து தன்னைத்தானே வருத்துகிறாள். மெதுவாகத்தான் வெளியே கொணர வேணும் எனத் தீர்மானித்தவள், "அப்படியா ஜஸ்? இதைக் கேட்க எனக்கும் மிகவும் கவலையாக இருக்கிறது" என்றாள். இதற் கிடையில் வெளியே நின்ற பூர்ணிமாவும், ஸ்டெலாவும் 'வா! வா!' எனச் சைகை காட்டிக் கொண்டிருந்தனர். அவர்களுக்குச் சைகையாலேயே 'நீங்கள் போங்கோ' எனச் சொன்னவள், "விரிவுரை முடிந்து விட்டது ஜஸ், வா நாங்கள் வெளியே போய்ப் பேசுவோம்" என அவள் புத்தகப்பை, பேனா, பென்சில் அனைத்தையும் ஒவ்வொன்றாக எடுத்தாள். அவளுடன் எழுந்து நடந்த ஜஸ்மினுக்குத் தன் நிலை சத்யாவுக்குத் தெரிந்து

விட்டதே என வெட்கம் பிடுங்கித் தின்றது. "என்னை மன்னித்து விடு சத்தி" எனத் தலையைக் குனிந்து கொண்டாள்.

"அதொன்றும் பரவாயில்லை, நீ வா" என அழைத்துக்கொண்டு போய் வெளியே தனிமையாக ஓரிடத்தில் வழக்கமாக மாணவர்கள் அமரும் புல் வெளியில் அமர்ந்தாள். சத்யாவுக்கு அவளைப் பார்க்கத் திருவிழாவில் பெற்றோரை இழந்து தவிக்கும் ஒரு சிறு குழந்தை போல மிகவும் பரிதாபமாக இருந்தது. ஜஸ்மினின் பெற்றோர் இதுவரை காலமும் ஆதர்ச தம்பதியராகத் தானே இருந்தனர். சத்யா அதைப் பார்த்துப் பல தடவைகள் வியந்திருக்கிறாள். இப்பொழுது என்ன நடந்திருக்கும். இந்தப் பிரிவில் இவள் நிலையென்ன என நினைத்தாள்.

சத்யா யோசிப்பதைக் கவனித்த ஜஸ்மின், "உனக்குத் தொந்தரவு கொடுத்ததற்கு என்னை மன்னித்துவிடு சத்தி. இனி நான் சமாளிப்பேன் நீ வகுப்புக்குப் போ" என்றாள். "எனக்கு இனி வகுப்பில்லை" எனப் பொய் சொன்னவள், "அது சரி ஜஸ் இதெல்லாம் எப்போ நடந்தது? எனக்கொன்றும் தெரியாதே" என்றாள். ஜஸ்மினின் இதழ்கள் துடித்துக் கண்களும் கலங்கின. "இரண்டு மாதமாகிவிட்டது" என்றாள். "அவர்கள் பிரிந்தால் நீ எங்கே இருக்கிறாய்'' எனக் கேட்டாள். ''மம்மியுடன் இருக்கிறேன், ஆனால் எனக்குப் பிடிக்கவில்லை சத்தி, அங்கே அந்தப் பீட்டர் அவன் பிள்ளைகள் எல்லோருடனும் இருக்க எனக்குப் பிடிக்கவே யில்லை சத்தி" என்றாள். அவள் குரல் தழதழத்துக் கன்னங்களில் நீர் கோடிட்டது. 'அது யார் பீட்டர்?' எனக் கேட்க வாயெடுத்துப் புரிந்ததால் நிறுத்திக் கொண்டாள். 'இரண்டு மாதத்திற்குள் அடுத்த திருமணமா? இது என்ன அநியாயம்!' என நினைத்தாள். என்ன சொல்வதெனத் தெரியாமல் தவித்த சத்யா "ஏன் ஜஸ் நீ உன் டாடியிடம் போய் இருக்க லாமே?" என்றாள். ஆனால் ஏன் கேட்டேன் என்பது போல, "அங்கு மட்டும் என்ன வாழுதாம் அங்கே அந்த மேரியும் அவள் குரங்குப் பையனும் இருக்கிறார்களே!" என்றாள். 'ஓ, இவளுக்கு அந்த வழியும் அடைபட்டுவிட்டதா?' என வருந்தியவள் எதைச் சொல்லி இவளைத் தேற்றுவது எனத் தெரியாமல் தவித்தாள்.

"அவர்கள் என்னைப் பற்றி நினைக்கவே இல்லை சத்தி. நீ என்ன செய்வாய் என்று கேட்கவே இல்லை. தாங்களே தீர்மானித்துக் குடும்பக் கோர்ட்டில் போய்ச் சொத்துக்களைப் பிரித்தார்கள். அந்தப் பீட்டரும் பிள்ளைகளும் எங்கள் வீட்டுக்கு வர, டாடி அந்த மேரி வீட்டுக்குப் போய்

விட்டார். நீ எங்கே வேண்டுமானாலும் இருக்கலாம் படித்து முடியும்வரை மாதம் ஆயிரம் டாலர்கள் இருவரும் உனது வங்கிக் கணக்கிற்கு அனுப்புகிறோம் என்றனர்'' என அழுதாள். அதைக் கேட்ட சத்யா, 'உனக்கு இவ்வளவுமே அதிகம். நீ இருபத்திரண்டு வயதுப் பெண். மேலைத்தேய நாகரீகத்தில் நீ சொந்தக் காலில் நிற்க வேண்டியவள். உன்னை அவர்கள் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. ஆனால் அவர்கள் கருணை கூர்ந்து உனக்கு இருக்க இடமும் செலவுக்குப் பணமும் தருகிறார்கள். நீ மேலும் எதிர்பார்க்கிறாயே!' எனத் தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

ஆனால் அவள் வழியில் போய்த்தான் இதைப் புரிய வைக்க வேணடு மென நினைத்தவள், "ஏன் ஜஸ் உனக்கு அந்தப் பீட்டரை முதலே தெரியுமா?" எனக் கேட்டாள். "தெரியும் சத்தி. அவர் மம்மியுடன் தான் வேலை செய்கிறார்,அந்த லிசாவும் தோமஸும் கூட எங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறார்கள். அண்மையில்தான் அவர் மனைவி இறந்தார். அதன் பின் தான் மம்மி அதிகமாக அவருடன் பழக ஆரம்பித்தார். அதனால் தான் வீட்டில் மம்மிக்கும் டாடிக்கும் பிரச்சினை வந்து பிரிந்தார்கள்'' என்றாள். 'அப்போ மேரி எப்படி உன் அப்பாவுக்கு றெடிமேட் ஆகக் கிடைத்தாளா?' என நினைத்துத் தனக்குள் சிரித்தாள். பின் "அவர்கள் உனக்கு முதலே தெரிந்தவர்கள்தானே பிறகு ஏன் உனக்குப் பிடிக்காமல் போனது ஜஸ்" எனக் கேட்டாள். "நண்பர்களாக வந்து போவது வேறு. வீட்டிலேயே இருப்பது வேறு சத்தி, அதுவும் அதுகள் இரண்டும் வாலுகள் வீட்டை எனது அறையைப் புரட்டி வைக்குங்கள். அதனால் எனது தனிமைக்குப் பங்கம் ஏற்படுகிறது. அத்துடன் எனக்கு என் மம்மியின் கவனமே இல்லாமல் போய்விட்டது தெரியுமா? மம்மி வேலையிலிருந்து வந்தால் அவர்களைக் கவனிக்கவே நேரம் சரி. என்னைப் பற்றிய எண்ணமே இப்பொழுது மம்மிக்கு இல்லைத் தெரியுமா? இப்போ தெல்லாம் மம்மி 'ஜஸ் நீ சாப்பிட்டாயா? தூங்கினாயா?' என்று கூடக் கேட்பதில்லை. சில நாட்களில் மம்மியைக் காணவே முடிவதில்லை'' என்றவளின் விழிக்கடைகள் நனைந்தன. சத்யாவின் தோளில் தலை சாய்த்து விம்மினாள். அவளைக் கனிவுடன் அணைத்த சத்யா, 'இவள் இன்னும் மனத்தளவில் தாயன்புக்கு ஏங்கும் ஒரு குழந்தைதான். கிறிஸும் நான்சியும் இவளிடம் இத்தனை காலமும் அவ்வளவு அன்பைப் பொழிந்து விட்டுத் திடீரென இப்படித் தனிமையில் தள்ளியிருக்க வேண்டாம்' என வருந்தினாள்.

சத்யா மெதுவாக அவளிடம் பேச்சுக் கொடுத்தாள். "ஜஸ், நீ சில உண்மைகளைச் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும். அடுத்த வருடம் உனது படிப்பு முடிந்ததும் வேலை கிடைத்து எங்காவது போக வேண்டி வரும். எப்பொழுதும் வீட்டிலேயே மம்மி, டாடி என இருக்க முடியாது. பிறகு நீயும் உன் ஸ்டீவனும் என்ன செய்வீர்களோ! எங்கு போவீர்களோ! சில வேளை லண்டன், அமெரிக்கா என்று கூடப் போகலாம். அப்போ தெல்லாம் உன் பெற்றோர் வரமாட்டார்கள். நீ தனித்து இருக்கப் பழக வேண்டும்" என்றாள். "நீ இல்லாத நேரத்தில் உன் பெற்றோர் தனித்து விடுவார்கள் இல்லையா? அதனால் முன்கூட்டியே இப்படி ஒரு ஏற்பாடு செய்திருக்கலாம்'' எனச் சொன்னாள். ''ஏன் அவர்கள் இருவரும் இல்லையா? ஒருவருக்கு மற்றவர் துணையாக இருப்பதுதானே! எத்தனையோ வயதான தம்பதிகள் அப்படித்தானே இருக்கிறார்கள்" எனச் சீறினாள். பின் "பெரிய தத்துவம் எல்லாம் பேசுகின்றாயே! உனக்கு இப்படி ஒரு நிலை வந்தால் நீ என்ன செய்வாய்"? எனக் கேட்டாள். சத்யாவுக்கு ஒரு நொடி இதயம் அப்படியே ஸ்தம்பித்தது. ஆனால் உடனே சமாளித்தவள் "நிச்சயமாக உன்னைப் போல் இப்படிப் போதை யில் என் எதிர்காலத்தையே பாழாக்க மாட்டேன்" எனப் பதிலுக்குச் சீறினாள்.

ஜஸ்மின் வெட்கித் தலை கவிழ்ந்தாள். "தவறுதான் சத்தி, மன்னித்து விடு" என அவள் கைகளைப் பற்றினாள். "உனக்கு இந்த மதுப் பழக்க மெல்லாம் தெரியாதே! ஜஸ், நீ பார்ட்டிகளில் கூட அதன் பக்கம் போவ தில்லையே! வெறும் குளிர்பானம் தானே குடிப்பாய். இதை யெல்லாம் உனக்கு யார் காட்டித் தந்தது?" எனக் கோபமாகக் கேட்டாள். "ஸ்டீவ் தான் தந்தான். நான் அழுது கொண்டே இருந்தேன், இதைச் சாப்பிட்டால் நீ உன்னை மறக்கலாம் எனச் சொல்லித்தந்தான். அது சுகமாக இருந்தது சத்தி. எனக்கு வேறு வழி தெரியவில்லை" எனக் கண்கலங்கினாள். சத்யாவுக்கு ஸ்டீவன் மேல் பிலுபிலுவெனக் கோபம் வந்தது. அவனை ஒரு வழி பண்ண வேணடுமெனத் தீர்மானித்துக் கொண்டாள். ஸ்டீவனும் சத்யாவுடன் படித்தவன் என்றதால் நட்பு முறையில் அவனைக் கண்டிக்கும் உரிமை அவளுக்கு இருந்தது.

சத்யாவுக்கு ஜஸ்மினைப் பாாக்கவும் பாவமாக இருந்தது. எல்லாப் பெற்றோரும் தம் பிரச்சினைகளை முன்வைத்துத் தான் தீர்மானம் எடுப்பார்கள் அந்த முடிவு அவர்களுக்கிடையே இருக்கும்

குழந்தைகளை எந்த அளவுக்குப் பாதிக்குமென்று ஒரு சிறிதும் சிந்திக்க மாட்டார்கள். அதனால்தான் இந்து சமயம் திருமணத்தை ஒரு பந்த மாக்கிப் பெண்ணுக்குப் பூமாதேவி என்ற பட்டத்தையும் கொடுத்து என்ன அடி, உதை இடி,மின்னல், குத்து, வெட்டு விழுந்தாலும் அனைத்தையும் தாங்கிக் கொண்டு தன் குழந்தைகளின் நலன் கருதி அந்தக் குடும்பத் துக்குள்ளேயே தாயை இருக்கச் செய்திருக்கிறது. புராண காலத்தி லிருந்து அன்னை சீதாதேவி போன்ற எத்தனையோ பெண்கள் எல்லாத் துன்பங்களையும் தாங்கிக் கொண்டு நன் மக்களை உருவாக்கி உலகுக்கு அளித்துள்ளார்கள். ஆனால், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இத்தகைய கட்டுப்பாடுகள் இப்பொழுது இல்லை. இவர் களுக்குத் திருமணம் என்பது வெறும் ஒப்பந்தம். அதை எந்த நேரமும் முறிக்கலாம். அனைத்தையும் சம பங்காகப் பிரித்துக் கொண்டு நீயும் நானும் நண்பர்கள் எனக் கூறிப் பிரியலாம். சிறு குழந்தைகள் என்றால் குழந்தை யாரிடம் வளர்வது? யார் ஜீவனாம்சம் கட்டுவது? போன்ற வினாக்கள் எழும். ஜஸ்மினுக்கு இருபத்திரண்டு வயது, அடுத்த வருடம் ஒரு பட்டதாரி, யாரிலும் சார்ந்திருக்கத் தேவையில்லை. அதனால் அவளைப்பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. தம் முடிவைத் தாமே செயலாக்கிக் கொண்டார்கள். ஆயினும் திடீரென அனாதரவாகவிடாமல் மிகவும் தாராளமாக நீ எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம், படித்து முடியும்வரை பணமும் தரலாம் எனச் சொல்லி இருக்கின்றார்கள். இதை இவள் புரிந்து கொள்ளவேணுமே!

இன்றும் சத்யாவின் அன்னை விடுதியில் இருக்கும் அவளை அடிக்கடி தொலைபேசியில் அழைத்து சாப்பிட்டாயா? நல்ல சாப்பாடு கிடைத்ததா? எப்படி இருக்கிறாய்? என்று கேட்கத் தவறுவதில்லை. ஜஸ்மினின் பெற்றோரும் அப்படித்தான் இருந்தார்கள். அதைச் சத்யா பல தடவை களில் கண்கூடாகக் கண்டிருக்கிறாள். பாடசாலையில் பிக்னிக் போகும் நாட்களில் அவள் அன்னை பஸ் போகும்வரை காத்திருந்து கை அசைத்து வழி அனுப்புவதையும் திரும்பி வரும் நாளில் வழிமேல் விழி வைத்துக் காத்திருந்து அழைத்துச் செல்வதையும் பார்த்திருக்கிறாள். அப்படி வளர்ந்தவள் இன்று தனிமை என்ற இருளில் தள்ளப்பட்டதால் அந்தத் தனிமை கொடுத்த ஏக்கத்தைப் போதையின் மூலமாக விரட்ட முயல்கின் றாள். இந்த ஏக்கமே பயமாகி வேறு ஏதாவது முடிவு எடுத்திருந்தால் என்னவாகி இருக்கும்? இப்படியே போனால் இவள் எதிர்காலம் என்ன வாகுமோ? இந்தப் பழக்கத்திலிருந்து எப்படியாவது மீட்டுப் படிப்பில் கவனம் செலுத்தச் செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தாள்.

சத்யாவின் பேச்சுத் தந்திரம் எல்லோரும் அறிந்த ஒன்று. அதை மெது வாகப் பிரயோகிக்க ஆரம்பித்தாள். "ஜஸ் அந்தப் பீட்டரும் குழந்தை களும் உன்னிடம் எப்படி? அன்பாக இருக்கின்றார்களா? அல்லது நீ வீட்டில் இருப்பதை ஒரு இடைஞ்சலாகக் கருதுகின்றார்களா"? எனக் கேட்டாள். "அவர்கள் என்னிடம் அன்பாகத்தான் இருக்கிறார்கள் சத்தி. அந்தக் குழந்தைகளுக்கு என்னுடன் பேசுவதில் கொள்ளை ஆசை. என்னையும் குடும்பத்தில் ஒருவராகத்தான் மதிக்கின்றார்கள். நான் வீட்டுக்குப் போகாவிட்டால் மம்மியுடன் சேர்ந்து அவர்களும் கவலைப் படுவார்கள். இரண்டொரு தடவை நான் இரவில் ஸ்டீவுடன் இருந்த போது பீட்டர்தான் வந்து வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போனார்" என்றாள். போதையில்தான் இருந்திருப்பாள் என்பது சத்யாவுக்குப் புரிந்தது. ஆனாலும் காட்டிக் கொள்ளாமல், "பிறகென்ன ஜஸ் அவர்கள் உன்னுடன் அன்பாகத்தானே இருக்கின்றாாகள். நீ ஏன் வெறுக்கிறாய்? அந்தக் குழந்தைகள் தாயை இழந்தவர்கள், அவர்களுக்குத் தாயன்பைக் கொடுத்து உன் மம்மி எவ்வளவு பெரிய உதவி செய்கின்றார். தான் பெற்ற பிள்ளை மேல் அன்பு செலுத்துவது சாதாரணம் ஜஸ். ஆனால், பெறாத பிள்ளைகளுக்குத் தாயாகி அன்பு செலுத்துவது மிகவும் உன்னதமானது. அதைச் செய்யும் உன் மம்மிக்கு நீ ஆதரவாக இருக்க வேண்டாமா? தனித்து இருந்த உனக்கு மூன்று சகோதரங்கள் கிடைத் திருக்கிறார்கள். அவர்களை அணைத்து அன்பு செலுத்தி எல்லோரு மாகச் சந்தோசமாக இருப்பதைவிட்டு விட்டுப் போதையில் ஆழ்ந்து உன் உடம்பைக் கெடுத்து வாழ்வையும் பாழாக்குகின்றாயே! படித்த உனக்கு இதெல்லாம் புரியவில்லையா ஜஸ்! அன்பு ஒன்றுதான் அள்ள அள்ளக் குறையாதது. மற்றவர்கள் மேல் அன்பு செலுத்தச் செலுத்த உனக்குக் கிடைக்கும் அன்பும் பெருகிக் கொண்டே போகும். அது ஓர் அமுதசுரபி. அத்துடன் நம்மை நன்னிலைப்படுத்திப் பண்புள்ள மனித ராக்கும். நீ அவர்களிடம் அன்பாக நடந்து பார். பின் உன் மன அமைதி தானாக உன்னைத் தேடி வந்துவிடும். எந்தப் பயமோ, ஏக்கமோ இருக்காது. எந்த நேரமும் உன்னைச் சுற்றி யாராவது இருப்பார்கள்" என்றாள். ஜஸ்மின் எதுவுமே பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

சத்யா மேலும் தொடர்ந்தாள்: "உன் பெற்றோர் பிரிந்தது கவலைக் குரியதுதான். ஆனால் மனித வாழ்வில் எதுவும் நிரந்தரமில்லை ஜஸ். அன்பு ஒன்றுதான் நிரந்தரமானது என எல்லாச் சமயங்களும் சொல் கின்றன. 'அன்புதான் தெய்வம்'. எங்கு அன்பெனும் அருவி

பாய்கின்றதோ அங்கு அமைதி, மகிழ்ச்சி, ஒற்றுமை, சாந்தி யாவும் நிறைந்து இன்பப் பூஞ்சோலையாகத் திகழும். இதை நாம் உணர்ந்தால் மலை போல் தெரியும் எத்தனையோ பிரச்சினைகள் பனிபோல் மறைந்து விடும். வயதாக உன் பெற்றோரின் நோக்கங்களும், தேவைகளும் மாறுபடலாம், வேறுபட்ட எண்ணங்களுடைய இருவர் ஒன்றாக இருந்து ஒருவரை மற்றவர் வருத்துவதை விடப் பிரிய நினைத்திருக்கலாம். ஆனால் அவர்கள் எவ்வளவு பெரிய சேவை செய்கின்றார்கள் தாய் இல்லாத குழந்தைகளுக்கு உன் அன்னை தாயாகி அன்பு காட்டுகின்றார் அதை நீ நிச்சயம் பாராட்ட வேண்டும் ஜஸ்" என்றாள்.

ஜஸ்மின் அனைத்தையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் சிந்திக்கத் தெளிய ஆரம்பித்திருக்கிறாள் என்று கவனித்த சத்யா சிறிது நேரம் அமைதியாக இருந்தாள். அவளருகே வந்து கைகளைப் பற்றிய ஜஸ்மின், "சத்தி, நான் தவறு செய்கின்றேனா?" எனக் கேட்டாள். சத்யாவுக்கு இது முதல் வெற்றி. இதழ்களில் புன்னகை தவழ, "இல்லை ஜஸ். நீ குழம்பிப் போயிருக்கிறாய், உன் வாழ்வில் நீ சிறிதும் எதிர்பாராத ஒன்று திடீரென நிகழ்ந்தவுடன் நீ அதிர்ந்து போய் விட்டாய் அவ்வளவு தான்" என அவளை அணைத்துக் கொண்டாள்.

"உண்மைதான் சத்தி, என் பெற்றோர் பிரிந்துவிட்டார்கள் என்றபோது எனக்குள் ஏற்பட்ட அதிர்ச்சியால் நான் என்னை இழந்துவிட்டேன். அது மிகப் பெரிய துக்கமாக எனக்குத் தெரிந்தது. அதனால் வேறு எதையும் என்னால் சிந்திக்க முடியவில்லை" என்றாள். "உனது சோகத்தைப் பார்த்த ஸ்டீவ் உடனடித் தீர்வாக உனக்கு மதுப் பழக்கத்தை ஏற்படுத் தினான், அதில் நீ உன்னை மறந்தாய், யாருமே பின் விளைவுகளை யோசிக்கவில்லை அப்படித்தானே ஜஸ்" என்றாள், வார்த்தைகள் சூடாக வந்தன. ஜஸ்மின் 'ஆமாம்' எனத் தலை கவிழ்ந்தாள்.

"எங்கே ஸ்டீவ்? அவனை நான் காண வேண்டுமே!" என்றாள். அப்பொழுது அவர்களை நோக்கிக் கையில் ஒரு பார்சலுடன் ஸ்டீவ் வந்து கொண்டிருந்தான். அதைப் பார்த்த சத்யா, "இதோ எங்கள் கதாநாயகன் வந்து விட்டார்" என்றாள். அவளது கைகளைப் பற்றிய ஜஸ்மின் "அவனை ஒன்றும் சொல்லாதே சத்தி, எல்லாம் என் தவறுதான். நான் அழுது கொண்டிருந்தால் அவன் என்ன செய்வான்"? என்றாள். "அதற்கு இது ஒன்று தானா வழி? வகுப்பில் போதையில் கிடக்கச் செய்வது. ஏன் ஸ்டீவ் உனக்கு வேறு எதுவுமே தெரியவில்லையா? அல்லது வேறு யாரிடமாவது சொல்லக் கூடவா தோன்றவில்லை"? எனக்

கோபமாகக் கேட்டாள். "அது வந்து சத்தி..." என ஸ்டீவ் அசடு வழிந்தது. "போனது போகட்டும் ஸ்டீவ். இனி ஜஸ் குடித்தது கண்டால் தண்டனை உனக்குத்தான். நீ என்ன வேணுமானாலும் செய். ஆனால், அவளுக்கு இதெல்லாம் வேண்டாம்" என்றாள். "பார்த்தாயா என்னை இப்படி அந்நியன் ஆக்குகின்றாயே சத்தி! ஜஸ்க்கு முதலே நாங்கள் ஆரம்பப் பாடசாலையிலிருந்து நண்பர்கள் மறந்துவிட்டாயா?" எனச் செல்லமாக முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு கேட்டான். சிரித்தவள், "அந்த நினைப்பு இருந்திருந்தால் என்னுடன் ஆலோசித்திருப்பாய். ஜஸ்மினின் நிலை பற்றிச் சும்மாவாவது சொல்லியிருக்கலாம்தானே! நீதான் மறந்து விட்டாய் ஸ்டீவ்" என்றாள்.

"மன்னித்துக் கொள் சத்தி, இதையெல்லாம் உன்னிடம் கூறலாமோ என்று எனக்குத் தெரியவில்லை. பெற்றவர்கள் பிரிவது, விவாகரத்தாவது எல்லாம் உங்கள் கலாசாரத்தில் இல்லையே! அதனால் உனக்கு இவை புதுமையாக இருக்கும் என நினைத்தேன்" என்றான். "விவாகரத்துச் சட்டம் எல்லா நாடுகளிலும் தானே இருக்கிறது அதெப்படி எனக்கு அது புதுமையாக இருக்கும் ஸ்டீவ்"? எனக் கேட்டாள். "இருந்தாலும் உங்கள் பண்பாட்டில் இதெல்லாம் விதிவிலக்குத்தானே? எங்களிடம் இருப்பது போல இல்லையே? என் பெற்றோர் எனது பன்னிரண்டாம் வயதிலேயே பிரிந்துவிட்டாாகள். நான் அங்குமிங்குமாக வளர்ந்தேன். ஜஸ்க்கு இப்பொழுதுதானே பிரிந்தார்கள். ஜஸ் தாராளமாகத் தன் காலில் நிற்கலாம். ஆனால் பயந்து போய் அழுதால் நான் என்ன செய்ய சத்தி?" என்றான். அவனைப் பார்க்கவும் பரிதாபமாகத்தான் இருந்தது.

"ஸ்டீவ் சொன்ன மாதிரி இது எல்லோர் வாழ்விலும் நடக்கலாம் என உனக்குப் புரியவில்லை ஜஸ். உன் பெற்றோரின் அன்பு உனக்கு மட்டு மென்றே நினைத்ததால் தான் உனக்கு இவ்வளவு மனக்கஷ்டமும் வந்தது. பரந்த மனத்துடன் அனைவரிடமும் அன்பு காட்டப் பழகியிருந் தால் வீட்டுக்கு வந்த இரண்டு குழந்தைகளையும் அன்புடன் அணைத் திருப்பாய். இதனால் வீட்டில் அன்பும் அமைதியும் நிலைத்திருக்கும். நீ ஒன்றும் குழந்தையில்லை ஜஸ், இன்னும் அம்மாவின் மடியில் தலை வைத்துப் படுப்பதற்கு. உனது இந்தச் செய்கைகள் உன் பெற்றோ ருக்கும் மற்றவர்களுக்கும் எவ்வளவு மன வருத்தத்தைக் கொடுத் திருக்கும். அவர்களுக்கு உன் மேல் அன்பும் பாசமும் இல்லை என்றா நினைத்தாய்? அப்படி இல்லை ஜஸ்! அவர்கள் பாதைகள் மாறியதால்

பிரிந்தார்கள். ஆனால் இன்னும் நீ அவர்கள் பெண்தான் அதில் எந்த மாற்றமும் இல்லை. இதை உன் டாடி, மம்மி உன்னிடம் குறைந்தது ஆயிரம் தடவைகளாவது கூறியிருப்பார்கள் இல்லையா?'' எனக் கேட்டாள். 'ஆமாம்' என ஜஸ்மின் கண்ணீருடன் தலையை அசைத்தாள். "அதுதான் உண்மை. எத்தனையோ குழந்தைகள் பிறந்ததிலிருந்தே பெற்றவர்கள் அன்புக்காக ஏங்குகின்றன. ஒரு நாளைக்கு என்னுடன் வா அத்தகைய குழந்தைகளை உனக்குக் காட்டுகின்றேன். அதைப் பார்த்தால் நாம் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் என்று உனக்குப் புரியும். நீ உன்னிடம் இருப்பதைப் பகிர்ந்து கொடுக்க மறுக்கிறாய் அதற்காக உன்னையும் கஷ்டப்படுத்தி மற்றவர்களையும் கஷ்டத்திற்கு ஆளாக்குகின்றாய். நீ செய்வது கொஞ்சமும் சரியில்லை ஜஸ், அதுவும் ஒரு பண்பட்ட, ஆன்மீக நம்பிக்கையுள்ள பெற்றோர்களால் வளர்க்கப் பட்டவள், உன் செய்கையைப் பார்த்து என்ன நம் பெண் இவ்வளவு சுயநலவாதியாக, பண்பற்றவளாக இருக்கிறாளே என்று உன் பெற்றோர் நிச்சயம் வேதனைப்பட்டிருப்பார்கள்" என்றாள்.

"அவர்கள் உன்னிடம் சொல்லவோ உன்னைப்பற்றிச் சிந்திக்கவோ இல்லை என்று குறை சொன்னாயே? அவர்கள் உன்மேல் வைத்த நம்பிக்கைதான் அதற்குக் காரணம் ஜஸ். ஒவ்வொரு ஞாயிறும் சர்ச்க்குப் போய் **அன்பே தெய்வம்** என ஜீசஸ் காட்டிய வழியில் உன்னை வளர்த்த உன் பெற்றோர் நம் பெண் நமது முடிவை ஆதரிப்பாள், எல்லோரையும் சமமாகப் பாவித்து அன்பு காட்டுவாள் என நம்பியிருப்பார்கள். உனது இந்தச் செய்கையால் அவர்கள் எவ்வளவு ஏமாற்றம் அடைந்திருப் பார்கள் தெரியுமா? விரைவில் ஒரு வக்கீலாகி மற்றவர்களின் பிரச்சினை களுக்குத் தீர்வு காணப்போகும் நீ எப்படிச் சோகம் என்ற ஒரு சிறு வட்டத்துக்குள் உன்னை முடக்கிக் கொண்டாய்? இது முட்டாள்தனமாக உனக்குத் தோன்றவில்லையா? நீ உன் பெற்றோருக்கு மிகப் பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்துவிட்டாய் ஜஸ், அவர்களுக்கு மட்டுமல்ல எனக்கும் பெரிய ஏமாற்றமாக இருக்கிறது. நான் உன்னை எவ்வளவு உயரத்தில் வைத்திருந்தேன். நீயா இப்படி?'' என்ற சத்யாவின் குரல் கலங்கியது.

அதைப் பார்த்த ஜஸ்மினின் கண்கள் நீர் கோத்தன. "எல்லாம் தப்புத்தான் சத்தி. இந்த இரண்டு மாதமாக நான் நானாக இல்லை. என்னை விட்டு எல்லாமே போன மாதிரி உணர்ந்தேன். யாரோ சிலர்

என் வீட்டுக்குள் ஆக்கிரமித்து என்னுடையது எல்லாவற்றையும் அபகரித்த மாதிரியும் நான் தன்னந்தனியன் ஆன மாதிரியும் பயமாக இருந்தது. ஆனால் இன்று புரிந்தது. அன்பைக் கொடுத்து அன்பைப் பெற்று அனைவருமே மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று. லிசாவும் தோமஸும் என்னிடம் பேச வரும் போதெல்லாம் நான் அவர்களை அவமதித்தேன் அல்லது கண்டும் காணாமல் போனேன். இனி அவர்களுடன் பேச வேண்டும். அவர்கள் பாடங்களில் சந்தேகம் கேட்கும் போதெல்லாம் எனக்கு எதுவும் தெரியாது என்று கோபமாகப் பேசி அனுப்பினேன். அப்பொழுது அவர்களின் முகத்தைப் பார்க்கப் பாவமாக இருந்தது. பாவம் அந்தப் பிஞ்சு மனங்கள் எப்படி வாடியிருக்கும்? மம்மி இரண்டொரு தடவை சொல்லிப் பார்த்தார். நான் என்னால் முடியாது எனக் கண்டிப்பாகச் கூறிவிட்டேன். கடைசியில் ஒரு நாள் 'உன் செய்கை களைப் பார்த்து நான் வெட்கப்படுகிறேன் ஜஸ், உனக்கு இங்கிருக்கப் பிடிக்கவிட்டால் நீ வேறு இடம் பார்க்கலாம்' என்று சொன்னார்கள். யாரையோ கொண்டு வந்து என் வீட்டுக்குள் வைத்துவிட்டு என்னை எப்படிப் போகச் சொல்லலாம் என்று பயங்கரமாகக் கோபம் வந்தது, நான் அறியாமையால் முரண்டு பிடித்துக் குடும்ப அமைதியைக் கெடுத்திருக்கின்றேன் என்பது இப்பொழுது புரிகிறது. மிக்க நன்றி சத்தி, இதுதான் உண்மை நட்பென்பது. நீ என் கண்களைத் திறந்துவிட்டாய். நீ சொன்னதுபோல இப்பொழுது என் குடும்பம் பெரியது. என்னிடம் அன்பு செலுத்தப் பலர் இருக்கிறார்கள். அன்பைக் கொடுத்து அன்பைப் பெற்றால் அனைவரும் எந்தவிதமான விரோதமும் இல்லாமல் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கலாம். இவ்வளவு நாட்களும் இந்தச் சிறிய உண்மை எனக்குப் புரியவில்லையே" என வருந்தினாள்.

"நல்லது ஜஸ். நீ இவ்வளவு விரைவில் புரிந்து கொண்டதைப் பார்க்க எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது. இனிப் படிப்பில் கவனம் செலுத்தி நன்கு சித்தியடையப் பார்" என்ற சத்யா அங்கு நின்ற ஸ்டீவைப் பாரத்து "அதென்ன பார்சல் ஸ்டீவ்" எனக் கேட்டாள். "அதொன்று மில்லை சத்தி" என ஸ்டீவ் நெளிந்தது. உரிமையுடன் அவன் கையிலி ருந்த பார்சலைப் பறித்துப் பிரித்து அதற்குள் இருந்த மதுப் போத்தலைத் திறந்து அங்கிருந்த தண்ணீர்த் தொட்டிக்குள் ஊற்றிக் குழாயைத் திறந்து அதனுடன் ஓடவிட்டாள். ஸ்டீவும் ஜஸ்மினும் புன்முறுவலுடன் அதைப் பார்ததுக் கொண்டு நின்றனர். "எப்போதாவது வேடிக்கையாக வேண்டு மானால் மது குடிக்கலாம், மதுவால் சோகம் தீராது அது வேறு

பிரச்சினைகளை உருவாக்கித் துன்பத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும். எல்லாவற்றிற்கும் அன்பு ஒன்றுதான் சிறந்த வழி" என இருவருக்கும் சத்யா போதித்தாள். உண்மைதான் என இருவரும் ஒப்புக் கொண்டு சத்யாவுக்கு நன்றி கூறிப் பிரிந்தனர்.

சத்யா அறைக்குப் போனதும் பூர்ணிமா பிடித்துக் கொண்டாள். "ஆஹா வந்துவிட்டார் நம்ம ஆபத்பாந்தவன், அனாதரட்ஷகன், சமுக சேவகி. இவர் இல்லாவிட்டால் இந்தச் சமுதாயம் என்னவாகுமோ?. சர்வ தேசச் சமூக சேவையாளர் விருது அன்னை திரேசாவுக்குப் பின் வெகு விரைவில் உங்களுக்கு அளிக்கப்பட இருக்கிறதாம்" எனக் கோபமாகக் கூறினாள். அதைக் கேட்டுப் புன்னகைத்த சத்யா, "ஏன் பூர்ணி எதுவா னாலும் நேரடியாகத் திட்டேன் அப்பதான் உன் சூடு ஆறும்" என்றாள். "எனக்கென்ன பயமா? ஜஸ்மினுக்கு இப்போ கொஞ்சக் காலமாகக் குடிப்பதும் விழுவதும் பழக்கமாகி விட்டது. அவளைக் காப்பாற்றப் போய் நீ உன் பெயரைக் கெடுத்துக் கொள்ளப் போகிறாயா"? எனக் கேட்டாள். "ஜஸ் இப்படியானது எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது, எனக்கு மட்டும்தான் தெரியாமல் போய் விட்டது. நீயாவது சொல்லி யிருக்கலாம் பூர்ணி, அவள் பாவம் தெரியுமா"? எனக் கேட்டாள். "என்ன பாவம்? குடித்துவிட்டுப் போதையில் வகுப்புக்கு வருகிறாள். நீ பாவம் என்கிறாய். அவளுக்கு அறிவுரை கூறக் கூட்டிக்கொண்டு போகிறாய். 'குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு' என ஒரு பழமொழி இருக்கிறது. உனக்குத் தெரியுமா?" எனக் கேட்டாள்.

சத்யாவுக்குக் கோபம் தலைக்கேறி அவள் குரல் உயர்ந்தது. "குடிக்கிறாள் என்கிறாயே ஏன் குடித்தாள்? இவ்வளவு நாளும் ஒழுங்காக இருந்தவளுக்கு இப்பொழுது என்ன நடந்ததென்று நினைக்கத் தோன்ற வில்லை இல்லையா?"

"அடி போடி. கஷ்டத்தை எதிர்கொள்ளப் பயந்து தன்னை மறக்கக் குடிப்பவள் புத்தி சொன்னால் கேட்பாளா? அது புறக்குடத்தில் ஊற்றிய நீராகத்தான் இருக்கும். மாலை விரிவுரையையும் வீணாக்கி இவ்வளவு நேரமும் அவளுக்கு என்னவோ அளந்துவிட்டு வந்திருக்கிறாய். வேணு மானால் நான் உன்னுடன் பந்தயம் கட்டுகின்றேன் நாளைக்கும் அவள் அதே போதையில் வருவாள் பார்" என்றாள்.

அதைக் கேட்கச் சத்யாவுக்கு வெறுப்பாக இருந்தது. 'ஏன் இவள் எல்லோரையும் அப்படி நினைக்கிறாள். மேலைத் தேசத்தவர் குடிகாரர்

என இவர்கள் மனத்தில் பதிந்து விட்டது. அது அவர்களின் கலாசாரம், வாழ்க்கையுடன் ஒன்றிவிட்டது எனப் புரிந்து கொள்ள மாட்டார்கள். ஆனால் ஜஸ்மின் மிகவும் திறமை மிக்க ஒரு மாணவி திடீரென ஏன் போதைக்கு அடிமையானாள்? என யாராவது மனிதாபிமான முறையில் சிந்தித்து ஆவன செய்திருக்கலாம். எதுவுமே செய்யாமல் எல்லோரும் அவளை வேடிக்கை பார்த்திருக்கிறார்கள்' என நினைத்தவள் எதுவுமே பேசாமல் எழுந்து போனாள்.

அதைக் கவனித்த பூர்ணிமா ,"உன் நிவாஷ் வந்தான்" என்றாள். "ஏதாவது சொன்னாரா"? எனக் கேட்டாள். "வரச் சொன்னாயாம் வந்து நீ இல்லை என்றதும் நல்ல கோபமாகத் திரும்பிப் போனான்" என்றாள். திடீரென இதய வீணையின் ஒரு தந்தி அறுந்த மாதிரி மிகப் பெரிய ஏமாற்றம் அவளைக் கவ்வியது. இவள் ஏதாவது சொல்லியிருப்பாள் அதனால் கோபம் வந்திருக்கலாம். நிவாஷ் விஷயத்தில் தவறு செய்து விட்டேனோ? எனச் சிறு தயக்கம் எழுந்தது, ஆனால் நிவாஷ் அப்படி இல்லையே என்றும் அவள் இதயத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

முகம் கழுவி உடை மாற்றித் தனது வழமையான மாலைப் பிரார்த் தனையை முடித்த சத்யாவுக்கு மனம் மிகவும் ஆறுதலாக இருந்தது. ஜஸ்மினுக்காக இறைவனிடம் மனமுருகிப் பிரார்த்தித்தாள். பிரார்த்தனையைவிட வலிமையானது வேறொன்றுமில்லை என எல்லாச் சமயங்களும் கூறுகின்றன. சத்யாவும் அதை முழுமையாக நம்பிப் பல சந்தர்ப்பங்களில் பலனும் பெற்றிருக்கிறாள். பின் தொலைபேசியில் நிவாஷைக் கூப்பிட்டு மன்னிப்புக் கேட்டாள். "அதெல்லாம் பரவா யில்லை, உன்னைப் பார்க்காதது சிறிது ஏமாற்றம்தான், ஆனால் எங்கு போனாய் சத்தி? வழக்கம் போலத் தேவையில்லாத வேலையில் மூக்கை நுழைக்கிறாள் என்று பூர்ணிதான் கோபப்பட்டாள்" எள்றான். விபரம் கூறியதும் "ஐயோ பாவமே! நான் ஏதாவது செய்யவா டார்லிங்" எனக் கேட்டான். அந்த ஆறுதல் வார்த்தையில் இதுவரை இருந்த மனக் கலக்கம் மறைந்து மளுக்கென்று சில கண்ணீர்த் துளிகள் கைகளில் தெறித்தன. என் தேர்வு தவறானதல்ல, என் நிவாஷ் என்னைப் புரிந்து கொள்வார், என் கொள்கைகளுடன் ஒத்துப் போவார் என மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. "கேட்டதே போதும் நிவாஷ். உன் உதவி தேவைப்பட்டால் நிச்சயம் கேட்கிறேன்" எனக் கூறி மேலும் சிறிது நேரம் பேசிவிட்டுத் தொடர்பைத் துண்டித்தாள். இதுவரை இருந்த கனம்

இறங்கி, இதயம் லேசாகிக் காற்றில் மிதப்பது போல் இருந்தது. மனக் கலக்கத்தில் எங்கோ ஒளிந்திருந்த பசி திடீரென வயிற்றைக் கிள்ளியது. “ஏய் பூர்ணி வா சாப்பிடுவோம்” என அவளை உலுக்கினாள்.

பூர்ணிமா அவளைப் பார்த்து வேடிக்கையாகச் சிரித்தவள், “மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார், கண் துஞ்சார்..... கருமமே கண்ணா யினார்” என்றவள் பின், “அப்பாடா உனக்குப் பசி கூட வந்ததா சத்தி? மத்தியானம் எடுத்த சாப்பாடு அப்படியே இருக்கு” என்றாள். “மத்தியானம் சாப்பாடு எடுத்தாயா? மிக்க நன்றி பூர்ணி. இதுதான் பூர்ணி! எப்போதும் ஓர் இளநீர், வெளியே கடுமை, உள்ளே இனிமை” என்றாள். “போதும் உன் புகழ் மாலை” என்றவள். “நீ செய்வது தவறு என எனக்குத் தோன்றியதால் கண்டித்தேன். அதனால் உன் மேல் அன்பில்லையென்று அர்த்தமா? இவ்வளவு நேரமும் நீ ஜஸ்மினுக்கு அதைத்தானே செய்துவிட்டு வந்தாய். அவள் சில காலமாகப் போதையில் திரிவது எல்லோருக்கும் தெரியும். உன்னிடமிருந்து ஒளிந்து திரிந்தாள். இன்று என்னவோ போதை கூடியதால் படுத்திருந்து உன்னிடம் அகப் பட்டாள். யாராவது உன்னை அவளுடன் பார்த்தால் உன் பெயர் கெடும் என்று எனக்குப் பயமாக இருந்தது. பின் பனை மரத்தின் கீழிருந்து பால் குடித்த கதையாகிவிடும் அது தான் கோபித்தேன்” என்றாள். “நான் வேறு பதிலுக்குக் கத்திவிட்டேனா? மன்னித்துக் கொள் பூர்ணி” எனச் செல்ல மாக அவள் கழுத்தைக் கட்டித் தோளில் முகம் புதைத்தாள். “இதற் கொன்றும் குறைச்சலில்லை, பாய வேண்டியது பின் பாகாக உருகி மன்னிப்புக் கேட்க வேண்டியது” எனக் கூறித் தன்னை விடுவித்த பூர்ணிமா சத்யாவுடன் உணவருந்தச் சென்றாள்.

அதன்பின் சத்யா, ஜஸ்மினை அடிக்கடி கவனித்தாள். இருவரும் படிக்கும் பாட வகுப்புக்களுக்கு அவள் வருகிறாளா? எனப் பார்த்தாள். மற்றைய நாட்களிலும் தொலைபேசி, இ-மெயில் மூலமாவது எப்படி இருக்கிறாய் எனக் கேட்கத் தவறுவதில்லை. அவள் மகிழ்ச்சியாக இருப்பது தெரிந்தது. இடையில் ஒரு நாள் சத்யாவைக் கண்ட நான்சி “உன்னால் தான் இப்பொழுது என் குடும்பத்தில் அமைதி நிலவுகிறது உனக்கு என் நன்றிகள் சத்தி” எனச் சொன்னார். வருட இறுதியில் சத்யாவிடம் வந்த ஜஸ்மின் “உனக்கு நான் எப்படி நன்றி சொல்வது சத்தி! அதற்கு என்னிடம் வார்த்தைகளே இல்லை. என் வாழ்க்கையை மீட்டுத் தந்தவள் நீ, அன்பின் மகிமையை எனக்குப் புரிய வைத்தவள் நீ.

நான், மம்மி, பீட்டர், குழந்தைகள் எல்லோரும் இந்த விடுதலையில் தெற்கு ஆஸ்திரேலியாவுக்கு ஒரு சுற்றுலா போகின்றோம், வரத் தாமத மானாலும் இப்பொழுதே உனக்கு எங்கள் புது வருட வாழ்த்துக்கள். மம்மியும் சொல்லச் சொன்னார்'' என்றாள். ''உன்னைப் பார்க்க எனக்குப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது ஜஸ். உன் பிரயாணம் மிகவும் ரம்மியமானதாக அமையட்டும்'' என வாழ்த்தி அனுப்பினாள்.

அன்பை அன்பினால்தான் அடையமுடியும். வாழ்க்கை அன்பு மயமானால் அதன் மூலம் பல சாதனைகள் புரிய முடியும் என்பதை அடுத்த வருடம் ஜஸ்மின் மிகச் சிறப்பாகச் சித்தியடைந்து நிரூபித்தாள். அவளிடம் சத்யா ''தூய அன்பில் சுயநலமோ உள்நோக்கமோ இருக்காது. அத்தகைய அன்பு தான் தெய்வீகமானது. அதை நீ உன் குடும்பத்தினரிடம் கண்டிருப்பாய் என நினைக்கிறேன்'' என்றாள். "உண்மைதான் சத்தி. பட்டம் பெற்றதற்குப் பரிசாக மம்மி, டாடி, பீட்டர், மேரி எல்லோருமாகப் பணம் போட்டு எனக்கு ஒரு புதுக் கார் வாங்கித் தந்துள்ளார்கள். உனக்குத் தெரியுமா லிசாக்குட்டி கூடத் தன் கைச் செலவுப் பணத்தில் நூறு டாலர்கள் சேர்த்துக் கொடுத்ததாம்'' என நெகிழ்ச்சியுடன் கூறினாள்.

"அன்பின் தன்மையால் அருள் சுரக்கும், அன்பிலிருந்து கருணையும் தயையும் பிறக்கும். அதன்மூலம் பிறருக்கு உதவும் தயாள குணம் உண்டாகும்''. எனப் பத்திரிகையில் வந்த புத்தாண்டுச் செய்தியைப் படித்து வியந்த பூர்ணிமா "இதைத்தானே சத்தி அடிக்கடி சொல்வாள். அவள் காட்டிய அந்த அன்பு வழி தானே ஜஸ்மினின் வாழ்வில் ஒளி யேற்றியது நான் கூட அவளை அன்று கோபித்தேனே!" என வருந்தினாள்.

"உன்னால் எப்படிச் சத்தி இந்த வயதில் ஒரு பூரண ஞானி போல அனைவரையும் எந்த வேறுபாடுமின்றிச் சமமாகப் பாவித்து அன்பை வாரி வழங்க முடிகிறது"? எனப் பூர்ணிமா கேட்டாள்.

"அன்பில் விளைவதுதான் உண்மையான சாந்தி. ஒவ்வொருவருக்கும் மனச் சாந்தி ஏற்பட்டுவிட்டால் உலகில் அமைதி தானாக நிலைத்து விடும். முதலில் வேற்றுமை என்ற அறியாமை இருள் விலக வேண்டும். அந்த இருள் நீங்கினால் எங்கும் அன்பெனும் ஒளி தானாகப் பிறக்கும்' எனக் காஞ்சிப் பெரியவர் கூறியிருக்கிறார், நீயும் அனைவரிடமும் எந்த

வேறுபாடும் இன்றிச் சமமாக அன்பு செலுத்திப்பார், அது எத்தகைய அமிர்தமான உணர்வென்பது உனக்குப் புரியும்" என்றாள்.

"உன்னை நினைத்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன் சத்தி, உன்னைப் போல மனப்பக்குவம் எனக்கு இன்னும் ஏற்படவில்லை ஆனால், முடிந்தவரை அனைவரிடமும் அன்பு செலுத்தப் பார்க்கிறேன்" எனப் பூர்ணிமா, சத்யாவை அன்புடன் அணைத்துக் கொண்டாள். அங்கேயும் அன்புதான் வென்றது.

ஒவ்வொரு நாளையும் அன்புடன் தொடங்கி, அன்பினால் நிரப்பி அன்பினில் கழித்து, அன்புடன் நிறைவு செய்தால் அனைத்தும் அன்பு மயமாக இருக்கும். சர்வம் ப்ரேம மயம்!

• • •

கலப்பை - ஜனவரி 2004

# இன்பெனும் அங்குசம்

## 1

**ஷ**ஹானா தனது கண் சிகிச்சைக்காக அன்று அவுஸ்திரேலியா செல்கின்றாள். அவள் செல்லும் அந்தச் சர்வதேச விமானம் இலங்கை யின் தலை நகராம் கொழும்பிற்கு அருகிலுள்ள கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து இன்னும் சிறிது நேரத்தில் புறப்பட இருந்தது. அவளை வழி அனுப்புவதற்காக வந்த அவள் பெற்றோர் பார்வையற்ற தமது மகளை விமானப் பணிப்பெண்ணிடம் ஒப்படைக்கக் காத்திருந்தனர்.

ஷஹானா இருந்த சக்கர வண்டியைத் தள்ளுவதற்கு ஆயத்தமாகிய அப்பணிப்பெண் "என் பெயர் கவிதா. போவோமா ஷஹானா" என்றாள். ஷஹானா சரியென்றதும் தன் கையிலிருந்த பத்திரங்களைப் பார்த்து டாக்டர் திருமதி வித்யா சுதர்சனனிடத்தில் பத்திரமாக ஒப்படைப்பேன் என்று உறுதியளித்தாள். ஷஹானா தன்னால் பெற்றோர்க்கு வீண் கஷ்டம் என்ற வேதனையை மறைத்துக் கொண்டே அவர்களிடம் விடை பெற்றுச் சென்றாள்.

சக்கர வண்டியைத் தள்ளிக் கொண்டே கவிதா ஷஹானாவிடம் பேச்சுக் கொடுத்தாள்.

"எதற்கு ஷஹானா அவுஸ்திரேலியா செல்கின்றீர்கள், டாக்டர் வித்யா என்ன உங்களுக்கு உறவா?"

"வித்யாவா? அவள் என் அத்யந்த சினேகிதி. எனக்குக் கண் பார்வையை மீட்டுத்தருகிறேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டு

இருக்கிறாள் எனக்கென்றால் நம்பிக்கை இல்லை கவிதா. இத்தனை நாட்களாகப் பார்க்காத டாக்டர்களா?"

அவளை மிக்க இரக்கத்துடன் நோக்கிய கவிதா, 'இந்த அழகுச் சிலைக்கு இத்தகைய ஒரு நிலையா' என மனம் வெதும்பினாள். பின் "எப்படி ஷஹானா நீங்கள் பார்வையை இழந்தீர்கள்?" என வினவினாள்.

"இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடந்த ஒரு குண்டு வெடிப்பில் சிக்கிக் கொண்டேன். தொலைவில் நின்றதால் பார்வையை மட்டும் இழந்தேன் ஆனால், கவிதா! பார்வையற்று வாழ்வதைவிட இறந்தே இருக்கலாம்."

"ஏன் அப்படியெல்லாம் சொல்கின்றீர்கள்" என்று சிறிது உரிமையுடன் கண்டித்த கவிதா, "நீங்கள் உங்கள் டாக்டர் நண்பியின் உதவியால் மறுபடியும் பார்வையைப் பெறத்தான் போகின்றீர்கள். அப்பொழுது யாருடைய துணையும் இல்லாமல் நீங்களாகவே விமானத்தில் ஏறிப் பயணிக்கத்தான் போகின்றீர்கள்"

"வித்யாவுக்காகவாவது உங்கள் வாக்குப் பலிக்கட்டும் கவிதா. இல்லா விட்டால் அவள் தாங்கமாட்டாள்."

கவிதா ஷஹானாவை அவளது இருக்கையில் வசதியாக அமரச் செய்து அழைப்பு மணியின் விசையை அவள் கைகளுக்குக் காட்டி எதுவானாலும் இதை அழுத்தினால் நாங்கள் வருவோம் எனக் கூறிச் சென்றாள்.

விமானத்திற்குள் இருந்த ஷஹானாவுக்குப் பலப் பல எண்ணங்கள் எப்பொழுதுமே அவள் எறும்பு போன்றவள். ப்ஸ்ஸிற்குள்ளும் கையில் ஒரு புத்தகம் வைத்திருப்பாள். ஆனால் இந்த இரண்டு வருடங்களாகச் சிவனே! என்று சும்மா மற்றவர்களுக்குப் பாரமாக இருப்பது மிகவும் வேதனையாக இருந்தது.

அவளது வாழ்வில் இது முதலாவது விமானப் பயணம். விமானப் பயணம் பற்றி எத்தகைய கற்பனைகள் செய்திருக்கின்றாள். ஆனால் இப்பொழுது எதையுமே பார்க்க முடியாத நிலை. பார்வை இல்லா மலேயே பிறக்கலாம் ஆனால் இருந்ததை இழப்பது கொடுமையிலும் கொடுமை என்று ஷஹானா நினைத்தாள்.

தன் கஷ்டம் மட்டுமன்றி எத்தனை பேரைக் கஷ்டப்படுத்திவிட்டாள். பெற்றோர் நண்பர்கள் அதுமட்டுமா? அவளருமைக் காதலன்

கார்த்திக்கை எப்படி எல்லாம் துன்பப்படுத்திவிட்டாள். கண்ணில் லாமலேயே மனைவியாக்க எத்தகைய மகிழ்வுடன் முன் வந்தான். அதற்கு எத்தகையதொரு தியாக உள்ளம் வேண்டும்? ஆனால் அவன் தியாகத்தைச் செய்தால் அவளது சீரிய கொள்கைகளும் லட்சியங்களும் என்னாவது? 'ஒரு நல்ல மனைவியாக, தாயாகத் தன் கடமைகளைச் செய்ய முடியாதவளுக்கு திருமணம் எதற்கு' என்றாள்.

"நீங்கள் யாராவது நல்ல பெண்ணாகப் பார்த்து மணந்து கொள் ளுங்கள். உங்களுக்கு என் வாழ்த்துக்கள். இனி என்னிடம் வராதீர்கள்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள். ஆனால் அவனோ, 'என்றும் நீதான் என் மனைவி ஷஹானா உனக்கு விருப்பமில்லாவிட்டால் இனி நான் வரவில்லை. உன் மனம் தேறும் வரை காத்திருப்பதைத் தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை' என்று கூறிச் சென்றான்.

அதைக் கூறும்பொழுது அவனது முகத்தில் தேங்கியிருந்த வேதனையை ஷஹானா தன் மனக்கண்ணில் கண்டாளாயினும் யாவும் அவனது நன்மைக்கே என நினைந்து வாளாவிருந்தாள்.

அதன்பின் கார்த்திக் வரவில்லை. அவன் அவுஸ்திரேலியா சென்றதாக அவள் பெற்றோர் சொல்லக் கேட்டாள். அவன் எங்கிருந்தாலும் நன்றாக வாழ வேண்டும் அவனுக்கு நல்ல மனைவி வாய்க்க வேண்டுமென்று இறைவனிடம் வேண்டினாள்.

ஷஹானா இனித் தனக்குக் கண்ணில்லாத எதிர்காலம்தான் எனத் தீர்மானித்துச் செயல்பட்டாள். ப்ரெய்லி எழுத்து முறை பயின்று எழுத வாசிக்க முயன்றாள். தனது ஆசிரியைத் தொழிலைப் பார்வை இழந் தோர் பாடசாலைக்கு மாற்றுவதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தாள். ஒரு சில நெருங்கிய தோழிகளைத் தவிர வேறு யாருடனும் தொடர்பில்லை. எல்லோரிடமும் வித்யாவுக்குத் தன் நிலை பற்றி மூச்சு விடக்கூடாது என்று வேண்டிக் கொண்டாள். அந்த நட்பின் மகத்துவமும் வித்யாவின் குணமும் தெரிந்தவர்கள் அதை ஏற்றனர்.

ஆனால் என்ன ஆச்சர்யம் அன்று வித்யா புயலென வந்தாள். ஷஹானாவின் அன்னையிடம் "எங்கே ஆன்ட்டி அவள் ஒரு கடிதம் எழுதக்கூட நேரமில்லாமல் அவ்வளவு பெரிய மனுஷி ஆகி விட்டாளா" என்று சத்தம் போட்டாள். அவளுக்கு என்ன சொல்வதென அம்மா தீர்மானிப்பதற்குள் தோழியின் குரலால் ஈர்க்கப்பட்ட ஷஹானா தன்னை மறந்து, "இங்கிருக்கிறேன் வித்தி" எனக் கைத்தடியுடன் வெகு அவசர மாக வெளியே வந்தாள்.

அதைப் பார்த்த வித்யா 'என்னடி கோலமிது' என அவளைக் கட்டிக் கொண்டு கதறியே விட்டாள். அவளைச் சமாதானப்படுத்துவது ஷஹானா வுக்கு மிகக் கஷ்டமாகிவிட்டது.

மிக வெகுநேரமாக வித்யா அழுவதும் கோபிப்பதும் வேதனைப் படுவதும் பச்சாதாபப்படுவதுமாக உணர்ச்சிக் குவியலாக இருந்தாள். பின் எதுவுமே பேசாமல் எழுந்து போய்விட்டாள். கண்ணில்லாத வேதனையைவிட வித்யா என்ன ஆவாளோ என்ற வேதனை தான் ஷஹானாவுக்கு மிக அதிகமாகியது.

அவள் தன் மேல் கொண்டுள்ள அளவிடற்கரிய அன்பை நினைந்து ஷஹானா எப்போதும் மகிழ்ந்திருக்கின்றாள். ஆனால் அதுவே இப்பொழுது இருவருக்கும் வேதனையாகி விட்டதே என்று மனம் வெதும்பினாள்.

வித்யா மறுநாள் வந்தாள். அவுஸ்திரேலியாவில் சத்திர சிகிச்சைக்கு முயற்சிக்கப் போகின்றேன் என்று வைத்தியக் குறிப்புக்களைக் கேட்டாள். 'வேண்டாம் வித்தி எல்லாம் வீண் முயற்சி' என்ற ஷஹானாவை, 'எல்லாம் எனக்குத் தெரியும் நீ பேசாமல் இரு' என அடக்கினாள். ஷஹானாவின் பெற்றோரிடம் தனக்கு வேண்டிய விபரங்களைப் பெற்றுச் சென்றவள் ஒரு மாதத்திற்குள்ளேயே உடனே வரும்படி அழைத்தாள். பெற்றோர் அனுப்பி வைத்தனர். வித்யாவுக்கு வேறு வேலையில்லை 'அம்மா அப்பா பாவம்!' என்று நினைத்துக் கொண்டே ஷஹானா பயணித்தாள்.

## 2

**சி**ட்னி சர்வதேச வானூர்தி நிலையத்தில் வித்யா அவளைக் கவிதாவிட மிருந்து பெற்றாள். கவிதா மீண்டும் நம்பிக்கையை இழக்க வேண்டாம் எனக் கூறிச் சென்றாள்.

வித்யாவின் கணவன் அவள் அருகில் வந்து "உங்கள் வரவு நல்வர வாகுக ஷஹானா. எல்லாம் நல்லபடியாக நடக்கக் கடவுளைப் பிரார்த் திப்போம். நீங்கள் எங்களுடன் தங்குவது எனக்கு மிக்க மகிழ்ச்சி" என்றான்.

அவனுக்கு நன்றி தெரிவித்த ஷஹானா எப்படி என்பது போல வித்யாவின் கைகளை அழுத்தினாள். வித்யாவோ "எல்லாம் அவருக்குத்

தெரியும் ஷஹி. அதுதான் நீ என்னை வற்புறுத்தித் திருமணத்திற்குச் சம்மதிக்கச் செய்தது" என்றாள்.

"ஓ! திருமணம் செய்து வெளிநாட்டில் போய் இருக்க மாட்டேன் என்று நீ அடம் பிடித்ததை அவரிடமுமா சொன்னாய்?" என்று அதிக நாட்களின் பின் மனம் நிறைந்து சிரித்தாள். அந்தக் கலகலப்பு எல்லோரையுமே பற்றிக் கொண்டது.

வானூர்தி நிலையத்திற்கு வெளியே போன போது ஷஹானாவுக்கு அதிக நாட்களின் பின் அந்த உணர்வு ஏற்பட்டது. ஆமாம், அவள் கார்த்திக்கின் அண்மையை வெகு அருகில் உணர்ந்தாள்.

தன் ஆவலை அடக்க மாட்டாதவளாக வித்தி வேறு யாராவது வந்திருக்கின்றார்களா என்றாள். சிறிது திடுக்கிட்ட வித்யா பின் தனக்கேயுரித்தான குறும்புடன் "ஆமாம் இளவரசியார் ஷஹானாதேவி அவர்களை வரவேற்பதற்கு நியூ சவுத் வேல்ஸ் மாநிலமே இங்கே திரண்டுள்ளது. இங்கே குழுமியுள்ள சனத்தொகை வேல்ஸ் இளவரசி டயானாவின் இறுதிச் சடங்கிற்குத் திரண்ட பெரிய பிரித்தானியரின் தொகையையும் விஞ்சி விட்டது" என்றாள்.

"தொடங்கி விட்டாயா உன் கிண்டலை இதுதான் என் வித்தி. இது எனக்குப் போதும்" என்றவள், "நான் ஏன் கேட்டேன் என்று உனக்குத் தெரியும் வித்தி. கார்த்திக் வந்தாரா? அவர் இங்கே நிற்கின்றார் இல்லையா" என்றாள்.

அவள் புலனுணர்வைப் புரிந்து மிக வெகு தூரத்தில் வந்த கார்த்திக்கும் மற்றையோரும் அதிர்ந்தனர். ஒருவாறு சமாளித்த வித்யா "இந்தக் கூட்டத்தில் அவரைத் தெரியவில்லடி" என்று நகைத்தாள். தற்போதைக்குக் கார்த்திக்கிற்கும் தனக்கும் தொடர்பிருப்பதை அவளுக் குச் சொல்ல வேண்டாமென்று வித்யா நினைத்தாள்.

பின் "இப்படி உருகும் நீ ஏனடி அவரை விரட்டியடித்தாய்?" என்றாள் எரிச்சலுடன்.

"அது உனக்குத் தெரியாது வித்தி அவரை வெறுத்தா விரட்டினேன் இல்லடி. அவர் நன்மைக்காக அல்லவா?"

"நன்மை செய்தாளாம்! நன்மை! அறிவு கெட்டவள்!" என முணுமுணுத்த வித்யா சாமான்களைக் காரில் ஏற்றினாள்.

வீட்டிற்கு வந்த பின் ஷஹானா பல தடவைகள் வித்யாவிடம் "வித்தி என்னால் உனக்கொன்றும் கஷ்டமில்லையே? உனக்கு உதவியாக இல்லாமல் உபத்திரவம் தருவதற்கு வந்திருக்கிறேன்" எனக் கேட்டு விட்டரள்.

வித்யாவும் சாம பேத தான தண்டம் என்பது போல 'மதிப்புமிக்க ஷஹானா அவர்களின் பாதம் பட ஏழையின் இச் சிறு குடில் என்ன புண்ணியம் செய்திருக்க வேண்டும்' என்று வேடிக்கையாகவும்,

'மண்டு இப்படியாவது வந்தாயே பேசாமல் இரு' என்று செல்லமா கவும் கூறியவள் முடிவில், 'ஷஹி! இன்னொரு தடவை இந்த வார்த்தை யைக் கேட்டேனானால் இந்தப் பத்தாம் மாடியிலிருந்து குதித்து விடுவேன்' என்று மிரட்டினாள்.

பின் "அசடு மாதிரிப் பேசாதடி இப்போது என் எண்ணமெல்லாம் உன் பார்வையை மீட்கவேண்டும் என்பதுதான் அதற்காக நான் எதையும் செய்யச் சித்தமாக இருக்கிறேன். உன்னை இப்படிப் பார்ப்பதை விட வேறொன்றும் எனக்குக் கஷ்டமில்லை" என்றாள் வார்த்தைகள் தளர.

"ஆனால், நாங்கள் உண்மைகளைச் சந்திக்கப் பழகவேண்டும் வித்தி. எனக்கு எல்லாம் பழகிவிட்டது, எதுவானாலும் நான் ஏற்றுக்கொள்வேன். நீ மட்டும் வருந்தாமல் இருக்க வேண்டும்" என்றாள் விம்மலுடன். 'என்னால் எல்லோருக்கும் கஷ்டம்' என்ற வேதனை ஷஹானாவை வாட்டிக் கொண்டிருந்தது.

"அப்படி ஒன்றும் ஆகாது. ஆகவும் விடமாட்டேன்" என வித்யா சபதம் செய்தாள்.

'கடவுளே இவள் நம்பிக்கையை வீணாக்காதே' என்று பிரார்த்திப் பதைத் தவிர ஷஹானாவுக்கு வேறு எதுவும் தெரியவில்லை.

வித்யா தொழில் முறையிலான நட்புரிமையில் பல கண் சிகிச்சை நிபுணர்களிடம் ஆலோசனை கேட்டுவிட்டாள். எல்லோரும் சிறிது சிக்கல்தான் ஆனால் ஆபரேஷன் செய்து குணப்படுத்தலாம் என்றனர்.

சில சமயம் விதி வென்றுவிட்டால் டாக்டர்களின் முயற்சி தோற்று விட்டால் என்ற பயத்தில் தன் இஷ்ட தெய்வமாம் பகவான் சத்ய சாயி பாபாவிடம் 'இறைவா! உன் அடியார்க்குச் சேவை செய்யத் தன்னலமற்ற தொண்டுள்ளம் கொண்ட இவளை விட்டால் வேறு யார் கிடைப்பார்கள் தயவுசெய்து என் ஷஹியைப் பார்வை அற்றவளாக்கி நான்கு சுவர் களுக்குள் முடக்கி விடாதே' என்று இறைஞ்சி வேண்டினாள்.

இறையருளாலும் டாக்டர்களின் முயற்சியாலும் ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்தது.

ஷஹானா பின்னரும் பல தடவைகள் கார்த்திக் தன் அருகே நிற்பதை உணர்ந்தாள்.

அவள் முதல் முதலாக டாக்டரிடம் பரிசோதனைக்குப் போனபோது மருத்துவமனையில் சத்திர சிகிச்சை முடிந்த பின் கண் கட்டு அவிழ்ப்பதற்கு முன் பல தடவைகள் தனக்கு மிக அண்மையில் உணர்ந்தாள். யார் என்று கேட்டால் பதில் கிடைப்பதில்லை. ஏன் இந்த மௌன நாடகம் வேண்டுமென்றே என்னைத் தண்டிக்கின்றாரா என்று நினைத்தாள்.

கண்கட்டு அவிழ்த்த அன்றாவது அவன் தன் முன்னால் நிற்பான் என்று மிக ஆவலுடன் எதிர்ப்பார்த்தாள். கட்டு அவிழ்த்து டாக்டர்களையும் மற்றவர்களையும் பார்த்த பின் "வித்தி நான் உன்னை மறுபடியும் பார்க்கிறேனடி" என அவளைக் கட்டிக் கொண்டு கண் கலங்கினாள். 'தயவுசெய்து அழாதடி' எனத் தோழியை மெதுவாக விலக்கிய வித்யா மடை திறக்கக் காத்திருந்த தன் ஆனந்தக் கண்ணீரையும் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

பின் ஷஹானா எப்போதும் தன் கைப்பையில் வைத்திருக்கும் கார்த்திக்கின் படத்தைக் காட்டி "இவரைத் தெரிகிறதா" என்றாள் வேடிக்கையாக. நிழலைப் பார்த்துக் கொண்டே நிஜம் எங்கே என்று அப்பொழுது பார்வை வந்த கண்களை அவை எட்டும் தொலைவிற்கு அலைய விட்டு ஏமாந்தாள்.

வித்யாவும் நெஞ்சழுத்தக்காரி. கார்த்திக் பற்றி எதுவுமே பேசுவதில்லை. ஷஹானாவுக்கு இருவரையுமே நன்கு தெரியுமாகையால் இதற்குள் எதுவோ மர்மம் இருக்கிறது பொறுத்திருந்து பார்ப்போம் என வாளாவிருந்தாள்.

# 3

**ஷ**ஹானா மருத்துவ நிலையத்திலிருந்து வந்த பின் வித்யாவுக்கு ஒரே ஓட்டமாகிவிட்டது. இரவு பகல் பாராமல் வேலை. சுமார் இரண்டு கிழமைகளின் பின் அன்று தான் ஒரு முழு நாள் ஓய்வு கிடைத்திருந்தது. ஷஹானாவின் கண்ணும் இனிப் பயமில்லை என்ற அளவுக்குக் குணமடைந்திருந்தது.

தோழியர் இருவரும் தனித்திருந்தனர். இருவர் நினைப்பும் ஒன்றாகவே இருந்தது. ஆனால் யார்? எங்கே? எப்படி? ஆரம்பிப்பது என்பதில்தான் இருவருக்கும் தயக்கம்.

"அடியே ஷஹி என் இனிய சகியே!" என்று வித்யா ஷஹானாவின் கழுத்தைப் பின் பக்கமாகக் கட்டிக் கொண்டாள்.

கைகளைப் பின்னால் போட்டு அவளை அணைத்த ஷஹானா, "என்னம்மா அவுஸ்திரேலிய டாக்டரின் வாயிலிருந்து செந்தமிழ் தேனாகப் பாய்கிறது?"

"இது செந்தமிழ் இல்லடி என் செல்லத் தமிழ் நான் என் ஷஹியுடன் விளையாடும் தமிழ்"

ஷஹானாவுக்குச் சிரிப்பு வந்தது . வித்யா கோபம் வந்தால் "நீ ஒரு சகிக்க முடியாத சகிடி" என்று சத்தம் போடுவதையும், அவளும் கார்த்திக்கும் இரண்டு மூன்று நாட்களுக்குச் சந்திக்கவில்லை என்பதை எப்படியாவது மணந்து பிடித்து,

"பாலும் கசந்ததோடி? ஷஹி
என் சகியே உன் படுக்கையும் நொந்ததோடி?"

என்று பாடி அவளை வம்புக்கு இழுப்பதையும் நினைத்துக் கொண்டாள்.

"எனக்கிப்போ எவ்வளவு சந்தோஷமாக இருக்குத் தெரியுமா? என் ஷஹியால் என்னைப் பார்க்க முடியும்."

ஷஹானா அவளைத் தன் முன் பக்கமாக இழுத்தாள். அவள் இழுப்புக்கு ஈடுகொடுத்த வித்யா, "இவ்வளவு நாட்களும் எப்படியடி இருந்தாய் உனக்கு நான் ஒருத்தி இருப்பதே மறந்து போனதே. அது சரி உனக்கு எப்போதும் உனது கொள்கைகளும் லட்சியங்களும்தானே பெரியது. மற்றவர்களைப் பற்றிச் சிந்திக்கமாட்டாயே!"

வித்யா எங்கே தொடங்கி எங்கே வருகிறாள் என்பது புரிந்ததால் ஷஹானாவின் இதழ்களில் புன்னகை அரும்பியது.

"என்னடீ நகைப்பு" என்று அதட்டிய வித்யா, "பார்வைதான் வந்து விட்டதே இனி உன் திட்டம் என்ன ஷஹி" என்றாள்.

"திட்டமா? எப்போ வீட்டிற்குப் போக விடுவாய்?"

"அதற்கிப்போ என்ன அவசரம்? அதில்லை ஷஹி, உன் எதிர்கால வாழ்க்கைத் திட்டம். கார்த்திக் எங்கே ஷஹி? அவரிடம் உன் பார்வை வந்ததைச் சொல்ல வேண்டாமா?"

“எனக்கென்ன தெரியும் வித்தி, உனக்குத்தான் எல்லாம் தெரியுமே” என்றாள் அதே முறுவலுடன்.

“என்னடி இவளே! எனக்கெப்படி உன்னவரின் இருப்பிடம் தெரியும்” என்றாள், எங்கோ பார்த்துக் கொண்டு.

அவளைத் தன் பக்கமாகத் திருப்பிய ஷஹானா, “வித்தி, எங்கே நீ மீட்டுத் தந்த என் கண்களைப் பார்த்துச் சொல். உனக்கு அவரைப் பற்றி ஒன்றுமே தெரியாதா? அது சரி, விமான நிலையத்திலும் ஆஸ்பத்திரியில் எப்போதும் என் அருகிலேயே நின்றவர் அதன் பின் ஏன் இந்தப் பக்கமே வரவில்லை? உன் வீட்டுப் பக்கம் வர வேண்டாமென்று ஏதாவது தடை யுத்தரவு போட்டாயா? அல்லது அவருக்கு என்னில் கோபமா?” ஆனால், ‘என் கார்த்திக் அப்படியெல்லாம் கோபிக்க மாட்டாரே’ என்றும் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

திறந்த வாய் மூடாமல் சினேகிதியைப் பார்த்துக் கொண்டு நின்ற வித்யா தன் வியப்பை மறைக்க முடியாமல் கண்கள் மலர,“எப்படியடி?” என்றாள்.

“இதற்கெல்லாம் வெறும் புறக் கண் தேவையில்லடி அன்பு கொண்ட அகக் கண்ணே போதும். மற்றது பார்வையற்றவர்களுக்கு உய்த்துணரும் திறமை அதிகம் என்பது பாவம் இந்த டாக்டருக்குப் புரியாமல் போனதே” என்று நகைத்தவள், “ஆமாம் வித்தி, எனக்கெல்லாம் தெரியும் இனியும் என்னை ஏமாற்றாதே! நான் ஊருக்குப் போவதற்கு முதல் அவரை என் கண்களால் ஒரு தடவை பார்க்க வேண்டும் தயவு பண்ணி உதவி பண்ணம்மா. அவருக்கு என்மேல் கோபம் என்றால் மன்னிக்கும்படி சொல்லடி ப்ளீஸ் வித்திம்மா” என்றாள்.

ஆனால் வித்யா வெகுண்டெழுந்தாள். “மன்னிப்பா? உனக்கா? நீ செய்த காரியத்திற்கு உன்னை மன்னிக்கவும் முடியுமா? எப்படி ஷஹி அப்படிச் செய்தாய்? எல்லோரையும் ஒரேயடியாக ஒதுக்கினாயே! நீ கூறும் இந்த அன்பு, பாசம் எல்லாம் உனக்கு மட்டும்தான் உரியதா? மற்றவர்கள் எல்லாம் என்ன ஜடங்களா? இப்படி ஒரு நிலை எனக்கோ, கார்த்திக்கிற்கோ ஏற்பட்டிருந்தால் நீயும் பார்த்துக் கொண்டு சும்மாதான் இருப்பாயா? அப்படி இருக்க உன்னால் ம்டியுமா?”

ஷஹானா தன் தவறை உணர்ந்தாள். எதுவுமே பேசாமல் மௌனமாக இருந்தாள் அவளுக்கு,

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்

மேற் சென்று இடித்தற் பொருட்டு". (திருக்குறள் இல 784)

என்ற திருக்குறள் நினைவிற்கு வந்தது. வித்யா மட்டும் அன்று என் பக்கத்தில் இருந்திருந்தால் என் கைகளைக் கட்டிப்போட்டு விட்டுக் கார்த்திக்கைத் தாலி கட்டச் செய்திருப்பாள் என்று நினைத்தாள்.

வித்யா எதையும் கவனிக்கவில்லை அதுவரை நாட்களும் தன் மனத்தில் புதைந்திருந்த குமுறல்கள் அனைத்தையும் கொட்டித் தீர்த்து விடுவது போலத் தொடர்ந்தாள்.

"நினைத்துப் பார் ஷஹி. எத்தகைய முன் அறிவிப்பும் இல்லாமல் கார்த்திக்கை ஆஸ்பத்திரியில் தற்செயலாகக் கண்டதும் எனக்கு எப்படி இருந்திருக்கும்? அதுமட்டுமா அவர் உன் கண் சிகிச்சை பற்றி விசாரிக்க வந்ததாகச் சொன்னார். என் காலடியில் உள்ள நிலம் பிளந்து நான் எங்கேயோ அகழிக்குள் போவது போல் இருந்தது. எனக்குத் தெரியக் கூடாது என்று நீ சொன்னதாகவும் அதனால் தானாகவே விசாரிக்க வந்ததாகவும் சொன்னார். அப்படி என்னிடம் மறைக்கும் அளவுக்கு நான் உனக்கு என்ன பாவம் செய்தேன்" என வித்யா உடைந்து அழுதாள்.

தாவி அவளை அணைத்த ஷஹானா, "இதோ இந்த உன் அன்புதான் வித்தி" என்ற அவளது நயனங்கள் நிறைந்தன.

"நீ திடீரென வந்து நின்றதுமே எப்படியோ எல்லாம் தெரிந்துதான் வந்திருக்கிறாய் என்பது எனக்கு நன்கு புரிந்தது. அப்படித் தெரிந்திருந்தும் என்னைப் பார்த்ததும் எப்படிப் பிழியப் பிழிய அழுதாய். விபத்து நடந்த உடனே தெரிந்திருந்தால் என்ன செய்திருப்பாய்? எல்லாவற்றையும் போட்டு விட்டு ஓடி வந்திருப்பாய். இங்கே உன் வேலை, படிப்பு எல்லாவற்றுக்கும் மேலாக சுதர்சனன் எல்லாம் என்ன ஆவது?"

வித்யா எப்போதும் மற்றவர்களைக் கவனிப்பாளே அல்லாமல் தன்னைப் பற்றிக் கவலைப்பட மாட்டாள். அதுவும் ஷஹானாவுக்கென்றால் எதையுமே பொருட்படுத்த மாட்டாள். எனவே "அதெல்லாம் எப்படிப் போனால் உனக்கென்ன நீ என்னிடம் மறைத்திருக்கக்கூடாது" என்றாள் சத்தமாக.

அந்தச் சூழ்நிலையிலும் ஷஹானா கை கொட்டிச் சிரித்தாள். பின் வழக்கம்போல "முன்னுக்குப் பின் முரணா? சரி, நீதிபதி வித்யா அவர்களின் தீர்ப்புக்கு மறு விசாரணை ஏது தண்டனையைக் கொஞ்சம் குறைத்து இந்தத் தடவை மன்னித்து விடம்மா. இனி மேல் இப்படிச் செய்ய

மாட்டேன்” என்று அவள் முன்னால் வேடிக்கையாகக் கை கட்டி வாய் புதைத்து நின்றாள்.

“அப்படி வா வழிக்கு” என்ற வித்யா, “இருந்தாலும் நீ செய்த காரியத் திற்குக் குறைந்தது சுமார் ஆறு மாதங்களுக்காவது கார்த்திக்கைப் பார்க்க முடியாது. அதென்ன கண் ஆ!! அன்பு கொண்ட அகக் கண் அதனாலேயே பார்த்துக் கொள்” என்றாள் அதிகாரத் தோரணையுடன்.

முகத்தைத் தொங்கப்போட்ட ஷஹானா “இருந்தாலும் இது ரொம்பக் கொடுமை வித்தி. இந்த ஏழையின் மேல் சிறிது இரக்கம் காட்டம்மா”

“தற்சமயம் எதுவுமே செய்வதாக இல்லை” என்ற வித்யா தனக்குள் பொங்கி வந்த முறுவலை மறைத்துக் கொண்டு, “முருகன் கோவி லுக்குப் போவோம் வருகிறாயா” என்றாள்.

“சரி முருகனிடமாவது கேட்டுப் பார்ப்போம்.”

“ஆமாம். உன் முருகனிடமே கேள்” என வினயத்துடன் கூறி விட்டுப் போய் விட்டாள்.

## 4

**வி**த்யா திட்டமிட்டபடி கோவில் பூஜை நேரத்திற்கு அதிகம் முன்ன ராகவே போய் விட்டாள்.

அங்கே, “நீ இறங்கி உள்ளே போ ஷஹி. நான் காரைச் சரியான இடத்தில் நிறுத்தி விட்டு வருகிறேன்” என்றாள்.

போய்க் கொண்டிருந்த ஷஹானாவின் உள்ளம் என்றும் இல்லாத வாறு உவகையால் பூரித்தது. ஏன் இந்த ஆர்ப்பரிப்பு அதிக நாட்களின் பின் கோவிலுக்கு வருவதாலா என நினைத்துக் கொண்டு போனவளுக்கு அங்கே பேராச்சர்யமே காத்திருந்தது.

அவளை எதிர்பார்த்துக் கார்த்திக் நின்றான். ‘வித்தி, நீ சரியான கள்ளிடி’ என்று நினைத்தாள்.

கோவிலில் ஷஹானா, அலங்கார பூஜிதனாகத் தன் இரு பக்கங் களிலும் அண்ணனுடனும் பெற்றோருடனும் வீற்றிருந்த ஷஹானா இராகப்பிரியனான கார்த்திகேயப் பெருமானையும் தன் அருகே நின்ற கார்த்திக்கையும் மாறி மாறிப் பார்த்தவளின் கண்களிலிருந்து அவளைக் கேட்காமலேயே கங்கை பிரவாகமெடுத்தோடினாள்.

சிறிது நேரம் மௌனமாக அவளைப் பார்த்துக் கொண்டு நின்ற கார்த்திக், "இனி ஏன் இந்த அழுகை ஷஹானா எல்லாம்தான் சரியாகி விட்டதே" என்றான். எப்பொழுதும் மற்றவரைக் குறை சொல்லாத அவனது உதார குணமும், தன் செய்கையால் தாடியும் மீசையுமாக வயதானவன் போல அவன் ஆகியிருக்கும் கோலத்தையும் பார்த்த வளின் விம்மல் வெடித்துக் கேவலாகியது.

கோவிலில் கூட்டம் அதிகமாகவே வித்யா தோழியைத் தன் பக்கமாக இழுத்துக் கண்டித்தாள்.

ஷஹானாவுக்கு அவள்மேல் அன்பு கொண்ட அவளின் அன்புக்கு உரியவர்கள் அங்கே வைத்திருந்த ஆச்சர்யங்கள் ஒன்றிரண்டல்ல பலப் பல.

அவள் கண்ணை மூடிக் கொண்டு கேட்ட இடத்தில் எல்லாம் இட்ட கை எழுத்துக்களின் பலனை அப்பொழுதுதான் புரிந்து வியந்தாள்.

ஆமாம் கார்த்திக்கின் வருங்கால மனைவியாகத்தான் அவள் அவுஸ்திரேலியா வந்திருந்தாள். அதுமட்டுமா ஆபரேஷனுக்கு நிரந்தரப் பிரசை அந்தஸ்து வேண்டும் என்பதற்காக அவர்களுக்குப் பதிவுத் திருமணமும் இரகசியமாக வித்யாவால் நடாத்தப்பட்டிருந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக அன்றிலிருந்து ஐந்தாம் நாள் அவர்களின் திருமணத்திற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. ஆபரேஷன் முடிவு எப்படியிருந்தாலும் அவ்விருவருக்கும் திருமணம் செய்வதென உறுதியாக இருந்ததாக வித்யா சொன்னாள்.

ஷஹானாவுக்கு வார்த்தைகளே வரவில்லை. விழிகள் நிறைய அவ் விருவரையும் பார்த்துக் கொண்டு எதிரேயிருந்த முருகப் பெருமானுக்கு உளமுருகி நன்றி கூறினாள்.

பூஜை முடிந்ததும் திருமண ஒழுங்குகள் பற்றிப் பேசி விட்டு வெளியே வந்த வித்யா, கார்த்திக்கிடம் "தேவியின் கடைக் கண் பார்வை தான் ஒரு மாதிரி உங்கள் மேல் பட்டு விட்டதே இனித் தாடி மீசை எல்லாம் மளித்து விட்டு அழகாய் மணமகனாய் மண மேடைக்கு வந்து சேருங்கள்" எனக் கேலி செய்தாள்.

பின் தோழியர் இருவரும் வந்து காரில் அமர்ந்தனர். "வித்தீ ..." எனச் ஷஹானா நண்பியின் தோழில் ஆசுவாசமாகச் சாய்ந்தாள்.

“அம்மாவுக்கு இப்போ காற்றில் லேசாகப் பறக்கலாம் போல இருக்குமே” என வித்யா சீண்டினாள்.

“இவையெல்லாம் என் வாழ்வில் நடக்குமென்று நான் நினைக்கவே இல்லைடீ, என் எதிர்காலமே இருளில்தான் என்று நினைத்திருந்தேன். ஆனால் அதில் நீ ஒளி ஏற்றிவிட்டாய் உனக்கு நான் என்ன கைமாறு செய்வேன்....?” என்றவளின் வார்த்தைகள் கலங்கி விழிகள் விம்மிப் புனல் உதிர்த்தன.

அவளை இறுக அணைத்த வித்யா “அசடே! என்ன இது? நான் என்ன செய்தேன் நீ எனக்குச் செய்யாதவைகளா? அதுமட்டுமா நீயானால் இன்னும் ஒருபடி மேலே போய் என் கண்களைக் கொடுத்தாவது என் வித்தியைக் காப்பாற்றுகின்றேன் என்று புறப்பட்டிருப்பாய்.

இதுதான் நீ எப்பொழுதும் சொல்வாயே நட்பு என்பது வெறுமே சிரித்து மகிழ்வதற்கு மட்டுமல்ல வேண்டிய சமயத்தில் யானைப் பாகனின் கையிலிருக்கும் அங்குசம் போலச் சரியான வழியில் இட்டுச் செல்லவும் உதவ வேண்டும் இல்லாவிட்டால் அந்த நட்புக்கு மதிப்பே இல்லையென்று.

அந்தச் சந்தர்ப்பத்தில் உன்னால் எதுவுமே சிந்திக்க முடியாத நிலையில் உனக்கு மற்றவர்கள் சொல்லையும் கேட்கப் பிடிக்கவில்லை. அச் சமயத்தில் உன்னை வழி நடத்த வித்யா என்ற இந்த அங்குசம் அங்கே தேவைப்பட்டது அவ்வளவுதான்.

டாக்டர் படிப்பை மேற்கொள்ளப் பக்கபலமாக இருந்ததிலிருந்து சுதர்சனனைத் திருமணம் செய்யச் சம்மதிக்கச் வைத்தது வரை என்னை நீ எத்தனை சந்தர்ப்பங்களில் வழி நடாத்தியிருப்பாய்?

ஆனால் ஷஹி எல்லாம் செய்தேன் பதிவுத் திருமணத்திற்கு உன்னிடம் கையெழுத்து வாங்கிய பொழுது மட்டும் என்னால் என்னைக் கட்டுப்படுத்த முடியவே இல்லை. அதற்காக என்னை மன்னித்து விடு. உன் மன அமைதி கெடக்கூடாது என்பதற்காகத்தான் அப்படிச் செய்ய வேண்டியதாகி விட்டது.”

ஷஹானா என்றும் மாறாத ஒரு புன்னகையுடன் வித்யாவைப் பார்த்தாள்.

வித்யா “என்ன ஷஹி” என்றாள் கொஞ்சலாக.

"எனக்குத் தெரியும் வித்தி. நீ அதையும் செய்வாயென்று" என்றாள் அதே முறுவலுடன்

''ஓ அப்போ நான் கல்யாணம் செய்து வைப்பேன் என்று காத்திருந்தாயோ?" என்று கண்களில் குறும்பு மின்ன அவளைப் பார்த்து நகைத்தாள்.

"போடி..." என ஷஹானா நாணித் தலை குனிந்தாள்.

அதை ரசித்த வித்யா "ஆமாம் ஷஹி, எங்கள் நட்பு என்றும் நகுதற் பொருட்டானதாக மட்டும் இல்லாமல் மிகுதிக் கண் மேற்சென்று இடித்தற் பொருட்டானதாகவும் இருக்கட்டும் என அவளை அன்புடன் அணைத்துக் கொண்டாள்.

• • •

கலப்பை சித்திரை - ஆடி 1998.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
Jaffna Central College Library
நூலகம்

# இக்கரைப் பச்சை

அதிகாலை ஐந்து மணிக்கு சிட்னியின் குளிர் குடலையும் உறைய வைத்தது. 'நீ ஆணையிட்டபடி நான் அலறுகிறேன்' என்ற அலாரத்தைச் 'சும்மா கிட' எனச் சாந்தி தலையில் தட்டி நிறுத்தினாள். ஹீட்டரின் கணப்பில் கம்பளியால் இழுத்து மூடிக் கொண்டு இன்னும் சிறிது நேரம் சுகமாகத் தூங்குவதற்கு அவள் உடல் ஏங்கியது. ஆனால், அவளது கடமைகளை மனம் நினைவூட்டியது. உள்ளத்தின் தொல்லை தாங்காது கம்பளியை இழுத்துவிட்டு எழுந்து பாத்றூமுக்குள் போனாள் அங்கே ரைல்ஸ் பதித்த தரையில் பதிந்த பாதங்கள் பின்னே இழுத்தன. குளிப்பதற்காகச் சுடு தண்ணீருக்கு ஆயத்தம் செய்தபோது முதலில் வந்த பச்சைத் தண்ணீர் தெறித்து முகமும், கண்களும் சிலிர்த்தன.

ஒருவாறு குளித்து முடித்து வந்து சுவாமிக்கு முன்னால் நின்று ஒரு தேவாரம் சொல்வதற்கு முன்னரே, "சாந்தி என் சட்டை எங்கே"? என்று அவள் கணவர் நந்தகுமாரும் "அம்மா காப்பி" என்ற அவள் அருமை மகன் அருணனின் குரலும் வந்தன. 'இதோ' என ஒருவாறு அவர்களைக் கவனித்து அலுவலகத்திற்கு அனுப்பிய கையோடு வாசலில் "சாந்தி ஆன்ட்டி" என்ற குட்டிப் பவித்திராவின் குரல் கேட்டது. அவளுடன் அவள் அக்கா நித்யா அவர்களைத் தொடாந்து வருண், அஜன், ப்ரஷாந்த், துஷா, வர்ஷா என்று குழந்தைகள் வந்து கொண்டே இருந்தனர். அவர்களின் தாயோ தந்தையோ அவர்களை அந்த அதிகாலைக் குளிரில் அவர்கள் தூக்கத்திலிருந்து விழித்தும் விழிக்காத நிலையில் காரில் அள்ளிப் போட்டுக் கொண்டுவந்து சாந்தியிடம் தள்ளிவிட்டு அவசர

அவசரமாக ஓடும் ரெயினையோ பஸ்ஸையோ பிடித்துத் தம் அலுவல கங்களுக்குச் செல்வார்கள்.

அந்தக் குழந்தைகளுக்குப் பகல் நேர அம்மா சாந்திதான். அவர் களைக் காலைக் கடன் முடிக்கச் செய்து ஸ்கூல் யூனிபோர்ம் மாட்டி விட்டுக் காலை உணவு கொடுத்துப் பாடசாலையில் கொண்டுபோய் விடுவாள். பின் சரியாகப் பாடசாலை விடும் நேரத்திற்குப் போய் அனை வரையும் கூட்டி வந்து முகம் கழுவச் செய்து ஏதாவது சிற்றுண்டிகள் கொடுத்து அவர்களின் ஹோம் வோர்க்கும் செய்யச் செய்து விடுவாள்.

அக்குழந்தைகளைப் பெற்றவர்கள் தமது மேலதிகாரிகளின் ஏச்சையும், கண்டனங்களையும் சக ஊழியரின் அலட்சியங்களையும் பொறுத்துக்கொண்டு கிடைக்கும் சம்பளத்துக்காகத் தம் கடமையைச் செய்துவிட்டு மீண்டும் அதே பஸ், ரெய்னில் வந்து விட்ட இடத்தில் காரை எடுத்துக்கொண்டு வரும்போது பவித்ராக் குட்டி, வருண் எல்லாம் தூங்கியே விடுவார்கள்.

இத்தகைய வசதிகள் மற்றைய குழந்தை பராமரிப்பு நிலையங்களில் கிடைப்பதில்லை. அத்துடன் குழந்தைகளுக்குச் சாந்தியிடமிருந்து கிடைக்கும் அன்பும் அரவணைப்பும் வேறெங்குமே கிடைக்காது. அதனால் எப்போதும் சாந்தியின் இல்லத்தில் குழந்தைகளுக்குக் குறைவே இல்லை. குழந்தைகளோடு குழந்தையாகச் சேர்ந்து அருணனும் சில சமயங்களில் விளையாடுவான்.

சாந்தி ஆஸ்திரேலியாவுக்கு வந்து ஏறத்தாழப் பத்து வருடங்கள் இருக்கும். அவள் கணவன் நந்தகுமார் இலங்கையில் ஒரு தொழில்நுட்ப அதிகாரியாகக் கடமையாற்றியவர். ஆஸ்திரேலியாவில் அவரது கல்விக்குத் தகுந்த உத்தியோகம் கிடைக்கவில்லை. ஆஸ்திரேலிய அரச சேவைதான் அவருக்குக் கை கொடுத்தது. மிகக் குறைந்த சம்பளத்தில் சேர்ந்து தற்சமயம் வருடச் சம்பளம் ஏறத்தாழ நாற்பதினாயிரம் டாலர்கள் மட்டில் கிடைக்கும் அளவிற்கு உயர்ந்திருக்கிறார். அதில் மூன்றில் ஒரு பங்கு வருமான வரியாகக் கழிக்கப்பட்டால் எஞ்சியதை வைத்துத்தான் அவர்களது அன்றாட, அவசரச் செலவுகள், கடன் தவணைப் பணம் யாவையும் சமாளிக்க வேண்டும். அவர்களது ஆஸ்தி ரேலிய வாழ்க்கைத் தரம் இலங்கையில் அவர்கள் வாழ்ந்த வாழ்வில் மிகவும் குறைந்ததாகவே இருந்தது.

சாந்தி பன்னிரண்டாம் வகுப்பில் இருந்ததுதான். அதற்கிடையில் அவள் தந்தை படித்தது போதும் இது நல்ல சம்பந்தம் எனத் திருமணத்தை முடித்து வைத்தார். ஆஸ்திரேலியா வந்த பின்தான் சாந்திக்குப் புரிந்தது ஒருவரின் வருமானம் போதாது தானும் ஏதாவது செய்தால் தான் ஒரு மாதிரிக் குடும்பக் கப்பலை மூழ்காமல் பாதுகாக் கலாம் என்று. சாந்திக்குக் கை கொடுத்தது இந்தக் குழந்தைகள் பராமரிப்புத்தான். அவள் அதை மிகவும் விருப்புடன் செய்தாள்.

அந்தப் பிஞ்சுகளினதும், மொட்டுக்களினதும் மழலையில் அவள் மகிழ்ந்தாள். சாந்தி அதை ஒரு பெரிய சேவையாக நினைத்துச் செய்தாள். குழந்தைகள் கோவிலில், கடை தெருவில் அவளைக் கண்டாலும் "சாந்தி ஆன்ட்டீ" என ஓடி வந்து கட்டிக் கொள்ளும். என்றோ அவள் பராமரித்த பிள்ளைகள் இப்போ பெரியவர்களாகிக் காரில் போகும்போது தற்செயலாக அவளைக் கண்டால் 'வாங்கோ ஆன்ட்டி காரில் போகலாம்' என அவள் மறுத்தாலும் பிடிவாதமாகக் கொண்டு போய் அவள் போக வேண்டிய இடத்தில் விட்டு விட்டுத்தான் போவார்கள். இதையெல்லாம் நினைத்தால் சாந்திக்குப் பெருமைதான். சாந்தி அதை என்றும் ஒரு தரக்குறைவான தொழிலாகக் கருதவில்லை. மிகுந்த மன நிறைவுடன் தான் செய்து வந்தாள்.

சாந்தி சிறுகச் சிறுகச் சேர்த்தாலும் அதற்கு இலங்கையிலிருக்கும் நந்தனின் சகோதரி ஜெயந்தி ஒரு வழி வைப்பாள். ஒரே தங்கையில் நந்தனுக்கு ஓர் அபரிமிதமான அன்பு. அவள் என்ன கேட்டாலும் அதை முதலில் செய்து விட்டுத்தான் அடுத்த வேலை பார்ப்பான். இவற்றுக் கெல்லாம் அவர்களுக்கு ஆபத்பாந்தவனாக உதவுவது கிரெடிற் கார்ட்டுக்களும், வீட்டுக் கடனில் திருப்பிப் பெறும் வசதியும்தான்.

அன்றும் அப்படித்தான். காலையில் சாந்தி குழந்தைகளைப் பாடசாலையில் விட்டு வந்து கதவு திறப்பதற்கும் போன் மணி அடிப் பதற்கும் சரியாக இருந்தது. அவசரமாகப் போய் எடுத்தால் எதிர்முனை, "அண்ணி! அண்ணி! நான் ஜெயந்தி பேசுகிறேன" என்றது. "ஒரு மாதிரிக் கொழும்புக்கு வந்து விட்டோம் அண்ணி. உங்களை நம்பி அங்கே எல்லாம் போட்டது போட்டபடியே விட்டுவிட்டு, எங்கள் வேலை களைக்கூட விட்டுவிட்டு வந்துவிட்டோம். இங்கென்றால் எல்லாம் யானை விலை, குதிரை விலையாக இருக்கு. வீட்டு வாடகை முன் பணம் என்று ஐம்பதினாயிரம் ரூபாய்கள் மட்டில் வேணும் அண்ணி. உடனே அனுப்பச்

சொல்லி அண்ணாவிடம் சொல்லுங்கோ. எப்படியாவது விரைவில் எங்களை ஆஸ்திரேலியாவுக்குக் கூப்பிடுங்கோ. இங்கேயும் அதிக நாட்கள் இருக்க முடியாது. உங்கள் மருமகள் ஜோதிர்மயியைக் கொண்டு வந்து உங்களிடம் ஒப்படைத்தால் என் கடமை முடிந்து விடும்" என ஒரே மூச்சில் பேசி முடித்தாள்.

'நீங்கள் எல்லோரும் நலமா?' என்று ஒரு வார்த்தை கூடக் கேட்க வில்லை. அவள் குணம் தெரிந்ததால் சாந்தியும் அதைப் பொருட் படுத்தாது, எங்கே பணம் அனுப்புவது என்ற விபரத்தை மட்டும் கேட்டு விட்டுத் தொடர்பைத் துண்டித்தாள்.

சாந்திக்கு ஜெயந்தியை நன்கு தெரியும். ஜெயந்தியும் அவள் கணவன் மோகனும் ஆசிரியர்கள். அவள் உயிரே போனாலும் வேலையை விட மாட்டாள். எப்போதும் எதையும் மிகைப்படுத்திச் சொல்வதுதான் ஜெயந்தியின் வழக்கம். அதனால் இதற்குள் என்னவோ சூட்சுமம் இருக்க வேண்டும் என நினைத்தாள். ஆனால் அதை ஆராய்வதில் சாந்திக்கு எந்தப் பயனும் இல்லை. அவள் கணவன் தலைகீழாக நின்றாவது தங்கை கேட்ட பணத்தை உடனே அனுப்பி விடுவார். இங்கே அவர்களின் வங்கிக் கடன் அதிகரிக்கும். அங்கே ஜெயந்தியின் வங்கி இருப்பு ஏறும் என்று சாந்திக்குத் தெரியும்.

சாந்திக்கு ஒரேயொரு மன ஆறுதல். என்னதான் ஜெயந்தி பணப் பேயாக இருந்தாலும் அதையெல்லாம் தன் ஒரே மகள் ஜோதிக்காகத் தானே சேர்க்கிறாள். ஜோதி அருணனுக்குத்தான் என்று அவள் பிறந்த அன்றே ஜெயந்தி கூறிவிட்டாள். அதை மற்றவர்களும் ஆமோதித்தனர். அருணனும் ஜோதியும் ஒருவரில் மற்றவர் உயிராக இருந்தனர். ஜெயந்தி பல சமயங்களில் விளையாட்டுப்போல "பணமில்லாவிட்டால் நாங்கள் உங்கள் அந்தஸ்துக்குச் சமமில்லையென்று என் பெண்ணை மறுத்தால் நான் என்ன செய்வேன்" என்று அங்கலாய்த்திருக்கிறாள்.

அதற்குச் சாந்தி "பணம்தான் வாழ்க்கையா? மடத்தனமாக உளறாதே ஜெயந்தி" எனக் கண்டித்திருக்கிறாள்.

நந்தன் பணத்தை எப்படியோ உருட்டிப் பிரட்டி அனுப்பி வைத்தான். அதைத் தொடர்ந்தும் ஜெயந்திக்கு அடிக்கடி தேவைகள் ஏற்பட்டு அவையும் ஒருவாறு திருப்தி செய்யப்பட்டன. வீட்டுக் கடன் ஆரம்பித்த இடத்திற்கே வந்ததுடன் கணவனின் கஷ்டங்களைப் பொறுக்க முடியாத சாந்தியின் சிறு சேமிப்பும் கரைந்தது. இதற்கிடையில் வக்கீலைப் பார்த்து

அவர்கள் சுற்றுலாப் பயணிகளாக ஆஸ்திரேலியா வருவதற்கு ஒழுங்கும் செய்யப்பட்டது.

வந்த அன்று ஜெயந்தி "ஐயோ அண்ணி படாதபாடுபட்டு விட்டோம். ஜென்மத்திற்கு இது போதும். நீங்கள் செய்த இந்த உதவியை உயிருள்ள வரை மறக்கமாட்டோம். இந்தாங்கோ தாலி, கூறை எல்லாம் கையோடு கொண்டு வந்து விட்டேன் சட்டுப்புட்டென்று கலியாணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கோ. அது நடந்தால் நான் திரும்பப் போய்க் கந்தா, முருகா என்று செல்வச் சந்நிதி மடத்தில் இருந்து விடுவேன்" என்று சொன்னாள்.

மறைவிலிருந்து ஜோதி 'நம்ப வேண்டாம்' எனச் சைகை காட்டினாள். சாந்திக்கும் சிரிப்பாக இருந்தது இருந்தாலும் மனம் பகீர் என்றது. திடீரெனத் திருமணம் என்றால் குறைந்தது ஒரு பத்தாயிரம் டாலர் களாவது வேணுமே! அதற்கு அவர்கள் இப்போ எங்கே போவார்கள்?

ஒருவாறு சமாளித்த சாந்தி, "வந்ததும் வராததுமாக என்ன அவசரம் ஜெயந்தி? கிணற்றுத் தண்ணீரை என்ன வெள்ளமா கொண்டு போகப் போகிறது. அவர்கள் இருவரும் ஒருவருக்காவே மற்றவர் என்று பிறந்த வர்கள் தானே! நாங்கள் என்றோ தீர்மானித்தது மட்டுமன்றி இறைவன் போட்ட முடிச்சை யாரால் மாற்ற முடியும்? திருமணம் என்றால் சும்மாவா? எவ்வளவு ஆயத்தங்கள் செய்ய வேண்டும். எங்களுக்கு அவர்கள் தனிப் பிள்ளைகள், சிறப்பாகச் செய்ய வேண்டாமா? எல்லாம் செய்யலாம். என்னைப் போல இல்லாமல் ஜோதியும் ஏதாவது படிக்கட்டும்" எனக் கூறினாள்.

"படிக்காததால் உங்களுக்கு இப்போ என்ன குறை அண்ணி" எனக் கேட்டவள், மறு நாள் காலையில் வந்த குழந்தைகளைப் பார்த்து ஏங்கிப் போய் "என்ன அண்ணி ஆயா வேலையா பார்க்கின்றீர்கள்!" எனக் கேட்டாள்.

"என்ன செய்வது ஜெயந்தி. இங்கே உன் அண்ணாவின் சம்பளம் செலவுக்குப் போதாது. நான் வேலைக்குப் போகலாமென்றால் அந்த நேரம் அப்பா என்னைப் படிக்கவிடவில்லை. இந்த வயதில் என்னால் படிக்க முடியவில்லை. இதுதான் எனக்குக் கைகொடுத்தது. இது ஒன்றும் கேவலமில்லை ஜெயந்தி. சுருங்கச் சொன்னால் ஓர் ஒப்பற்ற சேவை. கள்ளம் கபடமற்ற இந்த மழலைகளின் அன்பில் நான் என் கஷ்டங்களை மறக்கிறேன். ஆனால் நீ படித்திருக்கிறாய். டிப்ளோமாவும் இருக்கிறது. உனக்கு வேலை நிச்சயம் கிடைக்கும்" என்றாள்.

“இருந்தாலும் அண்ணி... நான் இங்கே... உங்களைப் பற்றி என்னவோ நினைத்தேன்... இல்லாவிட்டால் ஜோதியை...” என எதுவோ கூற வாயெடுத்து விட்டு நிறுத்திக் கொண்டாள்.

அவர்கள் அகதிகள் அந்தஸ்துக்கு விண்ணப்பித்து, அது கிடைக்கும் வரை எல்லோரும் ஒரே வீட்டிலேயே இருந்தனர். சாந்தி ஒருமாதிரி வாயைக் கட்டி வயிற்றைக் கட்டிக் குடும்பச் செலவுகளைச் சமாளித்தாள். ஜெயந்தி இதில் இருப்பதை எடுத்து அதில் போடவும் மாட்டாள். ஜோதி தான் அவ்வப்போது அத்தைக்கு உதவி செய்வாள். அதற்கும் ஜெயந்தி ‘உனக்கு ஏன் இந்தத் தலைவிதி. நீ ராணி மாதிரி இருக்க வேண்டியவள்’ என்பாள். அவள் வார்த்தைகளின் மர்மம் புரியாத சாந்தியும் “ஆமாம் அருணன் முதுநிலைப் பட்டம் பெற்றுவிட்டால் வங்கியில் அவன் வேலை இன்னும் நல்ல நிலைக்கு உயரும் பிறகென்ன ஜோதிம்மா ராணிதானே” என்பாள்.

ஜோதியைக் கம்ப்யூட்டர் படிக்கும்படி அருணன் கொண்டு போய்ச் சேர்த்து விட்டான். அவளுக்குப் பாடத்தில் வேண்டிய உதவிகளை அவன் விருப்புடன் செய்தான். அவர்கள் காதல் நாளும் பொழுதும் வளர்ந்தது.

அதை ஜெயந்தி இப்பொழுது அவ்வளவாக விரும்பவில்லை. ‘திருமணமாகும்வரை விலகியே இரு’ என்று மகளை எச்சரிக்கை செய்தாள்.

குடும்பத்தின் நிதி நிலையையும் அன்றாடத் தேவைகளுக்காகச் சாந்தி படும் கஷ்டங்களையும் கண்டு ஜோதி மறுகினாள். “உங்களுக்கு மூளையே இல்லை அத்தை. அம்மா கேட்கக் கேட்க மாமாவை ஏன் பணம் அனுப்ப விட்டீர்கள். “சாந்தி” என்று பெயர் இருந்தால் சாந்த மாகவே இருந்துவிட வேண்டுமா? நீங்கள் ஒரு பகல் கொள்ளைக் காரியை வீட்டில் வைத்திருக்கிறீர்கள் தெரியுமா? மாமா அனுப்பிய முழுப் பணமும் வங்கி நிலுவையில் இருக்கிறது. போதாக்குறைக்கு உங்களுக்கு விபரம் தெரியுமா? அம்மாவும் அப்பாவும் எப்படியோ கஷ்டப்பட்டுப் பென்ஷன் எடுத்துக்கொண்டுதான் வந்தார்கள். நீங்கள் சிறிதளவாவது யோசித்தீர்களா? அம்மாவாவது வேலையை விட்டு வருவ தாவது? அவர்கள் பென்ஷன் பணமும் இப்போ வங்கியில் நிலுவை யாகிறது. இங்கே அம்மா ஒரு சதமும் செலவில்லாமல் மூன்று வேளை மூக்கு முட்டச் சாப்பிட்டுக் கொணடு டீவி பார்க்கின்றார்” என எரிச்சலுடன் கூறினாள்.

“வேண்டாம் ஜோதி, இப்படியெல்லாம் அம்மாவைப் பற்றிப் பேச உனக்கு யார் கற்றுத் தந்தது?” எனச் சற்றுக் கோபமாவே கேட்டவள், “உன் அம்மா என்ன தனக்கா சேர்க்கிறாள். எல்லாம் உனக்குத்தானே. நீங்கள் ஒன்றும் எங்களுக்குப் பாரமில்லை. அதெல்லாம் நான் பார்த்துக் கொள்வேன் நீ போய்ப் படி” என மருமகளைக் கண்டித்தாள்.

“உங்களைக் கஷ்டப்படுத்தி அம்மா சேர்த்த பணமொன்றும் எனக்கு வேண்டாம்” எனக் கண்கலங்கக் கூறிவிட்டு எழுந்து போய்விட்டாள்.

சாந்தி தனக்குள் நகைத்தாள். ‘உன் அன்பிற்கு முன்னால் இவை யெல்லாம் எனக்கு ஒரு பொருட்டல்ல ஜோதிம்மா’ என நினைத்துப் புன்னகைத்தாள்.

ஆனால் நாளடைவில் ஜெயந்தியின் போக்கில் மாற்றம் ஏற்பட்டது. அகதிகள் அந்தஸ்துக் கிடைத்து வாடகைக்கு வீடு பார்த்துப் போன பின், அவள் அண்ணா, அண்ணியை எட்டியும் பார்க்கவில்லை. வழி தெருவில் கண்டாலும் “எங்கே அண்ணி நேரம். வேலை தேடுவதிலேயே நேரம் சரியாக இருக்கிறது” என்பாள். சாந்தி எதையுமே விகல்பமாக எடுக்க வில்லை.

ஆனால் அவ்வப்போது வரும் ஜோதி மட்டும் “அம்மாவின் போக்கே சரியில்லை அத்தை. என்னென்னவோ செய்கின்றார். இங்கே வர வேண்டாம், அத்தானைப் பார்க்காதே பேசாதே என்று வேறு சொல் கின்றார். எனக்குப் பயமாக இருக்கிறது அத்தை. ஆடம்பரம் ஒன்றும் வேண்டாம் சும்மா கோவிலில் வைத்து எங்கள் திருமணத்தை முடித்து விடுங்கோ ப்ளீஸ்” எனக் விழிகள் குளமாகக் கெஞ்சினாள்.

“நீ ஒரு அசடு ஜோதிம்மா. நீங்கள் அடிக்கடி சந்தித்தால் திருமணத் திற்கு முன் தப்புத்தண்டா ஏதாவது நடந்தாலும் என்று அம்மா அப்படிச் சொல்லியிருக்கலாம். அதுவல்லாமல் அவள் வேறென்ன செய்யப் போகிறாள்” என மருமகளைக் கேலி செய்தாள்.

ஆனால், நாளடைவில் ஜெயந்தி, ஜோதிக்கு வேறு மாப்பிள்ளை பார்ப்பதாகச் செய்திகள் அவள் காதுக்கும் எட்டின.

“கேட்ட உடனே காசு வந்ததில் அவர்கள் இங்கே நல்ல வசதியுடன் இருக்கிறார்கள் என்றல்லவா நினைத்தேன். இங்கு வந்த பின் தானே அவர்களின் நிலைமை தெரிகிறது. ஒரு சதத்திற்கும் வழியில்லை.

பிச்சைக்காரக் கூட்டம். கிறெடிற் கார்ட்டில் வாழ்க்கை நடத்துகின்றார்கள். அண்ணி வேறு ஆயா வேலை பார்க்கிறார். புறாக் கூடு மாதிரி ஒரு வீடு, அதுகூடக் கடனில் இருக்காம். இந்த நாளில் வெறும் வங்கிச் சம்பளம் எதற்குப் போதும்? நான் ஏன் என் பெண்ணை இவர்களுக்குக் கொடுக்க வேணும். என் பிள்ளையின் அழகுக்கு நான் நீ என்று மாப்பிள்ளைகள் வரிசையில் நிற்பார்கள். என்னிடம் இருப்பதைக் கொடுத்து நான் அவளுக்கு நல்ல டாக்டர் மாப்பிள்ளையாகப் பார்த்துச் செய்து வைப்பேன். இவர்கள் வீட்டில் பெண் கொடுத்தால் என் குடும்ப அந்தஸ்து என்னாவது?" போன்ற பேச்சுக்கள் சாந்தியின் காதுகளில் அரசல் புரசலாக விழுந்தன. சாந்தி அனைத்தையும் தனக்குள் போட்டு மறுகினாள்.

ஆனால் அன்று வந்த அருணன் மிகவும் கோபமாக இருந்தான். "அம்மா ஜோதிக்கும் ஒரு டாக்டருக்கும் திருமணம் நிச்சயம் செய்யப் பட்டிருக்காம். என்னம்மா இங்கே நடக்கிறது. அவள் சம்மதிக்காமலா இதெல்லாம் நடக்கிறது? இனி அவளை இந்தப் பக்கம் வரவிடாதே" என்று கோபமாகக் கத்தினான்.

"என்ன அருண் இது? பிறந்ததிலிருந்து பழகியும் அவளை நீ புரிந்து கொண்டது இவ்வளவுதானா? அவளுக்கு முன்னால் இப்படியெல்லாம் பேசாதே. பாவம் குழந்தை உடைந்து போய்விடுவாள். சில விஷயங் களில் பெண்களால் எதுவுமே பண்ண முடியாது அருண். என்னை அந்த நாளில் அப்பா படிக்கவிட்டிருந்தால் நான் இன்று ஏன் இந்த நிலையில் இருக்க வேண்டும்" எனச் சாந்தி வேதனையுடன் கூறினாள்.

அப்பொழுது அங்கே வந்த நந்தனும் "என் காதிலும் என்னென்னவோ விழுந்தது, ஜெயந்தி என்னதான் செய்கிறாள் உனக்கு ஏதாவது தெரியுமா சாந்தி" எனக் கேட்டார்.

"எனக்கு எதுவுமே தெரியாது. உங்கள் தங்கை எப்போதும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று தானே காரியங்கள் செய்வாள். அவளது ஆடம்பர மோகத்திற்கு இப்போ நாங்கள் தகுதி இல்லாமல் போயிருக்கலாம். ஆனால், ஜோதி நிச்சயம் இதற்குச் சம்மதித்திருக்க மாட்டாள். அங்கே அந்தக் குழந்தை என்ன கஷ்டப்படுகின்றாளோ தெரியாது. மகளின் வாழ்வுக்குத் தாயே எதிரியானால் நாங்கள் என்ன செய்வது? அவர்களின் அன்பை நீரூற்றி வளர்த்தவர்களே வெட்டலாமா? சின்னஞ்சிறுசுகள்

வாழ்க்கையில் ஜெயந்தி ஏன் விளையாடுகின்றாள் என எனக்குப் புரிய வில்லை" என வருந்தினாள்.

ஆனால் தொடர்ந்து வந்த செய்திகள் அதிர்ச்சி அளிப்பனவாகவே இருந்தன. இப்போதெல்லாம் ஜெயந்தி சாந்தியைக் கண்டாலும் விலகியே போனாள். சாந்திக்கு யாரையும் இழுத்து வைத்துப் பேச்சுக் கொடுக்கவோ சண்டை போடவோ தெரியாதாகையால் பேசாமல் விட்டாள்.

அவர்களின் நெருங்கிய நண்பர்கள் 'என்ன சாந்தி இப்படியாகிவிட்டது நாங்கள் போய்ப் பேசிப் பார்க்கவா' எனக் கேட்டார்கள். அதற்கும் சாந்தி மறுத்துவிட்டாள். எல்லாம் விதிப்படி நடக்கும் யாவும் கடவுள் செயல் எனக் கடவுள் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு தேமே என்று இருந்தாள்.

சாந்தியின் அப்போதைய ஒரே மனக்குறை ஜோதியைப் பார்த்து அதிக நாட்கள் ஆகிவிட்டனவே என்பதுதான். எப்படிப் பார்ப்பதென்றும் தெரிய வில்லை. குழந்தை என்ன செய்யும் பாவம் என மனம் வருந்தினாள்.

கடவுள் அருளோ என்னவோ ஜோதி அன்று வந்தாள். அவள் முகமும் கண்களும் ஒளியிழந்து பல நாட்கள் பட்டினி கிடந்தவள் போல வாடிய பூங்கொடி போல இருந்தாள்.

"வா ஜோதி" என்ற சாந்தியிடம் "நல்லவேளை இன்னும் என் பெயர் உங்களுக்கு நினைவிருக்கே அத்தை!" என்று கிண்டலாகக் கூற முயன் றாலும் மளுக்கென்று வந்த கண்ணீர் அதை முந்திக் கொண்டது.

சாந்தியை இழுத்து அவள் மடியில் முகம் புதைத்து விம்மினாள். வாஞ்சையுடன் அவளை அணைத்தவள் "நான் ஆசை ஆசையாகத் தேடி வைத்த பெயர் எனக்கு மறக்குமா ஜோதிம்மா. இப்போ என்ன நடந்து விட்டதென்று இப்படி அழுகிறாய்" எனக் கேட்டாள்?;.

"சூரியனின் ஒளிக் கதிர்கள் போல, அருணனுக்கு நீ என்றும் ஒளியாக இருக்க வேண்டுமென்று தானே ஜோதிர்மயி என்று உனக்குப் பெயர் வைத்தேன். இது இறைவன் போட்ட முடிச்சு. இதை உன் அம்மா அல்ல யாராலும் எதுவும் செய்ய முடியாது" எனப் பேசிக் கொண்டே போனாள். 'ஐயோ அசட்டு அத்தையே! வெள்ளம் தலைக்கு மேல் போய்விட்டது' என நினைத்துக் கொண்டு அத்தையை நிமிர்ந்து பார்த்தாள்.

பின் எங்கிருந்தோ வந்த மன உந்துதலில் "அத்தை நீங்கள் எல்லாம் தெரிந்துதான் பேசுகின்றீர்களா?" எனக் கோபமாகக் கேட்டாள்.

“இப்போ எனக்கு என்ன தெரிய வேணும் உங்கம்மா வழக்கம் போல அசட்டுப்பிசட்டென்று எதுவோ செய்கிறாள். இப்போ என்ன கல்யாணமா நடந்துவிட்டது” எனக் கேட்டாள்.

“ஐயோ அத்தை!” என அலுத்துக்கொண்டவள், “நாளைக்கு எனக்கும் எவனோ ஒரு டாக்டருக்கும் பதிவுத் திருமணம். எல்லா ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கிறது. நான் அம்மாவுக்குத் தெரியாமல் ஒளித்து வந்தேன், விபரம் புரியாமல் என்ன பேசுகின்றீர்கள்'' என்றாள் விம்மலுடன்.

“நாங்கள் இல்லாமல் உனக்கு எப்படிம்மா பதிவுத் திருமணம் நடக்கும்” என்றாள் வெகுளித்தனமாக. ஜோதி தன் அத்தையைப் பரிதாப மாகப் பார்த்தாள். அப்பொழுது அங்கே யாருக்காக யார் பரிதாபப் படுவது எனத் தெரியவில்லை.

வேலை முடிந்து வீட்டுக்கு வந்த அருணன் ஜோதியைக் கண்டதும் கண்கள் கனலாக, “கண்ட கழுதைகளையெல்லாம் ஏன் அம்மா வீட்டுக்குள் விட்டீர்கள்” என வெகுண்டான். விம்மலும் வெய்துயிர்ப்பு மாக ஜோதியின் கண்ணீர் மடை திறந்தது.

“அருண் உள்ளே போ” என அதட்டி மகனை அனுப்பிய சாந்தி, அப்பொழுதுதான் நிலைமையின் தீவிரம் புரிந்தவளாக மருமகளைத் தேற்றும் வகை தெரியாது திகைத்து நின்றாள்.

திடீரென எதுவோ ஞானோதயம் பெற்றவள் போல “எழுந்திரு ஜோதி, கண்ணைத் துடைத்துக் கொள், போய் முகத்தை அலம்பிப் பொட்டு வைத்துக் கொண்டு வா” எனத் துரிதப்படுத்தினாள்.

பின் “அருண் இங்கே வா!” என மகனை அழைத்தவளின் கையில் ஜெயந்தி கொண்டு வந்து கொடுத்த தாலி இருந்தது.

மகனிடம் “நான் சொல்வதைக் கவனமாகக் கேள் அருண். இரண்டு பேருமாகக் கோவிலில் போய்த் இந்தத் தாலியைக் கட்டிக்கொண்டு அத்தை வீட்டுக்குப் போங்கோ. அத்தை என்ன சொன்னாலும் மறு பேச்சுப் பேச வேண்டாம் மிகுதியை நான் பார்த்துக் கொள்கிறேன், வெள்ளம் தலைக்கு மேல் போன பின் சாண் போனால் என்ன முழம் போனால் என்ன? உங்கள் திருமணம் பற்றி என்னென்னவோ கனவு கண்டேன். ஆனால் இப்படித்தான் நடக்க வேண்டுமென்றால் என்ன செய்வது” எனக் கண் கலங்கினாள்.

திகைத்த அருண் “என்னம்மா இது திருட்டுக் கல்யாணமா?” எனக் கேட்டான்.

“உனக்கு ஜோதி வேணுமென்றால், எல்லாவற்றிற்கும் மேலாக அவள் உயிருடன் இருக்க வேண்டுமென்றால் இப்போது இது ஒன்றுதான் சரியான வழி. அதை விடுத்து உன் அத்தையிடம் போய்ச் சண்டை போட்டால் நம் குடும்பமானம் தான் போகும். அவள் பிடித்ததுதான் சரி என்பாள். நாங்கள் சொல்லும் எந்த நியாயமும் அவளிடம் எடுபடாது. முள்ளை முள்ளால் தான் எடுக்க முடியும்” என்றாள்.

அதைக் கவனித்த நந்தன் “வேண்டாம் சாந்தி. நீ வா நாங்களும் போய்ச் செய்து வைப்போம். மோகனையும் கூப்பிடுகிறேன்” என்றார். மோகனைக் கோவிலுக்கு வரும்படி சொன்னபோது அவர் ஏன் எதற்கு என்று எதுவுமே கேட்காமல் “சரி வருகிறேன்” என்றார். அங்கே நிலைமை புரிந்தபோது மகிழ்ந்தார். “நல்ல வேலை செய்தாய் நந்தன், நான் என்ன சொல்லியும் ஜெயந்தி கேட்கவில்லை, ஜோதியின் வேதனையையும் என்னால் சகிக்க முடியவில்லை. அதுதான் அத்தையிடம் போ என அனுப்பி வைத்தேன்” என்றார்.

மாலையும் கழுத்துமாக வந்த மணமக்களைக் கண்ட ஜெயந்தி அதிர்ந்தாள். ஆத்திரத்தில் என்ன பேசுகின்றோம் எனப் புரியாமல் ஆகாசத்திற்கும் பூமிக்குமாகக் குதித்தாள். “இனிமேல் என் முகத்தில் விழிக்காதே, நீ என் பெண்ணே இல்லை” போன்ற மாமூலான வார்த்தை களெல்லாம் அவளிடமிருந்து வந்தன. சாந்தி சொன்னபடி அனைவரும் மௌனம் சாதித்தனர்.

அப்பொழுது அங்கே மறுநாள் பதிவு பற்றிய ஒழுங்குகளைக் கவனித்து விட்டுப் பெண்ணையும் ஒரு தடவை பார்த்துவிட்டுப் போகலா மென்ற கனவுகளுடன் வந்த டாக்டர் மாப்பிள்ளை அதிர்ந்து நின்றார். பின் ஒருவாறு உணர்வு பெற்று, “வாழ்த்துக்கள் ஜோதி. நீ சின்ன வயதிலிருநது அத்தானைக் காதலிக்கிறேன் அவரைத்தான் மணம் செய்வேன் என்று சொன்னபோது நான் எதுவோ ஒரு பருவ மயக்கம், எல்லாம் போகப் போகச் சரி வரும் என்று நினைத்தேன். உன் காதல் இவ்வளவு தீவிரமானது என்று இப்பொழுதுதான் புரிந்தது, என்னை மன்னித்து விடு” என்றான்.

“நான் ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழ்ப் பண்பாட்டில் ஊறி வளர்ந்தவள் டாக்டர். அது ஆங்கிலேயப் பண்பாட்டையே பார்த்தும் கேட்டும் வளர்ந்த உங்களுக்குப் புரியாது. என் அம்மாவின் பணத்தைப் பெரிதாக மதித்த உங்கள் பெற்றோராவது சிறிது சிந்தித்திருக்கலாம் என் வார்த்தைகளுக்கு யாருமே எந்த மதிப்பும் கொடுக்கவில்லை. எல்லாக் குழப்பங்களுக்கும் அதுதான் காரணம். அனைத்திற்கும் என்னை மன்னித்து விடுங்கள். உங்களுக்கு நல்ல ஒரு மனைவி கிடைக்க என் வாழ்த்துக்கள்” என்றாள். “நீ மிகவும் அதிர்ஷ்டசாலி” என அருணனின் கையைப் பிடித்துக் குலுக்கி வாழ்த்திவிட்டு அவர் போய்விட்டார்.

பின்னரும் ஜெயந்தி, “உனக்கு ஒரு சதமும் சீதனமாகத் தரமாட்டேன். வங்கியில் வருடம் முப்பதினாயிரம் டாலர்கள் சம்பளம். வருமான வரி போனால் கையில் எவ்வளவு கிடைக்கும்? இங்கு விலைவாசி இருக்கும் நிலையில் அது எந்த மூலைக்குப் போதும். நீயும் போய் உன் அத்தையுடன் ஆயா வேலையைப் பார். அதற்குத்தான் நீங்கள் எல்லாம் லாயக்கு” எனக் கத்தினாள்.

ஜோதியின் பொறுமை எல்லையைத் தாண்டியது. “உன் இதயம் நிறைந்த ஆசிகளுக்கு எங்கள் நன்றிகள் அம்மா. ஆனால் உனக்கு ஒன்று தெரியுமா? கணவன் மனைவியிடையே உண்மை அன்பு இருந்தால் அவர்களால் எதையும் சாதிக்க முடியும். அதனால்தான் எந்தக் கஷ்டத்திலும் அத்தை என்றும் தளும்பாமல் நிறைகுடமாக நிமிர்ந்து நிற்கிறார். அந்த அன்பு வழியிலேயே நானும் போய் இதே வங்கி வேலையுடன் உன் முன்னால் தலை நிமிர்ந்து நின்று சிறப்பாக வாழ்ந்து காட்டுகிறோம். அதை நீ பார்க்கத்தான் போகின்றாய். உன் பணம் எல்லாவற்றையுமே நீயே வைத்துக் கொள் நாங்கள் போகிறோம்” எனச் சொல்லி “வாங்கோ போகலாம்” என அருணனின் கையைப் பற்றினாள்.

அதுவரை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு தூரத்தில் நின்ற சாந்தி இப்பொழுது முன் வந்து “என்ன ஜோதி, இப்படியா நீ அம்மாவிடம் பேசுவது” எனக் கோபமாகக் கேட்டாள். பின் “அவள் ஒன்றும் தப்புச் செய்யவில்லையே? உனக்கு நல்லது செய்யத்தானே நினைத்தாள். ஒரு நாளும் பெற்றவர்கள் பிள்ளைகளுக்குத் தீங்கு செய்யமாட்டர்கள். அதற்காக அவர்கள் தேர்ந்தெடுக்கும் வழி சில சந்தர்ப்பங்களில் தவறாக இருக்கலாம். உன் நலன் ஒன்றை மட்டுமே நினைத்த உன் தாய் உன்

காதலையோ தன் அண்ணனின் அபரிமிதமான அன்பையோ சிறிதும் பொருட்படுத்தவில்லை. அந்தத் தாயன்பை நீ இப்படி எல்லோர் முன்னாலும் ஏளனம் செய்யக் கூடாது" என மருமகளைக் கண்டித்தாள்.

ஜோதி மௌனித்துத் தலை குனிந்தாள்.

பின் ஜெயந்தியிடம் போய் "என்னை மன்னித்துவிடு ஜெயந்தி, இந்தத் திருமணத்தை நான் தான் நடத்தி வைத்தேன். இந்தச் சமயத்தில் எனக்கு இதைவிட வேறு வழி தெரியவில்லை அம்மா! ஆனால் சரியாகச் சொல்லப் போனால் வெறும் தாலிதான். அதுவும் நீ கொண்டு வந்தது, இப்போ அவள் கழுத்தில் ஏறியிருக்கிறது. அவர்கள் திருமணம் ஜோதி பிறந்த அன்று 'இந்தாங்கண்ணி உங்க மருமகள்' என்று நீ அவளைத் தூக்கி என் மடியில் போட்டாயே அந்த நிமிடமே நடந்துவிட்டது. அது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டது ஜெயந்தி. அதை மாற்றுவது பெரிய பாவம். நீ தனித்திருந்து சிந்தித்தால் உனக்குப் புரியும்".

"இப்போ போய் ஆரத்தி கரைத்துக் கொண்டு வா. ஆரத்தியெடுத்து உன் பெண்ணையும் மாப்பிள்ளையையும் உள்ளே கூப்பிடு. உன் ஆசி இல்லாமல் அவர்கள் வாழ்வதில் எனக்குச் சம்மதமில்லை. அவர்களை நீ வீட்டுக்குள் சேர்க்காவிட்டால் என் வீட்டிலும் அவர்களுக்கு இட மில்லை. இரண்டு பேரும் எங்காவது போய் எப்படியாவது வாழட்டும்" என்றாள்.

அருணணும், ஜோதியும் அதிர்ந்தனர். அங்கே நின்ற மற்றவர்கள் அதிசயமாகப் பார்த்துக் கொண்டு நின்றனர். அங்கேயும் அதிசயம்தான் நடந்தது. ஜெயந்தி மறு பேச்சுப் பேசாமல் உள்ளே சென்று ஆரத்தி கரைத்து வந்தாள். சாந்தி அவளுடன் சோந்து ஆரத்தி எடுத்தாள். மண மக்கள் உள்ளே போக வழி விட்ட ஜெயந்தி, சாந்தியை இழுத்து அவள் தோளில் முகம் புதைத்தாள். வா என்று சாந்தி அவளை அன்புடன் அணைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

அவளைப் பார்த்து ஜெயந்தி "இனி என்ன செய்யவோம் அண்ணி" எனப் பணிவாகக் கேட்டாள். அங்கு நின்ற அனைவரும் ஓர் உலக அதிசயத்தைப் பாாப்பது போலப் பார்த்தனர்.

ஆனால், என்னதான் கூத்தாடினாலும் ஜெயந்தி மரியாதை தவற மாட்டாள் எனச் சாந்தி தன் மைத்துனி மேல் வைத்திருந்த நம்பிக்கை பொய்க்கவில்லை. அவளைப் பெருமையுடன் விழி கலங்கப் பார்த்தவள்,

“வா ஒரு விருந்து சமைத்து மணமக்களுக்குப் பரிமாறுவோம். பின் திட்ட மிட்டு றிஷெப்சனைப் பெரிதாகச் செய்வோம்” என்றாள். “சரி அண்ணி” என ஜெயந்தி பெட்டிப் பாம்பாக அவள் பின்னால் சென்றாள்.

யார் சொல்லையும் கேட்காத அம்மா எப்படி அத்தையின் ஒரு சொல்லால் அமைதி அடைந்தார் என ஜோதி வியந்தாள். அத்தையிடம் அப்படி என்ன இருந்தது என்றும் அதிசயித்தாள். சாந்தியின் சாந்தமே அவளுக்கு என்றும் ஒரு பெரிய அஸ்திரம். அதுதான் அவள் வாழ்வை எந்தக் கஷ்டத்திலும் வழி தவறாமல் கொண்டு நடத்துகிறது என்பது காலப் போக்கில் ஜோதிக்குப் புரியலாம்.

வசந்த காலத்தின் வருகைக்குக் கட்டியம் கூறுவது போல ஆஸ்திரேலியாவின் தேசிய மலரான வட்டில் (wattle) பூக்களின் அரும்புகள் காற்றில் அசைந்தாடி மணமக்களை வாழ்த்தின. அவர்கள் வாழ்வில் வசந்தம் வீசட்டும் என மங்களகரமான அந்த இள மஞ்சள் மலர்களுடன் சேர்ந்து நாமும் வாழ்த்துவோம்.

• • •

**கலப்பை - சித்திரை 2002.**

# காக்கைச் சிறகினிலே

## நந்தலாலா

### 1

திருச்சி நகரம் மிகவும் பரபரப்பாக இருந்தது. மாலை நேரத்தில் அலுவலகம் விட்டு வருவோரும் போவோருமாக மலைக் கோட்டை உச்சிப் பிள்ளையார் கோயில் வீதி நிறைந்து வழிந்தது. தாயுமானவர் ஸ்வாமி கோயில் சந்நிதியில் சுற்றுலாப் பயணிகள் சிலருக்கு, வழிகாட்டி ஒருவர் அங்குள்ள சிற்பங்களுக்கு விளக்கம் கூறிக்கொண்டிருந்தார். அதில் சிறிதும் ஆர்வமில்லாத ஜோசப் அதிலிருந்து விலகித் தன் பார்வையை அங்குமிங்கும் அலையவிட்டான்.

தற்செயலாக அவன் பார்வை அங்குள்ள படிக்கட்டுக்களில் பதிந்தது. அங்கே ஒரு பெண் தலையில் முக்காடிட்டுக் கொண்டு அவசரமாகப் படிகளில் ஏறினாள். அவள் பார்வையில் ஒரு பயம் தெரிந்தது. அவள் அடிக்கடி கீழே திரும்பிப் பார்த்தாள். அத்திசையில் பார்த்த ஜோவுக்கு அவளை யாரும் தொடர்வதாகத் தெரியவில்லை. அப்படியானால் அவளின் செய்கைக்கு என்ன காரணம்? ஜோவுக்குத் திடீரென ஓர் எண்ணம் தோன்றியது, சிறிது முன்னர் தான் அவன் மேலே போய் உச்சிப்பிள்ளையாரைத் தரிசித்துவிட்டு அதிலிருந்து திருச்சி மாநகரின் அழகையும் ரசித்துவிட்டு வந்தான். அப்பொழுது அந்த வழிகாட்டி, 'அங்கிருந்து தவறி விழுந்த யாருமே உருப்படியாக மீட்கப்படவில்லை. சரித்திர காலத்திலிருந்து எத்தனை உயிர்கள் அதற்குள் மாண்டனவோ' எனக் கூறினார். ஜோ அதிர்ந்தான். அப்படியானால் ஒருவேளை இவளது எண்ணம் அதுவாக இருக்கலாமோ என்று நினைத்ததும் அவன்

அனைத்தையும் மறந்து படிகளில் மெதுவாக அவள் பார்வையில் படாதவாறு ஏறினான்.

மேலே சென்ற மதி என எல்லோராலும் அழைக்கப்படும் மதிவதனி உச்சிப் பிள்ளையாரை வலம் வந்து மனமுருகிப் பிரார்த்தாள். அதன் பின் மலையின் விழிம்பில் கம்பிகளுக்குப் பின்னால் நின்று திருச்சி நகரின் அழகைக் கடைசித் தடவையாக அணு அணுவாக ரசித்துக் கொண்டிருந்தாள். திருச்சி நகரின் பசிய வயல்களும் ஸ்ரீரங்கம், திருவானைக்காவல் கோபுரங்களும், காவேரி நதியும் அவளுக்கு ரம்மியமாகத் தெரிந்தன. அவள் கண்கள் கலங்கின. ஆனால் அழக் கூடாது எனத் தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள். 'இரக்கமற்ற இந்த உலகில் வாழ்வதைவிட இறைவா என்னை உன்னிடம் சேர்த்துக் கொள்' எனக் கண்மூடிச் சிறிது நேரம் பிரார்த்தித்தாள். அப்பொழுது, "இங்கிருந்து பார்க்கும்போது திருச்சி நகரம் மிக அழகாக உள்ளது இல்லையா மேடம்?" என ஒரு குரல் ஆங்கிலத்தில் கேட்டது. 'சிவ பூசையில் கரடி மாதிரி யார் இந்தப் பிரகிருதி' என நினைத்துக் கண் களைத் திறந்து அவனைப் பார்த்து எரிச்சலுடன் "ஆமாம்" என்றாள் அவனை அனுப்பிவிடும் நோக்கத்துடன். ஆனால் அவனோ அசைவதாக இல்லை. "நீங்கள் அடிக்கடி இங்கு வருவீர்களா" என்றான். மதி மீண்டும் எரிச்சலுடன் "ம்" என்றாள். ஜோ தனக்குள் சிரித்துக் கொண்டான்.

அப்பொழுது கீழேயிருந்து யாரோ "ஜோ நாங்கள் போகின்றோம்" என்றது. அதற்கு அவன் "சரி ஹோட்டலில் சந்திப்போம்" என்றான். திடுக்கிட்டுத் தலையை நிமிர்த்திய மதி "ஏன் அவர்களுடன் நீங்கள் போகவில்லையா" என்றாள். அவன் "இல்லை" என்றான் ஒரு நமுட்டுச் சிரிப்புடன்.

மதி அவசரமாக "இனி இங்கு என்ன செய்யப் போகின்றீர்கள் இன்னும் சிறிது நேரத்தில் கோவிலை மூடி விடுவார்கள் பின்னர் நீங்கள் வெளியே போக முடியாது" என்றாள்.

"பரவாயில்லை நீங்கள் போகும்போதே நான் போகின்றேன். எப்படியும் கோவில் மூடுவதற்கு முன் நீங்கள் போவீர்கள்தானே" என்றான்.

சரியான நந்தி தான் எனத் தனக்குள் மதி அலுத்துக் கொண்டாள்.

"என் பெயர் ஜோ" என்று அவளைப் பார்த்துக் கரங்குவித்தவன் "நாங்கள் ஏன் இந்த மலையின் ஓரத்தில் நிற்க வேண்டும் தற்செயலாகத் தவறி விழுந்தால் ஒரு எலும்புகூடக் கிடைக்காதென்று சற்று முன்னர்

தான் சுற்றுலா வழிகாட்டி சொன்னார், நாங்கள் அந்தப் படியில் போய் இருப்போமா" என வினவினான்.

வேறு வினையே வேண்டாம். தற்போதுள்ள தொல்லைக்கு ஒரு முழுக்குப் போட வந்தால் இவன் புதிதொன்றைச் சேர்க்கிறானே என்று நினைத்தவள், "எதுவும் வேண்டாம் நான் போகிறேன்" என அவனை விட்டு விலக முயன்றாள். ஆனால் தன் கைகளை நீட்டி அவளைப் போக விடாது தடுத்தவன், "உங்களுக்கு என்ன பிரச்சினையென்று சொன்னால் என்னால் முடிந்த உதவி செய்கின்றேன்" என்றான்.

கண்கள் கனலாகத் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தவள், "பிரச்சினையென்று சொன்னேனா" எனச் சீறினாள்.

"சொல்லவில்லைப் புரிந்தது ..." என மெதுவாக இழுத்தான்.

"எது" எனக் கோபமாகக் கேட்டவளுக்கு அவனுக்குத் தன் நோக்குப் புரிந்துவிட்டது அதுதான் தடுக்கின்றான் என்பது உறைத்தது. அவள் விழிகள் உடைப்பெடுத்தன. அவனைவிட்டு விலகிப் படிகளில் போய் இருந்து விம்மி விம்மி அழுதாள்.

ஜோ சிறிது நேரம் அவளை அழவிட்டான். பின் "நீங்கள் ஒன்றும் பயப்பட வேண்டாம். நான் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் ஒரு பக்தன். ஸ்வாமி எப்பொழுதும் பிறருக்கு உதவி செய் என்று சொல்கின்றார். உங்களுக்கு என்ன கஷ்டம் நான் ஏதாவது உதவி செய்யலாமா" எனக் கேட்டான்.

"நானே ஒரு கஷ்டம் நான் பிறந்தது எல்லோருக்கும் கஷ்டம்" எனச் சரளமான ஆங்கிலத்தில் கூறியவள், "எதற்கு விஷப் பரீட்சை ஜோ என் முகத்தைப் பார்த்ததும் நீங்கள் பயந்து ஓடுவதை விட இப்பொழுதே போய் விடுங்கள்" என்றாள் .

"நன்றாக ஆங்கிலம் பேசுகின்றாய், நன்கு படித்த பெண்ணாக இருப்பாய் போல் தெரிகிறது. புற அழகைப் பெரிதுபடுத்துகின்றாயே, இது என்ன மடத்தனம்" என ஜோ அலுத்துக் கொண்டான்.

மதியின் கோபம் இன்னும் கிளர்ந்தெழுந்தது. "நான் ஒன்றும் அதைப் பாராட்டவில்லை. இங்குள்ளவர்கள் தான் அழகிற்கு முக்கியத்துவம் கொடுத்து வாழவே விடுகின்றார்கள் இல்லை. சாவதற்கு வந்தால் இங்கே நீ தடுக்கிறாய். உனக்கேன் வீண் வம்பு ஜோ. தயவு செய்து பேசாமல் போய்விடு" என்றாள்.

அவளைப் பார்த்துப் புன்னகைத்தவன் "இன்னும் நீஎன் கேள்விக்குப் பதில் சொல்லவில்லையே" என இழுத்தான்

"ஓ! என் பெயர் மதிவதனி. மதிவதனி என்றால் அர்த்தம் என்ன தெரியுமா சந்திரன் போன்ற முகத்தையுடைவள்'' எனக் கோபம் தொனிக்கக் கூறியவள், ''ஆனால் என் முகத்தைப் பார்த்தால் எல்லோருக்கும் பயம். நான் கம்ப்யூட்டர் விஞ்ஞானத்தில் தங்கப் பதக்கம் பெற்ற ஒரு பட்டதாரி. ஆனால் என்ன பரிதாபம் தெரியுமா ஜோ! எனக்கு ஆரம்பப் பாடசாலையில் சத்துணவு விநியோகிக்கும் ஓர் ஆயா வேலை கூடக் கிடைக்கவில்லை. என் முகத்தைப் பார்த்துப் பிள்ளைகள் பயந்து விடுவார்களாம். படிக்கும்வரை யார் என்ன கேலி செய்தாலும் பொருட்படுத்தாமல் படித்தேன். படித்துவிட்டால் இதெல்லாம் ஒரு பொருட்டல்ல. உலகம் என் திறமையை மதிக்கும் என நம்பினேன். ஆனால் வேலை தேட ஆரம்பித்ததும் என் நம்பிக்கையெல்லாம் சுக்கு நூறாகியது. நீ வேலை பார்த்தது போதும் கல்யாணம் செய்து வைத்து உன்னை ஒழித்தால் போதுமென என் சகோதரர்கள் ஜாதகத்தைத் தூக்கினார்கள். அம்மாவிடம் அழுது என்ன பிரயோசனம் எதுவோ நடக்கட்டும் அவர்களாவது சந்தோஷப்படட்டுமென நினைத்து அந்தக் காட்சியில் நான் ஒரு பார்வையாளராக மட்டும் இருந்தேன். நீ நம்ப மாட்டாய் ஜோ நிழலுக்காகவேனும் பாடசாலையில் ஒதுங்காதவன் கூட என் முகத்தைப் பார்த்ததும் ஓடிவிட்டான்" எனக் கேலியாகக் கூறினாலும் அவள் வார்த்தைகளிலிருந்த வேதனையை ஜோவினால் உணர முடிந்தது.

ஜோவின் ஆர்வம் அதிகரித்தது. அப்படி அந்த முகத்தில் என்ன குறை? அதை அவள் இன்னும் காட்டவில்லை. முக்காட்டைத் திறக்கவே இல்லை. நிறம் கறுப்பாக இருந்தது. அது கண்ணனின் கலர் தானே அதில் என்ன குறை என நினைத்தவன். "மதி நான் உன் முகத்தைப் பார்க்க லாமா?" என்றான் மிகவும் பவ்வியமாக.

"பார்த்துவிட்டுப் போய்விடு ஜோ" என முக்காட்டை எடுத்தாள். அவள் கண்கள் கொப்பழித்துக் கன்னங்களில் வழிந்தது. அந்தப் படியில் இருந்த வெளிச்சத்தில் ஜோ உற்றுக் கவனித்தான். நீண்ட முகம் கருநிறம். அது இயற்கை. ஆனால் இடையிடையே நெருப்புப் பட்டது போல் சிறு சிறு தழும்புகள். அவைதான் அழகை மேலும் குறைத்தன.

"போதுமா" எனக் கேட்டு முக்காட்டை மீண்டும் போட்டுக் கொண் டவள் மள மளவெனப் படிகளில் இறங்கினாள்.

"தயவுசெய்து போகாதே மதி. இதெல்லாம் ஒரு குறையே அல்ல. உனக்கொரு வேலை தந்தால் சரியா" எனக் கேட்டான்.

அதிர்ந்து நின்று அவனை நிமிர்ந்து பார்த்தவளின் இதழ்களில் இளநகை அரும்பியது.

அவசரமாக அவளருகே இறங்கி வந்தவன், தன் சட்டைப் பையில் இருந்த தனது விலாச அட்டையை அவள் கையில் கொடுத்து, "மதி நான் ஒரு கம்ப்யூட்டர் அலுவலர். ஆஸ்திரேலியாவில் ஒரு சிறு கம்பனியின் சொந்தக்காரன். நீ என்னுடன் ஆஸ்திரேலியா வந்தால் உனக்கு நான் ஒரு வேலை தருகின்றேன். இருவருமாகச் சேர்ந்து பாடுபட்டு முன்னேறு வோம். பணம் இருந்தால் உன் முகம் ஒரு பிரச்சினையே இல்லை. இப்போதுள்ள மருத்துவ வசதிக்குச் சத்திர சிகிச்சை செய்து சரிப் படுத்தலாம் வருகிறாயா" என்றான்.

மதியின் விழிக்குளங்கள் உடைப்பெடுத்துத் தன் வழியே ஓடின அவனையே மௌனமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

ஜோ தொடர்ந்தான். "என்னுடன் வந்தவர்கள் எல்லோரும் பகவான் பாபாவின் பக்தர்கள். நாங்கள் இங்கே ஹோட்டல் ரங்காவில் நிற்கின் றோம். நாளைக் காலை புறப்பட்டுப் பெங்களூர் போய் வைற்ஃபீல்டில் ஸ்வாமியைத் தரிசித்துவிட்டு மும்பை (பம்பாய்) வழியாக ஆஸ்திரேலியா செல்கின்றோம் நீ எங்களுடன் வந்தால் பம்பாயில் உனக்கு விசா பிரயாணச்சீட்டுப் போன்ற ஒழுங்குகளைச் செய்து கொண்டு எல்லோரு மாகப் போகலாம்" என்றான்.

மதி முதல் தடவையாக வாயைத் திறந்து "அவ்வளவு விரைவில் விசா கிடைக்குமா" எனக் கேட்டாள்.

"உனக்குத் தெரியாது மதி. உன் கல்வித் தராதரங்களுக்கு அடுத்த பேச்சுப் பேசாமல் விசா தருவார்கள். நீ உலகில் எங்கே வேலை தேடினாய்? இந்தியாவில் மட்டுமே தேடிவிட்டு இப்படி முடிவெடுக் கலாமா? உலகில் திறமையை மதிப்பவர்களும் இருக்கின்றார்கள் வேண்டுமானால் வந்து பார், செலவைப் பற்றி ஒன்றும் யோசிக்காதே எல்லாம் என் பொறுப்பு" என்றான்.

மதிக்கு ஒரே ஆச்சர்யம். எதிரே தெரிந்த தாயுமான ஸ்வாமியைப் பார்த்துத் தாயாகி மகப்பேறு பார்த்த அன்னையே சாவதற்கு வந்த வளுக்கு உன் சந்நிதியில் வைத்து வாழ வழி காட்டுகின்றாயா என நினைத்தாள். ஜோவை எவ்வளவுக்கு நம்பலாம் எனத் தெரியவில்லை.

இருந்தாலும் சரியென ஒப்புக் கொண்டு காலையில் ஹோட்டலில் சந்திப்பதாகக் கூறிச் சென்றாள்.

மதி வீட்டுக்குப் போகும்போது ஒவ்வொன்றாக நினைத்தாள். பெற்றோரின் கடைக் குட்டியாகப் பிறந்து அவர்களின் செல்வ மகளாக வளர்ந்தது. அவள் பிறந்த பின்னர்தான் அதிர்ஷ்டம், ஸ்ரீரங்கநாதரே என் பெண்ணாகப் பிறந்திருக்கிறார் என்று அப்பா சொல்லிப் பெருமைப் பட்டுக் கொள்வார். அவளது அந்தக் கருநீல நிறம் அவருக்கு ஒரு குறை யாகவே தெரிந்ததில்லை. சில சமயம் "இப்படி வந்து பிறந்திருக் கிறாளே பின்னுக்கு என்ன கஷ்டமோ" என்று அம்மா அங்கலாய்ப்பார். அதற்கும் "என் பெண்ணை அடைபவன் அதிர்ஷ்டசாலி. எவனுக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ" என அப்பா சொல்லிக் கொள்வார்.

ஆனால் அப்பா திடீரென இறந்து போகப் போதாக்குறைக்கு முகத்தில் கொதி எண்ணெய் பறந்து திட்டுத்திட்டாக அடையாளங்கள் ஏற்பட அவளைப் பார்ப்பவர்கள் மறுமுறை பார்க்க விரும்புவதில்லை. படிக்கும்போது மதி அதை ஒரு பொருட்டாகக் கருதியதில்லை.

அவளைக் "காக்கைச் சிறகினிலே நந்தலாலா", "கண்ணா கார் முகில் வண்ணா" என்று கேலி செய்தவர்களையெல்லாம் தன் திறமையால் தலை குனிய வைத்தாள். கம்ப்யூட்டர் விஞ்ஞானத்தில் பல புதிய யுக்தி களைக் கையாண்டு அனைவரையும் கிறங்க வைத்தாள். ஆசிரியர் களுக்கு அவளிடம் ஒரு மதிப்பு இருந்தது சில சமயம் அவர்களால் தீர்க்க முடியாத கணக்குகளுக்கு அவள் தீர்வு கண்டாள். இதனால் மதிக்குத் தன் திறமையில் அதீத நம்பிக்கை இருந்தது. அதைக் கொண்டு பல சாதனைகள் படைக்கலாமெனக் கற்பனையில் மிதந்தாள்.

ஆனால், படித்து முடிந்து வேலை தேடியபோது தான் ஒரு பெண்ணுக்குத் திறமை மட்டும் இருந்தால் போதாது அழகும் அவசியம் எனப் புரிந்து மனம் சோர்ந்து போனாள். வேலை தேடியபோதும் பின்னர் சகோதரர்களின் திருப்திக்காகத் திருமணத்திற்குக் காட்சிப் பொருளாக இருந்தும் மனத்தில் விழுந்த அடிகளால் மதிக்கு வாழ்வே வெறுத்து விட்டது. போதாக்குறைக்கு அண்ணாக்களின் வெறுப்பு; அண்ணிகளின் ஏளனம்; அம்மாவின் கண்ணீர் எல்லாமாகச் சேர்ந்து அவளை அந்த முடிவுக்குத் தள்ளியது.

இத்தனைக்கும் அவளுக்குக் கிடைத்த ஒரே ஆறுதல் அவள் அருமைத் தோழி சித்ராங்கிதான். கல்லூரியில் கேலி செய்தவர்களிடம் சண்டை

போட்டதும் இன்டர்வியுவில் வேலை இல்லையெனக் கடிதம் வந்ததும் "எல்லோரும் மடையன்கள் இவங்களுக்கெல்லாம் அதிர்ஷ்டமே இல்லை மதி" என்று ஒருபாட்டம் திட்டித் தீர்த்ததும் அவள்தான்.

அப்பொழுதெல்லாம் மதி "உனக்கு மட்டும் ஏன் இந்த அன்பு சித்து" எனக் கண்கலங்கக் கேட்பாள். அவள் "நீ பாரேன் கடவுள் உனக்கு ஒரு வழிகாட்டத்தான் போகின்றார். உன் திறமையை இந்த உலகமே பாராட்டும். அப்போது இவர்கள் மூக்கில் விரலை வைக்கப் போகின்றார்கள்" என்பாள். "இருந்தாலும் உனக்குப் பேராசைதான் சித்து" என்பாள். "இதொன்றும் பேராசை இல்லை என் நியாயமான ஆசை மதி. என்றைக்காவது உன் திறமை மதிக்கப்படும். அன்று பத்திரிகைக்குப் பேட்டி கொடுக்கும்போது என்னை மறந்திடாதே" என்பாள். "அதெப்படிச் சித்து நீ இல்லாமல். அங்கே யாரும் கண்ணன் பாட்டுப் பாடினால் பல்லவி நீ தானே பாடவேண்டும்" என்பாள். "போயும் போயும் உனக்காகப் பேசுகின்றேனே எனக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டுமடி" எனச் செல்லமாகக் கடிந்து கொள்வாள்.

சித்து சொன்னது போல் கடவுள் கண் திறந்துவிட்டாரா என்ற நினைவலைகளுடன் வீட்டை அடைந்தாள். அம்மா வழிமேல் விழி வைத்து வாசலிலேயே நின்றார். அவளைக் கண்டதும் "எங்கே மதி போய் விட்டாய்" எனக் கவலையுடன் வினாவினார். அப்பொழுதுதான் செய்ய இருந்த வேலையை நினைத்து அவள் கண்கள் கலங்கின. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்ற பழமொழி நினைவுக்கு வந்தது. "சும்மா கோவில் வரையும் போயிருந்தேன்" எனச் சொல்லி விட்டு உள்ளே போய் விட்டாள்.

இரவு தனக்கு வேண்டியவற்றை எடுத்து வைத்துவிட்டு அன்னையிடம் "பெங்களூரிலுள்ள ஒரு தோழி வரச் சொல்லியிருக்கிறாள். அங்கே ஒரு வேலை கிடைக்கும் போல் இருக்கிறது. நாளைக் காலை பஸ்ஸில் போகின்றேன். போன பின்னர் அண்ணாக்களிடம் சொல்லு. இப்பவே சொன்னால் அங்கே பெரிதாக என்ன கிடைக்கப் போகிறது என்பார்கள்" என்றவள், "அம்மா ஒன்றுமட்டும் நினைவில் வைத்துக் கொள். உன் பெண் எங்கிருந்தாலும் மானம் மரியாதையுடன்தான் வாழ்வேன். அப்படி எனக்கு ஏதாவது களங்கம் ஏற்பட்டால் அந்த நிமிஷமே உயிரை விட்டு விடுவேன்" என அன்னையின் மடியில் முகம் புதைத்துக் கண்ணீர் விட்டாள். "உன் கடைசிக் காலத்தில் உன்னை நான் நன்றாக வைத்திருக்கக் கடவுள் அருள வேண்டும்மா" என்று அழுதாள். "என்ன மதி

என்னென்னவோ சொல்கிறாய்” என அம்மா, அவளை இறுக அணைத்துக் கொண்டார்.

“ஒன்றுமில்லை நீ போய்ப் படு” என அன்னையை அனுப்பியவள், சித்ராங்கிக்கு விபரமாகக் கடிதம் எழுதினாள். “திக்குத் தெரியாத காட்டுக்குள் போகின்றேன் சித்து. திசை தெரிந்தால் தெரிவிக்கின்றேன் அம்மாவை எப்படியாவது சமாளித்துக் கொள்” என எழுதி மறுநாள் காலை தபாலில் சேர்க்க என வைத்தாள்.

மறுநாள் அதிகாலை புறப்பட்டு ஜோ சொன்ன ஹோட்டலுக்குப் போய் வரவேற்பில் சொன்னபோது, “இங்கே இரம்மா. இன்னும் சிறிது நேரத்தில் எல்லோரும் புறப்படுகின்றார்கள். கணக்குகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றேன்” என அந்த முகாமையாளர் கூறினார். அப்பொழுது மாடிப்படிகளில் சிலர் இறங்கி வந்தனர். அவர்களில் ஒருவராக ஜோவும் வந்தான். அவளைக் கண்டதும் “மதி, நீ வந்து விட்டாயா எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது” என்றான். பின் “வா எல்லோரையும் அறிமுகம் செய்கிறேன்”என அழைத்துப் போய் பீட்டர், மார்க் , கீதா, கண்ணன், ஜேன் என ஒவ்வொருவராக அறிமுகம் செய்தவன், “இவங்கதான் நான் இரவு சொன்ன மதி எங்களுடன் வருகி றார்கள்” என்றான். எல்லோர் வதனங்களிலும் தெரிந்த இரக்கத்தின் சாயலைக் கண்டு மதி வெட்கித் தலை குனிந்தாள்.

அவர்கள் அனைவரும் அவளை மிகவும் அன்பாகவும் மரியாதையா கவும் நடத்தினர். பஸ்ஸில் அவளுக்குப் பக்கத்தில் இருந்த ஜேன் “மதி, நீ தப்பாக நினைக்கவில்லை என்றால் ஒன்று கேட்கவா? உன் முகத் தழும்புகள் நெருப்புச் சூட்டால் வந்தவையா? எவ்வளவு காலமாகி விட்டது, ஏனென்றால் நான் ஒரு டாக்டர் அதை மாற்ற முயற்சிக்கலாம்” என்றாள். மதி “அது கொதி எண்ணெய் பறந்ததால் சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்டது” என்று கூறினாள். “ஆஸ்திரேலியா வில் இப்பொழுது ஒரு வகைக் களிம்பு இருக்கிறது. புதிய காயங்கள் ஆறியுள்ளன. அங்கே போனதும் முயற்சிப்போம். இல்லாவிட்டால் இருக்கவே இருக்கிறது ப்ளாஸ்ரிக் சர்ஜரி. நீ ஒன்றுக்கும் கவலைப் படாதே” என அவள் கைகளை அன்புடன் அழுத்தினாள். அந்த அன்பில் நெகிழ்ந்த மதியின் கண்கள் கரைந்து அவள் கைகளில் தெறித்தது. “அழக்கூடாது மதி அது கோழைத்தனம். மற்றவர்களுக்கு ஒரு சவாலாக

நீ வாழ்ந்து காட்ட வேணும். இந்த உலகில் பிரச்சினை இல்லாதவர்கள் யாருமே இல்லை. அதையெல்லாம் அன்பினால் வெல்லலாம் என்று ஸ்வாமி சொல்கின்றார். எல்லா ஜீவராசிகளிலும் அன்பு வைத்தால் பின்னர் நமக்கு எதிரிகளே தெரிய மாட்டார்கள். பிரச்சினைகளும் இருக்காது தைரியமாக இருந்து கொள்" என்றாள்.

பெங்களூரில் ஒரு ஹோட்டலில் தங்கினார்கள். ஜேன் எந்தவித விகல்பமும் இல்லாமல் "எனக்கும் மதிக்கும் ஒரு அறை போட்டு விடுங்கள்" என்றாள். அதற்கிடையில் பிருந்தாவனில் ஒருவர் போய் விசாரித்துவிட்டு வந்து பகவான் பாபா அங்கே வந்துள்ளார் என்று சொன்னதும் அவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. எல்லோரும் குளித்துச் சிரம பரிகாரம் செய்து கொண்டு ஸ்வாமியின் தரிசனத்திற் காகச் சென்றனர். மதியும் அவர்களுடன் சென்று எதுவித இலக்கும் இல்லாமல் ஒரு மூலையில் நின்றாள். தரிசனத்துக்காகப் பகவான் வந்தபோது அவள் உடலெல்லாம் மயிர்க்கூச்செறிந்தது. கண்கள் கலங்கின. அவள் அருகே வந்த ஸ்வாமி அவளுக்குச் ஸ்ரீரங்கநாதராகத் தோன்றினார். அவள் கைகள் அவரை நோக்கித் தானாகவே குவிந்தன.

மும்பைக்குப் போய் அங்கு வேண்டிய சம்பிரதாயங்களை முடித்து விசா எடுத்துக்கொண்டு சிங்கப்பூர் வழியாக ஆஸ்திரேலியா வந்தடைந் தனர். மும்பையில் ஜோ விசா கிடைத்தது என்று சொல்லும் வரை மதிக்கு நம்பிக்கையே இல்லை. அதன் பின் திறமையை மதிப்பவர்களும் உலகில் இருக்கத்தான் செய்கின்றார்கள் என நினைத்து ஆறுதல் அடைந்தாள்.

மும்பையிலும் சிங்கப்பூரிலுமாக எல்லோரும் அவளுக்கு உடைகளை வாங்கிக் குவித்தனர். அங்கே சிங்கப்பூர் வாசியான கீதா "நான் அம்மா வைப் பார்க்கப் போகின்றேன். நீயும் வா மதி" என அவளை அழைத்துச் சென்றாள். அந்தத் தாய் கருணையே வடிவானவராக இருந்தார். மிகவும் கனிவுடன் பழகினார். கீதாவிடம் "மதிக்கு வேண்டிய உதவிகளைச் செய்" எனச் சொன்னார். ஒரு பட்டுப்புடவையைப் பகவான் பாதங்களில் வைத்து நமஸ்கரித்து மதிக்குக் கொடுத்தார். "அவன் அருள் இருக்க உனக்கு எந்தக் குறையும் வராது தைரியமாக இரு" என ஆசீர்வதித்து அனுப்பினார். வழி நெடுகலும் இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களே இதுவரை யாரும் ஏன் என் கண்ணில் படவில்லையென்று மதி நினைத்தாள்.

சிட்னி விமான நிலையத்தில் இறங்கியதும் அவரவரே பிரிந்தனர். மதி ஜோவுடன் ஒரு டாக்ஸியில் அவனது வீட்டை அடைந்தாள். மூன்று அறைகள் கொண்ட அந்த வீட்டில் ஜோ இது என் அறை, இது அலுவலகம் மற்றது உன் அறை எனக் காட்டினான். அலுவலகம் என அவன் காட்டிய அறைக்குள் ஒரு பழைய கம்ப்யூட்டரும் சில வெற்றுத்தாள்களுமே இருந்தன. மதி திகைத்து நின்றாள்.

பின் தன் அதிர்வை மறைக்க முடியாமல் “இதுதானா உன் அலுவலகம் ஜோ” என்றாள். “ஆமாம் ஆரம்பித்து ஆக இரண்டு மாதங்கள்தானே. கம்பனியைப் பதிவு செய்தேன், பிஸினெஸ் காட் அடித்தேன். புட்ட பர்த்திக்குக் கிளம்பிவிட்டேன். இப்பொழுது பகவான் ஓர் உதவியாளரை யும் தந்திருக்கிறார். இனி இருவருமாக உழைக்க வேண்டியதுதான்” என்றான். மதி ‘கிழிஞ்சுது போ’ என்று தனக்குள் முணுமுணுத்தாள். இவனை நம்பி வந்தது தவறோ என்று ஒரு கணம் நினைத்தாள். ஆனால் வராவிட்டால் அங்கே பெரிதாக என்ன நடந்திருக்கும். ஆகக் குறைந்தது அம்மா சகோதரர்களுக்காவது நிம்மதி. அத்துடன் கையில் ஒரு கம்ப் யூட்டர் இருக்கிறது அதுவும், தன் அறிவும் கடவுள் அருளும் கை கொடுக்கும் என நம்பினாள்.

அவள் மனத்தைப் புரிந்தது போல் “என்ன வியப்பாக இருக்கிறதா?” என்று ஜோ கேட்டான். பின் “என்னைப் பற்றி உனக்கொன்றும் தெரியா தில்லையா மதி. நான் உன்னைப்போல் ஒன்றும் பட்டதாரியில்லை. தொழில்நுட்பக் கல்லூரியில் ஒரு ஆறு மாதங்கள் கம்ப்யூட்டர் படித்தேன். ஏதாவது வேலை கிடைக்குமா என்று தேடினேன். யாருமே தரவில்லை. சமூகநலத்துறையில் ஒரே தொல்லைப்படுத்தினார்கள். வங்கிக் கடனெடுத்துச் சொந்தத் தொழில் தொடங்கு என்றார்கள் சரி யென்று கடனெடுத்துக் கம்ப்யூட்டர் வாங்கினேன். அவர்கள் கண்களைத் துடைப்பதற்காக. ஆனால் நாளைக்கு அங்குதான் போய் நிற்கப் போகின் றேன்.வேலை கிடைத்தால் தானே அவர்கள் பணம் தருவதை நிறுத்த முடியும்” என்றான்.

மதிக்கு அவனைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது. “அரசை ஏமாற்ற இது ஒரு வழியா” என்றாள். “ஆமாம் மதி அரசு மக்களைச் சோம்பேறி யாக்குகின்றது. பெற்றவர்களும் பிள்ளைகளும் பிரிய வழிவகுக்கின்றது. நானெல்லாம் பெற்றோரால் கைவிடப்பட்ட ஒரு ஜாதி தெரியுமா? என் எட்டு வயதிலிருந்து பதினாறு வயது வரை வாரத்தில் அப்பாவிடம்

இரண்டு நாட்கள், அம்மாவிடம் ஐந்து நாட்கள் என்று பந்தாடப்பட்டுப் பதினாறு வயதில் அரசிடமே விட்டு விட்டார்கள். அதனால்தான் எனக்கு இந்தியரின் விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும், கூட்டுக் குடும்ப முறையும் ஸ்வாமி எப்போதும் சொல்லும் எல்லோரிடமும் அன்பு காட்டு என்பதும் மிகவும் பிடிக்கும்" என்றான்.

எல்லாம் சரிதான் அன்பு எங்கே வாழ்கிறது என மதி தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

"ஆனால் இந்த வீடு மட்டும் என் சொந்தம். ஏன் தாய் வழிப் பாட்டி எனக்கு விட்டுச் சென்றது. அதைக்கூட என் அம்மா பறிக்கப் பார்த்தார். ஆனால் பாட்டியின் உயில் மிகவும் உறுதியாக இருந்ததால் ஒன்றும் செய்ய முடியவில்லை" என்றான்.

"என்னை என்ன துணிவில் இங்கு கூட்டி வந்தாய் ஜோ? இவ்வளவு கஷ்டப்படும் நீ என் ரிக்கற் பணத்துக்கு என்ன செய்தாய்" எனக் கேட்டாள். இதழ்களில் இளநகைபடர அவளைப் பார்த்தவன், "என்னை நம்பியா உன்னைக் கூட்டி வந்தேன் இல்லை மதி. நம் சுற்றுலாக் குழுவையும், உன் திறமையையும் நம்பியல்லவா? அந்த நேரம் உனக்குக் காட்டுவதற்காவது என் பெயர் அட்டை பயன்பட்டதே என்று மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். நம் நாடு அகதிகளுக்குப் புகலிடம் கொடுப்பது. நான் அதற்கு பகவானால் பயன் படுத்தப்பட்ட ஒரு வெறும் கருவிதான் மதி. நீ என்னுடன் இருக்க வேண்டும் என்பதில்லை. வெளியே போய் வேலை தேடு. உனக்கு நிச்சயம் நல்ல வேலை கிடைக்கும்" என்றான்.

"இல்லை ஜோ" என அவசரமாக மறுத்தவள், "நான் உனக்கு வேலை செய்யத்தான் வந்தேன். நீ திருச்சியில் சொன்னது போல இருவரும் சேர்ந்து பாடுபடுவோம். வாடிக்கையாளர்களைப் பிடிப்பதற்கான முக்கிய சாதனம் பத்திரிகை தான் நீ அதைப் போய் வாங்கி வருகிறாயா" என்றாள்.

"இப்போதே வேலை தொடங்க வேண்டியதில்லை மதி. ஆனாலும் நான் மற்றைய பொருட்கள் வாங்கும்போது பத்திரிகையும் வாங்கி வருகின்றேன்" எனக் கூறிச் சென்றான்.

வெளியே போன ஜோ திரும்பி வர வெகு நேரமாகிவிட்டது. அதற்கிடையில் மதி வீட்டை ஒழுங்குபடுத்தினாள். கம்ப்யூட்டரைத் துடைத்து அதை இயக்கிப் பார்த்தாள். அது நன்றாக வேலை செய்வது கண்டு பேருவகை அடைந்தாள். அதை வைத்து எதையும் சாதிக்கலாம் என்ற தன்னம்பிக்கை

அவளுக்கிருந்தது. மாலையில் ஜோ ஒரு லாரியில் கட்டில் மெத்தை கதிரை மேசை என்று பல பொருட்களைக் கொண்டு வந்து இறக்கினான். "நான் இவ்வளவு நாளும் தனித்திருந்தேன். அதனால் கவனிக்கவில்லை இப்பொழுது நீயும் இருப்பதால் இதையெல்லாம் வாங்கி வந்தேன்" என்றான்.

ஜோ கொண்டு வந்த பேப்பரைப் புரட்டி ஏதாவது வேலை இருக்கிறதா என்று பார்த்தாள். அதிலே சில சிறு வியாபார நிறுவனங்கள் தங்கள் வியாபார அறிக்கைகளை வைத்திருப்பதற்கும் வரவு செலவுக் கணக்குப் பார்ப்பதற்குமான ஒரு ஸா∴ப்ட்வேர் கேட்டிருந்தது. அப்படியான ஒன்றுக்கு மிகவும் மதிப்பு இருக்கும் போல் தெரிந்தது. எப்படிச் செய்யலாம் எனத் திட்டம் போட்டு மறு நாள் குறித்த ஒரு நிறுவனத்திற்கு ஜோவை அனுப்பினாள். சிறு திருத்தங்களுடன் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டனர். மதி அதைச் செய்வதில் முழு மனத்துடன் முனைந்திருந் தாள்.

சனிக்கிழமை காலை ஜேன் வந்தாள். "மதி, இந்தக் கிறீமைப் பூசிப்பார். உன் முகத்திலுள்ள அடையாளங்கள் குறையலாம் அல்லது வேறு ஏதாவது செய்வோம்" என்றாள். அத்துடன் பாண், பால், பிஸ்கட் என நிறைய உணவுப் பொருட்களைக் கொண்டு வந்து "இன்று ஓய்வுநாள் தனித்திருந்து உண்ண ஒரு மாதிரி இருந்தது. அது தான் எல்லோருமாகச் சாப்பிடலாம் எனக் கொண்டு வந்தேன்" என்று கடையைப் பரப்பினாள்.

அப்பொழுது ஜோ "உனக்குத் தெரியுமா மதி, ஜேனும் என் ஜாதிதான். பெற்றவர்களால் கைவிடப்பட்டவள். ஆனால் அவள் எப்படியோ படித்து டாக்டராகிவிட்டாள்" என்றான். மதிக்கு அவர்களைப் பார்க்க இரக்கமாக இருந்தது. அன்புக்காக ஏங்கும் குழந்தைகளாகத் தெரிந்தனர். கருணை யுடன் அவர்களைப் பாாத்து "ஜேனுக்கு நாங்கள் இருக்கிறோம் ஜோ. பிறகென்ன கவலை" என்றாள். "நன்றி மதி. அன்புதான் எல்லாவற்றிற் கும் சிறந்த மருந்து. அதனால்தான் அன்பே தெய்வம் என்கின்றோம். ஆனால் பலருக்கு அது புரிவதில்லை. வீணான கர்வம் பொறாமை எரிச்சல் என்று தங்கள் வாழ்வையே வீணாக்குகின்றார்கள்" என்றவள் நான் போக வேண்டுமென அவசரப்பட்டாள்.

"இப்பொழுதுதானே ஓய்வு நாள் என்றாய் ஜேன்" என்றான் ஜோ வியப்புடன்.

“ஓய்வுதான் ஆனால் என் தாய் வழிப் பாட்டியைப் போய் முதியோர் இல்லத்தில் பார்க்க வேண்டும். அவரும் அவரது சினேகிதிகளும் அந்த இல்லத்தின் வாசலிலேயே காத்திருப்பார்கள். எல்லோருக்கும் நான் பேரப்பிள்ளைதான். சிலருக்கு யாருமே இல்லை. சிலரை யாரும் வந்து பார்ப்பதில்லை. அன்புக்காக ஏங்குபவர்கள். அவர்களுடன்தான் இன்று என் பொழுது போகும். ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு பரிசு வைத்துக் கொண்டு காத்திருக்கும்போது அழுகை வரும். அவர்கள் எதிர்பார்ப்ப தெல்லாம் வெறும் அன்புதான். அன்பான இரண்டு வார்த்தைகள் அது அவர்களுக்குப் பாலைவனத்தில் பசும் சுனையைக் கண்டது போல் இருக்கும் அதனால் தான் ஸ்வாமி நாளை அன்புடன் தொடங்கி, அன்பி னால் நிரப்பி, அன்புடன் செலவு செய்து, அன்புடனேயே முடிவுறச் செய் அது தான் இறைவனை அடைவதற்கு ஒரே வழி என்கிறார். நீங்களும் ஒரு நாளைக்கு என்னுடன் வந்து அவர்களைப் பாருங்கள்” எனக் கூறிச் சென்றாள். மதியின் கண்கள் கசிந்தன.

## 2

**ம**தி குறித்த அந்த ஸா∴ப்ட்வேர் ஐத் தயாரித்து ஜோவிடம் கொடுத்தனுப் பினாள். அவர்களுக்கு மிகவும் பிடித்துக் கொண்டது. அதைப் பாவிப் பதற்தான அனுமதியை எழுத்துமூலம் கோரினர். ஜோ “நீ தயாரித்தது தானே மதி உன் பெயரிலேயே இருக்கட்டும்” என்றான். “இல்லை நான் உன்னிடம் ஊழியம் பார்க்கின்றேன் நம் கம்பனி பேரிலேயே இருக்கட்டும்” என்றாள். அதுவும் சரிதான் என்றவன் வெளியே போய் வேறு சில பத்திரங்கள் கொண்டு வந்து மதியிடம் கையெழுத்து வாங்கி னான். கேட்ட இடத்திலெல்லாம் மதி எதுவித யோசனையுமின்றிக் கையெழுத்திட்டாள். “என்ன எதற்கென்று கேட்க மாட்டியா மதி இப்படிக் கேட்ட இடத்தில் கையெழுத்திடுவது ஆபத்து, தெரியுமா” எனக் கேட்டான்.

“ஆமாம் என்னிடம் நிறையச் சொத்துக்கள் இருக்கு நீ சுருட்டிக் கொண்டு போக” என நகைத்தாள்.

சொத்தினால் மட்டும் கஷ்டம் வரலாமென்பது இல்லை என்றவன், “எங்கள் கம்பனியின் பெயரை மாற்றி எம்ஜே கம்ப்யூட்டர்ஸ் எனப் பங்குதாரர் நிறுவனமாக்கப் போகின்றேன் பின் நீயே கம்பனி பெயரில் கையெழுத்திடலாம்” என்றான். “எதுவோ செய்” என மதியின் வாய் சொன்னாலும் அவள் இதயத்தில் ஜோ பண்பிலே உயர்ந்து நின்றான்.

புதிய நிறுவனம் ஆரம்பித்த தினமோ அல்லது மதி வந்த அதிர்ஷ்டமோ அவர்கள் வியாபாரம் அவர்களின் அன்றாடத் தேவை களைக் கஷ்டமின்றிச் சமாளிக்க உதவியது. நாளுக்கு நாள் வெவ்வேறு விதமான ஆர்டர்களும் வந்த வண்ணமிருந்தன.

ஜேன் கொடுத்த கிறீமைக் கவனமாக முகத்திற்குப் பூசிக் கொண்டு வந்த மதி பதினைந்து நாட்களில் முகத்திலிருந்த தழும்புகள் மறைந்து முகம் முழுவதும் ஒரே நிறமாக இருக்கக் கண்டு வியந்தாள். பதினைந்து வருடங்களாகப் பார்த்துப் பார்த்து சலித்த தழும்புகள் பதினைந்து நாட்களில் மறைந்தமை கண்டு மதி வியந்தாள். இதை ஏன் திருச்சியில் ஒருவரும் சொல்லவில்லை. ஏழைகள் என்றால் அவ்வளவு கவனக் குறைவா என நினைத்தபோது அவளுக்குக் கோபம் வந்தது. ஒரு சிறு மருந்து அங்கேயே கிடைத்திருந்தால் அவளது வாழ்க்கையே சிலவேளை மாறியிருக்கலாம் என மனம் நொந்தாள்.

சுமார் ஒரு வருடம் ஓடியது. அவர்கள் வியாபாரம் சூடு பிடித்தது. வாடிக்கையாளர் தொடர்பு கொள்வதற்குச் சுலபமாகக் கம்ப்யூட்டருக்கு இணைய வசதிகளையும் செய்து வைத்தாள். அன்று ஈ-மெயிலைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த மதி சத்தமாகச் சிரித்தாள். என்ன என ஜோ எழுந்து வந்து பார்த்தபோது, அதிலிருந்த அனைவருக்கும் பொது வானதாக ஆனால் அவளுக்காகவே அனுப்பப்பட்டிருந்த ஒரு செய்தி யைக் காட்டி மீண்டும் நகைத்தாள். அதிலே, **காக்கைச் சிறகினிலே நந்தலாலா! உன் திசை தெரிந்ததா? உடனே தொடர்பு கொள். - பல்லவி** என ஆங்கில எழுத்தில் எழுதப்பட்டிருந்தது. வாசித்த ஜோவுக்கு எதுவும் புரியாமல் திரு திரு என விழித்தான். மதி அது சித்துவின் வேலை எனச் சொன்னதும் மதிக்குத் தெரியாமல் அதில் ஒரு பிரதி எடுத்து வைத்துக் கொண்டான்.

மதியின் திறமையும் நேர்மையும் சேர்ந்து ஆடர்கள் வந்து குவிந்தன. வங்கி நிலுவையும் அதிகரித்தது. ஜோ 'நான் புட்டபர்த்திக்குப் போகவா' எனக் கேட்டுக் கொண்டிருந்தான். 'பணமிருக்கிறது தானே தாராளமாகப் போய் வா' என அனுப்பி வைத்தாள்.

போகும்போது உனக்கு என்ன வேண்டுமெனப் பல முறை கேட்டும் மதி எதுவுமே சொல்லவில்லை. 'யாரையாவது பார்த்து வரவா' என்ற தற்கும், 'வேண்டாம் அவர்கள் என்னை மறந்து இருக்கட்டும்' என நாத் தளுதளுக்கக் கூறினாள். அது ஜோவின் நெஞ்சைப் பிசைந்தது

மௌனமாகப் போய் விட்டான். ஆனால் சித்ராங்கியைப் போய்ப் பார்த்து விபரம் கூறினான். அவள் "என் மதியைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" எனக் கண்கலங்கினாள்

நாளடைவில் வியாபாரம் அதிகரித்ததால் நிறுவனத்தை விரிவு படுத்திப் பலரை வேலைக்கு அமர்த்தினர். ஜோ எனக்குக் கீபோர்ட்டி லுள்ள அகர வரிசை மட்டும்தான் தெரியும் மற்றதெல்லாம் மதியின் திறமையென வியாபார உலகில் பிரபல்யப்படுத்தியதால் மதியின் புகழ் எங்கும் பரவியது. அவர்கள் தயாரித்த மென் பொருட்களுக்கு வெளி நாட்டிலிருந்தும் ஆடர்கள் வந்து குவிந்தன.

அதனால் கம்ப்யூட்டர் அலுவலர் சங்கத்தின் முக்கிய அங்கத்தினர் வரிசையில் மதியின் பெயரும் இருந்தது. அங்கே மதியின் மதிநுட்பம் மிகவும் பாராட்டப்பட்டது. அவளது புதிய மென்பொருட்களுக்கு விளக்கம் அளிக்குமாறு அவர்களிடமிருந்து அழைப்பு வந்தது. மதி தயங்கினாள். ஆனால் ஜோ, "நீ போகத்தான் வேண்டும் மதி, போனால் தான் உனக்கு அழகென்பது வெறும் தோலின் நிறத்தில் இல்லை, ஒருவரின் தனித்தன்மை, திறமை, துணிவு, தன்னம்பிக்கை போன்றவற் றில் தான் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும், அப்பொழுது தான் உன் மனத்திலுள்ள அந்தத் தாழ்வு மனப்பான்மை மறைந்து நீ தலை நிமிர்ந்து நிற்கலாம்" என வற்புறுத்தி அழைத்துச் சென்றான். அங்கே சரமாரியாகத் தொடுக்கப்பட்ட வினாக்களுக்குத் தங்கு தடை யற்ற நீரோடைபோல் மதியின் நாவிலிருந்து பதில்கள் பாய்ந்து வந்து அனைவரையும் அசர வைத்தன. என்ன ஒரு மூளை என அனைவரும் வியந்தனர். என்னில் ஒன்றும் இல்லை இது கடவுள் தந்த வரம் என மதி தன்னடக்கமாக நினைத்தாள்.

கூட்டம் முடிந்து தேனீர் விருந்தின் போது பலர் மதியை வந்து பாராட்டினர். சிலர் தமது நிறுவனத்திற்கு ஆலோசகராக இருக்க முடியுமா எனக் கேட்டனர். ராகவன் என்பவர் தான் ஒரு கம்ப்யூட்டர் துறைப் பேராசிரியர் எனக் கூறித் தன் மாணவர்களுக்கு ஓர் உரையாற்ற முடியுமா எனக் கேட்டார். அவரைப் பார்க்க மதிக்கு ஒரு மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டது. மனத்தில் என்றுமில்லாத ஒரு பரவசம் ஏற்பட்டது. எதுவோ ஒரு மகிழ்ச்சிப் பிரவாகம் எழுந்து அவள் இதயம் எங்கும் வியாபித்து, வார்த்தைகள் தடைப்பட்டன. அதனால் பதில் கூறச் சிறிது நேரம் தடுமாறிய மதி, பின் "பல்கலைக்கழகத்தில் உரையாற்றும்

அளவுக்கு எனக்குக் கல்வித் தகுதிகள் இல்லையே. நான் வெறும் பிஎஸ்ஸி பட்டதாரி மட்டும்தான்" என்றாள். கலகலவெனச் சிரித்தவர் "உங்கள் கல்வித் தகுதியை யார் கேட்டார்கள். இந்தத் துறையில் உங்களின் பேராற்றல்தான் நன்கு தெரிகிறதே. சிலசமயம் உங்களின் மென் பொருட்களுக்கு எந்தக் கணிதக் கோட்பாட்டைப் பயன்படுத்தித் தீர்வு கண்டீர்கள் என்று நான் கூடக் குழம்பியிருக்கிறேன்" என்றான்.

"அப்படியானால் எப்பொழுது எனச் சொல்லுங்கள் வருகிறேன்" எனக் கூறித் தனது விஸிட்டிங் கார்ட்டை அவரிடம் கொடுத்தாள். மதிக்கு அவரை மீண்டும் மீண்டும் பார்க்க வேண்டும் போலிருந்தது.

அப்பொழுது, மதியை நோக்கி ஒருவர் வந்தார்; அது தன்னுடன் படித்த காணுமிடமெல்லாம் எதையாவது சொல்லித் தன்னை நோகடித்த வருண் என்பது தெரிந்திருந்தும், மதி காட்டிக் கொள்ளாமல் நின்றாள். அவன் அவளது திறமையைப் பாராட்டினான். வஷிஷ்டர் வாயால் பிரம்மரிஷிப் பட்டமா? என நினைத்துத் தனக்குள் சிரித்த மதி அவன் பாராட்டுக்குத் தன் நன்றியைத் தெரிவித்தாள்.

வருண், அவள் எங்கே படித்தாள் என்று கேட்டபோது ஒரு குறு முறுவலுடன் தன் திருச்சிக் காலேஜ்ன் பெயரைக் கூறினாள். உடனே அவன்; "அங்கு தான் நானும் படித்தேன் அப்படியானால் நீ நம்ம மதி, எங்கள் காக்கைச் சிறகினிலே மதி" எனப் பெருமையாகக் கூறினான். பின், நினைவு பெற்றவனாக "மன்னித்து விடு மதி பழக்க தோஷம்" என்றான்.

இருவரும் சேர்ந்து சிரித்தனர். காக்கைச் சிறகினிலே இப்பொழுது ஒரு செல்லப் பெயர் போலாகிவிட்டது. அன்று அதைக் கேட்டபோது இருந்த மனத் துயர் இன்று இல்லை என மதி நினைத்தாள்.

வியாபாரம் விருத்தியடைந்ததால் ஜோ அடிக்கடி இந்தியாவுக்குப் போனான். அங்கே ஸ்வாமியைத் தரிசிப்பதுடன் கம்ப்யூட்டர் உதிரிப் பாகங்களும் மலிந்த விலையில் வாங்கி வருவான். ஒவ்வொரு தடவையும் நீயும் வா மதி எனக் கெஞ்சிக் கேட்பான். ஆனால் மதி மறுத்து விடுவாள். ஜோ போகும்போது இனிப்பு வகைகள், உடைகள், மின் உபகரணங்கள் போன்றன அங்கே தன் நண்பர்களுக்கெனக் கொண்டு சென்று மதியின் குடும்பத்தாருக்குக் கொடுப்பான். மதி, "நீ கொண்டு செல்லும் பொருட்களைப் பார்த்தால் அங்கு ஒரு குடும்பத்திற்குப் போல்

தெரிகிறது அப்படி இரகசியமாக ஏதாவது இருந்தால் சொல்லிவிடு ஜோ" எனக் கேலி செய்வாள்.

வரும்போது மதிக்குப் பட்டுப்புடவை, சங்கீத ஒலி நாடாக்கள், மதியின் அம்மாவிடமிருந்து சிற்றுண்டிவகைகள் போன்றன கொண்டு வருவான். ஒருமுறை அவன் கொண்டு வந்த சிற்றுண்டியைச் சுவைத்த மதி, "இதை எங்கே வாங்கினாய் ஜோ எங்கம்மா செய்த மாதிரியே இருக்கு" என்றாள்.

அதிர்ந்து அவளைப் பார்த்தவன், ஒருவாறு சமாளித்து, "உனக்கு அம்மா ஞாபகம் வந்தால் நான் என்ன செய்ய மதி" எனக் கூறிவிட்டுப் போய்விட்டான்.

அடுத்த தடவை சித்ராங்கியின் உதவியுடன் ஒரு வீணையைக் கொண்டு வந்து "இதில் உனக்கு ஓரளவாவது தெரியுமென்று நினைக் கிறேன்" என்றான்.

"ஓரளவில்லை ஜோ நன்றாகவே தெரியும். எங்கம்மாதான் என் குரு. வீணை வாங்க உனக்கெப்படித் தோன்றியது ஜோ மிகவும் நன்றி" என்றாள்.

மதி அடிக்கடி 'வாதாபி கணபதி' என்ற ஹம்சத்வனி ராகக் கீர்த்தனையை வீணையில் மீட்டுவதைக் கேட்ட ஜோ "ஏன் மதி உனக்கு இது மட்டும்தான் தெரியுமா? பெரிதாக எல்லாம் தெரியுமென்றாயே" எனக் கேலி செய்தான்.

"படவா ராஸ்கல் என்ன நினைத்தாய்" எனச் செல்லமாகக் கோபித் தவள், "அது அம்மா விநாயகருக்கென்று முதன் முதல் பழக்கியது. அதுதான் அம்மா நினைவு வரும்போது அதை வீணையில் மீட்டு கின்றேன், அம்மா பக்கத்தில் இருந்து கேட்பது போல என் பிழைகளைத் திருத்துவது போல ஓர் உணர்வு" என்றாள்.

அவளை இரக்கத்துடன் பார்த்தவன் "நீ ஏன் திருச்சிக்குப் போய் அம்மாவைப் பார்க்கக் கூடாது மதி, ஏன் இந்தத் தயக்கம்" எனக் கேட்டான்.

"அது மட்டும் வேண்டாம் ஜோ அது உனக்குப் புரியாது" எனக் குரல் கரகரக்கக் கூறினாள். அவள் கண்களில் நீர் பூத்தது. எழுந்து போய் விட்டாள். அவளைக் கருணையுடன் பார்த்த ஜோ இதற்கென்ன வழி என யோசித்தான்.

எம்.ஜே கம்ப்யூட்டர்ஸுக்கு இப்பொழுது உலகளாவிய பெயரும், புகழும் இருந்தது. சிட்னி நகரின் மத்தியில் உள்ள ஒரு பல மாடிக் கட்டிடத்தின் சில அடுக்குகளை அது தனக்கென ஆக்கிரமித்துக் கம்பீரமாக இயங்கிக் கொண்டிருந்தது. அத்துடன் மதியின் திறமையும தன்னம்பிக்கையும் தஞ்சைப் பெரிய கோவில் கோபுரம் போல் உயர்ந்து நின்றன. வியாபாரம் பல பிரிவுகளாக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் தேர்ச்சி பெற்றோர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

இருந்தாலும் வாடிக்கையாளரின் திருப்தி குறித்து மதி ஒவ்வொன் றையும் தன்னால் முடிந்தவரை மேற்பார்வை செய்வாள். அவளிடம் மௌரியப் பேரரசின் உன்னதங்களை வெளிக்கொணர்ந்த சந்திரகுப்த அரசனின் சாணக்கியமும், முன்னியது முடிக்கும் ஆற்றலும் இருந்தது. அதனால் எம்ஜே கம்ப்யூட்டர்ஸ் பொற்காலத்தை எட்டிப் பிடித்திருந்தது. எல்லாவற்றையும் கன கச்சிதமாக ஒழுங்கு செய்து எல்லோருக்கும் குறித்த நேரத்தில் அவர்கள் கேட்டதைக் கிடைக்கச் செய்யும் மதியின் நிர்வாக நுணுக்கத்தினைப் பார்த்து ஜோ வியப்பில் அவ்வப்போது மூக்கில் விரலை வைப்பான். மதிக்குச் சித்துவை நினைத்துக் கண் கலங்கும். நீ ஒரு தீர்க்கதரிசி சித்து என நினைத்துக் கொள்வாள். அந்த நிறுவனமே அவளது குடும்பம், குழந்தை போலாகியது. நாளும், பொழுதும் அதன் வளர்ச்சி கண்டு புளகித்தாள். அவள் உள்ளம் ஜோவுக்கு நன்றி சொல்வதை ஒரு கணமேனும் நிறுத்தவில்லை.

மதி, ராகவனின் அழைப்பை ஏற்று அடிக்கடி பல்கலைக்கழகம் சென்று மாணவர்களுக்கு உரை நிகழ்த்தினாள். ஒவ்வொரு தடவையும் அவர்கள் பல வினாக்களை வைத்துக்கொண்டு அவளை ஆவலுடன் எதிர்பார்த் திருப்பதையும், அவள் விளக்கியதும் அவர்கள் முகத்தில் பிரதிபலிக்கும் பரவச உணர்வையும் கண்டு மதி அகத்தழகுதான் அவசியமேயன்றிப் புறத்தழகு ஒரு பொருட்டல்ல எனப் புரிந்து புளகித்தாள். மதி ராகவன் நட்பும் வளர்ந்தது. அவனை அடிக்கடி பார்க்கவும் பேசவும் அவள் மனம் விழைந்தது. இதை ஜோ கவனித்துத் தனக்குள் ஒரு திட்டம் தீட்டினான்.

அன்று சனிக்கிழமை, மதி வீட்டிலிருந்து மின் அஞ்சல்களைப் பார்வை யிட்டுக் கொண்டிருந்தாள். அந்தப் பக்கமாக வந்த ஜோவிடம் "என்ன ஜோ செய்கிறாய், கனடாவுக்கு விலைப் பட்டியல் அனுப்பினாயா? யப்பானுக்கு ஆர்டர்கள் போய்விட்டனவா" எனக் கேட்டாள்.

அவளை மௌனமாகப் பார்த்த ஜோ, "என்ன மதி சனிக்கிழமையும் வேலையா எனக்கு அதற்கெல்லாம் இப்பொழுது மூட் இல்லை" என்றான்.

"என்னது வேலை செய்ய உனக்கு மூட் இல்லையா ஜோ? அப்படி யானால் உன் மூட் எங்கே" எனக் கேலி செய்தாள்.

"எனக்குக் கல்யாண மூட் வந்திருக்கிறது" என்றான்.

"கல்யாண மூட் ஆ? அது அவசியம் வர வேண்டியதுதான். ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது. பெண் யார் ஜோ? எனக்கு எதுவும் தெரியாதே இரகசியமாகவே வைத்திருந்துவிட்டாய். திருமணத் திகதியை மட்டும் சொல்லு. மிகுதியை நான் பார்த்துக் கொள்கின்றேன்" என மிகவும் ஆரவாரமாகக் கூறினாள்.

அவளருகே சென்ற ஜோ அவளை ஒரு குறும்புப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டு மௌனமாக நின்றான்.

"என்ன ஜோ" என மதி செல்லமாகக் கேட்டாள்.

அவளைப் பார்த்துப் புன்னகைத்தவன் "விவாகம் எனக்கில்லை மதி" என்றான்.

"அப்படியானால் யார் திருமணம் ஜோ" எனக் கேட்டாள்.

"மதி..." எனச் சிறிது நேரம் மௌனமாக நின்றவன் "உனக்குத்தான் கல்யாணம் மதி. நீ மணம் புரிய வேண்டும்" என்றான்.

உடனே, மதியின் முகம் இறுகியது, உடல் எந்த அசைவும் அற்று, ஸ்தம்பித்துப் போய் இருந்தாள். ஜோ "மதி" என அவள் கையை மெதுவாகப் பற்றினான். கைகள் நடுங்கின, கண்கள் சிவந்தன, எழுந்து போய் ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள்.

சிறிது நேரம் சும்மா நின்ற ஜோ "என்ன மதி" என்றான்.

திரும்பி அவனைப் பார்த்தாள், அவள் கண்களில் முத்துக்கள் பளபளத்தன. அவற்றைக் கன்னத்தில் இறங்கவிடாமல் இதழ்களைக் கடித்துத் தடுத்தவள், வேதனையுடன் ஜோவைப் பார்த்துக் "கல்யாண மென்றால் எனக்கு அலேர்ஜிக் என்று உனக்குத் தெரியுமல்லவா ஜோ? தயவு செய்து இனி என்றும் இந்தப் பேச்சை எடுக்காதே" எனக் கண்டிப் பாகக் கூறினாள். அவள் கட்டுப்பாட்டையும் மீறி கண்ணீர் முத்துக்கள் அவள் கன்னங்களில் மாலைகளாயின.

ஜோ அவள் கைகளைப் பற்றி அழைத்துக் கொண்டு போய் அருகிலிருந்த சோபாவில் இருத்திப் பக்கத்தில் இருந்து அவள் கைகளைத் தன் கைக்குள் வைத்து ஆசுவாசப்படுத்தினான்.

அவள் வேதனையை முகம் படம் பிடித்தாற் போல் காட்டியது. ஜோவின் வார்த்தைகள் மதியின் மனத்துள் ஒரு கல் எறிந்தாற் போலானது. நீர் வட்டங்கள் உருவாகித் தண்ணீருக்குள்ளேயே மறைவது போல, அவள் நெஞ்சின் அலைகளும் உள்ளுக்குள்ளேயே கொந்தளித்துக் கொண்டிருந்தன. மதி அதரங்களை அழுத்தி நினைவுகளுக்குக் கடிவாளமிட முனைந்து தோற்று வெய்துயிர்த்தாள்.

அவள் மனத்துள் நீறு பூத்த நெருப்பாக இருந்த புண்ணைத் தொட்டு அவள் நெஞ்சில் ஒரு வலியை உண்டாக்கி விட்டேனே என ஜோ தன்னைத் தானே கடிந்து கொண்டான். இருப்பினும் இந்தத் தழும்பை ஆற்றுவதற்கு ஒரு வழி செய்ய வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டான்.

மதி ஒருவாறு தெளிவடைந்ததும், "என்றோ, யாரோ அறிவிலிகள் எதுவோ சொன்னதை நீ பெரிதுபடுத்தி, விவாகத்தையே வெறுக்கலாமா மதி? இன்று உனக்குள்ள பெருமைக்கும் புகழுக்கும் உன்னை உனக்காகவே திருமணம் செய்ய எத்தனை பேர் முன் வருவார்கள்" என மிகவும் கனிவாகக் கூறினான்.

"அப்படி யாரும் இல்லை ஜோ இருக்கவும் மாட்டார்கள். இந்தப் பேச்சை விட்டு விடு ஜோ ப்ளீஸ்" எனக் குரல் கம்மக் கெஞ்சினாள். "பின் உனக்கு ஏன் இந்த எண்ணம் தோன்றியது ஜோ? நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். இது எனக்குப் போதும்" என்றாள்.

சிறிது நேரம் எதுவுமே பேசாமல் இலக்கற்று எங்கோ பார்த்த ஜோ பின்னர் திரும்பி அவளைப் பார்த்து, "இல்லை மதி இது போதாது" என்றான் அவன் வார்த்தைகளில் சில சமயங்களில் வாடிக்கையாளர்களிடம் காட்டும் அந்த உறுதி தெரிந்தது.

திகைத்த மதி, விழிகள் துளிர்க்க என்னை விடமாட்டாயா என்பது போலப் பார்த்து "உனக்கு ஏன் இந்தப் பிடிவாதம் ஜோ? இத்தனை காலமாக இல்லாத எண்ணம் ஏன் இப்பொழுது வந்தது" எனக் கேட்டாள்.

'உன் தாயின் ஆசை உன்னைத் தாலியும் கழுத்துமாகப் பார்ப்பது தான் மதி' எனத் தனக்குள் நினைத்தவன் "நான் அண்மையில் ஒரு புத்தகம் படித்தேன் அதில் திருமணம் தான் ஒரு பெண்ணுக்குச்

சுமங்கலி என்ற புனிதத் தன்மையையும், இல்லத்தரசி என்ற மேலான அந்தஸ்தையும் அளிக்கிறது. திருமணத்தின் மூலம் தான் அவள் பிறப்பு நிறைவு பெறுகிறது என்றிருந்தது. உன் ஜன்மம் கடைத்தேற வேண்டும் மதி, அதற்கு நீ திருமணம் புரிந்து கொள்ள வேண்டும்" என்றான்.

"உன் அன்பும், பண்பும், நிர்வாகத் திறனும் நம் கம்பனியுடன் நின்று விடக் கூடாது. அது ஒரு குடும்பத்திலும் பரிமளிக்க வேண்டும். என் குடும்பம், என் குழந்தை என்று நீ பெருமைப்படவேண்டும். திருச்சியில் போய்த் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். உன் குடும்பத்தாரை மகிழ்வில் ஆழ்த்த வேண்டும். நீ இப்படியே தயங்கிக் கொண்டிருந்தால் வயதான உன் அம்மாவுக்கு ஏதாவது நடந்தால் அது இதைவிடப் பெரிய வேதனை யாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக அழகில்லையென்று அவமதிக்கப் பட்டேனே என்ற உன் மனத்தழும்பு ஆறவேண்டும். என்னை எனக்காக ஒருவர் ஏற்றுக் கொண்டார் என்ற நினைப்பே உனக்கு ஒரு பலத்தையும், தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் அது நீ மேலும் பல சாதனைகள் புரிவதற்கு வழி வகுக்கும்.

நான் திடீரென நினைக்கவில்லை மதி, பல நாட்களாகச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். எனக்குத் தெரியும் இது வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போல் உன் மனத்தை நோகடிக்குமென்று தயங்கினேன். ஆனால் ஊசி மருந்து வலிக்குமென்று கொடுக்காமல் விட்டால் நோய் தீருமா. அதனால்தான் இன்று இந்தப் பேச்சை எடுத்தேன்" என மிக நிதானமாக ஒவ்வொரு வார்த்தையாக அவள் மனத்தில் பதியுமாறு கூறினான்.

மதி கண்கள் பனிக்க அவனைப் பார்த்தாள். அவள் இதழ்கள் புன்னகையில் விரிந்தன. "எனக்காக இவ்வளவு சிந்தித்திருக்கிறாயே உனக்கு நான் என்ன செய்ய" என்றாள். அவள் குரல் தழதழத்தது, விழிப்புனல் உதிர்ந்தது.

அவள் கையைப் பற்றிய ஜோ "எனக்கு என்றும் அம்மாவாக இரு மதி. நீ வந்த பின் தான் நான் தாயன்பை உணர்ந்தேன்" எனக் குரல் கரகரக்கக் கூறியவன், "விவாகம் செய்து கொள் மதி பிளீஸ்" என மீண்டும் கெஞ்சினான்.

மதி மௌனித்தாள். பின் எதையோ சிந்திப்பவள் போல் யன்னலுக்கு வெளியே தெரிந்த சிட்னித் துறை முகப் பாலத்தைப் பார்த்தாள். வெகு

கம்பீரமாக உயர்ந்து நிற்கும் அப்பாலம் சிட்னி நகரின் ஓர் அடையாளச் சின்னம். ஆஸ்திரேலியரின் திறமைக்கு அது ஒரு சான்று என நினைத்தாள். பின் ஜோவிடம், “யாரும் என்னைத் திருமணம் செய்ய முன் வரவில்லையே என நான் வருந்துகின்றேன் என நீ நினைத்தால் அது தவறு ஜோ. ஏனென்றால் நான் என்றும் அந்த வாழ்வுக்கு ஆசைப்படவோ ஏங்கவோ இல்லை.நான் ஆசைப்பட்டதெல்லாம் இது தான் என் திறமையைப் பலரும் மதிக்க வேண்டும் என்பது. அது உன்னால் எனக்குக் கிடைத்துவிட்டது அதற்கு உனக்கு என் பல்லாயிரம் கோடி நன்றிகள்” என்றாள்.

ஆனால் ஜோ விடுவதாக இல்லை. “நான் உனக்குச் சொல்லத் தேவை யில்லை மதி. சிந்தித்துப் பார். உன்னை இந்தப் புகழ் பெருமை பணத்துடன் உன் அம்மா காண்பதா அல்லது கழுத்தில் ஒரு தாலியுடன் நான் ஒருவரின் மனைவி என்ற அந்தஸ்துடன் பார்ப்பதா அவருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்” எனக் கேட்டான். கடைசியாக அவன் திருச்சிக்குப் போனபோது மதியின் அம்மா, “அவளை என்று தாலியும் கழுத்துமாகப் பார்க்கிறேனோ அன்றுதான் எனக்கு நிம்மதி” என வருத்தத்துடன் கூறியதை நினைத்துக் கொண்டான்.

உதடுகள் மலரப் புன்னகைத்தவள் தனக்குள் நினைத்தாள், ‘என்ன தான் பணம் காசு பதவி இருந்தாலும் காலா காலத்தில் ஒரு கல்யாணம் செய்து கொள்ள வேணும்’ என்று அம்மா சொல்வது நினைவு வந்தது. ஜோவைக் கண்கள் மலரப் பார்த்தாள். அவள் இதழ்கள் புன்னகையில் மலர்ந்தன. அத்துடன் சதா வேலை வேலையென்று கம்ப்யூட்டருடன் இருக்கும்போது சில சமயங்களில் ஒரு தனிமையும் வெறுமையும் தோன்றுவதுண்டு. அச்சமயங்களில் அன்பாகப் பேசி மகிழ ஜோவைத் தவிர யாரும் இல்லையே சித்துவாவது அருகில் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று அவள் மனதும் ஏங்கும்.

மதி நினைத்தாள், இன்று அவளுக்குக் கிடைக்கும் கணவன் என்பவன் பொருளாதார ரீதியில் அவளைக் காப்பாற்றுபவனாக இருக்கத் தேவையில்லை. ஆனால் ஒரு நட்பு அன்புப் பரிமாற்றம், ஆதரவு தேவைப்படும் போது உரிமையுடன் சாய்வதற்கு ஒரு தோள், வாழ்வின் நல்லது கெட்டதுகளைப் பகிர்ந்து கொள்ள ஒரு தோழமையான இதயம் கிடைத்தால் நல்லது. அப்படிக் கிடைக்கும் தோழமையான அந்த அன்பும் நட்பும் அவள் வளர்ச்சி கண்டு பொறாமைப்படாததாக, ஓர் அழகான

மலர்ச்செடிக்கு அன்புத் தண்ணீர் ஊற்றிக் கவலையுடன் வளர்க்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

அப்படி யாரும் கிடைப்பார்களா என நினைத்துப் பார்த்தாள் ராகவனின் முகம் வந்து அவள் இதயமெங்கும் வியாபித்துக் கண்கள் விகசித்தன. ஒவ்வொரு தடவையும் அவளது புதிய மென் பொருட்களை யும் அவற்றை உருவாக்க அவள் கையாண்ட யுக்திகளையும் அவன் தன்னை மறந்து வானளாவப் புகழும்போது மதி ஒரு வகைச் சங்கோசத்துடன் அதை ஏற்றிருக்கிறாள்.

இதையெல்லாம் கவனித்த ஜோ என்ன மதி என அவளை உலுக் கினான்.

"எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறாயே ஜோ. மிகவும் மகிழ்ச்சி, எனக்கு ஒரு விவாகம் செய்ய வேண்டுமென்று நீ விழைந்தால் என்னை இந்த நிலைக்கு உயர்த்திய உன் விருப்புக்கும் நான் மதிப்பளிக்க வேண்டும். எனவே என்னை எனக்காகவே விரும்பும், நமது புனிதமான இந்த நட்பின் மகத்துவத்தை நன்கு புரிந்த, அதற்கு என்றுமே களங்கம் கற்பிக்காத, என் அக அழகை மட்டுமே ஆராதிக்கும் ஒருவர் இருந்தால் கொண்டு வந்து காட்டு. அதன் பின் மிகுதியைச் சிந்திப்போம்" என்றாள்.

ஜோ ஆனந்தக் கடலில் மூழ்கினான். "ரொம்ப நன்றி மதி" என அவள் கைகளைப் பற்றிக் குலுக்கினான். நீ சொன்ன எல்லாத் தகுதிகளுடனும் ஒருவரை நாளைக்கே காட்டுகிறேன்" என்றான். "நாளைக்கேவா! யாரை யாவது மனத்தில் வைத்திருக்கின்றாயா" எனக் கேட்டாள்.

"அது சஸ்பென்ஸ். ஆனால் அவரைப் பார்த்து நீ ஆச்சரியப்படப் போகிறாய்" எனக் கூறிவிட்டுப் போய் விட்டான்.

மதி யாராக இருக்கும் என நினைத்தாள். அவள் மனத்திற்குள் ராகவனின் முகம் எட்டிப் பார்த்தது. நினைவுகளைக் கலைத்து வேலை யில் ஈடுபட முனைந்து கொண்டிருந்தாள்.

மறு நாள் காலையிலிருந்தே ஜோ, "மதி இன்று மாலையில் ஒரு வேலையும் வைத்திருக்காதே உனக்கு முக்கியான ஒரு அப்பொய்ன்ட் மென்ட் இருக்கு" என்று சொல்லிக் கொண்டிருந்தான். "அப்படி எதுவும் எனக்கு நினைவில்லையே ஜோ. என்னது? யாருடன்?" எனக் கேட்டாள். "போனால் தெரிகிறது மதி, இது முக்கியமான ஓர் ஒப்பந்தம் கவனமாகக் கையாள வேண்டும்" எனப் புதிர் போட்டான்.

“என்னவோ போ” என மதி விட்டுவிட்டாள். ஆனால் ஜோ மீண்டும் மாலையில் “மதி, ஒரு நல்ல பட்டுப் புடவையில் வா, ஹோட்டல் வாசலில் நான் இறக்கி விடுகிறேன். நீ மட்டும் போய்ப் பேசி முடித்துக் கொண்டு வா” என்றான்.

“யாருடன் என்ன பேசுவது என்று எதுவுமே சொல்லாமல் இது என்ன விளையாட்டு ஜோ” எனக் கடிந்து கொண்டாள். பின் “நான் என்ன கொண்டு போக” என்றாள். “ஒன்றுமே தேவையில்லை, உன் இதயத்தை மட்டும் கொண்டு போ. வரும்போது அதை விட்டுவிட்டு வேறொன்றை எடுத்துக் கொண்டு வா” என்றான்.

புருவங்களைச் சுருக்கி அவனை ஒரு மாதிரியாகப் பார்த்து நகைத் தவள், “ஜோ நீ நன்றாக இருக்கிறாயா அல்லது மன நோய் மருத்துவர் யாரையாவது உடனே பார்க்க வேண்டுமா”? எனக் கேட்டாள்.

“மன நோய் மருத்துவர் உண்மையில் யாருக்குத் தேவைப்படுகிறார் என்று வெகு விரைவில் தெரியும், இப்போ வா” எனக் கொண்டு போய் நகரின் அந்தப் பிரபல ஐந்து நட்சத்திர ஹோட்டல் வாசலில் இறக்கி விட்டு “அதோ வாசலில் ஆவலுடன் உன்னை எதிர்பார்த்து நிற்கிறாரே அவருடன் உன் வாழ்க்கை ஒப்பந்தத்தைச் சரியாகப் பேசி முடிவெடுத்து விட்டு வா மதி, இதில் உனக்கும் சம்மதமென்பது எனக்குத் தெரியும்”; என்று சொன்னான்.

அவன் காட்டிய திசையில் பார்த்த மதி, ராகவன் நிற்பதைக் கண்டாள். அவனைப் பார்த்ததும் மதியின் மனச் சிறகுகள் விரிந்தன. இதமான காற்று மேனியைத் தழுவ இனம் புரியாத ஒரு குதூகல உணர்வு அவள் இதயமெங்கும் ஆக்கிரமித்துக் கொள்ள ஜோவின் புதிரெல்லாம் புரிந்த நிலையில் அவனை நோக்கி நடந்தாள்.

ராகவன் அவளருகே வந்து “வா மதி, நீ புடவையில் மிகவும் அழகாக இருக்கிறாய்” என்றான்.

மதியின் உள்ளமெங்கும் ஒரு வினோதமான அபூர்வமான இன்ப உணர்ச்சி பீரிட்டு அவளை நிலை தடுமாறச் செய்தது. அவள் விழிகள் பளபளத்தன.

இருக்கையில் போய் அமர்ந்த பின்னரும் மதியால் எதுவுமே பேச முடியவில்லை. அவள் நெஞ்சக் குழியை எதுவோ அடைத்து வார்த்தைகள் தடைப்பட்டன. எத்தனையோ வியாபார ஒப்பந்தங்களைப்

பல சர்வதேச நிறுவனங்களுடன் பேசி வெற்றி பெற்றவளுக்கு இன்று என்ன பேசுவதென்று தெரியவில்லை. கண்கள் வேறு நிறைந்து கொண் டிருந்தன. என்றுமில்லாத ஒரு நாணம் அவள் இதயத்தின் அடித் தளத்தி லிருந்து கிளர்ந்தெழுந்து அவளை ஆட்கொண்டது. மதி அங்கே ஓர் மௌனப் பதுமையாக இருந்தாள்.

அவளைக் குறும்பாகப் பார்த்த ராகவன் அதரங்களில் குறும்பு மின்ன "என்னால் நம்ப முடியவில்லையே" என்றான்.

மெதுவாகத் தலையை நிமிர்த்தி "எதை" என வினவினாள்.

"எல்லோரின் வினாக்களுக்கும் ஒரு நொடியில் பதிலளிக்கும் அந்தக் கம்ப்யூட்டர் மூளையா என் முன்னால் இருப்பது" என்றான்.

குனிந்த தலை நிமிராமலேயே "இல்லை ராகவ், இப்பொழுது உங்கள் முன்னால் இருப்பது ஒரு சராசரித் தமிழ்ப் பெண்" என்றாள்.

அதைக் கேட்ட ராகவ் உள்ளமெங்கும் உவகை பொங்க அவள் கை களை மெதுவாகப் பற்றிக் கொண்டான். "ஜோ எல்லாம் சொல்லியிருப் பார் என்று நினைக்கிறேன் மதி, என்னைத் என்னைத் திருமணம் செய்து கொள்வாயா?" என வார்த்தைகளில் அன்பைக் குழைத்துக் கேட்டான்.

அச்சொற்கள் வரண்டு காய்ந்திருந்த பூமிக்கு ஒரு வான் மழை போல, உணர்ச்சியற்ற வாழ்வுக்கு ஒரு ஜீவன் போல அவள் இதயமெங்கும் ஓர் இன்ப ஊற்றாகப் பாய்ந்து அவளைத் திக்கு முக்காட வைத்தது.

ஒருவாறு தன்னிலைக்கு வந்த மதி மெதுவாகத் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். அவள் கண்கள் பூத்தன. நெஞ்சம் நிறைந்ததால் பேச்சுத் தடைப்பட்டது.

ராகவன் அவள் கேட்பதற்கு முன்னரே "உன் உள்ளம் அன்பும், அறிவும், பண்பும், கருணையும் நிறைந்த ஓர் அழகான பூஞ்சோலை என்பது எனக்குத் தெரியும் மதி. அதுதான் எனக்கு வேண்டும். வேறு எதுவுமே எனக்கு ஒரு பொருட்டல்ல. சிறு வயதிலேயெ பெற்றவர்களின் அன்பை இழந்த என் மேல் அன்பு செலுத்த ஓர் உன்னதமான இதயம் வேண்டும் மதி. அது நீயாக இருந்தால் நான் மிகவும் அதிர்ஷ்டசாலி யாவேன்" எனக் கூறினான்.

அவள் இதயமெங்கும் பொங்கிப் பிரவகித்தோடும் காட்டாற்று வெள்ளம் போல மகிழ்ச்சி பிரவகித்து ஓடியது. பல வருடங்களின் பின் மதி அத்தகைய ஒரு இன்ப சாகரத்தில் மூழ்கித் திளைத்தாள். மதியின்

கண்கள் மெள்ள விரிந்தன. அந்த விரிவு ஒரு சந்தோஷச் சிரிப்பின் முகை அவிழ்ந்தது போலாகி மேலும் மலர்ந்து அவள் முகமெங்கும் பரந்து விகசித்தது.

அதையே அவளின் சம்மதமாக ஏற்ற ராகவ் அவள் கையைப் பற்றி மெதுவாகத் தன் இதழ்களைப் பதித்தான். மதியின் கண்களிலிருந்து அவன் கைகளில் தெறித்த சில துளி ஆனந்தபஷ்பங்கள் அதை ஆமோதித்தன. அங்கே மௌனம் தான் பரிபாஷையானது. வார்த்தைகள் தேவையற்று இரு உயர்ந்த உள்ளங்களின் அன்பு சங்கமமாயிற்று.

மதியின் சம்மதம் தெரிந்த ஜோ மிக விமரிசையாகத் திருமண ஏற்பாடுகளில் இறங்கினான். மதி பத்து வருடங்களின் பின் முதல் தடவையாகத் தன்னருமைத் தோழியை மின் அஞ்சல் மூலம் தொடர்பு கொண்டாள்.

அவள் இதய வீணை **'காக்கைச் சிறகினிலே நந்தலாலா என்றும் உந்தன் கரிய நிறம் தோன்றுதடா நந்தலாலா"** என்ற பாரதியார் பாடலைச் சுநாதமாக இசைத்து மகிழ்ந்து கொண்டிருந்தது.

• • •

**கலப்பை - சித்திரை-ஆடி 2001**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
Jaffna Central College Library
நூலகம்

# நீயெனதின்னுயிர் கண்ணம்மா

மேடையில் மயூரி மயில் நடனத்தில் மயிலாகவே மாறி வெகு ஒயிலாக ஆடிக் கொண்டிருந்தாள். அந்தப் பெரிய அரங்கிலுள்ள பார்வை யாளர்கள் அனைவருமே கிறங்கிப்போய் மேடையில் வைத்த கண் வைத்தபடி அசையாமல் இருந்தனர். நாட்டியத்தில் ஒரு சிறிதும் ஆர்வமே இல்லாமல் வெறுமனே அழைப்பை மதித்து வந்தவர்கள் கூட எங்கே தம் கண் அசைந்தால் மயூரியின் அரிய சாகசத்தைத் தவற விட்டு விடு வோமோ என்ற பயத்தில் அசையாமல் இருந்தனர். மயூரி தன் ஆட்டத் தால் அனைவரையும் கட்டிப் போட்டிருந்தாள்.

அவளது குருவும், சென்னையிலிருந்து வந்திருந்த பிரதம விருந்தினர் புகழ் மிகு நாட்டிய தாரகை நந்தினியும் மெய்மறந்திருந்தனர். அவள் தந்தை டாக்டர் ரகுநந்தன் கண் கலங்க அங்கே மௌனமாக இருந்தார். அவர் நினைவுமட்டும் மேடையிலோ மகளிடமோ இல்லை. மகளுக்கு மயூரி எனப் பெயரிட்டு அவளைச் சிறந்த நடனமணியாக்க வேண்டு மெனக் கனவுகள் பல கண்ட அவர் மனைவி கலாவைத் தேடிக் கொண் டிருந்தது. 'கலா நீ எங்கேம்மா இருக்கிறாய்? உன் ஆசையை நான் நிறைவேற்றிவிட்டேன் எங்கிருந்தாலும் உன் மகளை ஆசீர்வதித்து அவள் மேன்மேலும் சிறப்படைய வாழ்த்து' என மனதார இறைஞ்சினார்.

டாக்டர் ரகுநந்தனும் மருத்துவத் தாதி கலைவாணியும் ஓர் ஆதர்ச தம்பதிகள் எனலாம். பாலும் பழமும் சிவாஜி - சரோஜாதேவி என அனைவரும் அவர்களைக் கேலி செய்வர். அதனால் தானோ என்னவோ கண் பட்டது போல டாக்டரும் இலங்கையில் நடந்த இனக்கலவரத்தில் தன் மனைவியைச் சுமார் பதினெட்டு வருடங்களுக்கு முன்னர் தொலைத்து விட்டு இன்றும் தேடிக் கொண்டிருக்கிறார்.

சம்பவம் நடந்த அந்த இரவு வேலைக்குப் போன கலா திரும்பவே இல்லை. கைக்குழந்தையை வைத்துக் கொண்டு வீட்டிலிருந்த டாக்டர் காலையில் நிலவரமறிந்து அதிர்ந்து மனைவியை எங்கு தேடியும் கிடைக்கவில்லை. இருந்தாலும் அவர் சிறிதும் பயப்படவில்லை. அவருக்கு எப்பொழுதும் மனைவியின் துணிவிலும் திறமையிலும் ஓர் அசையாத நம்பிக்கை இருந்தது.

ரகுவுக்கு இப்பொழுதும் அதை நினைத்தால் தன் மேலேயே கோபம் வரும். அப்படி என்ன மனைவியின் துணிச்சலில் ஒரு பெருமை. அவர் மருத்துவமனையிலிருந்து வரும்போது வெளியே ஓரளவு சலசலப்பாக இருந்தபோதும் கலா எதையும் சமாளிப்பாள் என்ற நம்பிக்கையில் அவளை இரவு வேலைக்குப் போகவிட்டார்.

ஆனால், அவர் தடுத்திருந்தால்தான் கலா நின்றிருப்பாளா? நிச்சயமாக இல்லை. அதுவும் இரவு வேலை என்றால் ஏமாற்றக்கூடாது கட்டாயம் போக வேணடும் என்பது அவளது கொள்கை. அப்படி இருக்கவும் 'வெளியே ஒரு மாதிரி இருக்குக் கலா கவனம்' என்று சொன்னார். அதற்கு என்னை யார் என்ன செய்ய முடியும் என்ற ஓர் ஏளனச் சிரிப்பை அள்ளி வீசிவிட்டுப் போனவள் தானே. அதுதானே அவர் அவளைக் கடைசியாகப் பார்த்தது.

டாக்டர் காலையில் எழுந்து பார்த்த போது வீதி எங்கும் வெறிச்சோடி இருந்தது. நல்ல காலம் அவர் வீட்டுக்கு எதுவும் நடக்கவில்லை. இருந்தாலும் பக்கத்திலிருந்த அவரது சிங்கள டாக்டர் நண்பர் "ரகு இங்கே இருக்காதே. நிலைமை சரியில்லை எந்த நேரம் என்ன நடக்குமோ தெரியாது" என்றார். இலங்கை வானொலி 'இருபத்தி நான்கு மணி நேரம் ஊரடங்குச் சட்டம் வெளியே தலை தெரிந்தால் விசாரணையின்றிச் சுடப்படுவர்' என்று அறிவித்தது.

கலா எப்படியாவது ஆஸ்பத்திரி வாகனத்திலாவது வந்துவிடுவாள். குழந்தையை விட்டுவிட்டு இருக்க மாட்டாள் என நம்பிக்கையுடன் இரண்டு நாட்கள் காத்திருந்தார். கலா வரவேயில்லை. அப்பொழுதும் வரமுடியாமல் போயிருக்கும் ஆஸ்பத்திரியில் இருப்பாள் என்றுதான் நினைத்தார்.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதும் எதையுமே சிந்திக்காமல் மருத்துவ மனைக்கு ஓடினார். அங்கேதான் அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அன்று இரவு கலா வேலைக்கு வரவே இல்லை என்றனர்.

அப்படியானால் அன்று இரவு கலாவுக்கு எதுவோ நடந்துவிட்டதா! என டாக்டர் முதல் தடவையாகப் பயந்தார்.

டாக்டர் எங்கெல்லாமோ தேடினார். எத்தனை அகதி முகாம்கள் ஆஸ்பத்திரிகள் என்று எல்லா இடமும் 'நீ எங்கே எனதின்னுயிரே' என அழுதழுது தேடியும் பலன் கிடைக்கவில்லை. முடிவில் மனசைக் கல்லாக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிகளின் சவக்கிடங்குகளிலிருந்த பிணங்களையும் ஒவ்வொன்றாகப் பார்த்ததுதான் மிச்சம். அங்கும் கலா கிடைக்கவில்லை. அப்படியானால் 'கலா நீ எங்கே இருக்கிறாய். எந்த நேரமும் எந்த நிலையிலும் உன்னை நான் போற்றுவேன் என்பது உனக்குத் தெரியாதா' என்று ஏங்கி அழுததுதான் மிச்சம். கலா வரவேயில்லை.

மகளைப் பிரிந்த கலாவின் பெற்றோர் அந்த வேதனையில் மருமகன் மேல் என்னதான் அன்பும் மதிப்பும் இருந்தாலும் மனைவியைப் பாதுகாக்கத் தெரியாத ஒரு கணவன், தான் மட்டும் வீட்டிலிருந்து கொண்டு இரவில் அவளை வேலைக்கு அனுப்பித் தொலைத்துவிட்டு வந்து நிற்கிறார் எனக் கோபித்தனர்.

எதையும் தாங்க முடியவில்லை. கலாவுடன் தன்னில் ஒரு பகுதியே போய் விட்டதாக மிகவும் பலவீனமாக உணர்ந்தார். இப்படியே போனால் ஐயோ கலா கண்ணுக்குள் வைத்துக் காத்த குழந்தை அனாதையாகி விடுமே என நினைத்தவர் எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டுத் தமது ஒரே செல்வமான குழந்தையை மட்டும் எடுத்துக்கொண்டு ஆஸ்திரேலியா சென்றார். அந்தக் குழந்தையைக் கலா என்னவெல்லாம் ஆக்கிப் பார்க்க ஆசைப்பட்டாளோ, அப்படியெல்லாம் ஆக்க வேண்டுமென்பது தான் அவரது வாழ்வின் நோக்காக இலட்சியமாக இருந்தது. அதன் முதல் கட்டம் தான் இந்த நடன அரங்கேற்றம்.

மயூரிக்கு அன்னை இல்லாத ஏக்கம் தெரியக்கூடாது என்பதில் ரகு மிகவும் கவனமாக இருந்தார். அவர் அவளைக் கண்ணுக்குள் வைத்துக் காப்பாற்றினார். என்றாவது கலா திரும்பி வந்து குழந்தையை நன்றாக வளர்த்திருக்கிறீர்கள் ரகு என்று சொல்வாள் என எதிர்பார்த்தார். அதற்காகவே அவர் வாழ்ந்தார்.

மயூரிக்கு அவளது ஆரம்பப் பாடசாலையில் ஓர் அரிய நட்புக் கிடைத்தது. அங்கே சம்பளம் பெறாத உதவியாளராகப் பணிபுரிந்த வாணி ஆன்ட்டியை அவளுக்குப் மிகவும் பிடித்துக் கொண்டது.

இருவருக்குமிடையே ஒரு பாச வலை பின்னப்பட்டு ஒருவரில் மற்றவர் உயிராக இருந்தனர்.

வாணி, மயூரியின் தாயானாள். ஒரு தாய் மகளுக்குக் காட்டவேண்டிய அன்பையும் பாசத்தையும் அள்ளி அள்ளிக் கொடுத்தாள். அன்னையிடம் கற்க வேண்டியவைகளை மயூரி வாணி மூலமாகத் தெரிந்து கொண்டாள். மயூரி நடனம் பயில்கின்றாள் என அறிந்து வாணி மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தாள். அவளும் சென்னை கலாஷேத்திராவில் நடனம் பயின்று பட்டம் பெற்றவள் என்பதால் மயூரிக்குப் பல விதத்திலும் உதவ முடிந்தது.

மயூரி 'நான் உங்களிடமே கற்கின்றேன்' என்றதற்கு 'அதற்கெல்லாம் எனக்குத் தகுதி இல்லம்மா. அதுவுமில்லாமல் நல்ல அனுபவமுள்ள ஆசிரியரிடம் பயில்வதுதான் நல்லது' எனக் கூறினாள்.

வாணி, மயூரி நட்பு ஆரம்பப் பாடசாலையுடன் நின்றுவிடவில்லை. வாரத்தில் ஒன்று இரண்டு நாட்கள் அவர்கள் சந்திப்பு மயூரியின் உயர் நிலைப் பாடசாலை வாசலிலோ நூல் நிலையத்திலோ தொடர்ந்தது. மயூரிக்கு வாணியைப்பற்றி எதுவுமே தெரியாது. வாணி தன்னைப்பற்றி அவளிடம் எதுவுமே சொன்னதில்லை. மயூரியின் வளர்ச்சி கண்டு வாணி புளகித்தாள். 'எங்கம்மா தொலைந்து போய்விட்டார்' என்று மயூரி கண் கலங்கும் போதெல்லாம் 'எல்லாருக்கும் எல்லாம் கிடைக்குமென்றில் லைம்மா. உனக்கு நானிருக்கிறேன் என்னை உன் அம்மாவாக நினைத்துக் கொள்' என்பாள். மயூரிக்கு அது மிகப்பெரிய பற்றுக்கோடாக இருந்தது. காரணம் ரகு கலாவின் நினைவிலேயே ஒரு தவசி போல வாழ்ந்ததால் அவளுக்கு வெளியுலகத் தொடர்பு மிகவும் குறைவாக இருந்தது. வளரும் ஒரு பெண் தெரிந்துகொள்ள வேண்டியவற்றை அவ்வப்போது சமயமறிந்து வாணி அவளுக்குக் கூறும்போது மயூரி வாயைப் பிளந்துகொண்டு கேட்பாள். வாணிக்குப் பல தடவைகள் நன்றி சொல்வாள். 'நீங்கள் இல்லாவிட்டால் இதையெல்லாம் நான் எப்படி அறிவது ஆன்ட்டி' என வருந்துவாள். 'உனக்குத்தான் நான் இருக்கி றேனே மயூரி பிறகென்ன' என்பாள்.

மயூரி நடனத்தில் தேர்ந்துவிட்டாள். இனி அரங்கேற்றம் செய்யலாம் என்றதும், "என்ன இருந்தாலும் நீ ஒரு மூன்று மாதங்கள் சென்னையில் கலாஷேத்திராவில் போய்ப் பயில்வது நல்லது. அப்பொழுது தான் உன் நடனம் மெருகு பெறும். நாட்டியக்கலையின் பல நுட்பங்களையும் நெளிவு சுளிவுகளையும் நீ அங்கே அறியலாம். அது ஒரு கலாசாகரம்

மயூரி. அங்கே வெளிநாட்டு மாணவர்களுக்கென்று மாணவர் விடுதி வசதி இருக்கிறது அதன் சட்டதிட்டங்களுக்குப் பணிந்து நடந்தால் ஒன்றும் பயமில்லை" என்றாள். தந்தையிடம் சொன்னபோது அவருக்கு மயூரியின் வாணி ஆன்ட்டியிடம் அவளைப் பார்க்காமலேயே ஏற்பட்ட ஓர் இனம் தெரியாத மதிப்பால் "அவர்கள் சொன்னால் சரியாகத்தான் இருக்கும் உன் அம்மாகூட அங்கேதான் நடனம் பயின்றாள்'' என அவளைக் கூட்டிக்கொண்டு போய்க் கலாஷேத்திராவில் சேர்த்துவிட்டு வந்தார்.

அங்கே விடுதியில் மயூரி இலங்கையிலிருந்து வந்த வாசுகி என்ற பெண்ணைச் சந்தித்தாள். மயூரி ரகுநந்தன் ஆஸ்திரேலியாவில் இருந்து வந்தவள் என்றதும், "உங்கப்பா டாக்டர்தானே மயூரி. நீ என் சித்தி கலாவின் மகள். சித்தி இனக்கலவரத்தில் தொலைந்ததும் தாத்தாவும் பாட்டியும் சித்தப்பாவைக் கோபித்துக் கொண்டார்களாம். சித்தப்பா என்ன செய்வார் பாவம். சித்தி அவர் தடுத்தாலும் நின்றிருக்க மாட்டார் என்று அம்மா சொல்வார். சித்திக்கு நடனம் என்றால் உயிராம். அந்த நாளில் இங்கு வந்து பயின்றாவாம். சித்தியின் நினைவாகத்தான் அம்மா என்னை இதற்குள் இழுத்து விட்டார். உன் நிலையும் அது தான் என்று நினைக்கிறேன். உனக்கு மயூரி என்று சித்தி பெயர் வைத்ததே அதற்குத் தானாம்" என்றாள்.

மயூரிக்கு மட்டில்லா மகிழ்ச்சி தாய் இல்லாவிட்டாலும் தாய் வழி உறவொன்று கிடைத்துவிட்டதே என உவகித்தாள். "அம்மாவைப்பற்றி ஏதாவது தகவல் தெரியுமா வாசுகி, அப்பாவென்றால் அம்மா இன்னும் உயிருடன்தான் இருக்கிறார் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்" எனக் கேட்டாள்.

"அம்மாவும் அதைத்தான் சொல்கின்றார் மயூரி. அம்மாவும் தேடாத இடமில்லை. கேட்காத ஜோசியம் இல்லை, இத்தனை வருடங்கள் ஆகி விட்டது, உயிருடன் இருந்தால் தொடர்பு கொண்டிருக்க மாட்டாங்களா? எனக்கென்றால் நம்பிக்கையில்லை மயூரி" என்றாள் வருத்தத்துடன்.

"எந்தப் பெண்ணும் தன் பெண்மை பலவந்தமாகச் சூறையாடப் பட்டால் பின் கணவனுடன் சேர்ந்து வாழமாட்டாள். அம்மாவுக்கும் அப்படித்தான் எதுவோ நடந்திருக்க வேண்டும் அதனால் தான் ஒழிந்து வாழ்கின்றார் என்று அப்பா சொல்கிறார்" என்றவள், "வாசுகி எனக்கு அம்மாவைப் பற்றி எதுவுமே தெரியாது. அப்பாவிடம் ஒரு படம் கூட இல்லை உன்னிடம் ஏதாவது இருக்கிறதா? இருந்தால் தயவு செய்து

ஒன்று தாவேன்" எனக் கெஞ்சினாள். "என்னிடம் இல்லை. இலங்கைக்கு அம்மாவுக்கு எழுதி அனுப்பச் சொல்கிறேன்" என்றாள்.

ஆனால், அதற்கு முன்னரே அந்த அதிசயம் நடந்தது. அங்குள்ள கலைக்கூடத்தைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது பழைய கலை நிகழ்ச்சிகளின் ஆல்பங்களில் ஒன்றை எழுந்தமானத்திற்குப் புரட்டிய வாசுகி, "மயூரி" எனக் கூவினாள். அதிர்ந்து அங்கே ஓடிய மயூரி, அவள் காட்டிய படத்தைப் பார்த்து மேலும் அதிர்ந்து 'வாணி ஆன்ட்டி' என உதட்டளவில் வந்த வார்த்தையைக் கட்டுப்படுத்திக் கொண்டு "என்ன வாசுகி" என்றாள். அவள் நெஞ்சம் படபடத்தது. "வாசுகி இதோ உன் அம்மா, என் சித்தி" என்றாள் மட்டில்லா மகிழ்ச்சியுடன். மயூரிக்கு மயக்கமே வந்தது எனலாம். தன்னை ஒருவாறு நிலைப்படுத்திக் கொண்டு "நீ என்ன சொல்கிறாய் வாசுகி" என ஈனஸ்வரத்தில் கேட்டாள்.

"ஆமாம் மயூரி இதுதான் சித்தி. சித்தி சாகுந்தலம் நாட்டிய நாடகத்தில் சகுந்தலையாக நடித்துப் பரிசு வாங்கினாங்களாம். இதே படம் எங்கள் வீட்டிலிருக்கிறது" என்றாள்.

மயூரிக்கு அவை எதுவுமே கேட்கவில்லை. 'அம்மா, அம்மா' என்று அவள் இதயம் அரற்றியது. வாசுகியிடம் தலை வலிக்கிறது நான் அறைக்குப் போகிறேன் என்றாள். நிலைமை புரிந்த வாசுகி "நான் சித்தியை உனக்கு இப்படிக் காட்டியிருக்கக்கூடாது. பார்த்த சந்தோஷத் தில் எதையும் நினைக்கத் தோன்றவில்லை. வா நானும் வருகிறேன் மிகுதியை வேறொரு நாள் பார்க்கலாம்" என அழைத்துச் சென்றாள்.

அங்கே தனிமையில் விடப்பட்ட மயூரியின் கண்கள் அணையுடைந்து தன் வழியே ஓடின. மயூரி தன் நினைவின்றி இருந்தாள். 'அம்மா, அம்மா' என்று அவள் வாய் முணுமுணுத்தது. சகுந்தலையாக நடித்ததால்தான் பக்கத்திலிருக்கும் உங்களை அப்பாவால் கண்டு கொள்ள முடிய வில்லையா அம்மா எனத் தனக்குள் கேட்டுக் கொண்டாள்..

'ஏன் எனக்கு இது புரியவில்லை? அந்த அன்பும் பாசமும், எனக்குத் தேவைப்படும் போதெல்லாம் அந்த இடத்தில் வந்து நிற்பதும், வேண்டி யதை வேண்டிய நேரத்தில் எடுத்துச் சொல்வதும், என் முகம் சிறிது சுருங்கினாலும் அதைத் தாங்க முடியாமல் அதற்கு மாற்றுத் தேடும் மனமும், இவையெல்லாம் ஏன் இவர்களுக்கும் எனக்கும் என்ன பந்தம் என்று என்றாவது நினைத்தேனா? கிடைத்ததை இறுகப் பற்றிக் கொண்டேனே அல்லாமல் அதைப்பற்றிச் சிறிதும் சிந்திக்கவில்லையே.'

'உங்களுக்கு யாருமே இல்லையா வாணி ஆன்ட்டி' எனக் கேட்டதற்கு 'இல்லம்மா நானும் எல்லாரையும் தொலைத்துவிட்டேன்' என்பதை நம்பிக் கொண்டு அழாதேங்கோ ஆன்ட்டி' என்று இறுக அணைத்ததை நினைத்துக் கொண்டாள்.

'அப்பாவிடம் வாய்க்கு வாய் வாணி ஆன்ட்டி என்று கூறினேனே அவர் யாரம்மா உன் வாணி ஆன்ட்டி என் கண்ணிலேயே படமாட்டாங்களாம் எனக் கேலி செய்தாரே! அப்பொழுதாவது கலைவாணியின் மறு பாதி தானே வாணி என்று ஏன் நினைக்கத் தோன்றவில்லை. இத்தனை வருடங்கள் வீணாகி விட்டதே' என்று மறுகினாள்.

இதை வாசுகியிடம் சொல்லக்கூடாது. மறுபடியும் அம்மா ஒழிவதற்கு விடமாட்டேன். தந்திரமாகத்தான் கையாள வேண்டுமெனத் தீர்மானித் தாள்.

அதன்பின் மயூரிக்கு நடனத்தில் ஆர்வம் அதிகரித்தது. இதுவரை அம்மாவின் விருப்பை அப்பா நிறைவேற்ற நான் துணைபுரிகிறேன் என்ற நினைவில் இருந்தவள் இப்பொழுது அம்மாவுக்காக, அம்மாவை மகிழ வைப்பதற்காக அம்மாவின் பாராட்டைப் பெறுவதற்காக எனப் பல புதிய நடன உருப்படிகளைப் பயின்றாள். அரங்கேற்றத்தில் கடைசியாக ஆடும் குறத்தி நடனத்திற்குப் பதிலாக மயில் நடனம் பயின்றாள். அங்கேயே ஆடிப் பலரின் பாராட்டையும் பெற்றாள். "சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா" என்ற பாரதியார் பாடலை விட்டுவிட்டு "காற்று வெளி யிடைக் கண்ணம்மா" என்ற பாடலுக்குப் பதம் பிடித்துப் பழகினாள். தனது பாவத்தால் தந்தையின் நிலையை அன்னைக்கு உணர்த்த எண்ணி மிகவும் பிரயத்தனப்பட்டுப் பயின்றாள். "நீயென தின்னுயிர் கண்ணம்மா எந்த நேரமும் நின்றனைப் போற்றுவேன்" என்ற வரிக்குப் பல விதமான பாவங்களைப் பயின்றாள். "துயர் போயின, போயின துன்பங்கள் நினைப் பொன்னெனக் கொண்ட பொழுதிலே" என்ற வரிகளை மகிழ்ச்சிப் பிரவாகத்தால் தன்னை மறந்து சுழன்று சுழன்று ஆடிப் பார்த்தோர் அனைவரையும் பரவசப்படுத்தினாள். அங்கிருந்த ஓர் ஆசிரியை, 'நீ என்னுடன் நடனம் பயின்ற கலா மாதிரியே ஆடுகின்றாய்' என்றார். 'நான் அவர்கள் மகள்' என்றதும், 'கலாவின் மகளா நீ! நினைத்தேன்' என மகிழ்ந்தார்.

அரங்கேற்றத்திற்கு வேண்டிய எல்லா ஆயத்தங்களுடனும் மயூரி ஆஸ்திரேலியா சென்றடைந்தாள். அவள் வரும் நாளை எதிர்பார்த் திருந்த வாணி அதற்கடுத்த நாள் மயூரியின் பல்கலைக்கழக முன்றலில்

காத்திருந்தாள். அன்னையைக் கண்ட மயூரி தாவி அணைத்து வழக்கத்திற்கு மாறாக "வாணிம்மா" என்றழைத்தாள். அது வாணியை நிலை தடுமாறச் செய்தது. ஒருவாறு சமாளித்தவள் "கலாஷேத்திரா எப்படி இருந்தது" எனக் கேட்டாள்.

மிகவும் நன்றாக இருந்தது. பல தெரியாத விடயங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது எனப் பொடி வைத்துப் பேசினாள். வாணியும் "அதுதானே நான் சொன்னேன் பார்த்தாயா" என்றாள்.

"ஆமாம் அம்மா. எல்லாவற்றுக்கும் உங்களுக்குத் தான் நன்றி சொல்ல வேணும்" என்றாள்.

மீண்டும் அம்மா வாணியின் காதுகளில் தேனாகப் பாய்ந்தது. அவளால் வேறு எதையும் சிந்திக்க முடியவில்லை. அந்த இன்ப லாகிரியில் திளைத்து மெய் மறந்தாள்.

அதைக் கவனித்த மயூரி "என்னம்மா" என்றாள். அவளுக்கு அன்னையைப் பார்க்கப் பாவமாக இருந்தது.தேவையற்ற மூட நம்பிக்கைகளால் எல்லோர் வாழ்வையும் வீணாக்கிவிட்டார்களே என மனம் நொந்தாள்.

பின், திட்டமிட்டபடி "அரங்கேற்றம் செய்ய அப்பா வேண்டிய ஆயத்தங்கள் செய்கின்றார். பாவம் அவரே தனித்து எல்லாம் செய்ய வேணும். அவரைப் புரிந்துகொள்ளாத எங்கம்மாவுக்காக அவர் கஷ்டப்பட வேண்டும். அம்மா தனது நம்பிக்கைகளுடனும் கொள்கைகளுடனும் எங்கோ இருப்பார்" என்ற அவள் வார்த்தைகளில் கோபம் தொனித்தது.

வாணி தனக்கேயுரிய என்றும் மாறாத அமைதியுடன் "எதற்கு மயூரி இந்த நேரத்தில் அம்மாவை நினைத்துத் தேவையில்லாமல் கலங்குகின்றாய்? யார் யாருக்கு என்ன கிடைக்க வேண்டுமோ அதுதான் கிடைக்கும்" என்றாள்.

இன்று மயூரி வழக்கத்திற்கு மாறாக வெகுண்டெழுந்தாள். "எது கிடைக்க வேண்டுமோ அதல்லவா அம்மாவின் அசட்டு நம்பிக்கைகளால் தட்டிப் பறிக்கப்பட்டுவிட்டது. ஒரு விபத்தில் ஏதாவதொரு அங்க அவயவங்கள் போயிருந்தால் என்ன செய்திருப்பார்கள். அதுபோலத்தானே இதுவும் ஒரு விபத்து. ஏன் நர்ஸான அம்மாவுக்கு இது புரியவில்லை. அவள் எப்படிக் கிடைத்திருந்தாலும் நான் ஏற்றிருந்திருப்பேனே என்று அப்பா ஒவ்வொரு தடவையும் சொல்லிக் கலங்குவார். அப்பொழுது அதிர்ச்சியில் அப்படி ஒரு முடிவெடுத்திருந்தாலும் இத்தனை

வருடங்களில் எண்ணித் தெளிந்திருக்கலாமே! எங்கள் வாழ்க்கை கால மெல்லாம் இப்படி ஒரு விடையற்ற வினாவாக எதிர்பார்ப்பிலேயே கழிந்திருக்காதே. அப்பாவின் தேடலுக்கும் ஒரு முடிவு கிடைத்திருக்கும். அந்த இரவில் அவளைத் தனித்து அனுப்பியது என் தவறு தான் என்ற அப்பாவின் தீராத வேதனை தீர்ந்திருக்கும். ஆனால் நான் நினைக்கிறேன் வாணிம்மா, எங்கம்மாவுக்கு இரக்கமே இல்லை. அம்மா அப்பாவை அவர் அன்பைப் புரிந்து கொள்ளவே இல்லை. அம்மாவுக்கு என்மேல் பாசமே இல்லை அவருக்கு அவர் கொள்கைகளும் நம்பிக்கை களும் தான் பெரியது. யார் எக்கேடு கெட்டாலும் கவலைப்படவே மாட்டார்கள்'' என இரக்கமின்றிக் கூறிவிட்டுக் கடைக்கண்ணால் அன்னையைப் பார்த்தாள்.

வாணி எதுவுமே பேசவில்லை. எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள் அவள் விழிகள் துளிர்த்தன.

'அசையவே மாட்டீர்களா அம்மா' எனத் தனக்குள் நினைத்தவள், அவள் கழுத்தைப் பின்பக்கமாகக் கட்டிக் கொண்டு "என்னை மன்னிச் சிடுங்க வாணி ஆன்ட்டி. எனக்கு இதுவே வேலையாகிப் போச்சு எங்கம்மாவைப்பற்றிச் சொல்லி உங்களைத் துன்பப்படுத்துவது. அதை விடுங்கோ. அவர்கள் கொள்கைகள் அவர்களுக்கு. அப்பாதான் பாவம் அவரை நினைத்தால் தான் எனக்குக் கவலை" என்றவள், "ஆன்ட்டி எனக்கு உங்கள் விலாசம் வேண்டுமே. நான் உங்களுக்கு அரங்கேற்ற அழைப்பிதழ் கொண்டு வந்து தருவதற்கு" என்றாள். "எனக்கெல்லாம் எதற்கம்மா அழைப்பிதழ்? உனது அரங்கேற்றத்தை நான் தவற விடுவேனா என் வாழ்வில் அது மிக முக்கியமான ஒரு நாளல்லவா" என்றாள்.

'ஆமாம் மிக மிக முக்கிய நாள்தான்' என நினைத்தவள். 'நீங்கள் வரா விட்டால் அரங்கேற்றமே இல்லை அது நினைவிலிருக்கட்டும்' என உறுதி யாகக் கூறிவிட்டுப் போய்விட்டாள்.

வாணிக்கு வேதனையாக இருந்தது. இத்தகைய அருமைக் குழந்தை யுடனும் அன்புக் கணவருடனும் வாழும் அதிர்ஷ்டம் அவள் பெற்றிருக்க வில்லையே. அன்று அவளைப் பல மிருகங்கள் கடித்துக் குதறி விட்டனவே. அவள் சிகிச்சையளித்த அந்தப் போலிஸ் உத்தியோகத்தர் மட்டும் சரியான சமயத்திற்கு வராவிட்டால் அவள் அந்த இடத்திலேயே இறந்திருப்பாள். அவர் அவளைத் தன் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு

போய் இரகசியமாக வைத்தியம் செய்து காப்பாற்றினார். அவள் நினைவு பெற்றுத் தன் நிலையை உணர்ந்து அதற்காக அவரைக் கோபித்துக் கொண்டாள். அவற்றைப் பொருட்படுத்தாதவர், 'நீயாக உன்னை வெளிப்படுத்தும்வரை நான் யாரிடமும் சொல்ல மாட்டேன்' எனக் கூறித் தனது ஒரு தங்கை போலக் காத்தார்.

பின் 'டாக்டரும் குழந்தையும் ஆஸ்திரேலியா போய்விட்டார்கள். நீயும் போ அங்கே மறைந்திருந்தாவது அவர்களைப் பார்க்கலாம். என்றாவது உன் மனம் மாறினால் அவர்களுடன் சேர்ந்து கொள். டாக்டர் என்றும் உனக்காகத்தான் வாழ்வார். எந்த நிலையிலும் உன்னை ஏற்றுக் கொள்வார். வீணான பழைய சம்பிரதாயங்களை விட்டுவிட்டுச் சேர்ந்து வாழ்வதுதான் நல்லது' எனக் கூறித் தன் சகோதரனிடம் சிட்னிக்கு அனுப்பி வைத்தார். அவர்களும் வாணியைத் தம் குடும்பத்தில் ஒருத்தி யாகவே ஏற்று இன்றுவரை கவனித்துக் கொள்கின்றார்கள்.

இன்று அங்கே அரங்கின் ஒரு மூலையில் அமர்ந்திருந்த வாணி, மயூரியை "ஈன்ற பொழுதினும் பெரிதுவந்து" கொண்டிருந்தாள். மேடைக்கு வந்த மயூரி தன் கண்களைச் சுழலவிட்டு அன்னையைக் கண்டு அவளை நோக்கி வணங்கி விட்டுத்தான் கடவுள் வணக்கத்தை ஆரம்பித்தாள். வாணியின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகத் தன் வழியே ஓடியது. வாணி தன்னிலை மறந்திருந்தாள். பக்கத்தில் இருந்த ஓர் வயதான அம்மா இதென்ன மோனநிலை இப்படியும் நடனத்தில் ஒரு ரசனை இருக்குமா என வியந்து கொண்டிருந்தார்.

மயில் நடனம் முடிந்து மயூரி மங்களம் ஆடி முடித்த பின்னர்தான் அவையோர் விழி அசைத்தனர். அதன் பின் பிரதம விருந்தினர் மயூரியின் நடனத்தை வானளாவப் புகழ்ந்தார். 'பொதுவாகக் கலைஞர்கள் அனை வருமே கலைமகள் கடாட்ஷம் பெற்றவர்கள். ஆனால் மயூரிக்கு அவள் அருள் மிக நிறைந்துள்ளது. அவளது நடனம் கணபதி கவுத்துவத்தில் களைகட்டி, அலாரிப்பில் மலர்ந்து ஜதிஸ்வரத்தில் சூடுபிடித்து, அதன் பின் அவள் ஆடிய சப்தம், வர்ணங்களில் விரிவடைந்து, பதங்களிலும், ஜாவளிகளிலும் அனைவரையும் ரசானுபவத்தில் மயங்கச் செய்து, தில்லானாவும் கடைசியாக ஆடிய மயில் நடனமும் நடனக் கலையின் சிகரத்தையே எட்டிப்பிடித்து விட்டன' எனப் பாராட்டினார்.

ரகுவின் உள்ளம் புளகித்தாலும், வசிஷ்டர் வாயால் ப்ரம்மரிஷிப் பட்டம் என்பது போல மனைவியின் வாயால் பாராட்டைப் பெற முடிய வில்லையே என மனம் நொந்தார்.

குரு தட்ஷணையும், கௌரவித்தலும் முடிந்ததும் மயூரி ஒலி பெருக்கியை எடுத்து "இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிகழ்ச்சி சிறப்படையப் பல வழிகளிலும் தோன்றாத் துணையாக நின்றுதவிய என் அன்பு வாணி ஆன்ட்டியைக் கௌரவிக்க விரும்புகின்றேன். வாணி ஆன்ட்டி தயவு செய்து மேடைக்கு வரவும் என்றாள்."

வாணி அதிர்ந்தாள். இந்தப் பெண் எதுவோ திட்டமிட்டுத்தான் செய்கிறாள். இப்போ என்ன செய்வது அங்கே ரகு நிற்கிறாரே எனச் சிந்திப்பதற்குள் மயூரியின் தோழி அவளருகே வந்து "வாங்கம்மா" என்றாள். வேறு வழியின்றி வாணி மேடையை நோக்கிச் சென்றாள் அவள் வருவதை உறுதிப்படுத்திய மயூரி, "என் அம்மாவுக்குச் சமமான வாணி ஆன்ட்டிக்கு இலங்கையிலிருந்து வந்த எனது பெரியம்மா பாரதி அவர்கள் பொன்னாடை அணிந்து கௌரவிப்பார்கள்'' என்றாள். வாணிக்கு அடுத்த அதிர்ச்சி. 'அக்காவா எப்போ வந்தார்கள். மயூரி இது பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே' என எண்ணிய அவள் கால்கள் தொய்ந்தன. பத்மவியூகத்துள் அகப்பட்ட அபிமன்யு போல மீண்டெழ வழி தெரியாமல் தட்டுத் தடுமாறியவள் ஒருவாறு மயூரியின் சினேகிதியின் உதவியுடன் மேடையில் ஏறினாள். அங்கே பொன்னாடையைப் போர்த்திய பாரதி 'கலா' எனக் கட்டிக்கொண்டாள். மனைவியைக் கண்ட ரகு சிலையானார்.

அவர்களை அப்படியே விட்டுவிட்டு மயூரி வீட்டுக்குப் போய் விட்டாள்.

அரங்கை ஒழுங்குபடுத்திக் கொடுத்ததும் ''வா வீட்டுக்கு'' என வாணியை ரகுவும் பாரதியும் அழைத்துச் சென்றனர். அவர்களிடையே ஒரு புரிந்துணர்தல் இருந்தது. யாரும் ஏன் இப்படிச் செய்தாய் எனக் கேட்கவில்லை. அவள் கிடைத்த மகிழ்வுதான் அவர்களிடம் தெரிந்தது. அது வாணியின் கண்களை நிறைத்தது.

அங்கே மயூரி நல்ல தூக்கத்திலிருந்தாள். அவளருகே சென்ற வாணி 'அம்மாவைக் காட்டிக் கொடுக்க நினைத்தாயா மகளே' எனத் தனக்குள் கேட்டுக் கொண்டாள். அவள் விழிக்குளங்கள் உடைப்பெடுத்தன. மகளின் தூக்கம் கெடக் கூடாது என நினைத்து விம்மலை அடக்கிக் கொண்டு வெளியேற முனைந்தாள். ஆனால் அங்கே வந்த ரகு அவள் கைகளைப் பற்றிக் கொண்டார். மெதுவாக கைகளை விடுவித்தவள் அறைக்கு வெளியே சென்றாள்.

அவளுடனேயே வந்த ரகு "நீ எது செய்தாலும் அதற்கொரு தகுந்த காரணம் இருக்குமென்று எனக்குத் தெரியும் கலா. நீ எனக்கெதுவும்

சொல்லத் தேவையில்லை. ஆனால், இனி எங்கும் போகாதே எங்களுடனேயே இருந்துவிடு” என்றார்.

அப்பொழுது அங்கே வந்த பாரதி, “ரகு சொல்வதுதான் சரி கலா. அந்த நேரத்தில் உன் மனம் ஒரு நிலையில் இல்லாததால் விளைவு களைச் சிந்திக்காமல் அப்படிச் செய்துவிட்டாய். இது உன் மன அதிர்ச்சி யால் ஏற்பட்டது ஆனபடியால் இனி அதை எல்லாம் மறந்துவிட்டு ரகுவின் மனைவியாக, மயூரியின் அம்மாவாக இருந்து கொள்” என்றார். வாணி உடைந்து அழுதாள். பின் “நான் எப்படி உங்களுடன் இருப்பது ரகு? நான் இங்கிருந்தால் நம் பெண்ணின் எதிர்காலம் என்னவாகும் என்று நினைத்துப் பார்த்தீர்களா? நான் சாக்கடையில் நெளிய வேண்டிய ஒரு புழு. என்னை அப்படியே விட்டு விடுங்களேன்” என விம்மினாள்.

“நீ எந்தத் தப்பும் செய்யவில்லைக் கண்ணம்மா. நீ அருகில் இருந்தால் நம் பெண்ணுக்கு ஒரு குறையும் வராது. இனி நீ எங்கும் போக முடியாது” என ரகு அவளை இறுக அணைத்துக் கொண்டார். அப்போ நித்திரை கலைந்து வெளியே தண்ணீர் குடிக்க வந்த மயூரி அவ்விருவரையும் சேர்த்துக் கட்டிக் கொண்டாள்

அங்கே ஆனந்தம் தாண்டவமாடியது. “துயர் போயின போயின துன்பங்கள் நினைப் பொன்னெனக் கொண்ட பொழுதிலே” என்ற பாரதியார் பாடல் வரிகளை மயூரியின் இதயம் மீணடும் மீண்டும் இசைத்து மகிழ்ந்தது.

“உயிர் தீயினி லேவளர் சோதியே, என்றன் சிந்தனையே என்றன் சித்தமே” என ரகு தன் மனைவியை நினைத்துப் பரவசப்பட்டார்.

• • •

கலப்பை - ஐப்பசி 2001

**உருவகக் கதை**

# தேவரிஷி நாரதர் தரிசித்த கலைக்கோயில்

**அ**ன்றொரு நாள் தேவலோகத்தில் தேவரிஷி நாரதருக்கு எந்த வேலையும் இருக்கவில்லை. என்ன செய்யலாமென்று சிந்தித்தார். கைலாசத்திற்குப் போகலாமா? வைகுந்தத்திற்குப் போகலாமா? யாரிடம் என்ன கலகம் மூட்டலாம் என யோசித்தவர் பின் இரண்டும் வேண்டாம் இன்று சத்திய (ப்ரம்ம) லோகம் செல்வோம். தந்தை ப்ரம்ம தேவரையும் அன்னை சரஸ்வதி தேவியையும்; பார்த்து அதிக நாட்களாகிவிட்டன என நினைத்து அங்கே சென்றார். சத்திய லோகத்தின் வாசலில் கலைவாணி யின் அன்னப் பட்சி கண்ணீர் மல்க நின்றது அது நாரதரைக் கண்டதும்

"நாரதரே என் துயரைத் தங்களால் தீர்த்து வைக்கமுடியுமா?" என விம்மியது.

பதறிய நாரதர் "அன்னை சரஸ்வதி தேவியின் வாகனமே! உனக் கென்ன குறை"? எனக் கேட்டார்.

"அன்னை இங்கே இல்லை அது தான் என் பெரும் குறை" என்றது.

"அன்னை ப்ரம்ம லோகத்தில் இல்லையா? எங்கே போய்விட்டார்கள்? வாகனமான நீ இல்லாமல் எப்படிப் போனார்கள்"? என வினவினார்.

பட்சி மீண்டும் விம்மலிடையே "அன்னை பூலோகம் சென்று அங்கேயே தங்கிவிட்டார்கள்" என்றது.

"பூலோகமா அங்கே எங்கே? ஏன் போனார்கள்?" என நாரதர் வினாக் களைத் தொடுத்தார்.

"அங்கே எதுவோ இராமநாதன் கல்லூரி என்றதொரு கலைக் கோவிலாம். இயல், இசை, நாடகம் ஆகிய ஆயகலைகள் அறுபத்து

நான்கும் நிறைந்ததாம். அதுதான் நான் இருக்க வேண்டிய இடம் என்று போய்விட்டார்கள்" எனப் பட்சி கூறியது.

"அது எது இராமநாதன் கல்லூரி எனக்கொன்றும் தெரியாதே! அங்கே அப்படி என்ன அதிசயம்?" என முனிவர் கேட்டார்.

"தங்களுக்கு நினைவில்லையா முனிவரே? ஒரு முறை அன்னை பார்வதி தனக்கென ஒரு நகரம் கேட்கச் சிவபெருமான் தேவ சிற்பி மயனைக் கொண்டு இந்து சமுத்திரத்தின் நடுவே அழகிய இலங்கா புரியை அமைப்பித்தார். அதற்குக் கிருகப் பிரவேசம் செய்ய வந்த புரோகிதரான இராவணன் தட்ஷணையாக அதை அன்னையிடம் கேட்டுத் தனக்கே சொந்தமாக்கிக் கொண்டான். பக்தர்களின் இதயமே நம் மாளிகை என ஐயன் அன்னையை ஒருவாறு சமாதானம் செய்தார்" எனக் கேட்டது.

"அதெல்லாம் தெரியும் அன்னமே! அதைத்தான் இராம இராவண யுத்தத்தில் இராமபிரான் அழித்துவிட்டாரே" எனக் கேட்டார்.

"அவர் அழித்தது அரக்கர்களைத்தான். ஆனால் இப்பொழுது அங்கே மனிதர்கள் வசிக்கின்றார்கள். அந்த அழகிய தீவின் வடக்கே யாழ்ப் பாணம் என்றொரு குடாநாட்டில் மருதனார்மடம் என்ற இடத்தில் பெரிய அளவு நிலப்பரப்பில் இராமநாதன் கல்லூரி என ஒரு பெரிய கலைக் கல்லூரியைச் சைவத் தமிழ்ப் பெண்களுக்காக சேர். பொன் இராமநாத வள்ளல் என்றதொரு பெருந்தகை அமைத்துள்ளாராம். அவருக்குத் துணையாக செல்வி ஹரிசன் என்ற அவுஸ்திரேலியப் பிரசையான அவரது துணைவியார் சைவ சமயத்தைத் தழுவி லீலாவதி அம்மையார் என்ற பெயரில் ஒரு இந்து தமிழ்ப் பெண்ணாக வாழ்ந்து வந்தாராம். அங்கு தான் அன்னை போய்விட்டார்கள். எப்படியாவது நீ போய் அன்னை பாரதியை அழைத்து வந்துவிடும் நாரதரே. எனக்காக மட்டுமல்ல தங்கள் தந்தையார் ப்ரம்மதேவர் கூட மிகவும் நொந்து போயிருக்கிறார்" என்றது.

"நீ அன்னப் பட்சி உன்னால் போக முடியாதா என்னிடம் போய்ச் சொல்லுகிறாயே" என நாரதர் கேட்டார்.

"போக முடியாதென்றில்லை முனிவரே. அன்னை இங்கேயே இரு என்று ஆணையிட்டுவிட்டுப் போனார். அதை நான் எப்படி மீறுவது? தயவு செய்து நீர் போய்க் கூட்டிவாரும் நாரதரே" எனக் கெஞ்சியது.

"சரி பார்க்கிறேன்'' எனக் கூறி அன்னப் பட்சியை விட்டு விலகிச் சிறிது தூரம் வந்து ஞான திருஷ்டியால் பூலோகத்தை நோக்கி இலங்கையின் அழகைப் பார்த்து வியந்தவர், கல்லூரியைக் கண்டு கொண்டார். சரி இறங்கி அன்னையைக் காணுவோம் என இறங்க எத்தனித்தபோது வாயு பகவான் கவனித்துவிட்டார். 'என்ன நாரதர் எங்கே போகிறார்? நான் முகன் நாயகியின் அமைதியைக் கெடுக்கவா? விடமாட்டேன்' எனக் கறுவிக் கொண்டு மெதுவாக ஓர் ஊது ஊதினார். அவ்வளவுதான் நாரதர் தள்ளுப்பட்டுப் போய் இராமநாதன் கல்லூரியின் லீலாவதி இல்லத்தின் கூரையின் மேல் தொப்பென விழுந்தார். கூரை சறுக்கியது. அடிபட்ட இடத்தில் வலித்தது. இருந்தாலும் ஒருவாறு தெளிந்து நிமிர்ந்து இறங்கி யன்னல் வழியே எட்டிப் பாாத்தார். அவர் இறங்கிய நேரம் அதிகாலை நான்கு மணியிருக்கும் அங்கு பெண்கள் உறங்கிக் கொண்டிருந் தார்கள். பிரம்மச்சாரியான நாரதருக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. 'இதென்ன எதுவோ பெண்களின் அந்தப்புரம் போலத் தெரிகிறது. அன்னத்தின் பேச்சைக் கேட்டு இங்கே ஏன் வந்தேன்' என நினைத்தவர். 'அன்னை அவர்களில் ஒருவரோ!' என நினைத்தார்.

"நாராயணா! திரேதா யுகத்தில் ஆஞ்சநேயர் இத்தீவில்தான் அன்னை சீதாதேவியைத் தேடிக் கண்டார். இப்பொழுது இந்தக் கலியுகத்தில் அன்னை கலைவாணியை என்னை இங்கே தேட வைத்துவிட்டாயே! இது நியாயமா? அன்னையைக் காட்டமாட்டாயா?'' என உளமார வேண்டினார்.

ஸ்ரீமன் நாராயணனுக்கு வேடிக்கை. அவர் வைகுந்தத்தில் இருந்து சிரித்துக் கொண்டு இருந்தார்.

அதைப் பார்த்து வியந்த லட்சுமி தேவி "என்ன பிரபு அவ்வளவு சுவாரசியம்'' எனக் கேட்க

"நாரதரைப் பார்'' எனப் பூலோகத்தைக் காட்டினார். இருவருமே சேர்ந்து சிரித்தார்கள்.

"கலைமகள் உவ்விடம்தான் இருக்கிறாள் நாரதா. விரைவில் நீ காண்பாய்'' என உறுதி அளித்தார்.

"பிரபு இது என்ன வேடிக்கை?'' எனக் கூறிக் கொண்டிருந்தபோது எங்கிருந்தோ ஒரு மணியோசை கேட்டது. அதைத் தொடர்ந்து ஐந்து மணியாகி விட்டது என மாணவியர் திமு திமு என ஒருவர் பின் ஒருவராக எழுந்தனர். எழுந்து காலைக் கடன்களை முடித்தவர்கள் அவசர

அவசரமாக எங்கோ போவதற்கு ஆயத்தமாயினர். அவர்களில் ஒருத்தி ஒரு வாளியையும், துடைப்பத்தையும், கோலப் பொடியையும் கொண்டு போனாள். நாரதர் அவளைப் பின் தொடர்ந்தார். அவள் போய் அந்தப் பெரிய மண்டபத்தைத் திறந்து வாசலுக்குச் சென்று கூட்டி மெழுகி அழகாகக் கோலமிட்டாள்.

நாரதர் அந்த இடத்தைச் சுற்றி ஒரு நோட்டம் விட்டார். அங்கே கோவில் மாதிரி முற்றிலும் கருங்கல்லாலான கட்டிடம் ஒன்றைக் கண்டு அங்கு சென்றார். சில பெண்கள் அங்கு பூப் பறித்துக் கொண்டிருந்தனர். படிக்கும் பெண்களுக்குப் பூ ஏன்? என்ற வினா அவருள் எழுந்தது. அது என்ன கோவில், என அறியும் ஆவலும் எழுந்தது. எட்டி எட்டிப் பார்த்து அது ஒரு சமாதி என அறிந்தார். யார் சமாதியாக இருக்கும் எனச் சிந்தித்த வேளையில் அவர் முன் இராமநாத வள்ளலார் தோன்றி "என் சமாதியில் உனக்கென்ன வேலை நாரதா? இது பெண்கள் கல்லூரி உனக்குத் தெரியவில்லையா? அவர்களுக்குக் காவலாக நான் இங்கே எப்பொழுதும் இருக்கிறேன். பிரமச்சாரியான உனக்கு இங்கே என்ன வேலை? உடனே வெளியேறு" என உறுமினார்.

அவரிடமிருந்து மெதுவாக நழுவிப் பூப்பறித்த பெண்களைப் பின் தொடர்ந்தார். அவர்கள் பூக்களைக் கொண்டு மாடிப்படிகளில் ஏறினர். அப்படிகளின் முகப்பில் ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் எம் அம்மை தூய உருப் பளிங்கு போல் அழகிய கண்ணாடிக்குள் மின்சார தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுப் புன்னகையுடன் வீற்றிருப்பதைக் கண்டு "அம்மா!!!" எனச் சாஷ்டாங்கமாக அவர் பாதத்தில் விழுந்தார்.

"நாரதா நீயா? இங்கே என்ன செய்கிறாய்"? என அன்னை வினாவினார்.

"எல்லாம் உங்களைத் தேடித்தான் அம்மா" என்றார்.

"என்னை நீ ஏன் தேடுகிறாய் என்ன கலகம் நாரதா?" என வேத மாதா கேட்டார்.

"நாராயண, நாராயண நன்மைக்குக் காலமில்லைத் தாயே! அங்கே அன்னப்பட்சி அழுது கொண்டிருக்கிறது, தந்தையாரும் சோகமாக இருக்கிறார்" என்றார்.

"இங்கே எத்தனை அன்ன நடை மடவார்கள் உள்ளனர் அதுதான் அன்னத்தை அங்கேயே இரு எனக் கூறினேன். உன் தந்தையார்

எப்பொழுதும் படைத்துக் கொண்டே இருப்பார். நானே வீணை மீட்டி நானே ரசிக்க வேணும். அதுதான் மற்றவர்களின் இசையைச் சில காலம் நுகரலாமென இங்கு வந்தேன்" என்றார்.

பேசிக்கொண்டிருக்கும் போது வரிசை வரிசையாகப் பெண்கள் வந்து மாடிப்படிகளில் ஏறினர்

"அன்னையே இவர்கள் எங்கே போகிறார்கள்" என நாரதர் கேட்டார்.

நகைத்த நாமகள் "இந்தக் கோட்டைக்குள் புகுந்துவிட்டாய் தானே அவர்களுடன் போய்ப் பார் நாரதா" என்றார்.

சரியென்று அங்கே போனால் நடராஜப் பெருமான் சிவகாமசுந்தரி சமேதராக வீற்றிருந்தார். மாணவியர் அவரைச் சுற்றி அமர்ந்து திருமுறைப் பாடல்களும், பக்திப் பாடல்களும் பாடினர். அங்கே ஒரு குருக்கள் பூசை செய்தார். பூசைக்குத்தான் பூப்பறித்தார்களா என நினைத்தவர் பூசையில் கலந்து கொண்டார். பூசை முடிந்து குருக்களிடம் விபூதி வாங்கக் கை நீட்டியபோது பல வருடங்களாக இறைத் தொண்டில் இருந்த குருக்கள் அருவமாக இருந்த நாரதரைக் கண்டுகொண்டார். கண்களை உருட்டி ஒரு பார்வை பாத்தார். தப்பினால் போதுமென்று நாரதர் அங்கிருந்து ஓடிவிட்டார்.

பூசை முடிந்து வந்த மாணவியர் உணவு மண்டபத்திற்குச் சென்று தேனீர் அருந்தினர். அப்பொழுது நாரதர் அந்த இடத்தை நோட்டம் விட்டார். நாற்சாரமாக இருந்த அந்த இடம் மிகவும் ரம்மியமாக இருந்தது. மகிழ மரம், வில்வ மரம் போன்ற பெரிய விருட்சங்களுடன் அழகிய சிறு பூஞ்செடிகளும் பூத்துக் குலுங்கின. பூந்தோட்டம் யார் அமைத்தார்கள் என நினைத்த வேளையில் மாணவியர் புத்தகங்களைக் கொண்டு ஒருபக்கமாகப் போகச் சிலர் வீணை, வயலின், தம்புரா போன்ற இசைக் கருவிகளைக் கொண்டு கோவில் பக்கமாகச் சென்றனர். எந்தப் பக்கம் போவது எனச் சிறிது தடுமாறிய நாரதர் புத்தகங்கள் கொண்டு போன பெண்கள் பின்னால் சென்றார். அவர்கள் வகுப்பறைகளில் போயிருந்து புத்தகங்களை விரித்துப் படிக்கத் தொடங்கினர். அங்கே ஓர் ஆசிரியை அவர்களைக் கண்காணித்துக் கொண்டிருந்தார். அது விடுதி மாணவியர் படிக்கும் நேரமென அறிந்தவர், அதைவிட்டு விட்டு மறுபக்கம் சென்றார். கோவிலின் கீழே இருந்த படிக்கட்டுகளுக்குப் பக்கத்தில் சில பெண்கள் இருந்து இசைப் பயிற்சி செய்தனர்.

வாய்ப்பாட்டு வீணை, வயலின் என ஒரே இசை மழை. அன்னை கலையரசி புன்னகையுடன் இருந்து செவிக்கு விருந்தளித்துக் கொண்டிருந்தார்.

"இதுதானா உன்னைக் கவர்ந்ததம்மா? இப்பொழுது எனக்குப் புரிகிறது, இதைவிட்டுவிட்டு நீ எப்படி வருவாய்? ஆனால், நீ இல்லாமல் ப்ரம்ம லோகம் இருளடைந்து கிடக்கிறதே! ப்ரம்ம தேவனும் தவித்துப் போவாரே!" என வருந்தினார்.

சிறிது நேரத்தில் மாணவியர் தம் இருப்பிடத்திற்கு வந்தனர். இப்பொழுது நாரதர் அருந்ததி இல்லத்துக்குள் நுழைந்து கொண்டார். மாணவியர் அழகிய வெள்ளைப் பாவாடை தாவணி அணிந்து உணவு மண்டபத்தை நோக்கிச் சென்றனர். அதற்கிடையில் நாரதர் அங்குள்ள சகுந்தலா, ஜானகி, கண்ணகி, தமயந்தி என்ற கற்புக்கரசிகளின் பெயர் கொண்ட மற்றைய விடுதி அறைகளைப் பாரவையிட்டார். மாணவிகள் இல்லாததால் கட்டில்கள் எல்லாம் அழகாக விரிக்கப்பட்டு மிகவும் சுத்தமாக இருந்தது. இந்தப் பெண்கள் நல்ல குடும்பத் தலைவியராவர் என எண்ணிக் கொண்டு உணவறையை நோக்கி விரைந்தார். அங்கு எல்லோரும் தம் தட்டுக்களில் உணவைப் படைத்துவிட்டு அமைதியாக இருந்தனர். ஏன் உணவைப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள் என நாரதருக்குப் புதினமாக இருந்தது. அப்பொழுது அனைவரும் எழுந்து நிற்க ஒரு மாணவி தேவாரம் பாடினார். அதன் பின் தான் அவர்கள் அமர்ந்து உணவருந்தினர். உணவை ஈந்த ஈசனுக்கு நன்றியா? என நினைத்து நாரதர் நெகிழ்ந்து நின்றார்.

உணவருந்திவிட்டுப் புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு வகுப்பறை களை நோக்கிச் சென்றனர். இப்பொழுதும் ஒரு சாரார் இசைக் கருவிகளுடன் மறு பக்கமாகச் சென்றனர். முதலில் வகுப்புப் பக்கம் செல்வோம் எனச் சென்றார். மாணவியர் தத்தம் வகுப்பறைகளுக்குச் சென்று தினமும் வீட்டிலிருந்து வரும் மற்றைய மாணவியருடன் அளவளாவினர். எல்லோரும் வெள்ளைப் பாவாடை சட்டை தாவணியில் இருந்தது மனத்திற்கும் கண்ணிற்கும் குளிர்ச்சியாக இருந்தது. அனைவரும் அன்னப்படசிகளாகவே காட்சியளித்தனர்.

சிறிது நேரத்தில் மணிச் சத்தம் கேட்டது அனைவரும் வரிசை வரிசையாகச் சென்று சுந்தரி மண்டபத்திற்கு அருகில் உள்ள கொன்றை மர நிழலின் கீழ் நின்றனர். இங்கே என்ன நடக்கப் போகிறது என வியந்த வேளையில் அது தான் காலைப் பிரார்த்தனை இடமென அறிந்து

'கோவிலில் நடராஜப் பெருமான், கொன்றை மர நிழலின் கீழ் காலைப் பிரார்த்தனை' என்ன ஒரு பொருத்தம் என அதிசயித்தார். அப்பொழுது அங்கே மிகவும் அமைதியாகக் கண்களில் கருணையுடன் ஒரு பெண்ணும் அவருடன் நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையுமாக இன்னொருவரும் வந்தனர். முன்னையவரை அதிபர் திருமதி அருணாசலம் என்றனர். பின்னையவரை உப அதிபர் குஞ்சக்கா என்றனர். நாரதருக்குத் தன் ஆவலை அடக்க முடியவில்லை. திடீரென ஒரு பெண்ணுருப் பெற்று பக்கத்திலிருந்த பெண்ணிடம் "அதென்ன அதிபர் அருணாசலம், உப அதிபர் குஞ்சக்கா. அவருக்குப் பெயர் இல்லையா?" எனக் கேட்டார். அந்தப் பெண் "சீ போ அது அப்படித்தான்" என்று கடிந்து கொண்டது. ஆனால் அவளுக்குப் பின்னால் நின்ற பெண்,

"இது எங்கள் கல்லூரி மரபு. அதாவது அக்கா என்றால் எமது கல்லூரியின் பழைய மாணவியே! பின் ஆசிரியையாய் உப அதிபராய், அதிபராய் ஆவது அவர்களை மாணவியராக இருந்தபோது அழைத்த மாதிரியே தொடர்ந்தும் 'அக்கா' என அழைப்போம். மாணவியரில்லாமல் ஆசிரியையாகவே பதவியேற்று வந்தவர்களை அவர்களின் பெயரால் அழைப்போம்" என விளக்கினார்.

அங்கே தேவாரமும் போற்றித் திருவகவலும் மகாத்மா காந்தியடி களின் "ரகுபதி ராகவ ராஜாராம்" என்ற சர்வ தர்மப் பிராத்தனையும், கல்லூரிக் கீதமும், தேசிய கீதமும் பாடப்பட்டது. சைவத் தமிழ்க் கலாசாலையில் சர்வதர்மப் பிரார்த்தனையா! என்று நாரதருக்கு அதுவும் ஆச்சரியமாகவே இருந்தது. அங்கிருந்து சுற்றிலும் நோட்டமிட்டார். மா, பலா, வாழை என முக்கனி தரும் மரங்களுடன் சேர்ந்து தென்னை இளங்கீற்றுச் சுகமான தென்றலாக வீசியது. அந்தச் சுகத்தை அனுபவித் தவர் அதன் மறுபக்கத்திற்குச் சென்றார். அங்கு பாலர் வகுப்பில் இரு வயதான ஆசிரியைகள் சிறுவர்களுக்கு மிகவும் அன்புடன் பாடம் கற்பித்துக் கொண்டிருந்தனர். அவர்களையும் அமிர்த வல்லி அக்கா, ருக்மணி அக்கா எனச் சொல்லக் கேட்டு இவர்களும் மாணவ ஆசிரியை கள் போலும் என நினைத்துக் கொண்டு காதைக் கொஞ்சம் தீட்டிக் கூர்ந்து கேட்டார். எங்கிருந்தோ இனிய இசை தென்றலில் மிதந்து வந்தது. அந்தத் திசையை நோக்கிச் சென்றார்.

அதுதான் நுண்கலை வளாகம். அங்கே பகுதி பகுதியாக மாணவியர் இருந்து இசையும் வீணை வயலின் போன்ற இசைக் கருவிகளும் மிருதங்கமும் பயின்று கொண்டிருந்தனர். அங்கே ஒரு பக்கத்தில் நடன

வகுப்புக்களும் நடந்தன. அங்கு ஒரு மூலையில் அன்னை வித்யாதாயினி இருந்து ரசித்துக் கொண்டிருந்தார்.

நாரதர் மெதுவாக அவரிடம் சென்று "அன்னையே நாம் சத்திய லோகம் செல்வோமா"? எனக் கேட்டார். "எல்லாம் பார்த்துவிட்டாயா? சரி நீ போய் வா நாரதா. பரமசிவன், மஹாவிஷ்ணு ஆகியோரையும் தேவியரையும் நான் கேட்டதாகச் சொல். உன் தந்தையைக் கவனித்துக் கொள் நாரதா" என்றார்.

"தாயே நீங்கள் இல்லாமல் நான் எப்படிப் போவேன். தங்கள் வீணா கானம் என்ற இசை மழை இல்லாமல் தேவலோகம் வரண்டு காட்சி யளிக்கிறதே!" என்றார்.

"இந்தச் சர்வகலைகளையும் அவற்றின் இனிய சுகத்தையும் விட்டு விட்டு என்னால் இப்பொழுது வரமுடியாது நாரதா இன்னும் சில காலத்தின் பின் வருகிறேன் நீ போ" என்றார்.

வேறு வழி தெரியாமல் கண்ணீர் சோர விடை பெற்றுக்கொண்டு நாரதர் வெளியே வந்தார். அப்பொழுது கல்லூரியின் பிரதான மண்டபப் பக்கத்திலிருந்து பாட்டும் ஜதிச் சத்தமும் கேட்டது. என்ன அது என அறியும் ஆவலில் அங்கு சென்றார். அங்கே

**"ஆழி சூழ் உலகமெல்லாம் பரதனே ஆள நீ போய்**
**தாழிரும் சடைகள் தாங்கித் தாங்கரும் தவ மேற் கொண்டு**
**பூழி வெங் கானம் புக்குப் புண்ணியத் தலங் களாடி**
**ஏழிரண்டாண்டின் பின் வா என இயம்பினன் மன்னன்"**

என்ற கம்பராமாயணப் பாடலை ஒரு பெண் மிகவும் கம்பீரமாகப் பாடக் கைகேயியாக ஒரு பெண் நட்டுவாங்கத்திற்கேற்ப அபிநயித்து ஆடிக் கொண்டிருந்தார். பக்கத்தில் இராமராக நடிக்கும் பெண் புன்னகை மாறாமல் கேட்டுக் கொண்டிருந்தார். அங்கேயும் வேதமாதா வீணா புத்தக தாரிணி அமர்ந்திருந்து அந்த நாட்டிய நாடகப் பயிற்சியைப் ரசித்துக் கொண்டிருந்தார். இயல், இசை, நாடகம் என முத்தமிழும் இங்கே இருக்கிறது. அதனால்தான் வேத ஞான வித்தகி அன்னை சாரதா தேவி இங்கேயே இருந்துவிட்டார். அவரை எப்படி இங்கிருந்து ப்ரம்ம லோகத்திற்குக் கிளப்பப் போகிறேன் என நாரதர் வருந்தினார்.

பின் அவரும் அதைப் பாாத்துக் கொண்டு அங்கே ஒரு மூலையில் மெய் மறந்திருந்துவிட்டார். திடீரென விடுதிப் பக்கம் கலகலவென மாணவர்கள் பேசிச் சிரிக்கும் சத்தம் கேட்டது, என்ன வந்துவிட்டார்களா

எனப் போய்ப் பார்த்தார். நடன ஆசிரியரும் வகுப்பை முடித்துக்கொண்டு மாணவர்களை அனுப்பினார். அது மதிய உணவு வேளை எனத் தெரிந்தது. வழமைபோல வரிசையில் நின்று உணவறைக்குள் சென்று உணவைப் படைத்துத் தேவாரம் பாடிவிட்டு அமர்ந்து உண்டனர். அதன் பின் தத்தமது விடுதி அறைகளுக்குள் சென்று தமது அலங்காரங்களைத் திருத்திக் கொண்டு மீண்டும் வகுப்புக்களுக்குச் சென்றனர். இதற்கிடையில் நாரதருக்கு வகுப்புப் பக்கம் என்ன நடக்கிறது என அறியும் ஆவல் எழுந்தது. அங்கேயும் மாணவியர் தமது உணவுப் பொட்டலங்களைப் பிரித்து உண்டனர். சிலர் ஒருவருக்கு மற்றவர் கொடுத்தும் வாங்கியும் பகிர்ந்தும் உண்டனர். இவையெல்லாம் நாரதர் தேவலோகத்தில் காணாதவை இந்த மனித நேயத்தைப் பார்த்து வியந்தார்.

பின் அவருக்குக் கல்லூரி வளாகத்தைச் சுற்றிப் பார்க்கும் ஆவல் எழுந்தது. பகுதி பகுதியாக வாழைத் தோட்டங்களும், மரவள்ளி, மிளகாய் மற்றும் காய்கறிச் செடிகளும் வளர்க்கப்பட்டிருந்தன. நாரதர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே கடைசிப் பாட நேரமாகிவிட்டது. மாணவர்கள் வந்து தமது பயிர்களுக்கு நீர் ஊற்றினர். களையெடுத்தனர். வெள்ளைப் பாவாடை தாவணியுடன் யாழ்குடாநாட்டின் செம்மண்ணில் புதைந்த அவர்கள் கால்கள் செம்பஞ்சுக் குழம்புக்குள் புதைந்து மீள்வது போல இருந்தது.

அப்பொழுது கல்லூரியின் கடைசி மணி அடித்தது. நாரதர் விடுதி மாணவியர் பின்னால் போனார். அவர்கள் போய் உடை மாற்றித் தேனீர் அருந்தி விட்டுத் திறந்த வெளி அரங்கிற்குள் பந்து, வலை போன்ற விளையாட்டு உபகரணங்களுடன் வந்தனர். அதுவும் நாரதருக்குப் புதினமாக இருந்தது. திறந்த வெளி அரங்கின் மத்தியில் இருந்த வில்வ மரத்தின் மேல் ஏறி அமர்ந்து கொண்டார். மாணவியர் வலை பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் விளையாடினர். பின் தம் விடுதி அறைகளுக்கு முன்னாலிருந்த பூஞ்செடிகளுக்கு நீர் ஊற்றினர். சிறந்த பூப்பாத்திகளுக்குப் பரிசுகளும் வழங்கப்படுவதாகக் காற்று வாக்கில் ஒரு செய்தி வந்து நாரதர் காதில் விழுந்தது. அப்படியா என நினைத்துக் கண்ணகி இல்லம்தான் சிறந்ததாகத் தெரிகிறது என நினைத்தார். அஙகே ஒரு மாணவி ஒவ்வொரு முறையும் எப்படித்தான் அவர்கள் பரிசைத் தட்டிக் கொள்கின்றார்களோ எனக் குறைப்பட்டுக் கொண்டாள். தனக்குக் கிடைக்காத வருத்தம் அவளுக்குப் பாவம் என ரிஷி நினைத்தார்.

அதன்பின் பெண்கள் முகம் கழுவித் தலை சீவி ஆயத்தமாயினர். இப்பொழுது மகிழ மரத்தில் ஏறி, ஒளிந்து கொண்ட நாரதர் ஜானகி இல்லத்தை நோட்டம் விட்டார். அவர்கள் ஆயத்தமானதும் ஆறு மணிக்கு மணிச்சத்தம் கேட்டது. அனைவரும் வெளியே வந்து வரிசையில் நின்று கோவிலுக்குச் சென்றனர். அவர்களுடன் சென்ற மஹரிஷி அன்னை சரஸ்வதிக்குக் கீழே இருந்து விட்டார். அதைக் கவனித்த அன்னை, "என்ன குருக்களுக்குப் பயமா நாரதா" என நகைத்தார். "எனக்கென்ன பயம்" என நாரதர் வீரம் பேசினார்.

"எனக்கு உன்னைத் தெரியாதா மகனே. ஏன் இன்னும் இங்கே நிற்கிறாய்" என அன்னை கேட்டார். "முழுவதையும் பார்த்துவிட்டுப் போகிறேனே அம்மா" எனக் கெஞ்சினார். அன்னை சரியென அனுமதி அளித்தார். நாரதர் பூசை முடிந்து வந்த மாணவியரைப் பின்பற்றினார். அவர்கள் புத்தகங்களை எடுத்துக் கொண்டு படிக்கப் போக வழமை போல் இசை, வாத்திய மாணவியர் அன்னை கலைவாணியை மகிழ்வித் தனர். நாரதரும் இன்னும் சிறிது நேரம் அன்னையுடன் இருப்போம் என அங்கேயே அமர்ந்துவிட்டர்.

மாலை நேரப் படிப்பு முடிந்ததும் உணவருந்திவிட்டு நாற்சாரத்தின் திண்ணைகளில் ஆங்காங்கே இருந்த இருக்கைகளிலும் கீழேயுமாகப் பெண்கள் கூட்டம் கூட்டமாக இருந்து அளவளாவி மகிழ்ந்தனர். அதற் கிடையில் இன்னொரு மணிச்சத்தம் கேட்டது. எல்லோரும் குருவிக் கூட்டம் கலைவது போலப் பிரிந்து தமது அறைகளுக்குச் சென்றனர். நாற்சாரம் வெறிச் சென்றிருந்தது. விடுதி வார்டன் மட்டும் சுற்றிக் கொண்டிருந்தார். அறைகளுக்குள் இருந்து தேவாரம் பாடும் சத்தம் கேட்டது. லீலாவதி இல்லத்திலிருந்து "கற்பகவல்லி நின் பொற்பதம் பிடித்தேன்" என்ற பக்திப்பாடலை இனிய குரலில் யாரோ பாடினர். லீலாவதி இல்லம் சங்கீத மாணவியரின் சங்கமம் எனலாம். இனிய சங்கீதத்திற்குப் பஞ்சமா அங்கே?

தேவாரம் பாடியதும் விளக்குகள் அணைக்கப்பட்டுப் பெண்கள் படுத்தனர். படுக்கையிலிருந்து கொண்டு பக்கத்துக் கட்டில் பெண்ணுடன் குசுகுசுக்கும் சத்தம் கேட்டது. அதையும் விடுதி வார்டன் கண்காணித்தார். பரீட்சைக்குப் படிக்கும் மங்கையர் புத்தகங்களை எடுத்துக் கொணடு சத்தமின்றி வெளியேறினர். அவர்களுடன் தேவ ரிஷியும் வெளியே வந்தார். இப்பொழுதுதான் அவருக்கு தான் வந்த வேலை ஞாபகத்திற்கு வந்தது. அன்னப் பட்சிக்கு என்ன சொல்லப்

போகிறேன் அன்னை அசையவே மாட்டாராமே என வருந்தியவர் எதற்கும் செந்திருவின் நாயகனான மரகத வண்ணனிடம் ஆலோசனை கேட்போமென வைகுந்தம் நோக்கிச் சென்றார். அந்தப் பரந்தாமன் தானே அனைத்திற்கும் சூத்திரதாரி.

பத்தாவது ஆண்டு நிறைவு விழா மலர்
இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்
சிட்னி, அவுஸ்திரேலியா
அக்டோபர் - 2004

# நேசம் மறக்கவில்லை நெஞ்சம்

## 1

அது சிட்னி நகரின் ஓர் அதிகுளிர் கால மாலை வேளை. ஐந்து மணியளவிலேயே எங்கும் இருள்மயமாக இருந்தது. கஸ்தூரி அப்பொழுதுதான் அலுவலகத்திலிருந்து வந்திருந்தாள். அன்று வழக்கத்திற்கு மாறாகத் தனக்கு முன்னரே வந்துவிட்ட மகள் சம்யுக்தாவைப் பார்க்க அவளுக்கு வியப்பாக இருந்தது.

"என்ன மகள் நேரத்திற்கு வந்துவிட்டாய். மாலையில் வகுப்பு ஏதாவது மட்டமா?" எனக் கேட்டாள்.

சம்யுக்தாவுக்குத் தாயின் வேடிக்கையான பேச்சுக்களும் 'நான் உன் அம்மா' என்று அதிகாரம் செய்யாமல் ஒரு சினேகிதி போல் பாவிப்பதும் அவளுக்குத் தன் அன்னையிடம் பிடித்த பல நல்லம்சங்களில் சில. தாயைப் பார்த்துப் புன்னகைத்தவள், "வகுப்பொன்றும் மட்டமில்லை. ஒரு காரில் வரும் வாய்ப்புக் கிடைத்தது."

"உனது நண்பர்கள் யாராவது கொண்டுவந்து விட்டார்களா?"

"என் நண்பர்கள் இல்லை. உங்கள் நண்பர்தான் அம்மா."

"என் நண்பரா யாரது?" என வியப்புடன் கேட்டவள், 'எனக்கு நண்பர்கள் யாராவது உள்ளனரா' என்றும் நினைத்துக் கொண்டாள்.

மகள் எதையும் கவனிக்காமல், "அன்றைக்குக் கடையில் கண்டோமே சரவணன் அவர்தான். அவரும் எதுவோ படிக்கிறாராம். அந்தப் பக்கமாகத்தான் போகிறேன் என்று கொண்டுவந்து விட்டார்" எனக் கூறினாள்.

மகள் சொல்லி முடிப்பதற்கு முன்னரே கஸ்தூரியின் முகமெல்லாம் சிவந்து கோபம் தலைக்கேறியது. "சம்யுக்தா, உனக்கு நான் அவரை யாரென்று சொன்னேன்?" எனக் கோபமாகக் கேட்டாள்.

தாயின் அத்தகைய கோபத்தை அன்றுதான் முதன்முதலாகக் கண்ட மகள் அதிர்ந்து நின்றாள்.

"அவர் என் ஒரு கட்சிக்காரர் (client) என்றுதானே சொன்னேன். வக்கீலான எனக்கு எத்தனையோ கட்சிக்காரர்கள் இருப்பார்கள் கண்டவர்கள் யாராவது காரில் வரச் சொன்னால் போவதா?" எனக் கோபமாகக் கேட்டாள்.

அது மகளின் மனத்தை மிகவும் பாதித்தது. ஆனால், என்றுமில்லாமல் இன்று இவ்வளவுக்குக் கோபம் வருகிறதென்றால் காரணம் வெறும் காரில் வந்ததில்லை வேறு எதுவோ இருக்க வேண்டும். பொறுமையாகத்தான் விசாரிக்க வேண்டுமெனத் தீர்மானித்தவள், அவளைத் திசை திருப்புவதற்காக "ஏன் இந்தக் கோபம் கனம் கோட்டார் அவர்களே! பணிமனையில் வேலைப் பளுவா அல்லது பிரயாண அசதியா எதுவானாலும் இதோ சுடு சுடு தேனீர்" எனக் கொண்டு வந்து வைத்துவிட்டு உள்ளே போய்விட்டாள். மகளின் குறும்பை ரசித்த அவள் உதடுகள் மலர்ந்தாலும் அவள் உள்ளம் அழுதது.

கஸ்தூரியின் எண்ண அலைகள் பல வருடங்கள் பின் நோக்கிச் சென்றன. இலங்கையின் மத்தியில் கண்டி மாநகரில் அவள் ஆசிரியையாகக் கடமை புரிந்த நாட்களுக்கு இட்டுச் சென்றன. சக ஆசிரியர்களில் ஒருவனான அவனுக்காக அவள் மனம் எனும் மொட்டு அரும்பி மலர்ந்தது. அவன் ஒருவனுக்காக மட்டுமே என்றென்றும் மணம் பரப்புவதற்காகக் காத்திருந்ததைக் கண்ணீருடன் நினைவு கூர்ந்தாள். அவள் வாழ்வில் மலையமாருதம் வீசிய அந்தக் காதல் மலர் அவனாலேயே கசக்கி எறியப்பட்டதையும் நினைத்தாள். அதைத் தொடர்ந்து எத்தகைய துன்பப் புதைகுழியில் அவள் மாண்டு முடிவில் அவளது மதிநுட்பத்தால் ஒருவாறு மீண்டெழுந்தாள்.

அவன் செய்தது துரோகமா? ஏமாற்றா? சந்தர்ப்ப சூழலா? என்று அவளுக்கு அன்றுவரை புரியவில்லை.

பெற்றோரிடம் திருமணத்திற்கு அனுமதி பெற்று வருகிறேன் என்று போனவனிடமிருந்து ஒரு கடிதம்தான் வந்தது.

'என் பெற்றோருக்கு நம் திருமணத்தில் விருப்பம் இல்லாதபடியால் நான் அவர்கள் பார்த்த பெண்ணைத் திருமணம் செய்யத் தீர்மானித்து விட்டேன். தயவுசெய்து என்னை மன்னித்து மறந்துவிடவும்' என்றிருந்தது.

அதைப் பார்த்து அவள் அதிர்ந்து கலங்கிச் செய்வதறியாது திகைத்து நின்றவேளையில் அன்பின் அதீதத்திற்கு ஆட்பட்டு இருவரும் தம் நிலை மறந்து செய்த தவறின் பயன் அவள் உடலில் மாற்றங்களை உணர்த்திய போது கஸ்தூரி ஒரு முற்றிலும் மாறுபட்ட பெண்ணாகி அகமிக மகிழ்ந் தாள்.

அன்று இப்படி ஒரு தவறு நடந்ததற்காக இருவரும் மிக வருந்தினர். முறைப்படி நடக்க வேண்டிய ஒன்று இருவருமே கவனக் குறைவாகி உணர்ச்சிகளுக்கு அடிபணிந்ததால் நடந்துவிட்டதே என்று துன்புற்றனர்.

இன்று கஸ்தூரி அதற்காக மகிழ்ந்தாள். கடவுள் அருள்தான் அது என்று நம்பினாள். தன் வாழ்வுக்கு ஒரு ஆதாரம், ஒரு நோக்குக் கிடைத்த தாகப் புளகிதமடைந்தாள்.

இனி இந்தக் குழந்தைதான் என் எதிர்காலம். இதனை நல்லபடியாகப் பெற்றுச் சிறப்புடன் வளர்ப்பேன் என்று உறுதி கொண்டாள். ஆனால் குழந்தையின் தந்தை பற்றிச் சமூகத்தில் எழும் வினாக்களுக்கு எப்படி விடை பகர்வது அதனால் பிள்ளைக்கு ஏற்படும் அபவாதங்களை எப்படித் தவிர்ப்பது எனச் சிந்தித்தவள் அத்தகைய வினாக்களே தோன்றாத ஓர் இடத்திற்குப் போவதென முடிவு செய்தாள்.

எங்கே என்று நினைத்தவள் எதுவோ ஒரு மன உந்தலில் அவுஸ்தி ரேலியாவுக்குச் சுற்றுலா விசா கேட்டு விண்ணப்பித்தாள். எதுவித கஷ்டமும் இல்லாமல் விசா கிடைத்ததும் உடனேயே புறப்பட்டாள். மனத்தில் ஒரு திகில் இருக்கத்தான் செய்தது. ஆனாலும் துணிவே துணை என்று தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டாள்.

என்னே ஆச்சர்யம்! திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை என்று சும்மாவா பெரியோர்கள் சொன்னார்கள்? சிங்கப்பூரில் அவள் விமானம் மாறி ஏறியபோது அவள் பக்கத்தில் அந்த ஆங்கிலேய மாது இருந்தார். அந்தப் பெண் மேரியாகத் தான் என்றும் வணங்கும் அன்னை துர்க்கா தேவியே வந்தாரோ என்று கஸ்தூரி பின்னர் பல தடவைகள் நினைத்து வியந்திருக்கிறாள்.

மேரி பல மணி நேரப் பிரயாண அலுப்பைப் போக்குவதற்காக அவளுடன் அறிமுகத்தை ஏற்படுத்திக்கொண்டு பேசியபொழுது

கஸ்தூரிக்கும் தன் மனக்குமுறல்களை யாரிடமாவது கொட்டித் தீர்த்து விட வேண்டும் போல் இருந்ததால் தனது அவுஸ்திரேலியப் பயணத் திற்கான காரணத்தைச் சுருக்கமாக எடுத்தியம்பினாள்.

"அங்கே உனக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருக்கின்றார்களா" என மேரி கேட்டதற்கு "இல்லை" என்று பதிலிறுத்தாள்.

"உன் மனத் துணிவை நான் பாராட்டுகின்றேன். நான் ஒரு சட்டத் தரணி. உனக்கு வேண்டிய உதவிகள் யாவையும் நான் செய்கின்றேன்" என அபயம் அளித்தாள்.

சிட்னியில் மேரி அவளுக்கு ஒரு தங்குனர் விடுதியில் இடம் எடுத்துக் கொடுத்து "இரண்டு மூன்று நாட்களுக்கு இங்கே இரு. பின் செஞ்சிலுவைச் சங்கத்தாருடன் தொடர்பு கொண்டு அவர்களின் உதவி பெறலாம்" எனக் கூறிச் சென்றாள்.

மேரி அடுத்தநாளே "அவர்கள் உனக்கு உதவி செய்யச் சம்மதித் துள்ளார்கள். எங்கே வீடு பார்க்கலாம்?" எனக் கேட்டாள்.

"முடிந்தால் உனக்குக் கிட்டப் பார் மேரி. இப்பொழுது எனக்கு உன்னை மட்டும்தான் தெரியும்." என்று கஸ்தூரி கூறினாள்.

"என்னுடனேயே வந்திருக்கிறாயா கஸ்தூரி? நான் தனித்துத்தான் இருக்கிறேன். என் வீடு பெரியது. எனக்கு உன்னை ஏனோ மிகவும் பிடித்து விட்டது" எனக் கெஞ்சினாள்.

கஸ்தூரி மேரியின் அழைப்பை ஏற்று அவள் மனையில் குடிபுகுந்தாள்.

மேரி ஒரு தாய் போல அவளுக்கு மகப் பேற்று நேரத்தில் உதவினாள். அவர்களுக்கிடையே இருந்த இடைவெளி சிறிது சிறிதாகச் சுருங்கி எல்லோரும் ஒரே குடும்பமாயினர். சம்யுக்தா கண்ட ஒரு சொந்தம் மேரி மட்டும்தான். கஸ்தூரி இன்றும் ஆமை போலத் தன் ஓட்டுக்குள்ளேயே தன்னை ஒடுக்கிக்கொண்டாள்.

மேரி அவளுக்கு அவுஸ்திரேலிய நிரந்தரப் பிரசை அந்தஸ்துப் பெற்றுக் கொடுத்து சமூக நலப் பாதுகாப்பு நிதியும் கிடைப்பதற்கு ஒழுங்கு செய்தாள். ஏதாவது வேலைக்குப் போக வேண்டும் என்றபோது "உன் மகள் பாடசாலைக்குப் போகும்வரை அவளைப் பார்த்துக் கொண்டு எனக்கு ஒரு உதவியாளராக இரு. அதன் பின் எல்லாம் பார்க்கலாம்" எனச் சொன்னாள்.

சம்யுக்தா பாடசாலையை ஆரம்பித்த பின் மேரி அவளிடம் “கஸ்தூரி, நீ சட்டம் படிக்கிறாய். நான் அதற்கான எல்லா ஒழுங்கையும் செய்து விட்டேன்” எனக் கூறினாள்.

“என்ன மேரி விளையாடுகிறாயா? நான் சட்டம் படிப்பதா? என்னால் எப்படி முடியும்?” என கஸ்தூரி வியப்புடன் கேட்டாள்.

“ஆமாம், நீதான் படிக்கிறாய். உன் திறமை உனக்குத் தெரியாது. கஸ்தூரி உங்கள் இனத்தவர் மாதிரிக் கல்யாணமானால், குழந்தை பிறந்தால் அதுதான் உலகம் என்று இருக்காதே. கல்விக்கு வயதில்லை. ஆகவே, போய்ப் படி உன்னால் நிச்சயம் முடியும்'' என அனுப்பி வைத்தாள்.

கஸ்தூரி முழு நேரமாகப் படித்த அந்த நான்கு வருடங்களும் மேரி அவளுக்கு ஒரு தாயாய், சகோதரியாய், நல்ல சினேகிதியாய், வேண்டிய நேரங்களில் ஓர் ஆசிரியையாய் இருந்து அவளைப் படிக்க வைத்து மிகத் திறமைச் சித்திகள் பெறச் செய்தாள்.

பட்டம் பெற்றதும் தன் சட்டத்தரணிகள் நிறுவனத்திலேயே சேர்த்து எல்லா வேலை நுணுக்கங்களையும் பழக்கித் தன்னிலைக்கு அவளையும் உயர்த்தி, அனைவரும் உன் வாரிசு ஒன்றை உருவாக்கிவிட்டாய் எனக் கூறுவதைக் கேட்டுப் பெருமிதமும் புளகிதமும் அடைந்த மேரி சென்ற வருடம் இருதய அதிர்ச்சி ஏற்படடுத் திடீரென இறந்தபோது, கஸ்தூரி தனக்கிருந்த ஒரே உறவையும் இழந்து துடித்தாள். பின் ஒருவாறு தெளிந்து தன் மகளின் வாழ்வே தன் வாழ்வாக நினைத்து வாழ்ந்து வந்தாள்.

அண்மையில் அகதிகள் அந்தஸ்துக் கோரிய சரவணனின் விண்ணப்பம் சட்ட உதவி கோரி அவள் கைக்கு வந்தபோது யாது செய்வது? வேறு யாரிடமாவது கொடுக்கவா என நினைத்தாள். ஆனால், ஏனோ மனம் கேட்கவில்லை. ‘கஸ்தூரி உன்னால்தான் எங்களுக்கு இவ்வளவு சுலபமாக நிரந்தரப் பிரசை அந்தஸ்து கிடைத்தது. உன்னால் அங்குள்ள நிலைமையைத் தெளிவாக விளக்க முடிந்தது’ எனப் பலர் பாராட்டக் கேட்டிருக்கின்றாள். குடிபுகல்வு அலுவலகத்திலும் அவளுக் கென்று ஒரு தனி மதிப்பு இருந்தது. எனவே ‘என்னால் முடிந்த ஒன்றை வேறு யாரிடமாவது கொடுத்து ஏதாவது சிக்கல் ஏற்பட்டால் என் மனச்சாட்சி என்றுமே என்னை மன்னிக்காது. அது மட்டுமா? என்

வாழ்வில் ஆதாரமான அதி உன்னதமான ஒரு மகளைத் தந்தவன் அவன்தானே. அதற்கு நன்றிக் கடனாகவாவது இருக்கட்டும்' என்று தீர்மானித்தவள் அவனைத் தொலைபேசியில் அழைத்தாள்.

## 2

கஸ்தூரி குறித்த நேரத்திற்கு யாரோ ஒரு சட்ட வல்லுனர் செல்வி நடராசாவைப் பார்க்க வந்தவன் அது கஸ்தூரி எனக் கண்டு அகமிக மகிழ்ந்தான்.

பல வருடங்களின் பின் அவனைக் கண்ட கஸ்தூரியின் மனம் பதகழித்தது. தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு தனது ஒரு கட்சிக்காரர் போல மட்டுமே அவனைப் பாவித்துத் தனக்கு வேண்டிய விபரங்களை மட்டும் சேகரித்துவிட்டு அனுப்பி வைத்தாள். அவளுடன் பயிற்சி பெறும் ஒரு இளம் வக்கீலும் இருந்ததால் சரவணனாலும் தனிப்பட எதுவுமே கதைக்க முடியவில்லை. கஸ்தூரி குடிபுகல்வு அலுவலகத்தினருடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு வேண்டிய தகவல்களைக் கொடுத்து வெகு விரைவிலேயே நிரந்தரப் பிரசை அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத் தாள்.

கடிதம் கைக்குக் கிடைத்த அன்று, தொலைபேசியில் அவளுக்கு நன்றி கூறியவன், பின் “நீ எப்படி இருக்கிறாய் கஸ்தூரி” என்றான்.

அந்த ஆதரவான வார்த்தையை தன் இதயம் நிறைந்தவனின் வாயி லிருந்து கேட்டு சிறிது கலங்கியவள் பின் ஒருவாறு தெளிவடைந்து “நான் நன்றாக இருக்கிறேன்” எனக் கூறித் தொடர்பைத் துண்டித்தாள்.

‘எனக்குத் தெரிந்த ஒருவருக்கு நான் செய்ய வேண்டிய கடமையைச் செய்தேன்’ எனக் கஸ்தூரி தன் மனத்திற்குக் கடிவாளமிட நினைத்தாள்.

ஆனால், அன்று கடையில் கண்டவன் “கஸ்தூரி” என தாயைக் கண்ட குழந்தையைப் போல தாவி வந்தான். மகள் அருகில் நின்றாள். சிறிது தடுமாறியவள் “இவள் என் மகள்” என வேறு வகையின்றி அறிமுகம் செய்து வைத்தாள்.

அவன் முகத்தில் ஒரு மின்னல் கீற்று வந்து மறைந்தது. இதழ்கள் மகிழ்வில் மலர்ந்தன. சம்யுக்தாவைப் பாசத்துடன் அவன் பார்த்ததைக் கஸ்தூரி கவனித்தாள். அவள் படிப்புப் பற்றி விசாரித்தான். “உன் அம்மா மிகத் திறமைசாலி தெரியுமா?” என வினவினான்.

சம்யுக்தாவும் விட்டுக் கொடுக்காமல் "என் அம்மாவை நினைத்து எனக்கு என்றும் பெருமைதான்" எனச் சொன்னாள்.

கஸ்தூரிக்குப் புரிந்தது. சரவணன் மகளைக் கண்டு கொண்டான் என்பது. இனி என்ன செய்யலாம் என அவள் சிந்தித்துத் தெளிவதற்குள் அவன் அவளைத் தேடிப் பல்கலைக்கழகத்திற்கே போய் விட்டான். படிக்கிறேன் என்று அவன் சொன்னது பொய் என்று கஸ்தூரிக்குப் புரிந்தது. ஆனால், அடுத்து என்ன செய்வதென அவளுக்குத் தெரிய வில்லை. சம்யுக்தாவிடமிருந்து அவள் எதையும் மறைக்க நினைக்க வில்லை. அவள் படிப்பு முடியட்டும் எனக் காத்திருந்தாள்.

உடையும் மாற்றாமல் பழைய நினைவுகளில் உழன்று தவித்தாள். மகள் இரண்டு மூன்று தடவைகள் எட்டிப் பார்த்ததும் தெரியாது.

ஒருவாறு எழுந்து முகம் கழுவி ஸ்வாமி கும்பிட்டாள். 'இறைவா நான் கஷ்டப்பட்டுத் தேடிய என் மன அமைதியைக் கெடுத்துவிடாதே' என மனமுருகி வேண்டினாள். பக்கத்தில் கண்ணாடிச் சட்டத்திற்குள் இருந்த மேரி அவளைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

'என் இனிய தோழியே! உன் ஆலோசனை எனக்கு வேண்டிய நேரத்தில் இல்லாமல் போனாயே' என்று கண் கலங்கினாள்.

அப்பொழுது தான் மகளை வீணாகக் கோபித்தது நினைவுக்கு வர மகளைத் தேடிச் சென்றாள். படித்துக் கொண்டிருந்தவளைப் பின் பக்க மாக அணைத்து அவள் தலையில் முகம் பதித்தாள். அது கஸ்தூரி மகளிடம் மன்னிப்புக் கோரும் ஒரு பாங்கு.

கைகளைப் பின்னால் போட்டு அன்னையை அணைத்துக் கொண்டவள் "என்னை மன்னிச்சிடுங்க அம்மா" என்றாள். அவள் கண்ணின் மணிகள் நீரில் மிதந்தன.

மகளை இன்னும் இறுக அணைத்தவள் "உன் தவறு ஒன்றும் இல்லை கண்ணம்மா. எதுவோ நினைவில் உன்னைக் கோபித்து விட்டேன். மறந்து விடடா" எனக் கூறினாள்.

தாயை விலக்கியவள் "ஒன்று கேட்கவா" என்றாள். அவளுக்கு மேரி, 'உன் தாய் ஒரு கர்மயோகி. உனக்காகவே இங்கு வந்து ஒளிந்து கொண்டவள். அவள் மனம் நோக என்றும் நடக்காதே' என்று அடிக்கடி சொன்னது நினைவுக்கு வந்தது. இருப்பினும் மனத்தை அரித்துக் கொண் டிருக்கும் அந்தச் சந்தேகத்தைக் கேட்காமலும் இருக்க முடியவில்லை.

கஸ்தூரி என்ன என நிமிர்ந்தாள். மனத்தில் சிறிது கலக்கம் எட்டிப் பார்த்தது.

"அவர் என் அப்பாவா?" என்ற கஸ்தூரி பயந்த வினாவே மகளால் தொடுக்கப்பட்டது.

கஸ்தூரியின் கண்களுள் திரண்டு கன்னங்களில் உருண்ட முத்துக் களே மகளுக்குப் பதிலாயின.

மகள் "அம்மா..." என அன்னையை அணைத்துக் கொண்டாள்.

கஸ்தூரியின் நெஞ்சக் குழியை எதுவோ அடைத்துக் கொண்டது. வார்த்தைகள் வர மறுத்து உள்ளே சிக்கித் தவித்தன. ஒருவாறு தன்னை நிலைப்படுத்தியவள், "இவற்றையெல்லாம் உன் படிப்பு முடிந்ததும் சொல்லலாம் என்றிருந்தேன். ஆனால் கடவுள் வேறு மாதிரிச் செய்து விட்டார். ஆமாம் சம்யுக்தா! அவர்தான் உன் தந்தை. நீ எப்படித் தெரிந்து கொண்டாய் அவர் ஏதாவது சொன்னாரா?"

மகள் தனக்கேயுரிய குறும்புடன், "என் மூளையைக் கொஞ்சம் பிசைந்தேன். சாந்தமே உருவான என் அம்மாவை இப்படி நிலை தடுமாற வைத்தது என்ன என்று சிந்தித்தேன். அப்பப்பா என்ன கோபம் அது! மேரி ஆன்ட்டிகூட இல்லையே! என்ன செய்வது எனத் தெரியாமல் பயந்தே போனேன் தெரியுமா" என்றவள் தொடர்ந்தும், "மேரி ஆன்ட்டி அவ்வப்போது தன்னை மறந்து உங்களைப் பற்றிச் சொல்லிப் பெருமைப் பட்டுக்கொள்வார் அவற்றையும் உங்களின் இன்றைய இந்த நிலையை யும் இணைத்துப் பார்த்தேன். எனக்குத் தெரியும் அம்மா! அன்பு ஏமாற்றப்படும்போது அது எவ்வளவு வெறுப்பையும் கோபத்தையும் ஏற்படுத்தும் என்பது. நீங்கள் விரும்பாத எதையும் நான் என்றும் செய்ய மாட்டேன். ஆனால் அவரைப் பார்த்ததும் எதுவோ ஒரு மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டது. நன்கு தெரிந்தவர்போல் இருந்தது. கேட்டதும் மறுக்க முடியவில்லை. அதில்லாமல் கண்டவர்கள் காரில் வரும் மாதிரி யெல்லாம் என் அம்மா என்னை வளர்க்கவில்லை" என்றவளின் கண் இமைகள் நிறைந்து கன்னங்கள் நனைந்தன.

கஸ்தூரி அதிர்ந்தாள். 'என்ன வார்த்தை கூறிவிட்டேன். கோபம் என் அறிவை இவ்வளவுக்கா மழுங்கடித்துவிட்டது. என் செல்வ மகளிடம் ஒரு தாய் கேட்கக்கூடாத வார்த்தையைக் கேட்டேனா' எனச் செயலிழந்து போய் அருகிலிருந்த கதிரையில் தொப்பென இருந்தாள்.

சம்யுக்தா சமாளிக்க நினைத்தாள். ‘‘என்னம்மா இது சும்மா விளையாட்டுக்குச் சொன்னால் இப்படியா இடிந்து போவது? நேரமாகி விட்டது. வாங்கோ சாப்பிடுவோம்’’ என எழுந்தாள்.

கஸ்தூரி அவள் கைகளைப் பற்றித் தன் அருகே இருத்தினாள். பின் “மகள்! பெண்மையின் வரம்புகளை மறந்து நான் செய்த தவறுக்குப் பரிசாக நீ கிடைத்தபோது உன்னை என் வாழ்வின் ஆதாரமாக எண்ணிப் பேருவகை அடைந்தேன். ஆனால், தந்தைப் பாசமே இல்லாமல் நீ வளர்ந்தது என் தவறுக்கு உனக்குக் கிடைத்த தண்டனை போல் ஆகிவிட்டது இல்லையா? எனக்கொன்று தெரிய வேணும் சம்யுக்தா. உனக்கு அவரை நான் முறையாக அறிமுகம் செய்து வைக்கவா? அது என் கடமை என்று நினைக்கின்றேன். அவருக்கும் உன்னைப் பார்ப்பதில் விருப்பம் இருப்பதால் இனியாவது உனக்கு அந்த அன்பு கிடைக்கட்டும். உன் தந்தை மிகவும் நல்லவர் தெரியுமா” என்றாள், எங்கோ பார்த்துக் கொண்டு.

அதெல்லாம் வேண்டாம் என்று சொல்ல நினைத்தவளின் மனத்தில் ஒரு ஞானோதயம். அம்மாவின் மனச் சுமை நீங்க வேண்டுமானால் இவர்கள் இருவரும் சந்திக்க வேண்டும் எனத் தீர்மானித்தவள்,

‘‘ஒன்று சொல்லவா அம்மா! நான் அப்பாவின் அரவணைப்பும் அன்பும் இல்லையென்று என்றைக்கும் ஒரு சிறிதளவாவது உணர்ந்ததோ, வருந்தினதோ இல்லை. அப்படிக் குறையே தெரியாமல் என்னை வளர்த்தீர்கள். ஆகவே அதற்காக உங்களுக்கு ஒரு சிறு மன வருத்தமும் தேவையில்லை” எனத் தாயைப் பின்பக்கமாக அணைத் தவள், பின் “என் அம்மாவின் இதயக் கோவிலில் என்றும் தீபமாக ஒளிர்ந்து கொண்டிருப்பவர் எப்படி நல்லவரில்லாமல் இருக்க முடியும்? ஏன் அம்மா அத்தகைய நல்லவர் திட்டமிட்டு உங்களை ஏமாற்றுவாரா? எதுவோ சந்தர்ப்பம் சூழ்நிலையாக இருக்கலாம் இல்லையா? நீங்கள் அவரை மன்னிக்கக்கூடாதா?” என்றாள் கொஞ்சலாக.

கஸ்தூரி மகளையே வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்றாள். அவள் இதழ்க்கடைகள் குறும்பில் விரிந்தன. சம்யுக்தா “என்னம்மா” என்றாள் செல்லமாக. “சபாஷ் கண்ணா! தமிழ் உன் நாவில் சரளமாகத் தவழ் கின்றதே. இதயக் கோவில், தீபம் என்று வார்த்தைகளை அள்ளி வீசுகின்றாயே. நீ அவுஸ்திரேலியாவிலே பிறந்து வளர்ந்தவள் என்று உன் பிறப்புப் பதிவுப் பத்திரத்தைக் காட்டியும் நம்பவைக்கலாம் போலத் தெரியவில்லையே.” என்று அந்தச் சூழ்நிலையை முற்றிலும் மறந்து குதூகலித்தாள்.

"அப்பாவும் நான் நன்றாகத் தமிழ் பேசுகின்றேன் என்று சொன்னார். பின், எழுத வாசிக்கத் தெரியுமா என்று கேட்டார். நான் எங்கள் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கக் காரியதரிசியாக இருக்கின்றேன் என்றேன். இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? கஸ்தூரியின் மகள் அல்லவா? என்றார். உங்களில் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார் தெரியுமா?" எனக் கூறினாள்.

கஸ்தூரியின் முகத்தில் ஒரு சோகம் கவிந்தது. பின் இதில் "கஸ்தூரி யின் மகள் என்ன சம்யுக்தா! எல்லாம் மேரிதான் செய்தாள். நீ பிறந்த போது அந்நிய நாட்டில் வந்து குழந்தை பெற்றுவிட்டேனே! எப்படி வளர்ப்பதென்று குழம்பி நின்றேன். உன்னை வாய் நிறைய 'என் கண்ணே' என்று சொல்லிக் கொஞ்சுவதா, அல்லது 'டார்லிங்' என்று கூப்பிடுவதா என்று தெரியாமல் கலங்கி நின்றேனே!

அப்பொழுது மேரிதான் 'ஒரு குழந்தைக்குத் தாய்மொழி தெரிய வேண்டியது மிகவும் அவசியம் கஸ்தூரி. அல்லது அவர்களுக்கு தம் அடையாளம் எது என்று தெரியாமல் போய்விடும். அவுஸ்திரேலியாவில் அவள் ஆங்கிலத்தை எங்கேயும் எப்போதும் கற்கலாம். அதில் எத்தகைய கஷ்டமும் இருக்காது. ஆனால், தமிழை வீட்டில், உன்னிடம் மட்டும்தான் கற்க முடியும். எனவே நீ குழந்தையுடன் தமிழிலேயே பேசு' என்று எனக்கு உறுதியளித்தாள்.

உன்னுடன் பேசுவதற்காக அவள் சில தமிழ் வார்த்தைகளைப் பழகினாள். நீ குழந்தையாக இருந்தபோது நீங்கள் இருவரும் தமிழ் பேசுவதைப் பார்த்து, என் கவலைகளையெல்லாம் மறந்து சிரித்திருக் கின்றேன் தெரியுமா?" என்றாள்.

"அதுமட்டுமா? ஆங்கில எழுத்துக்களுடன் தமிழ் எழுத்துக்களையும் பழக்கு. அவள் எல்லாம் பழகுவாள். ஒன்றும் குழம்ப மாட்டாள். என்று வற்புறுத்தினாள். அப்படியே நீயும் எதுவித பிரச்சினையும் இல்லாமல் ஒரே சமயத்தில் இரண்டையும் பயின்றாய். மேரி வேலை விஷயமாக சிங்கப்பூர், மலேஷியா என்று போகும்போதெல்லாம் தமிழ் புத்தகங் களைக் கொண்டுவந்து குவித்தாள். ஒரு நாளைக்கு ஒரு பக்கமாவது தமிழ் வாசிக்கும்படி உன்னை ஊக்குவித்தாள். அதற்காக உனக்குப் பரிசுகள் கூடத் தந்தாள்'' என்று கஸ்தூரி பழைய நினைவுகளில் தோய்ந்தாள்.

சம்யுக்தாவுக்குத் தெரியும் மேரியை நினைத்தால் கஸ்தூரி நன்றியால் உருகிப் போவாள் என்று எனவே, பேச்சை மாற்ற நினைத்து,

“என்னம்மா அப்பாவை மன்னிக்கலாமா?” என வேடிக்கையாகக் கேட்டாள்.

கஸ்தூரிக்குச் சிரிப்பு வந்தது. “அப்பாவுக்குப் பெண் தப்பாமல் பிறந்திருக்கிறாய்” என முணுமுணுத்தவள் “சரி. யோசிக்கிறேன்” எனச் சொல்லிப் போனாள்.

சம்யுக்தாவும் அம்மா மனம் நிறைந்த அன்பை வைத்துக் கொண்டு நடிப்பா? என நினைத்துப் புன்னகைத்தாள்.

# 3

கஸ்தூரிக்கு இரவெல்லாம் தூக்கம் இல்லை. அவள் மனத்தில் பல விடையே இல்லாத வினாக்கள். அன்று அப்படி நெஞ்சில் சிறிதும் ஈரமே இல்லாமல் மொட்டையாக ஒரு கடிதம் எழுதி நிராகரித்துவிட்டு, இன்று மகளைப் பார்ப்பதில் அப்படி என்ன ஓர் ஆர்வம் என்பது அவளுக்குப் புரியவில்லை.

“உங்கள் நண்பர்கள் யாரென்று சொல்லுங்கள் நீங்கள் யாரென்று சொல்கிறேன்” என்று ஒரு முதுமொழி இருக்கிறது கஸ்தூரி. அதன்படி பார்த்தால் நீ உன்னையே அர்ப்பணிக்கும் அளவுக்கு உன்னைக் கவர்ந்த ஒருவர் உனக்குத் துரோகம் செய்திருப்பார் என்று என்னால் நினைக்கவே முடியவில்லை” என மேரி பல சந்தர்ப்பங்களில் சொல்வாள்.

“நடந்துவிட்டதே மேரி, நான் உன் முன்னால் நிற்பது உன் கண் களுக்குத் தெரியவில்லையா” என சினந்து கொள்வாள்.

மேரி ஒருநாளும் அந்தப் பேச்சைத் தொடர மாட்டாள். ஏனென்றால் கஸ்தூரி சரவணன் மேல் கொண்ட கோபம்தான் வீம்பாக மாறி அவளைச் செயல் படுத்துகிறது. அவன் மேல் இரக்கம் ஏற்பட்டால் அவள் செயலிழந்து விடுவாள் என்பது மேரிக்குப் புரிந்திருந்தது. அந்தக் கடிதம் கூட அப்படி ஒரு நோக்கத்துடன் தான் எழுதப்பட்டிருக்கலாம் என நினைத்தாள்.

ஆனால் சம்யுக்தாவின் திறமைகளையும், நற் பண்பினையும் யாரும் பாராட்டும்போது, “இவையெல்லாம் தனித்து வளர்ப்பினால் மட்டும் வராது கஸ்தூரி. பிறப்பிலும் சிறிதளவாவது இருக்க வேண்டும் பிள்ளை இவற்றைத் தந்தையிடமிருந்து சுவீகரித்திருக்க வேண்டும்” என்பாள்.

அப்பொழுது கஸ்தூரியின் கண்களில் கருணை சுரப்பதை மேரி கவனித்திருக்கிறாள்.

"சில சமயங்களில் முகமே தெரியாத ஒருவருக்காக உனக்கு ஏன் இந்த இரக்கம் என்று எனக்கு ஒரு சிறிதும் புரியவில்லை மேரி" எனக் கேலியும் செய்வாள்.

அப்பொழுதெல்லாம் மேரி, "அந்த முகமே தெரியாத ஒருவர் உங்கள் மூலமாக எனக்கு அனுப்பிய வசந்தங்கள் என்ன என்பது உனக்குப் புரியாது கஸ்தூரி" என்பாள்.

மேரி சொன்னது போல் ஏதாவது தவிர்க்க முடியாத இக்கட்டில் அகப் பட்டிருப்பாரோ என்ற ஒரு இரக்க விதை இன்று கஸ்தூரியின் மனத்தில் முதல் தடவையாக ஊன்றியது. மகள் சொன்னதையும் நினைத்துக் கொண்டாள். தன்னால் அவனை மன்னிக்க முடியுமோ இல்லையோ தந்தையையும் மகளையும் முறைப்படி அறிமுகம் செய்ய வேண்டியது ஒரு தாயின் தலையாய கடமை என முடிவு செய்தாள்.

மறுநாள் அலுவலகத்தில் ஓய்வாக இருந்த வேளையில் சரவணன் வீட்டுத் தொலைபேசி இலக்கங்களை அழுத்தி எதிர்க்குரலுக்குக் காத்தி ருந்தாள். அங்கே ஒரு பெண் குரல் ஒலித்தது. அது அவன் மனைவி. தன் வகுப்புத் தோழி மாலதி என்பது தெரிந்திருந்தும் காட்டிக் கொள்ளாமல் "சரவணனுடன் பேசலாமா? நான் வழக்கறிஞர் செல்வி நடராசா பேசு கின்றேன்" என்றாள்.

எதிர்க்குரல் மிகவும் ஆவலாக "நீயா கஸ்தூரி?" என்றது.

'அகப்பட்டுக் கொண்டேனா' என நினைத்து மௌனம் சாதித்தாள்.

"என்ன கஸ்தூரி என்னைத் தெரியவில்லையா" என மாலதி கேட்டாள்.

'தெரியாமல் இருப்பதே எல்லோருக்கும் நல்லது மாலதி' என வருத்தத் துடன் நினைத்தவள், "தொலைபேசியில் முகம் தெரியாதே நீங்கள் யாரென்று எனக்கு எப்படி தெரியும்?" எனக் கேட்டாள்.

"எனது கடவுச் சீட்டு (Passport) முதற் கொண்டு சகல விபரங்களையும் பார்த்த உனக்கா என்னை யாரென்று தெரியவில்லை. ஏற்கனவே நீ அழுத்தம். இப்பொழுது வக்கீல் வேறு, சொல்லவா வேணும். சரிங்க வழக்கறிஞர் நடராசா அம்மா!" என்று அழுத்திச் சொன்னவள் பின் "எனக்கு இதைச் சொல்லடி" என்றாள்.

கஸ்தூரிக்கு 'பக்' என்று சிரிப்பு வந்தது. இனிமையான பாடசாலை நினைவுகளில் சிறிது நேரம் மிதந்தாள். அவள் கண் முன்னால்

எதையாவது அவசரமாகச் செய்துவிட்டுப் பின் அதைச் சரி செய்யத் தெரியாமல் அவதிப்படும் மாலதி நின்றாள். கஸ்தூரி அவளை எப்போதும் 'அவசரக்குடுக்கை' என்று தான் செல்லமாக அழைப்பாள்.

மாலதி அதே கோபத்துடன் "உன் பன்னிரண்டாம் வகுப்பில் ஓர் அவசரக் குடுக்கை இருந்தாளே அவளை நினைவிருக்கிறதா?" என்று கேட்டாள்.

இனித் தவிர்க்க முடியாது என்றதால் "ஓ மாலதி நீயா" எனக் கேட்டாள்.

"ஆமாம் கஸ்தூரி. நான்தான் எத்தனை வருடங்கள் ஆகிவிட்டதடி. எனக்கு உன்னைப் பார்க்க வேண்டுமே" என்றாள் கெஞ்சலாக.

"அதெல்லாம் எதற்கு மாலதி?" என்றாள். தோழியின் வாழ்வில் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடாது என்பதற்காகவும் கஸ்தூரி சரவண னைத் தூரத்தில் வைக்க நினைத்தாள். ஆகவே இப்பொழுது சினேகிதி யையும் தவிர்க்க நினைத்தாள்.

"நீயெல்லாம் பெரிய வழக்கறிஞர் என்னையெல்லாம் பார்ப்பாயா?" என மாலதி சொன்னாள்.

"அப்படி இல்லை மாலதி......" எனக் கஸ்தூரி இழுத்தாள்.

"வேறென்னம்மா! சக்களத்திகள் சண்டை வருமென்று பயப்படு கிறாயா?"

"மாலதி.....!!" எனக் கஸ்தூரி அதிர்ந்தாள்.

"என்னம்மா ஆச்சர்யமாக இருக்கிறதா? இன்று நேற்றல்ல கஸ்தூரி இருபது வருடங்களுக்கு முன்னரே தெரியும். ஆனால் ஒரே ஒரு நாள் தாமதமாகத் தெரிந்ததால் என் தோழிக்கே துரோகம் செய்துவிட்டேன் என்ற வேதனையுடன் வாழ்கிறேன்"

"அன்றைய என் கஸ்தூரி கருணையே வடிவானவள். நாங்கள் அவளை 'அன்னை கஸ்தூரிபாய்' என்றுதான் அழைப்போம். ஆனால் இன்று உன்னிடம் ஒரு அன்பான வார்த்தைக்கே பஞ்சம் வந்துவிட்டதே ஏன் கஸ்தூரி அவ்வளவுக்கா மாறிவிட்டாய்?"

"எப்பொழுதும் எதையும் அறிவுபூர்வமாகச் சிந்திக்க வேண்டுமென்று எனக்கு அறிவுறுத்துவாயே அந்த உன் அறிவு இன்று எங்கே ஒளிந்து கொண்டது? ஏன் மனம் போனபடி நடக்கிறாய்?" எனச் சிறிது கண்டிப் பாகக் கூறினாள்.

மாலதியின் அந்தச் சொல்லடி கஸ்தூரியைச் சிந்திக்க வைத்தது. அவை அவளுக்கு எதையோ உணர்த்தின. வேண்டுமென்றே "என்ன மாலதி குற்றப் பத்திரிகையை ஒரு நீளத்திற்கு வாசிக்கின்றாய். அப்படி உனக்கு நான் என்ன பாவம் பண்ணினேன்?" எனக் கேட்டாள்.

"எனக்குப் பண்ணினால்தான் பாவமா? என்னைச் சேர்ந்தவர்களுக்குச் செய்தாலும் அது பாவம்தானே! உனக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். உயிருக்குப் பயந்து வந்தவர்களுக்கு நிரந்தரமாகத் தங்குவதற்கு ஒரு இடம் தேடித் தந்திருக்கிறாய். ஆனால் அதை எந்த ஒரு சட்டத்தரணியாலும் செய்திருக்க முடியும். அதைவிட, இத்தனை வருடங்களின் பின் சந்தித்த ஒருவரிடம் எப்படி நலமாக இருக்கின்றீர்களா என்று ஒரு வார்த்தை கேட்டிருந்தாயானால் காலமெல்லாம் உன் அன்புக்காகவே ஏங்கிக் கொண்டிருக்கும் அந்த உள்ளத்திற்கு எத்தகைய ஒரு ஆறுதலாக இருந்திருக்கும். அதை ஏன் கஸ்தூரி நீ செய்யவில்லை. அவ்வளவுக்கா உன் மனத்தில் இரக்கம் செத்து விட்டது?" என மாலதி வினவினாள்.

அதைக் கேட்ட கஸ்தூரியின் கண்களிலிருந்து இரு துளிகள் அவள் கைகளில் விழுந்து தெறித்தன. ஆமாம் இரக்கம் செத்துத்தான் போனதா என நினைத்தாள். பின் "நீ என்ன மாலதி சொல்கிறாய், அதையெல்லாம் கேட்பதற்கு எனக்கு இப்போது என்ன உரிமை இருக்கிறது?" என்றாள்.

"எனக்குத் தெரியும்டி. நீ அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்." எனக் கோபமாகக் கூறியவள், "என் வெட்கத்தைவிட்டு உனக்கொன்று சொல்கின்றேன் கஸ்தூரி. என் கணவனின் மனமெங்கும் இன்றைக்கும் நீதான் வியாபித்து இருக்கிறாய். நீ எய்தவன் இருக்க அம்பை நோகிறாய். சிலரின் சூழச்சிக்குப் பலியானதால் அவரால் எங்கள் திருமணத்தைத் தவிர்க்க முடியவில்லை. அதற்கு அவர் நேர்மைதான் முக்கிய காரணம். அதனால் தெரிந்து அவரும் தெரியாமல் நானும் உன் வாழ்வை வீணாக்கி விட்டுச் சரிப்படுத்தத் தெரியாமல் காலமெல்லாம் வேதனைப்பட்டுக் கொண்டு இருக்கின்றோம். இந்தத் தீயிலேயே நாங்கள் கருகி மடிய வேண்டியதுதானா?" என்றாள். அவள் வார்த்தைகள் கலங்கி அழுகையாகியது.

"உன்னை எனக்கு நன்கு தெரியும் கஸ்தூரி, நீ சாதாரணமாக உன் மனதை ஒருவரிடம் இழந்திருக்க மாட்டாய். அப்படி உன்னை முழுமையாக ஒப்படைக்கும் அளவுக்கு உன் உள்ளத்தில் உயர்ந்திருந்த

ஒருவரை நீ புரிந்து கொண்டது இவ்வளவுதானா? அப்படி அவரைச் செய்ய வைத்தது என்னவாக இருக்கக்கூடும் என்று என்றாவது நினைத்துப் பார்த்தாயா? ஒரு குழந்தைக்குத் தாயாகும் அளவுக்கு அவருடன் நெருங்கிப் பழகிய உனக்கு இது ஏன் கஸ்தூரி புரியாமல் போனது?"

கஸ்தூரி நல்ல தூக்கத்தில் இருக்கும்போது தலையில் ஒரு குடம் நீரை ஊற்றினாற் போல் பல வருடங்களின் பின் திடுக்கிட்டு விழித்தாள்.

"பின் எதுவித விளக்கமுமில்லாத வெறும் அம்பு மட்டுமே வந்து என் இதயத்தைக் குத்திக் கிளறி ரணமாக்கியது. மாலதி நான் என்ன செய்வேன்?'' என்றவளின் வார்த்தைகள் குளறின. விழிக்குளங்கள் உடைப்பெடுக்க ஆயத்தமாயின. அலுவலகத்தில் இருக்கிறேன் என்ற நினைப்பு அதற்கு வரம்பிட்டுத் தடுத்தது.

ஆனால் அந்த நொடியே கஸ்தூரி இதுவரை தன் உள்ளத்தில் உழன்ற துயரங்கள், தோல்விகள், சந்தேகங்கள், கோபதாபங்கள் யாவும் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கப்பெற்று மனம் மிக அமைதி யடைந்ததை உணர்ந்தாள்.

மாலதி சொன்ன அந்த ஒரு வார்த்தை தம் "நேசத்தை அவன் நெஞ்சம் மறக்கவில்லை" என்றது அவள் மன நோய்க்கு ஓர் அருமருந் தாகி அவள் உள்ளம் பரவசமுற்றது.

ஆர்ப்பரிக்கும் தன் இதயத்தை அணையிட்டுத் தடுத்தவள், "தப்புத் தான் மாலதி. என் நம்பிக்கை நட்சத்திரம் சடுதியில் மறையும் என்று நான் எள்ளளவும் எதிர்பார்க்கவில்லை. அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியில் நான் என் சிந்திக்கும் திறனையே இழந்துவிட்டேன். தயவுசெய்து என்னை மன்னித்துவிடம்மா. அவர் வந்ததும் என்னுடன் பேசச் சொல்கின்றாயா" என்றாள்.

சரியென்ற மாலதி, "ஏனடி உனக்கு என்னைப் பார்க்கும் ஆசையே இல்லையா" என்றாள் மிகவும் ஏக்கமாக.

"அவசரப்படாதே மாலதி." என்றவள், "நீ மாறவே இல்லைடி இன்னும் அதே அவசரம்தான்" என்றாள் குறும்பாக.

"நீ மட்டும் என்னவாம்! அதே அழுத்தம்" என மாலதி வார்த்தைகளை அழுத்திச் சொன்னாள்.

கஸ்தூரி மனம் நிறைந்து சிரித்தாள்.

“சிரிச்சிட்டியா கஸ்தூரி” என்ற மாலதிக்குப் பதிலேதும் சொல்லாமல் தொலைபேசித் தொடர்பைத் துண்டித்தவள், ‘நீ ஓர் அதிசயப் பெண் மாலதி. உலகில் எந்தப் பெண்ணுமே தன் கணவனின் மனத்துள் இன்னொருத்தி இருக்கிறாள் என்பதை அதுவே உண்மையாக இருந்தாலும் ஒப்புக்கொள்ள மாட்டாள். என் மனப்போரை முடித்து வைத்ததற்கு உனக்கு என் ஆயிரம் நன்றிகள். உன்னை மனைவியாக அடைந்த அவர் மிகவும் அதிர்ஷ்டசாலி’ என நினைந்து மகிழ்ந்தாள்.

# 4

**மா**லையில் சம்யுக்தா வீட்டிற்கு வந்தபொழுது கஸ்தூரி புடவையில் மிகவும் அலங்கார பூஜிதையாக நின்றாள். தன் அன்னையின் முகம் ஆயிரம் சூரியர்கள் ஒன்று சேர்ந்து ஒளிர்வது போல் என்றுமில்லா ஓர் ஒளியுடன் விளங்குவது கண்டு மகிழ்ந்தவள், “என்னம்மா விசேஷம்” என வினவினாள்.

மகளைப் பார்த்து மந்தகாசமாகச் சிரித்தவள், “ஏழு மணிக்கு ஒருவரைச் சந்திக்க வேணும்” என்றாள்.

மகள் தனக்கேயுரிய கேலியுடன் “புடவையில் சந்திக்கும் கட்சிக்காரர் யாரோ, காலம் கெட்டுக்கிடக்கிறது கவனம் அம்மா”

“சரிங்க பாட்டியம்மா” என அவள் கன்னத்தில் செல்லமாகத் தட்டியவள், “இது ஒன்றும் கட்சிக்காரர் இல்லை. எல்லாம் வந்து சொல்கிறேன்” என நாணம் மேலிடக் கூறிச் சென்றாள்.

‘எத்தனை வயசானால் என்ன பெண்மையே! நாணம் என்ன உன் பரம்பரைச் சொத்தா?’ எனத் தனக்குள் நினைத்த சம்யுக்தா தன் சமயோசித புத்தியைத் தானே பாராட்டிக் கொண்டாள். இப்போது மேரி இருந்திருந்தால் எவ்வளவு வேடிக்கையாக இருந்திருக்கும் என நினைத்தாள்.

“உனக்குத் தெரியுமா டார்லிங். உன் அம்மாவுக்குக் கோபமே வராது. கோர்ட்டில் கூட அதிர்ந்து பேசாமல் வழக்குகளை வென்றுவிடுவாள். ஆனால் அவளுக்கு ஒரே ஒருவரிடம் மட்டும் பயங்கரக் கோபம். அதுவும் உண்மைக் கோபமல்ல. வெறும் பனிக்கட்டி போலத்தான் அந்தச் சூரியனைக் கண்டால் இந்தப் பனி தானாகவே உருகிவிடும்” என மேரி அடிக்கடி சொல்வாள்.

அப்பொழுதெல்லாம் எதுவும் புரியாமல், 'என்ன ஆன்ட்டி? பனி, குளிர், சூரியன் என்று குறைப்பட்டுக் கொண்டவள்' இன்று, 'ஆன்ட்டி, பனி உருக ஆரம்பித்து விட்டது. வரும்போது தெளிந்த நீராகத்தான் வரும்' என நினைத்தவள், 'அம்மாவின் கஷ்டங்களின் பொழுதெல்லாம் கைகொடுத்துக் காப்பாற்றி விட்டு அவர் சந்தோஷத்தைப் பார்க்காமல் போய் விட்டீர்களே!' எனவும் வருந்தினாள்.

கஸ்தூரி குறித்த அந்த விருந்தகத்திற்குச் சென்றபோது சரவணன் அவளை எதிர்கொண்டு அழைத்தான். இருவரும் உள்ளே சென்று அமர்ந்தனர்.

கஸ்தூரியின் அழைப்பு சரவணனுக்கு வியப்பாக இருந்தது. மாலதி அவளுடனான தனது உரையாடல் பற்றி எதுவுமே சொல்லாததால் சம்யுக்தாவைச் சந்தித்ததற்குக் கண்டிக்கப் போகின்றாள் போலும் என நினைத்தான். அப்படி அவள் சொன்னாலும் அவனால் எதுவும் செய்ய முடியாது. தூர இருந்து அவர்களைப் பார்த்து மகிழ வேண்டியதுதான். இத்தனை காலமும் கஸ்தூரி என்ன ஆனாளோ என ஏங்கியதைவிட இது எவ்வளவோ மேல் என்று நினைத்தான்.

கஸ்தூரியின் நினைவு வரும் போதெல்லாம் மாலதி, 'அவள் ஒரு கவரி மான் போன்றவள். மயிர் நீப்பின் உயிர் நீக்கும் கவரி மான்கள் போல மானம் போன பின் அவள் உயிருடன் இருந்திருக்க மாட்டாள். அப்படி அவள் எங்கேயாவது உயிருடன் இருந்தால் அது மிகப் பெரிய அதிசயம் தான். அவளுக்குப் போய் இப்படிச் செய்தீர்களே! எனக்கும் தெரியாமல் போய்விட்டதே!' என அழுவாள். அப்பொழுதெல்லாம் அவன் நெஞ்சம் பாறையாகக் கனக்கும். ஒரு பயம் உள்ளமெங்கும் வியாபிக்கும் பல சந்தர்ப்பங்களில் அவன் நிலையிழந்து போயிருக்கிறான். அதனால் அப்படிச் சொல்வதை இப்போதெல்லாம் மாலதி விட்டு விட்டாள்.

ஆனால், இன்று அவனை நோக்கி வந்துகொண்டிருந்த கஸ்தூரியின் முகத்தில் இருந்த கடுமைத் திரை விலகி, அவன் பல வருடங்களுக்கு முதல் கண்டு மகிழ்ந்த கருணை சுரப்பதைக் கண்டு உவகையுற்றான். அவனைக் கண்டதும் அவள் கன்னங்கள் சிவந்து கண்கள் ஒளிர்ந்தமையையும் பார்த்துப் பரவசமுற்றான். அவளது கருணைக்காகவே ஏங்கும் அவனுக்காக அவள் இதுவரை கடினப்படுத்திக் கொண்ட மன மூடி கழன்று கொண்டதா? என வியந்தான். அதுவே அவன் மனத்திற்கு ஒரு பெரும் ஆறுதலாக இருந்தது.

இருவரும் இடத்தில் அமர்ந்து சில நிமிடங்களாகியும் கஸ்தூரி எதுவுமே பேசவில்லை. மேசையைப் பாாத்துக் கொண்டிருந்தாள். அது

மொழிகள் தேவையற்ற ஓர் அன்புச் சங்கமம். மௌனம்தான் அங்கே பரிபாஷை ஆனது.

சரவணன் "என்ன கஸ்தூரி" என்றபோது நிமிர்ந்து அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

பின் "நாம் சந்தித்து எவ்வளவு காலமாகிவிட்டது சரவணன்? நம் பெண்ணுக்கும் இருபது வயதாகின்றது" என்றாள்.

சம்யுக்தா அவனது மகள் என அவள் சொல்லாமல் சொன்ன யுக்தி கண்டு அவளை மனத்துள் பாராட்டினான். 'சந்தித்து என்று சொல்லாதே கஸ்தூரி. நாம் பிரிந்து என்று சொல்' எனத் தனக்குள் நினைத்துக் கொண்டான். வெளியே சொல்வதற்கு வார்த்தைகள் வரவில்லை...

"எப்படி இருக்கின்றீர்கள்? நன்றாக இருக்கின்றீர்களா? அங்கே கலவரங்களால் மிகவும் கஷ்டம் அடைந்துவிட்டீர்கள் போலத் தெரிகிறது. இப்பொழுது புது இடம் பிடித்துக் கொண்டதா?" எனக் கேட்டாள்.

அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். விழிகள் துளிர்த்தன. வாய் திறந்தால் அழுதுவிடுவான் போல் இருந்தது. இந்த உலகில் உள்ள எல்லா ஆதரவுகளும் ஒன்று திரண்டாலும் அவன் உள்ளம் நிறைந்த வளின் இதயத்திலிருந்து வந்த அன்பான அந்த ஓரிரு வார்த்தைகளுக்கு ஈடாகுமா?

அவன் பொங்கி வந்த விம்மலைக் கட்டுப்படுத்த வெகு பிரயத்தனப் பட்டான். அவன் நிலை கண்ட கஸ்தூரிக்கும் கண்கள் கலங்கின. எவ்வளவு இரக்கமற்றவளாக இருந்துவிட்டேன் என்று தன் செய்கைக் காக இப்பொழுது வெட்கமும் வேதனையும் அடைந்தாள் .

சிறிது நேரம் மௌனமாக இருந்தவள் பின் "நான் உங்களை இங்கு சந்திப்பேன் என நினைக்கவில்லை. ஆனால் நம் மகள் பற்றி உங்களுக் குத் தெரிவிப்பது என் கடமை என நினைத்தேன். அதற்கான நேரத்தை எதிர்பார்த்திருந்தேன்." எனக் கூறினாள்.

அவளைப் பேசவிட்டு அவன் மகிழ்ந்தான்.

கஸ்தூரி தொடர்ந்தாள், "நான் சொல்லாமலேயே தந்தையும் மகளும் புரிந்து கொண்ட மாதிரித் தெரிகின்றது." எனக் குறுநகையுடன் கூறியவள், "மகளைத் தெரிந்து கொள்வதில் உங்களுக்கிருந்த ஆர்வம் என்னை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்கிறது. ஆனால், அதற்குப்

படிக்காத ஒரு பாடத்தைச் சொல்லிக் கொண்டு பல்கலைக்கழகம் வரை போகத் தேவையில்லை" என அவனைச் சீண்டியவள், "அவளை நீங்கள் விரும்பியபோது பார்க்கலாம். அவள் உங்கள் மகள் என்ற உரிமையை நீங்கள் இத்தனை வருடத்தின் பின்னரும் எடுத்துக்கொண்டது எனக்கு மட்டில்லா மகிழ்ச்சியாக இருக்கின்றது. சம்யுக்தாவும் மிகவும் ஆவலாக இருக்கிறாள். தந்தைக்கும் மகளுக்குமிடையே நான் என்றும் வர மாட்டேன்" .எனக் கூறினாள்.

சரவணனுக்கு மிகப் பெரிய ஆறுதலாக இருந்தது. அவளையே பார்த்துக் கொண்டு மௌனமாக இருந்தான்.

அதைக் கவனித்த கஸ்தூரி "என்ன ஏதாவது மௌன விரதமா" என்றாள் அவள் இதழ்கள் குறும்பில் மலர்ந்தன.

சரவணன் அங்கே தன் பழைய கஸ்தூரியைக் கண்டு புளகிதம் அடைந்தான். இது போதும் எனக்கு இன்றே இந்த உயிர் போனாலும் பரவாயில்லை என நினைத்துக் கொண்டான். பின் அவளைப் பார்த்து "எப்படி உன்னால் முடிகிறது கஸ்தூரி" என்றான். அவன் வார்த்தைகளில் வியப்புத் தொனித்தது.

அதன் அர்த்தம் புரியாதவளாக "எது" எனக் கஸ்தூரி கேட்டாள்.

"இப்படி எப்பொழுதும் சாந்தமே வடிவமாய், அன்பே உருவமாய், யார் மேலும் எதற்கும் கோபப்படாமல் இருப்பதற்கு" எனச் சொன்னான்.

மிக அதிக நாட்களின் பின் கஸ்தூரி உளம் நிறைந்து கல கலவெனக் கண்களில் நீர் வரும் வரை சிரித்தாள்.

பின் "அப்பாடா எத்தனை பாராட்டுக்கள். உண்மையில் இவற்றுக் கெல்லாம் நான் சிறிதும் தகுதியற்றவள் சரவணன். என் மனத்திலும் விரக்தி, வெறுப்பு, வேதனை, கோபம், ஏமாற்றம் எல்லாம் இருந்தன. கால வெள்ளத்தில் அவை ஒவ்வொன்றாகக் கரைந்து போயின. உண்மைக் காதலுக்கு மன்னிக்கத்தான் தெரியும். எத்தனையோ முட்செடிகளுக்கு நடுவில் அது அழகிய மலராய்த் தலை அசைத்துக் கொண்டு நிற்கும் என்று எங்கோ வாசித்தது நினைவுக்கு வருகிறது. ஆனால், எனக்கு உங்களை மன்னிப்பதற்கு இத்தனை வருடங்கள் எடுத்தது. உங்கள் மேல் கோபித்து தேவையில்லாமல் என்னை நானே வருத்திக் கொண் டேன். அதை நினைத்தால் எனக்கு வெட்கமாக இருக்கிறது" என்றாள் அவள் குரல் கரகரத்தது.

“இல்லை கஸ்தூரி” என அவன் மிகக் கனிவுடன் அவளைப் பார்த்துச் சொன்னான்.

‘என்ன’ என்பது போல் தலையை நிமிர்த்தினாள்.

“யோசித்துப் பார். உனது அந்தக் கோபம் மட்டும் இல்லையானால் நீ என்ன ஆகி இருப்பாய்? அந்த உன் கோபத்தில் வந்த ஒரு வைராக்கியம் தான் உன்னை இவ்வளவு காலம் வாழ வைத்தது. சம்யுக்தா என்ற பெயருக்கு ஏற்ற மாதிரி அன்பு, பண்பு, அழகு, அறிவு அனைத்தும் நிறைந்த ஓர் அன்பு மகளை வளர்த்து ஆளாக்க முடிந்தது. அதற்காக நீ என்றும் வருந்தக் கூடாது கஸ்தூரி மாறாக மகிழ்ச்சியும் பெருமையும் அடைய வேண்டும்” என்று சொன்னான்.

அவனது புரிந்துணர்வைக் கண்டு அவள் அக மிக மகிழ்ந்தாள். அந்தக் கடிதம் கூடத் திட்டமிட்டுத்தான் எழுதியிருக்கிறான் என இப்பொழுது நினைத்தாள். இதைப் புரிந்து கொள்ளாமல் போனேனே! என வருந்தி னாள்.

“எதுவானாலும் நடந்தவைகள் யாவுக்கும் யாரும் பொறுப்பல்ல. விதி விட்ட வழியில் நம் வாழ்க்கை அமைந்து விட்டது. அது அப்படியே இருக்கட்டும். நீங்களும் இனிமேல் எதற்காகவும் வருந்த வேண்டாம். மாலதியின் மனம் புண்படாமல் நடந்து கொள்ளுங்கள். அவள் மனைவி யாகக் கிடைத்தது உங்களின் அதிர்ஷ்டமென்று தான் சொல்ல வேண்டும். அந்த அவசரக்காரியிடம் எத்தகைய பொறுமையும் சகிப்புத் தன்மையும் வந்து புகுந்து கொண்டன. நாம் என்றும் நல்ல நண்பர்களாக இருப்போம். நமக்கிடையே ஒரு காலத்தில் மலர்ந்த அந்த அன்பெனும் செழுமலருக்கு ஆதாரமாக நம் அன்பு மகள் இருக்கின்றாள். அவள் தான் என் வாழ்வு என்று நான் என்றோ முடிவுசெய்துதான் இங்கு வந்தேன். அது அப்படியே இருக்கட்டும்” எனக் கூறி விடை பெற்றாள்.

ஒன்றின் நேசத்தை மற்றது மறக்கவில்லை என்ற உண்மையை இரு நெஞ்சங்களும் உணர்ந்ததால் மிக நீண்ட காலத்தின் பின் அவ்விரண்டு நெஞ்சங்களிலும் அடித்த துன்பப் புயல் ஓய்ந்து அவை பேரமைதி அடைந்தன.

• • •

கலப்பை சித்திரை 1999 - ஆடி 1999

# பனிப்படலம்

லதாங்கி அலுவலகத்திலிருந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தாள். அவள் சிட்னியில் ஓர் அரச அலுவலகத்தில் பணி புரிகின்றாள். குழந்தைகள் பராமரிப்பைக் கருதி லதா பகுதி நேர வேலை தான் செய் கின்றாள். ஆஸ்திரேலிய அரச சேவையில் அது ஒரு வசதி. விரும்பினால் பகுதி நேரம் வேலை செய்யலாம். அதற்கேற்ப அவர்கள் சம்பளமும் ஏனைய வசதிகளும் கணக்கிடப்படும்.

தினமும் லதா தன் மகன் ஆரூரனையும் மகள் ஆர்த்திகாவையும் ஆரம்பப் பாடசாலையில் விட்டு விட்டு வேலைக்கு செல்வாள். பின் பாடசாலை முடியும் நேரம் போய்க் கூட்டுவாள். அதனால் அவள் தன் குழந்தைகளைப் பராமரிப்பு நிலையங்களில் விடுவதில்லை. அவர்கள் வீட்டில் இருக்கும் நேரம் அவளும் இருப்பதால் அவர்கள் தேவைகளை உடனுக்குடன் கவனிக்க முடிகிறது. குடும்ப நிர்வாகமும் எதுவித பிரச்சினையும் இன்றி வெகு சுமுகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. முழு நேர வேலையென்றால் இன்னும் சிறிது சம்பளம் கூடக் கிடைக்கும். ஆனால் வீட்டில் இந்த அன்பும், அமைதியும் நிலவாது. இதுவே போதும் என்று லதா தீர்மானித்து விட்டாள். என்ன சில தேவைகளைக் குறைக்க வேண்டும். வரவுக்கேற்ப செலவு செய்தால் சரிதானே. எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது குழந்தைகளின் உடல் நலமும் மன நலமும் தானே? அவர்களைப் பண்புள்ளவர்களாகப் பலரும் போற்றுபவர்களாக வளர்த்துவிட வேண்டும். அதனால் தானே வள்ளுவரும்

"தந்தை மகற்கு ஆற்றும் உதவி - அவயத்து
முந்தி இருப்பச் செயல்"

என்று கூறியிருக்கிறார். தந்தையென்றால் அதில் தாய்க்கும் பங்கு உண்டுதானே.

லதாவுக்குப பள்ளிக்கூடம் போகும் வேலை இன்றில்லை. அவள் கணவன் ஆனந்த் வீட்டிலிருந்தான். "நானே குழந்தைகளைக் கூட்டு கின்றேன்" என்று சொல்லியிருந்தான். ஆனந்த் ஒரு வங்கி அலுவலர். இலங்கையிலும் வங்கியில் வேலை செய்ததால் அதையே இங்கும் தொடர முடிந்தது. லதா மாதிரி ஆனந்த் நினைத்த போதெல்லாம் லீவ் எடுக்க முடியாது. எப்போதாவது அதிசயமாக நின்றால் உண்டு. அன்று லதாவுக்கு ஆறுதல். ஆனந்த் முடிந்த அளவு வீட்டையும் குழந்தை களையும் கவனித்துக் கொள்வான்.

இன்று லதாவின் நாற்பதாவது பிறந்த நாள். இந்த அவசர உலகத்தில் பிறந்த நாளெல்லாம் யாருக்கு நினைவில் இருக்கும்? அதிலும் ஆனந் திற்கு ஞாபக சக்தியே மிகக் குறைவு. இருந்தாலும் காலையில் ஒரு நப்பாசையில் யாராவது வாழ்த்துச் சொல்கின்றார்களோ என்று எல்லோர் முகத்தையும் பார்த்தாள். யாருமே அது பற்றி மூச்சும் விட வில்லை. வழக்கமாகத் துளசி வாழ்த்துச் சொல்வாள். இன்று அவளது சத்தமுமில்லை. துளசி ஆனந்தின் உடன் பிறவாத் தங்கை. அவள் இலங்கையில் ஆனந்துடன் வங்கியில் வேலை செய்தாள். ஆனந்த் தான் அவளுக்கு வேலை பழக்கினானாம். வங்கியில் சேர்ந்த முதல் நாளே துளசி ஆனந்த்தை அண்ணா என்று தான் அழைத்தாளாம். அன்றிலிருந்து அவர்கள் அன்பு தொடர்கிறது. லதா - ஆனந்த் திருமணத் திற்கும் துளசிதான் தரகர் வேலை பார்த்து நடாத்தி வைத்தாள்.

துளசியிடமாவது வாழ்த்தைக் கேட்டு வாங்குவோம் என நினைத்து அவளுக்கு போன் செய்தால் அவளும் லீவ் என்றார்கள் இன்றைக் கென்று எங்கே போனாள் எனச் சலிப்பாக இருந்தது. வீட்டுக்குப் போய் எல்லோரையும் ஒரு பிடி பிடிக்க வேணும் என்று ஒரு வேகம் வந்தது. அவர்களின் பிறந்த நாளெல்லாம் நான் ஒழுங்காகக் கொண்டாட, எனது பிறந்த நாள் அதுவும் நாற்பதாவது பிறந்த நாள் ஒருவருக்குக் கூட ஞாபகத்தில் இல்லையே என்று சிறிது ஏக்கமாகவும் இருந்தது. குழந்தைகள் வழக்கமாக வாழ்த்து அட்டைகள் எல்லாம் மறைத்து மறைத்து வரைந்து காலையில் கொடுப்பார்கள். இன்று அவர்களும் எதுவுமே கூறவில்லை. ஒட்டுமொத்தமாக எல்லோருமா? மறந்து விட்டார்கள் என்று வியப்பாகவும் இருந்தது. சென்ற மாதம் அந்தத் துளசிக் கழுதையை அவளது பிறந்த நாளுக்கு வாழ்த்தியபோது கூட

“அடுத்தது உங்கள் பிறந்த நாள் அண்ணி அதுவும் நாற்பதாவது. நாற்பதில் நாய்க் குணம் என்பார்கள்” என்றெல்லாம் கேலி செய்தாள் இன்று அவளது சத்தமும் இல்லை வரட்டும் கவனிக்கிறேன் எனக் கறுவிக் கொண்டாள்.

லதா வீட்டுக்குப் போய்த் தன்னிடம் இருந்த திறப்பைக் கொண்டு கதவைத் திறக்கப் போனபோது கதவு தானாகவே திறந்து வாசலில் தொங்கிய பலூன் உடைந்து அதற்குள் இருந்த பூக்கள் அவள் தலையில் விழுந்தன. உள்ளே குழந்தைகள் பிறந்த நாள் வாழ்த்துக் கூறினர். குழந்தைகளால் வரையப்பட்ட பல பிறந்த நாள் வாழ்த்து அட்டைகள் வீட்டை அலங்கரித்தன. “அம்மா உங்களுக்கு நாற்பதாவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்” என்று பல அட்டைகள் சுவரெங்கும் தொங்கின.

அது லதாவுக்கு ஓர் இன்ப அதிர்ச்சியாக இருந்தது. அவள் விழிகள் நிறைந்து ஆனந்தப் பூக்களை உதிர்த்தன. குழந்தைகளை இழுத்து இறுக அணைத்துக் கொண்டாள். மூவரையும் சேர்த்து அணைத்த ஆனந்த் “பிறந்த நாள் வாழ்த்துக்கள் லதா” என்றான். லதா மகிழ்ச்சிக் கடலில் திளைத்தாள். இதுவல்லவோ என் குடும்பம் ஓர் அன்புச் சோலை என அவள் உள்ளம் புளகித்தது. சமையலறைப் பக்கமாக சிறு செருமல் சத்தம் கேட்க, நிமிர்ந்து பார்த்த லதா அங்கே துளசி நிற்கக் கண்டாள். “அட நீயும் இங்கேயா, அதுதானே பார்த்தேன்” எனக் கூறிக் கொண்டு அவளருகே சென்றவள் அங்கே ஒரு விருந்து ஆயத்தமாக இருப்பதைக் கண்டு பிரமித்தாள். “இங்கே என்ன நடக்கிறது” எனச் செல்லக் கோபத் துடன் கேட்டவள், “என்னை மட்டும் வேலைக்கு அனுப்பினீர்களா” எனச் சிணுங்கினாள். அங்கே நின்ற துளசியின் குழந்தை வர்ஷா தன் மழலை யில் “ஹப்பி பர்த்டே லதா ஆன்ட்டி” என்றாள். “வர்ஷா குட்டி இங்கே என்ன செய்யுதாம்?” என அவளைத் தூக்கியவள், “என்ன முகிலனும் லீவ் தானா அல்லது அவராவது அலுவலகம் போனாரா”? எனக் கேட்டாள். சிரித்த துளசி “அவர் ஆபீஸ்க்குப் போய்விட்டார். இப்போ வருவார் அண்ணி” என்றாள். லதா அவர்களின் அன்பு வெள்ளத்துள் அகப்பட்டுத் திணறிப் போனாள்.

ஆனந்த்-துளசி நட்பை நினைத்தால் லதாவுக்கு என்றும் நெஞ்சம் நிறையும். உறவுகளே போட்டியும் பொறாமையுமாக இருக்கும்போது இவள் மட்டும் எடுத்ததற்கெல்லாம் அண்ணா என்று வந்து நிற்பாள். தாய்க்கு ஒரே மகனான ஆனந்தும் அவளைத் தன் தங்கையாகவே தத்தெடுத்துக் கொண்டான்.

துளசி, ஆனந்தின் சொந்தத் தங்கையில்லை என்று சொன்னால் தான் தெரியும். அந்தளவுக்கு அவாகள் உறவும் பாசமும், உடன் பிறந்தவர் களை விடவும் பல படிகள் மேலானதாகவே இருந்தது. பிறந்த நாள் கொண்டாட்டம் முடிந்து எல்லோரும் போன பின் லதா கணவனை வியப் புடன் பார்த்து "ஆச்சர்யமாக இருக்கே இதெல்லாம் கூட உங்களுக்கு ஞாபகத்தில் இருக்குமா?' எனக் கேட்டாள். எதையுமே மறைக்கத் தெரியாத ஆனந்த், துளசி 'அண்ணியிடம் எதுவும் சொல்ல வேண்டாம்' என்று சொல்லியிருந்தும் அதைக் கவனிக்காது "அட போ லதா நான் எங்கே ஞாபகம் வைத்திருந்தேன், எல்லாம் துளசிதான் செய்தாள். ஒரு மாதத்திற்கு முன்னரே திட்டம் போடத் தொடங்கி விட்டாள். இல்லா விட்டால் எனக்கெங்கே லீவ் கிடைக்கும்" என்றான். லதாவின் நெஞ்சம் நன்றிப் பெருக்கால் நிறைந்தது.

சில நாட்களின் பின் அன்று லதா பிள்ளைகளைக் கூட்ட பாடசாலைக் குச் சிறிது முன்னரே போய்விட்டாள். சில நேரம் வீதி வெறுமையாக வாகன நெரிசலின்றி இருந்தால் இப்படியான அதிர்ஷ்டம் கிடைக்கும். ஆனால் லதாவுக்கு இது ஒரு தூரதிர்ஷ்டத்தின் ஆரம்பம் எனலாம். காரை நிறுத்தி இறங்கிப் பிள்ளைகளுக்காகக் காத்திருந்தபோது அங்கே நின்ற ஒரு பெண்ணைத் தனக்கு முன்னரே தெரியும் போல லதா உணர்ந்தாள். யாரென்று மூளையைப் பிசைந்து கொண்டிருந்த போது லதாவையே சிறிது நேரமாக உற்றுப் பார்த்த அப் பெண்ணும் மெதுவாக அவளருகே வந்து "நீ லதாங்கி தானே" எனக் கேட்டாள். "ஆமாம்" என்றவள் அருகில் அவளைப் பார்த்ததும் "அடியேய் மந்த்ரா" எனக் கூவி னாள். மந்த்ரா லதாவின் உயர் வகுப்புத் தோழி. வேறும் சிநேகிதமல்ல உயிர்த்தோழி. பாடசாலையில் இருவரையும் தனித்துப் பார்க்கவே முடியாது. மந்த்ரா நின்றால் அங்கே லதாவையும் காணலாம். அப்படி ஒரு நெருக்கம்.

மந்த்ராவின் அப்பாவுக்கு வேலை மாற்றலாகியதால் இருவரும் பிரிய நேர்ந்தது. அன்று இருவரும் பிழியப் பிழிய அழுததைப் பார்த்துக் கல்லூரியின் மரம், செடி, கொடிகளே கண்ணீர் வடித்தன எனலாம். அதன் பின் தொடர்பு படிப்படியாக விடுபட்டுப் போனது. ஏறத்தாழக் கால் நூற்றாண்டின் பின் இப்படி ஒரு சந்திப்பா? 'மந்த்ரா! மந்த்ரா!' என லதா உருகிப் போனாள்.

வகுப்பு முடிந்து வந்த பிள்ளைகள், இருவரையும் வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றனர். மந்த்ராவின் மகள் ஸந்தியாவும் அங்கே நின்றாள்.

பழைய நட்புப் புதுப்பிக்கப்பட்டதில் லதாவுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. தினமும் காரை நிறுத்தி இறங்கித் தோழியுடன் சிறிது நேரம் பேசிவிட்டுத் தான் லதா வீட்டுக்குச் செல்வாள். பேச்சு வாக்கில் அது ஒரு மணித்தி யாலமும் ஆகலாம். பிள்ளைகள் பசியால் துடிப்பதும் இப்போதெல்லாம் லதாவின் கவனத்திற்கு வருவதில்லை. நாட்கள் செல்ல அவர்களே இது சரிவராது எனப் புரிந்து பாடசாலையில் சாப்பிடுவதற்கான சிற்றுண்டிப் பக்கெற்றில் ஒன்றைக் கூடக் கொண்டு போய் மாலையில் ஓர் ஓரமாக நின்று உண்ணப் பழகிக் கொண்டனர்.

மந்த்ராவைச் சந்தித்ததை ஆனந்திடம் லதா மிகவும் மகிழ்ச்சியாகச் சொன்னாள். உடனே ஆனந்தின் முகம் கறுத்தது. "எங்களுடன் வங்கி யில் ஒரு மந்த்ரா வேலை செய்தாள். அவள் அப்பா பெயர் கூட நடராசா என்று நினைக்கின்றேன் அவளா இவள்!" எனக் கேட்டான். லதா தன் தோழியைத் தன் கணவனுக்கும் தெரிகிறதே என்ற மகிழ்வில் "ஆமாம் ஆனந்த் அவளேதான்" என்றாள். ஆனந்த்ன் முகம் இப்போ அஷ்ட கோணலாகியது. "இது கூடாதே!, இதனால் என்ன வெல்லாம் வரப் போகிறதோ" எனப் பயந்தான்.

மந்த்ரா ஒரு 'சமூகப் பட்டாம்பூச்சி' என மனைவியிடம் எப்படிச் சொல்வது எனப் புரியாமல் தவித்த ஆனந்த் ஈற்றில், "மனித மனங்கள் எப்போதும் ஒரே மாதிரி இருப்பதில்லை லதா. உன்னிடம் பழகியது பதினைந்து வயதுச் சிறுமி. இப்போ அவள் குணம் எப்படி இருக்குமோ தெரியாது. அவளிடம் எதற்கும் நீ கவனமாக இருந்துகொள்" என்றான். ஆனால் லதா "என் மந்த்ரா அப்படி யெல்லாம் மாறமாட்டாள். இத்தனை வருடத்தின் பின் நான் இவ்வளவு மாறியும் பார்த்தவுடன் என்னைக் கண்டுபிடித்து வந்து பேசினாள் அவளைப் போய் நீங்கள் தப்பாகச் சொல்கின்றீர்களே! நீங்களும் உங்கள் வக்கிர புத்தியும்" என்று குறைப் பட்டுக் கொண்டாள்.

கடவுளே! என்ன கஷ்டகாலமோ என நினைத்த ஆனந்த், "இல்லை லதா அவளுக்கு வங்கியில் அவ்வளவு நல்ல பெயரில்லை. சிண்டு முடிவதே வேலை. பலரைக் கெடுத்திருக்கிறாள். கஷ்டப்படுத்தியிருக் கிறாள். அவளுக்கு 'மந்தரை' என்ற பட்டப் பெயர் கூட உண்டு. எதற்கும் நீ கவனமாக இரு" என்று சொன்னான். ஆனால் லதா அதையெல்லாம் சட்டை செய்யவில்லை, மந்த்ராதான் அவள் இதயத்தில் ஓர் உயர்ந்த ஸ்தானத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டாளே. இனி யார் சொல்லைத்

தான் அவள் கேட்பாள்? துளசியும் விடுதலையில் இலங்கைக்குப் போயிருந்தாள். என்ன செய்வது எனத் தெரியாமல் ஆனந்த் தவித்தான்.

லதாவிடம் எல்லா விபரங்களையும் படிப்படியாகச் சேகரித்த மந்த்ரா மெதுவாகத் தன் வேலையைத் தொடங்கினாள். அதுவும் இங்கே அவளுக்கு முக்கிய வேலை இருந்தது. துளசியைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும். அன்று தப்பித்து விட்டாள். இன்று செய்கிறேன் வேலை எனக் கறுவிக் கொண்டாள். ஆமாம் ஆனந்தின் அம்மாவையும் ஒருவாறு வசியப்படுத்தி ஆனந்தைத் திருமணம் செய்து தன் வயிற்றில் முறை யின்றி வளரும் குழந்தைக்கு அப்பாவாக்கத் தீர்மானித்திருந்தாள். ஆனால், இதையெல்லாம் எப்படியோ தெரிந்த துளசி இடையில் புகுந்து காரியத்தையே கெடுத்து லதாவை ஆனந்திற்குத் திருமணமும் செய்து வைத்துவிட்டாள்.

‘இவர்களெல்லாம் மிக மகிழ்ச்சியாக அன்று போல் இன்றும் இருக்க, நான் மட்டும் தகப்பன் பெயர் சொல்ல முடியாத குழந்தையுடன் அண்ணா, அண்ணியிடம் நசிபட வேண்டியிருக்கிறது. இவர்களுக்கு வைக்கிறேன் வேட்டு’ எனத் தீர்மானித்தாள். ‘லதா ஒரு ஏமாளி நான் சொல்வதை அப்படியே நம்பிவிடும்’ என நினைத்துச் சிரித்துக் கொண்டாள்.

லதா வெகுளியாக, “உனக்கு ஆனந்தின் தங்கை துளசியையும் தெரிந்திருக்குமே மந்த்ரா? அவள் இப்போ இங்கே இல்லை வந்ததும் காணலாம்” என்றதையே அடியாக எடுத்தவள். “என்ன தங்கையா” எனக் குரலை உயர்த்திக் கோபமாகக் கேட்டவள். “அவர்கள் இன்னும் அப்படியேதான் இருக்கின்றார்களா? அண்ணா-தங்கை என்ற போர்வைக்குள் அவர்கள் கூத்து இன்னும் தொடர்கிறதா? உனக்குத் தெரியாது லதா! எங்கள் வங்கியின் மூலை முடுக்குகள் எல்லாம் இவர்களைப் பற்றிக் கதை கதையாகக் கூறும். என்ன லதா நீ எவ்வளவு புத்திசாலி இதையெல்லாம் நம்பினாயா? அவ புருஷன் முகிலன் அப்பவே ஒரு மக்கு ஆனால் என் லதா நீயுமா”? என்றாள்.

அதைக் கேட்ட அதிர்வில் லதா பூமியின் அதல பாதாளத்துள் அமிழ்ந்து கொண்டிருந்தாள். என்ன பேசுவதெனத் தெரியாமல் திகைத்து ஜடமாக நின்றாள். இதைச் சொன்னது வேறு யாராவதாக இருந்திருந்தால் அந்த வினாடியே லதாவின் கை அவர்கள் கன்னத்தில் இறங்கும். அவள் அந்த இடத்திலேயே இல்லாமல் புயலெனப் பறந்திருப்பாள் வீட்டில் போய் ஆனந்திடமும் அறிவுகெட்ட ஜென்மங்கள் ஏன் இப்படியெல்லாம்

பேசுகின்றதோ எனப் புலம்பித் தீர்த்திருப்பாள். ஆனால் இதைக் கூறியது சிறு வயதில் அவள் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொண்ட அவளது ஆருயிர்த் தோழி அல்லவா? அந்த வார்த்தைகளை அவள் எப்படி அலட்சியம் செய்வாள்?

லதா அதிர்ந்து சிலையாகியதைப் பாத்து மந்த்ரா தனக்குள் நகைத்துக் கொண்டாள். “எதுவோ இனியாவது கவனமாக நடந்து கொள்” என நீலிக் கண்ணீர் வடித்தாள்.

இத்தனை வருடத்தின் பின் தனது நடத்தையில் பண்பில் எவ்வளவு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. மனம் எவ்வளவுக்கு முதிர்ந்திருக்கிறது, அதே போல மந்த்ராவும் மனசு மாறியிருக்கலாம் என லதா எண்ண வில்லை. பல வருடங்களின் பின் சில சமயம் உடன் பிறந்தவர்களே அந்நியர்களாகும் சூழ்நிலையிருக்கும் போது வெறும் சினேகிதம் மாறலாம் என அவளுக்குத் தோன்றவில்லை. அன்று அவள் என்னதான் ஓர் உயிர்த் தோழியாக இருந்தாலும் இன்று அவள் தனக்கு ஓர் அந்நியள், இந்த இடைப்பட்ட காலத்தில் அவள் வாழ்வில் என்ன நடந்திருக்குமோ? அவள் குணம் எப்படியோ என்றெல்லாம் லதா சிறிதும் சிந்திக்கவோ, கவலைப்படவோ இல்லை. மந்த்ராவின் சிறு வயது நட்பு அவ்வளவு பசுமையாக அவள் மனத்தில் பதிந்திருந்தது. அதனால் அவள் மந்த்ராவை முழுவதுமாக நம்பினாள்.

அதே வேளையில் அவளது பண்பு கொண்ட மனம் எதையும் தவறாக நினைக்கத் தயங்கியது. இத்தனை வருடமாக அவள் ஒரு சிறு தப்பையும் காணவோ உணரவோ இல்லையே. பின்னர் எப்படிச் சந்தேகிப்பாள். அண்ணாவும் அண்ணியும் தான் ஆதர்ச தம்பதிகள் என்று துளசி வாய்க்கு வாய் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்வாள். அவள் லதா விடம் எவ்வளவு அன்பாக இருந்தாள். அந்த அன்பு வெறும் நடிப்பல்ல என்பது துளசிக்கு நன்கு தெரியும். அதே போல அவர்களது சகோதர பாசமும் மாற்றுக் குறையாதது என்று அவள் உள் மனசுக்குத் தெரி கிறதே! பின்னர் எப்படி? அவர்களுடன் வங்கியில் வேலை செய்த பலரைப் பார்த்தும், பேசியுமிருக்கிறாள். யாவரும் அவர்களைப் ‘பாச மலர்கள்’ என்று தான் எப்போதும் கிண்டல் செய்வார்கள். அவர்களது பாசத்தின் மகிமையால் தான் அவர்கள் அன்பு ஆஸ்திரேலியாவிலும் தொடர்கிறது என்று கூறி மகிழ்வார்களேயல்லாமல் தவறாக எதுவும் சொன்னதில்லையே? மந்த்ராவுக்கு மட்டும் ஏன் இப்படி விகல்பமாகத்

தெரிந்தது. சில வேளை ஆனந்த் சொன்னது போல் சிண்டு முடியும் வேலைதானோ என்றும் நினைத்தாள்.

பலவாறாகச் சிந்தித்து லதா மனம் குழம்பினாள். அதனால் குடும்பத்தில் அமைதி குலைந்தது. குழந்தைகளிடம் எரிந்து விழுந்தாள். அவர்கள் அன்னையின் அருகே போகப் பயந்தனர். லதாவின் கவனிப்புக் குறைந்ததால் வகுப்பில் அவர்கள் தரம் குறைந்தது. இதை யெல்லாம் கவனித்த ஆனந்த் காரணம் தெரியாமல் தவித்தான். உடம்பு சரியில்லையா? வேலைப் பளுவா? ஆபீஸில் ஏதாவது பிரச்சினையா? என்றெல்லாம் கேட்டாயிற்று. யாவுக்கும் இல்லை என்று பதில் வந்தது. "மந்த்ரா என்ன சொன்னாள்" என உதடுவரை வந்த வார்த்தையை நிறுத்திக் கொண்டான். "அவள் ஏதாவது சொல்வாள் என்று எப்படி உங்களுக்குத் தெரியும், குற்றமுள்ள மனசு அதுதான் குறுகுறுக்கிறது" என்றால் என்ன செய்வது. இது மந்த்ராவின் வேலைதான் என்பது ஆனந்திற்கு நன்றாகப் புரிந்தது. ஆனால் அதிலிருந்து தன் மனைவியை எப்படி மீட்பது? தன் குடும்ப அமைதியை எப்படிக் காப்பது? என்பது தான் அவனுக்குத் தெரியவில்லை. இந்த நேரம் பார்த்து துளசியும் இல்லையே என வருந்தினான். முள்ளில் விழுந்த சேலையை மெதுவாகத் தான் எடுக்க வேண்டும் எனச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தான்.

லதாவும் புத்தியாக நடந்தாள். மந்த்ராவின் செய்கைகளைக் கவனிக்கத் தொடங்கினாள். தினமும் மந்த்ரா மிகவும் ஆர்வமாக "வீட்டில் என்ன நடந்தது லதா? ஆனந்த்திடம் கேட்டாயா? வீட்டில் நல்ல சண்டையா?" என்றெல்லாம் கேட்டபோது லதா மேலும் சிந்திக்க ஆரம்பித்தாள். இவள் நோக்கு எனக்கு நன்மை செய்வதில்லை. என் குடும்பத்தைக் குலைப்பது தான் எனப் புரிய ஆரம்பித்தது.

அத்துடன் அவள் ஆனந்தையோ துளசியையோ சந்திப்பதற்குச் சிறிதும் ஆர்வம் காட்டவில்லை. ஒன்றாக வேலை செய்பவர்களிடையே யும் ஒரு நட்பு மலரும்தானே. ஆஸ்திரேலியாவில் பல்லின பன் மொழி பேசுபவர்களே மேலான நட்புடன் பழகுவார்கள். வேலை மாறிப் போனாலும் ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசுவதில் ஓர் இனம் தெரியாத மகிழ்வும் அன்புப் பரிமாற்றமும் இருக்கும். இவளுக்கு அந்த உணர்வு சிறிதும் இல்லாததும் லதாவுக்கு வியப்பாக இருந்தது.

அது மட்டுமா? "துளசி இல்லாததில் ஆனந்த் நேரத்திற்கு வீட்டிற்கு வருவார் இல்லையா? இப்போதாவது சந்தோஷமாக இரு லதா. அவள் வந்தால் இதெல்லாம் உனக்குக் கிடைக்காதுதானே. உன்னை

நினைத்தால் எனக்குப் பாவமாக இருக்கிறது லதா. அப்போதே தெரிந்திருந்தால் இந்தத் திருமணத்தையே தடுத்திருந்திருப்பேன். நான் இல்லாத வேளையில் உங்கள் திருமணம் அவசரமாக நடந்துவிட்டது" என்றாள்.

இதையெல்லாம் கேட்க லதாவுக்கு அருவருப்பாகவும், வெறுப்பா கவும் இருந்தது. ஆனந்தும் துளசியும் எங்கே தனித்துச் சந்திக்கிறார்கள்? ஆனந்த் வேலை முடிந்ததும் காத்திருந்து வீட்டிற்கு வருகிறார். துளசி கைக்குழந்தையை வைத்துக் கொண்டு திண்டாடுகிறாள். அவர்கள் வீட்டில் அல்லது எங்கள் வீட்டில்தானே சந்திக்கின்றோம். இது என்ன பேத்தல்? இவளுக்கு என்ன தெரியும் என் கணவரைப்பற்றி? இவள் தன் கணவரைப்பற்றி இதுவரை எதுவுமே சொல்லவில்லை. அப்படி ஒருவர் இருக்கிறாரா என்றும் தெரியாது பெரிய இவள் மாதிரி என் புருஷனைக் குறை சொல்ல வந்து விட்டாள். என ஆத்திரமடைந்தாள்.

நல்ல வேளை இவள் பேத்தல்களைப் பற்றி ஆனந்த் இடம் எதுவுமே கேட்கவில்லை. கேட்டிருந்தால் காலத்திற்கும் அவர் முகத்தில் எப்படி விழித்திருப்பேன் என வருந்தினாள். இப்பொழுது லதாவுக்கு வேறொன்றும் நினைவு வந்தது. "நான் உங்களைக் காப்பாற்றி அண்ணி கையில் பிடித்துக் கொடுக்காவிட்டால் அருமை தெரிந்திருக்கும்" என்று துளசி அவ்வப்போது ஆனந்த்தைச் சீண்டுவாள். அதையெல்லாம் அவர்களுடன் சேர்ந்து விளையாட்டாக எடுத்தவள், உண்மையில் துளசி ஆனந்தை எதிலிருந்தோ காப்பாற்றித் தான் இருக்க வேண்டும் என முதல் தடவையாகச் சிந்தித்தாள். அது மந்த்ராவிடமிருந்தாகவும் இருக் கலாம். அவர்கள் பேச்சில் எப்போதாவது மந்த்ரா என்ற பெயரும் வந்திருக்கும். ஆனால் லதா அதைப் பெரிதாகக் கவனிக்கவில்லை. தன் தோழி மந்த்ரா இப்படியெல்லாம் தரங்கெட்டுப் போவாள் என்று அவள் கிஞ்சித்தும் நினைக்கவில்லை. ஆனால் இப்போதல்லவா இவளைப் பற்றித் தெரிகிறது. காலம் மனிதர்களை மாற்றும் போலும், ஆனந்த் கூறியது போல அவள் சரியான மந்தரை தான், நல்ல காலம் இவள் பேச்சைக் கேட்டு நான் கைகேயி ஆகாமல் தப்பினேன் என்று ஆறுதல் அடைந்தாள். இனி அவள் முகத்தில் விழிக்கவே கூடாது என்று தீர்மானித்தாள்.

அன்றும் லதா பாடசாலை விடும் நேரத்திற்கு முன்னரே போய் விட்டாள். ஆனால் காரிலிருந்து இறங்கவில்லை. மந்த்ராவின் பக்கம் பார்வையைத் திருப்பவும் இல்லை. கையில் கொண்டு வந்த ஸனாதன

ஸாரதி சஞ்சிகையைப் புரட்டினாள். அதிலே பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அண்மையில் ஓர் உரையில் "தீயவர் சங்கத்திலிருந்து விலகி ஓடுங்கள்! நல்லவர்களுடன் இணைந்து செயலாற்றுங்கள், இரவும் பகலும் எல்லா நேரமும் பவித்திரமான செயல்களில் ஈடுபடுங்கள்" என்று கூறியிருந்தார். லதாவுக்குத் தான் சிறு வயதில் படித்த

"தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார் சொல் கேட்பதுவும் தீதே- தீயார்
குணங்க ளுரைப்பதுவும் தீதே அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது"

என்ற ஔவைப்பிராட்டியின் வாக்குண்டாம் செய்யுள் நினைவு வந்தது.

ஆமாம் இனி மந்த்ரா இருக்கும் திசைப் பக்கமே திரும்பக்கூடாது. அவளுக்கு ஒரு கும்பிடு. அவள் ஒரு நச்சுப் பாம்பிலும் மோசமானவள். அதே உரையில் பகவானும் "நீங்கள் பாம்புகளுடன் கூட வாழலாம் ஆனால் தீய மனம் படைத்தவர்களுடன் சேர்வதைத் தவிர்த்துவிடுங்கள்" என அவளுக்கே நேரில் சொல்வது போலக் கூறியிருந்தார். எண்ணித் துணிக கருமம் என்பது போல லதா எண்ணித் தெளிந்தாள். அதனால் இதுவரை அவளது மனத்தைச் சுற்றிலும் இருந்த இறுக்கம் தளர்ந்து மனம் லேசாகியது.

காரிலேயே இருந்து பிள்ளைகளைக் கூப்பிட்டு ஏற்றிக் கொண்டு வீடு வந்தாள். பிள்ளைகளுக்கு ஆச்சர்யம் மந்த்ரா கூப்பிட்டதையும் கேட்கா மல் அம்மா அவசரமாகப் போகின்றாவே என்று. ஆர்த்திகா மெதுவாக "அம்மா அந்த ஆன்ட்டி உங்களைக் கூப்பிடுறாங்க" என்றாள்.

"அவங்க நல்ல ஆன்ட்டீ இல்லம்மா. நீங்களும் அவருடன் இனிமேல் பேச வேண்டாம்" என்றாள். 'எனக்கு இது முதலே தெரியுமே' என மகள் அன்னையை அசத்தினாள். நல்ல வேளை என் கண்ணை உறுத்திய மந்த்ரா என்ற ஆகாயக்கல் பகவான் அருளால் விலகியது. இல்லா விட்டால் என் குடும்பமே சந்தேகம் என்ற பெரிய சூறாவளியில் சிக்கித் தவித்திருக்கும் என லதா மகிழ்ச்சி அடைந்தாள்.

ஆனந்த்க்கு இப்போதெல்லாம் வீட்டுக்குப் போகவே பிடிப்பதில்லை. லதா அவனுடன் ஒழுங்காக முகம் கொடுத்துப் பேசிப் பல நாட்களாகி விட்டன. குழந்தைகளும் தாயின் மிரட்டலுக்கும் கோபத்திற்கும் பயந்து தம் அறையிலேயே முடங்கிக் கொண்டனர். முன்னரென்றால் எப்போ வேலை முடியும் எனக் காத்திருந்து வீட்டுக்குப் போய்விடுவான். அவன்

வரவை லதாவும் குழந்தைகளும் ஆவலுடன் எதிர் பார்த்திருப்பார்கள். எல்லோருமாக இருந்து அன்று ஆபீஸிலும் பாடசாலையிலும் அவர வர்க்கு நடந்தவைகளைப் பேசிச் சிரித்து மகிழ்ந்து இரவு உணவு உண்ட பின் நித்திரைக்குப் போகச் சரியாக இருக்கும். வீடு எப்பொழுதும் கலகலப்பாக இருக்கும். ஆர்த்திகா, ஆரூரனுக்குள் சண்டையே வராது. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று லதா பழக்கி யிருந்தாள். இப்பொழுது அவளே ஒரு புதிராக இருக்கிறாளே. இதெல் லாம் அந்த மந்த்ராவின் கைங்கரியமாகத்தான் இருக்க வேண்டும். இதற்கு ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டும். அல்லது இது குழந்தை களைப் பல வகையிலும் பாதிக்கும் என நினைத்தவன் மந்த்ரா பற்றிய எல்லா விபரத்தையும் லதாவிடம் சொல்லிவிடவேண்டும். அதன் பின் நடப்பதைப் பார்ப்போம் என நினைத்துக் கொண்டு வீட்டுக்குப் போனான்.

ஆனால் என்ன ஆச்சர்யம்! அங்கே அம்மாவும் பிள்ளைகளும் மிகவும் மகிழ்ச்சியாகத் தொலைக்காட்சியில் தமிழ் நாடகம் பார்த்துக் கொண் டிருந்தனர். ஆனந்த்தின் கைகள் தன்னையறியாமலே எதிரே இருந்த பகவான் பாபாவின் படத்தைப் பார்த்துக் குவிந்தன. அதைக் கவனித்த லதாவின் இமைக் கரைகள் பனித்தன. மெதுவாக அறைக்குள் வந்த மகள் "அம்மாவின் கோபம் போய்விட்டது, நாங்கள் இப்போ மிகவும் சந்தோஷமாக இருக்கிறோம் உங்களுக்கும் மகிழ்ச்சியா அப்பா" எனத் தந்தையிடம் ரகசியமாகக் கேட்டாள்.

அன்று இரவு தனிமையில் லதா ஆனந்த்திடம் "மந்த்ரா பற்றி நீங்கள் சொன்னதைக் கேட்காததற்கு என்னை மன்னித்துவிடுங்கள்" என்றாள் அவள் குரல் கரகரத்தது, கண்களில் நீர் பூத்தது. அவளை அன்புடன் அணைத்தவன் "உனது மன உளைச்சலுக்கெல்லாம் அவள்தான் காரணமென்று எனக்குத் தெரியும் லதா, நீயாகத் தெளியட்டும் என்று தான் விட்டேன். ஆனால் நாளாக ஆக ஒரு பயமே வந்துவிட்டது. அவள் குணமே அதுதான், மற்றவர்கள் நன்றாக இருப்பது பிடிக்காது" என வங்கியில் நடந்தவை அனைத்தையும் கூறினான். "இவ்வளவு நடந்திருக் கிறதா"? எனக் கணவனை விழி மலர்த்திப் பார்த்தவள் "எதுவும் தெரியாமல் அவள் சொல்லைக் கேட்டு உங்களை இத்தனை நாட்களும் துன்பப்படுத்திவிட்டேன். இப்படியான ஒருத்தியை என் சினேகிதி என நான் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடிய போது உங்கள் மனம் என்ன பாடுபட்டிருக்கும்" என வருந்தினாள்.

“உன்னில் எந்தத் தவறும் இல்லை லதா. இது இயற்கைதானே. நண்பர்கள் உதவிதான் செய்வார்கள். நட்பு ஓர் உன்னதமான உணர்வு. அதில் சுயநலம் இருக்காது அது தான் அவளைக் கண்டதும் உனக்கு அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் மந்த்ரா அப்படி இல்லை. அவள் உன்னைப் பகடைக் காயாக்கி என்னையும் துளசியையும் பழி வாங்கத் திட்டமிட்டிருக்கிறாள். நல்ல காலம் அவள் குணம் புரிந்ததும் நீ விலகிக் கொண்டாய். எனக்கு அது போதும்” எனக் கூறினான். “இனி மந்தரா அல்ல, அந்த இராமாயணத்து மந்தரையே வந்தாலும் எங்களை ஒன்றும் செய்ய முடியாது ஆனந்த், ஆனால் அவள் எல்லாவற்றையும் மறைத்து என்னை முட்டாள் ஆக்கியிருக்கிறாள். நாளைக்கு அவளைக் கடைசித் தடவையாகப் பார்த்துக் கேட்டுவிட்டு என் முகத்தில் என்றும் விழிக்காதே என்று சொல்லப் போகிறேன்” என்றாள்.

“வேண்டாம் லதா. அவள் ஒரு கரித் துண்டு மாதிரி. அது எரியும்போது தொட்டால் கை பொசுங்கும், எரியாதபோது தொட்டால் கை கறையாகும் அதை விட்டு விலகி இருப்பதே எங்களுக்கு நல்லது” என்றான்.

“நீங்கள் சொல்வதுதான் சரி ஆனந்த்” என்ற லதாவின் இதயத்தில் இன்பம் நிறைந்தது. நல்ல காலம் என் மனத்தில் படர்ந்த சந்தேகம் என்ற பனிப் படலம், பகுத்துணர்வு என்ற சூரிய ஒளியால் நீக்கப்பட்டதே என நினைத்த போது அவள் இதயமெங்கும் ஓர் இன்பப் பரவசம் பொங்கிப் பிரவகித்தது.

இனி என்றென்றும் அவளது குடும்பம் என்ற இனிய பூஞ்சோலையில் பூங்குயில்கள் பாடும், பொன் மலர்கள் சிரிக்கும், நறுமணம் தென்றலில் கமழ்ந்து தவழும். அவள் குடும்பக் கோவிலை எந்தக் காற்றாலும், மழையாலும் அசைக்க முடியாது. ஏனென்றால் அது அன்பு, நம்பிக்கை என்ற பலத்த அஸ்திவாரத்தில் எழுப்பப்பட்டு திடமாக நிமிர்ந்து நிற்கின்றது.

ஆனந்த் தன் அன்பு மனைவியைப் பெருமையுடன் பார்த்தான் அவன் கண்களில் சுரந்த கருணையைக் கண்டு லதாவின் வதனம் விகசித்தது.

• • •

**கலப்பை - ஆடி 2002**

# தந்தப் பேழை

குறுநாவல்

## 1

அஞ்ஜனா ரத்மலானை விமான நிலையத்தில் யாழ் நகர் செல்வதற்குத் தயாராக நிற்கின்றாள். சுமார் இருபது வருடங்களின் பின் தாய் மண்ணில் கால் பதித்தவள் இப்பொழுது பிறந்த மண்ணை நோக்கிப் பயணிக்கப் போகின்றாள். இலங்கைக்கு வரவேண்டுமென இத்தனை வருடமாகத் தோன்றாத ஓர் எண்ணம் இப்பொழுது தோன்றியதில் அவளுக்கும் வியப்புத்தான். 'மனித மனங்கள் நிமிடத்திற்கு நிமிடம் மாறும்' என்று எங்கேயோ படித்ததை நினைத்துத் தனக்குத் தானே நகைத்துக் கொண்டாள்.

அங்கே நின்றவர்கள் யாரையும் அவளுக்குத் தெரியாது. முன்ன ரென்றால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் மெயில் ரெயினிலோ, யாழ் தேவியிலோ போகும் போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். ஒவ்வொரு ஸ்டேசனிலும் ரெயின் நிற்கும் போதும் அங்கு விற்கும் பழங்கள், சிற்றுண்டிகள் எதையாவது அம்மா அவையெல்லாம் சுத்த மில்லை உடம்புக்குக் கூடாது வேண்டாம் என்று தடுத்தாலும் அப்பா இன்று ஒரு நாள் தானே பரவாயில்லை என வாங்கிக் கொடுக்கத் தானும் தம்பியும் தங்கையும் சாப்பிட்டு சுகவீனத்தைத் தேடிக்கொள்ள "அப்பாவும் பிள்ளைகளும் பார்த்துக் கொள்ளுங்கோ" எனச் சொன்ன

அம்மாவே பின் வைத்தியம் செய்வதை நினைத்து அவள் இமைக் கரைகள் பனித்தன. இருவரையும் ஒரே நாளில் இழக்க அவர்கள் மூவரும் என்ன பாவம் செய்தார்களோ?

அங்கு நின்ற பலர் வெளிநாட்டிலிருந்து வந்தவர்களும், சிலர் அவர்களை வழியனுப்ப வந்தவர்களுமாக இருந்தனர். பலாலி விமான நிலையத்தில் அவர்களை வரவேற்க யார் வருவார்கள் எப்படிப் போவது என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அஞ்ஜனா அனைத்தையும் கேட்டுக்கொண்டு ஒரு மூலையில் மெளனமாக இருந்தாள். அவளை அழைக்க யார் வருவார்கள்? யாருமே இல்லையே! ஒருவேளை கேசவ் அத்தானுக்குத் தெரிந்தால் வந்திருப்பாரா என நினைத்தாள். அவள் நினைவலைகள் பின்னோக்கி அவளது குழந்தைப் பருவத்துக்கு அழைத்துச் சென்றது.

அப்பா சந்திரசேகரும் அம்மா மனோகரியும் தம்பி அவினாஷ், தங்கை ஆரபி என அவர்கள் குடும்பம் ஓர் அன்புச் சோலை. அப்பாவின் வேலை நிமித்தமாகக் கொழும்பில் இருந்தனர். ஆனால் ஒவ்வொரு பாடசாலை விடுமுறைக்கும் தவறாமல் யாழ்ப்பாணத்தில் கிராமத்தில் இருக்கும் அத்தை வீட்டிற்குப் போய் விடுவார்கள். அப்பாவுக்கு பார்வதி அத்தைதான் ஒரே சகோதரம். இருவரும் ஒருவர் மேல் ஒருவர் மட்டற்ற பாசம் வைத்திருந்தனர். அத்தை என்றால் அஞ்ஜனாவுக்கும் நிரம்பப் பிரியம். ஆனால் அவள் கணவர் கந்தசாமி மாமா என்றால் பயம். அந்த மாமா சிரித்து அவள் ஒரு நாளும் பார்த்ததில்லை. அத்தையை நினைத்தால் அவளுக்குப் பாவமாக இருக்கும். சில நேரம் அப்பா நல்ல மன நிலையில் இருக்கும்போது “ஏன் அந்தச் சிடுமூஞ்சி மாமாவுக்கும் அத்தைக்கும் திருமணம் செய்து வைத்தீர்கள்” எனக் கேட்டிருக்கிறாள். அது தாத்தா செய்தது தனக்குப் பின் தன் நிலபுலமெல்லாம் பார்க்க பிரயாசையான ஓர் ஆள் வேணுமென்று அவரைத் தேர்ந்தெடுத்தார் என்பார். மாமா பிரயாசையானவர்தான் அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அவர்கள் வீட்டில் பொன்னும் பொருளும் குவிவது போலக் காலத்திற்குக் காலம் நெல்லும் மிளகாயும் தானியமுமாக எப்பொழுதும் குவிந்து கொண்டே இருக்கும். வீட்டுக்கு வந்தால் பிறகு எல்லாம் அத்தையின் பொறுப்புத்தான் அவற்றைக் காய வைத்துப் பதப்படுத்திச் சொந்தத் தேவைக்கு வைத்துக்கொண்டு மிகுதியை விற்பார். ஏழை எளியவர்கள் வயலில் வேலை பார்ப்பவர்கள் என அனைவருக்கும் தாராளமாக வாரி வழங்குவார். மாமா எப்போதாவது மகிழ்ச்சியாக

இருக்கும்போது நான் வெறும் தொழிலாளி எல்லாவற்றையும் எஜமானி அம்மாவிடம் ஒப்படைத்து விட்டேன் என்று வேடிக்கையாகச் சொல்வார். விவசாய வேலையைவிட மாமா விவசாய விளைபொருட்கள் விற்பனைத் தரகர் வேலையும் பார்த்தார். அதனால் அத்தை குடும்பமும் எப்பொழுதும் சிறப்பாகவே இருந்தனர்.

அவர்களுக்கும் கொழும்புக்கு அரிசி, மா, தூள் எல்லாம் அவ்வப் போது அத்தைதான் அனுப்பி வைப்பார். எப்பொழுதும் அதிகமாகவே இருக்கும் அட்ஷய பாத்திரம் மாதிரி ஒரு நாளும் குறையாது. அம்மா பக்கத்து வீட்டுப் பத்மா ஆன்ட்டிக்கும் கொடுப்பார். ஒருமுறை பேச்சோடு பேச்சாக அம்மா அதைச் சொல்ல அத்தை பிறகு அவருக்கும் சேர்த்து அனுப்பியதை நினைத்து அவள் இதழ்கள் விரிந்தன.

விடுதலைக்கு அவர்கள் போனால் அத்தை வீடு விழாக் கோலம் பூணும். அத்தைக்கு இரண்டு பிள்ளைகள். கேசவ் அத்தானும் அவர் தங்கை ரஷ்மியும். அத்தை விதவிதமாகச் சமைத்துப் போடுவதைச் சாப்பிட்டு விட்டுச் சிறு வயதில் எல்லோருமாகச் சேர்ந்து கிராமத்தை ஒரு கலக்குக் கலக்கியதை நினைத்துக் கொண்டாள். அந்தந்தப் பருவத்திற் கேற்ப நுங்கு,ஈச்சம்பழம், பனங்கிழங்கு என அவர்களுக்காகக் காத்தி ருக்கும். கேசவன் அதிகாலையில் எழுந்து போய் ஈச்சம்பழம் பிடுங்கி வந்து முழுவதையும் அவளிடமே கொடுக்க அங்கு வேலை செய்யும் சீதேவி “அதென்ன எல்லாத்தையும் உன்னாளிடமே கொடுப்பது மற்றப் பிள்ளைகளுக்கும் கொடுக்கலாம் தானே” எனக் கேலி செய்வாள். “நீ பேசாமல் இரு கிழவி. அஞ்சு ஒன்றும் உன்னைப் போலத் தனியத் தின்ன மாட்டாள். அவள் ஒரு தாய் போல எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுப்பாள்” எனக் கேசவன் கோபித்துக் கொள்வான். அதை நினைத்த அஞ்சுவின் கண்கள் கலங்கின. அவை எவ்வளவு மகிழ்ச்சியான நாட்கள் என நினைத்துத் தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள். இந்த விஷயத்தில் மாமாவும் நல்லவர்தான். பிள்ளைகளுக்கென்று கப்பல் வாழைப்பழம், மாம்பழம் எல்லாம் பாதுகாத்து வைப்பார். அதை யார் கேட்டாலும் என்ன அவசர தேவை என்றாலும் முடியாது அது என் மருமக்களுக்கென்று வைத்துக் கொள்வா. தினமும் தோட்டத்தி லிருந்து வரும்போது எதையாவது கொண்டு வந்து தருவார்.

அத்தை எப்போதும் சிரித்துக் கொண்டே வளைய வருவார். மாமா எது சொன்னாலும் பொருட்படுத்த மாட்டார். சிறிது வளர்ந்த பின் அத்தை யிடம் வேடிக்கையாக “எப்படி மாமாவின் பேச்சுக்களைக்

கேட்கின்றீர்கள்?" என்று கேட்டிருக்கிறாள். அதற்கு அத்தை "பேசினால் அன்பில்லை என்று அர்த்தமா? சத்தம் போட்டுப் பேசுவது எதற்கும் உணர்ச்சிவசப்பட்டுக் கோபப்படுவது அவர் சுபாவம் அதைக் கண்டும் காணாமல் விடவேண்டும். மற்றும்படி எனக்கு என்ன குறை வைத்திருக் கிறார். நான் இராணி மாதிரி இந்த வீட்டில் இருக்கிறேன். அது மட்டு மில்லை மாமா கத்துவாரே அல்லாமல் நான் தலையிடியென்று ஒரு சொட்டுப் படுத்தால் போதும் என்னம்மா என்று துடித்து விடுவார்" என்பார். அதையெல்லாம கேட்டுவிட்டு "அப்பாடா அத்தைக்கு மாமா விடம் செமை காதல்தான்" என்று சீண்டியிருக்கிறாள். ரஷ்மிக்கும் அஞ்சுவுக்கும் ஒரே வயதுதான். அவள் "இது தேறாது நீ விடு அஞ்சு" என அலுத்துக் கொள்வாள். அத்தையும் விடாமல் "ஆமாண்டி எனக்கு என் புருஷன் மேல் காதல்தான். நாங்களெல்லாம் அந்தக் காலம் அப்பா அம்மா காட்டியவரை மணந்து அதன் பின் காதலிக்கின்றோம். இப்பென் றால் முளைத்து மூன்று இலை விட முதலே காதல் அது இது என்று அலையுதுகள்" என்பார்.

மாமா பிள்ளைகளிடமும் சிடு சிடு என்று தான் இருப்பார். சிறு வயதில் அவர்கள் எல்லாம் விளையாடக் கேசவ் அத்தானை மட்டும் 'தோட்டத் துக்கு வா, மாடு பார், ஓலை கிழி' என்று எதையாவது சொல்லிக் கூட்டிக் கொண்டு போய்விடுவார். அதைப் பார்க்க அவளுக்குப் பாவமாக இருக்கும். அவன் வேலையைக் குறைப்பதற்காக ரஷ்மியிடம் பழகி ஓலை கிழிப்பது, கிடுகு பின்னுவது போன்ற வேலைகளை அஞ்சுவும் செய்திருக்கிறாள். ஆனால் மாமா கண்டால் விடமாட்டார் "பட்டணத்துப் பிள்ளைகள் உங்களுக்கேன் இந்த வேலையெல்லாம்" என்று கலைத்து விடுவார். "பட்டணமென்றால் செய்யக் கூடாதா?" என அத்தையிடம் போய் முணுமுணுப்பாள். "மாமா வேண்டாமென்றால் விடேன்" என அத்தை சொல்வார்.

ஆனால் எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல மாமா செய்த அந்த வேலையை யாராலும் ஜீரணிக்க முடியவில்லை. ஆனால் யாரா லுமே எதுவும் செய்யவும் முடியவில்லை. பத்தாம் வகுப்புடன் கேசவனின் படிப்பை நிறுத்தி முழு நேர விவசாயி ஆக்கியது. அவள் தந்தை கூட இப்பொழுது பல்கலைக்கழகத்தில் கூட விவசாயம் ஒரு பாடமாக இருக்கு அவன் படிக்கட்டும் அதன் பிறகு விவசாயத்தைச் செய்யலாம் என்று கெஞ்சிப் பார்த்தார். அதற்கெல்லாம் மாமா மசியவே இல்லை.

அந்த முறை விடுதலைக்கு வந்து கேசவனைப் பார்த்தபோது அவளுக்குப் பாவமாக இருந்தது, விழிகள் நிறைந்தன. அவன் அவள் அருகில் கூட வரவில்லை. வலியப் போய்ப் பேசிய போதும் சரியாக முகம் கொடுத்துப் பேசவில்லை. அஞ்சு தூரத்தில் நின்று அவன் காதுபடச் "செய்யும் தொழிலே தெய்வம்' வள்ளுவர் கூட உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' எனச் சொல்லி யிருக்கிறார்" எனச் சொன்னாள். அவன் கவனிக்காத மாதிரிப் போய் விட்டான். அவள் ரஷ்மியிடம் குறைப்பட்ட போது ரஷ்மி "நீ ஏன் அஞ்சு விடம் பேசவில்லை" எனக் கேட்க அவன் "உனக்கென்ன பைத்தியமா ரஷ்மி அவள் கொழும்புப் பெண். பெரிய படிப்பெல்லாம் படிப்பாள் பிறகு படிக்காத இந்தத் தோட்டக்காரனைக் கவனிப்பாளா? அதனால் இப்போ திருந்தே விலகியிருப்பது நல்லதில்லையா"? என்று சொன்னதை மறைந் திருந்து கேட்டாள்.

அதைக் கேட்ட அவள் கண்களில் முத்துக்கள் திரண்டன. ஆனால், அந்த வேளையில் அவளது இதயப் பேழை திறந்து அங்கே ஒரு முத்து அரும்பியது. அது இதுவரை இல்லாத ஒரு சுகமான உணர்வாக இருந்தது. தனிமையில் அதைப் பார்த்துப் பார்த்துப் பரவசமுற்றாள். மற்ற வேளைகளில் வெல்வெற் துணியால் சுற்றி இறுக மூடிப் பத்திரமாகப் பாதுகாத்து வந்தாள். என்ன செய்கிறோம் ஏது செய்கிறோம் என அந்த வயதில் அவளுக்குப் புரியவில்லை. ஆனால் அது ஒரு அபரிமிதமான சுகமாக மட்டும் இருந்தது.

அதன் பின் வந்த நாட்களில் அவள் பருவமடைந்து கிராமத்துக்கே உரிய பண்பில் இளைஞர்களுடன் பேசுவது தடுக்கப்பட அவளுக்கும் கேசவனுக்குமிடையே இடைவெளி அதிகரித்தது. ஆனால் தூர நின்று அவனைப் பார்த்து ரசிப்பாள். அவன் மீசை அரும்பிய ஆண் மகனாகி ஆஜானுபாகுவாக நிற்பதைப் பார்க்க அவள் உள்ளம் சிலிர்த்தது. எப்போதும் வீட்டில் நிற்காமல் உழவு யந்திரம் அல்லது நீர் இறைக்கும் யந்திரத்தைக் கொண்டு திரிவதைப் பார்த்து வருந்தியிருக்கிறாள். இப்போதெல்லாம் மாமா வீட்டில் இருந்து வெற்றிலையைச் சொதப்பிக் கொண்டு 'எல்லாம் என் பிள்ளை பாக்கிறான்' என்று சொல்வதைப் பார்க்க அவளுக்கு ஆத்திரமாக இருக்கும். "அத்தானுக்கு ஓய்வே இல்லையா" எனக் கேட்டு அத்தையிடம் சண்டைக்குப் போவாள். அதைப் பார்க்க அத்தைக்குப் பெருமையாக இருந்தாலும் "விவசாயிக்கு ஓய்வே தம்மா?" என்பாள். முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்விடுவாள்.

விடுதலைக்குக் கிராமத்திற்குப் போகும்போது அஞ்சு எப்போதும் கேசவனுக்கும் ரஷ்மிக்கும் தனது கைச்செலவுப் பணத்தில் சிறு சிறு பரிசுகள் வாங்குவாள். கேசவனுடன் பேசாதபோதும் ரஷ்மி மூலமாக அவனிடம் சேர்த்து விடுவாள். அவள் கொடுத்த பேனாவை அவன் பெருமையுடன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு வளைய வருவதைப் பார்த்து அவள் உள்ளம் பூரிக்கும். அப்படித்தான் அந்தத் தடவை ஓர் அழகிய கழுத்தணி (ரை)யைக் கண்டாள். கற்பனையில் அதை அவன் கழுத்தில் கட்டி அழகு பார்த்து மகிழ்ந்தவள் அதை வாங்கி வந்து கொடுத்தாள். ஆனால் அதைப் பார்த்தவன் "கிராமத்தான் 'ரை' எல்லாம் எங்கே கட்டுவானாம்" எனக் கூறிக் கொண்டே போய்விட்டான். அதைக் கேட்ட அவள் விழிகள் பனித்தன. ஆனால் சில நாட்களின் பின் ஒருநாள் அவன் விவசாய சங்கக் கூட்டம் தலைமை அலுவலகத்தி லிருந்து அதிகாரி வருகிறார் என அழகாக உடையணிந்து நின்றதைப் பார்த்த அவள் தந்தை, எப்போதும் போல, "என்னடா மாப்பிள்ளை எங்கே போகிறாய்?" எனக் கேட்டு "இந்த உடைக்கு ஒரு 'ரை'கட்டினால் நன்றாக இருக்கும் நான் கூட ஒன்றையும் கொண்டுவரவில்லையே" என வருத்தப்பட, "'ரை' இருக்கு மாமா" என ரஷ்மி கொண்டு வந்து கொடுத்தாள். அதை மாமா கட்டிவிட அங்கே நின்ற அவளை பார்த்துக் கண்களாலேயே அவன் நன்றி சொன்னதை அவள் இதயப் பேழை திறந்து வாங்கிக் கொண்டது.

அது மட்டுமா! கூட்டம் முடிந்து வந்து "கூட்டம் நன்றாக நடந்தது. நான் 'ரை'உடன் போனதைப் பார்த்த அதிகாரி 'தோட்டக்காரன் என்று தாழ்வு மனப்பான்மை கூடாது. கேசவ் எப்பொழுதும் இடத்திற்கேற்றவாறு உடை உடுத்தப் பழகவேணும்' எனச் சொன்னார்" என்று அம்மாவிடம் சொல்வது போல அவள் காது படக் கூறியதைக் கேட்டு அவள் உள்ளம் உவகித்தது.

ரஷ்மி அஞ்சுவின் உள்ளக்கிடக்கையை ஊகித்ததால் அவ்வப்போது "எனக்கென்றால் எதுவுமே புரியவில்லை அஞ்சு. நீயென்றால் டாக்டராக முயற்சித்துக் கொண்டிருக்கிறாய். ஆனால் படிக்காத, தோட்டக்கார அண்ணா மேல் அன்பு வைக்கிறாய்" என்பாள். படிக்காத என்றால் அஞ்சு வுக்குக் கோபம் வரும் "வெறும் புத்தகப் படிப்புத்தான் படிப்பா? ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது உனக்குத் தெரியுமா?" எனக் கேடபாள் "அன்பு வைப்பதற்குக் கல்வித் தகுதியெல்லாம் தேவையில்லை ரஷ்மி.

அப்படியென்றால் பிறந்த குழந்தை மேல் தாய் எப்படி அன்பு வைக்கலாம்?" எனக் கேட்டு மடக்குவாள். "அதுவும் இதுவும் ஒன்றா? சில பைத்தியங்களிடம் பேசிப் பயனில்லை" என ரஷ்மி அலுத்துக் கொள்வாள்.

அஞ்சுவுக்கே தெரியவில்லை தன் அன்பின் தன்மையும் மகத்துவமும். அதை அவள் முழுதாக உணர்வதற்கு முன்னரே அவள் வாழ்வில் விதி பயங்கரமாக விளையாடி விட்டது. அது அவளைக் கேசவனிடமிருந்து பிரித்துப் பல ஆயிரம் மைல்களுக்கப்பால் ஆஸ்திரேலியாக் கண்டத்திற்கு இழுத்துச் சென்றது. அன்று போனவள் மீண்டும் இன்று தான் வருகின்றாள்.

அஞ்சு பன்னிரண்டாம் வகுப்புச் சோதனை முடிந்து பெறுபேறுகளுக்காகக் காத்திருந்தபோது தான் அந்தப் பெரிய இனக் கலவரம் இலங்கையில் நடந்தது. எல்லோருமாக அகதி முகாமில் போய் இருந்தவர்கள் இரண்டு நாட்களின் பின் வெளியே நிலைமை ஓரளவு சரியாக இருக்கிறது, வீட்டில் போய் உணவு உடைகள் எடுத்து வருகிறோம் எனச் சென்ற பெற்றோர் திரும்பவே இல்லை. இப்போ வந்து விடுவார்கள் பிறகு வந்துவிடுவார்கள் எனச் சாக்குச் சொல்லித் தம்பியையும் தங்கையையும் சமாதானப்படுத்தியவள் பின் இன்று வருவார்கள் நாளை வருவார்கள் எனச் சொல்லிச் சொல்லி நாட்களைக் கடத்தினாள். ஆனால் கடைசி வரை அவர்கள் வரவே இல்லை. பின் நிலைமை தெரிந்த நண்பர்கள் "அம்மா அப்பா வருவார்கள். போன இடத்தில் ஏதாவது தடையாக இருக்கும். ரெயின் போகிறது ஊருக்குப் போங்கோ" என அனுப்பி வைத்தனர். அங்கே அவர்களைக் கண்ட அத்தை கட்டிக் கொண்டு கண்ணீர் வடித்தார். அப்பொழுதுதான் அவளுக்குத் தன் பெற்றோருக்கு எதுவோ நடந்துவிட்டது என உணர முடிந்தது. எதிர் காலம் பயங்கரமாகப் பெரிய ஒரு கேள்விக்குறியாக அவள் முன் நின்றது. தம்பியையும் தங்கையையும் எப்படிப் பாதுகாப்பதென அவளுக்குத் தெரியவில்லை. பறவை தன் குஞ்சுகளை இறக்கைக்குள் வைத்திருப்பதுபோலத் தன்னுடனேயே எப்பொழுதும் வைத்துக் கொண்டாள். எட்டு வயது ஆரபியை யாராலும் சமாளிக்க முடியவில்லை. எப்பொழுதும் அம்மா, அப்பா எனக் கண்ணீரும் கம்பலையுமாகவே இருந்தாள். பன்னிரண்டு வயது அவினாஷ் பெரிய மனிதன் போலாகி அக்காவுக்கு ஆதரவாக இருந்தான்.

இந்த வேளையில்தான் அவள் அன்னையின் அண்ணா சிறீகாந்த் ஆங்கிலேயப் பெண்ணை மணந்ததால் குடும்பத்திலிருந்து விலக்கப் பட்டிருந்தவர் விபரம் அறிந்து ஆஸ்திரேலியாவில் இருந்து வந்தார். "என்னுடன் வருகின்றீர்களா? நான் உங்களை ஆஸ்திரேலியாவில் கொண்டுபோய்ப் படிக்க வைக்கின்றேன்" என்றார். பார்வதி அத்தைக்குச் சிறிதும் விருப்பமில்லை. ஆனால் கந்தசாமி மாமா 'மிகவும் நல்லது' என வரவேற்றார். அத்தை தனிமையில், அவரிடம் "பார்க்கப்போனால் எமது சொத்தில் ஒரு பகுதி அவர்களுக்குப் போக வேணும். அந்த நேரம் தம்பி தான் படித்திருக்கிறேன் தன் குடும்பத்தைப் பார்ப்பேன் என்று எல்லா வற்றையும் எனக்கு எழுதி வைத்தான். யாக்கை நிலையற்றது என நினைக்கத் தவறிவிட்டான். அதனால் வந்த வினைதான் யாவும். அதனால் பிள்ளைகள் இங்கேயே இருக்கட்டும்" எனக் கெஞ்சி மன்றாடிப் பார்த்தார். ஆனால் மாமா மசியவே இல்லை. கூட்டிக்கொண்டு போகும் படி சிறீகாந்த் மாமாவுக்குத் தூபம் போட்டார்.

பெற்றவர்கள் கஷ்ட நஷ்டம் எதுவுமே தெரியாமல் வளர்த்ததால் அஞ்சுவுக்கும் அடுத்து என்ன செய்வதெனத் தெரியவில்லை. இங்கேயே நிற்கிறேன் என்று சொல்லமுடியவில்லைச் சொன்னால் என்ன வருமானம்? பன்னிரண்டாம் வகுப்புடன் என்ன வேலை கிடைக்கும்? கிடைத்தாலும் தனித்து எப்படி வாழ்வது? போன்ற பல வினாக்கள் தோன்றி அவளைப் பயமுறுத்தின. அதனால் வேறு வழியின்றி மாமாவுடன் ஆஸ்திரேலியா செல்லச் சம்மதித்தாள். அவர்கள் புறப்பட்ட அன்று அத்தை கதறி அழுததையும், ரஷ்மி வார்த்தைகளே வராமல் கண்கள் நிறைய உதடுகள் துடிக்கக் கண்களாலேயே விடையளித்ததையும், மாமா கல்லுளிமங்கன் மாதிரி எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்ததை யும், வழியனுப்ப ஸ்டேஷன் வரை வந்த கேசவன் கண்கள் குளமாக விடையளித்ததையும் அவளால் என்றுமே மறக்க முடியாது. சிலவேளை இரண்டு மாமாக்களும் நல்லதுதான் செய்தார்களோ! என அஞ்சு இப்பொழுது சில சமயம் நினைப்பாள்.

ஆஸ்திரேலியாவுக்கு அழைத்து வந்த மாமா சிறீகாந்த் அவர்களைத் தனி ஒரு ப்ளாட்டில் குடி வைத்தார். "அங்கே இருந்தால் உங்களுக்கு அனாதை என முத்திரை குத்தி உருப்படவிடமாட்டார்கள் அதனால் தான் இங்கு கூட்டி வந்தேன். இங்கு பல வாய்ப்புக்கள் இருக்கின்றன அதைப் பயன்படுத்தி நீங்கள் தான் முன்னுக்கு வரவேணுமென்றார்" அதை இன்று நினைத்தால் அஞ்சுவுக்குச் சரியாகத்தான் தோன்றுகிறது. ஆனால்

அன்று பயங்கரமாக இருந்தது. புதிய இடத்தில் தனித்து வாழ்வதா என ஏங்கிப் போனாள். மாமாவை ஏக்கமாகப் பார்த்தபோது "இங்கு பார் அம்மா! இந்த நாளில் யாரையும் நம்பக்கூடாது. தன் கையே தனக்குதவி. தன்னம்பிக்கையும் துணிவும் தான் மிகவும் அவசியம். யாரையும் எதற்கும் எதிர்பாக்கக்கூடாது" இன்னோரன்ன பல அறிவுரைகளை மாமா அள்ளி வீச அசையாமல் இருந்தாள். அவர் அவளைப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானப் பாடம் படிக்கவும், அவினாஷையும் ஆரபியையும் பாடசாலையிலும் சேர்த்துவிட்டார். வீட்டுச்சாமான்கள் எல்லாம் வாங்கிக் கொடுத்தார். 'நீயே சமைத்துக் கொள்' என்றார். அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. சமையலறையின் நிறமே தெரியாமல் எந்த நேரமும் 'படி! படி!' எனச் சொல்லி வளர்த்துவிட்டுச் சொல்லாமல் கொள்ளாமல் போன அம்மாவை நினைத்து ஏங்கி அழுதாள். ஆனால் அழுதால் உணவு வருமா ஏதோ அறிவுக்கெட்டியவரை ஒன்றைச் செய்து வயிற்றை நிரப்பினர். அவினாஷ் எதுவுமே பேசாமல் உண்பதைப் பார்க்க வேதனையாக இருக்கும். ஆரபியின் அழுகையை நிறுத்துவது பகீரதப் பிரயத்தனமாக இருந்தது. அதிக நாட்கள் அவள் உணவு வெறும் பாலா கவே இருந்தது. சமூக நலப் பணம் வரத் தொடங்கியதும் ஆரபி விரும்பிய நொறுக்குத் தீனியைப் பாடசாலையில் வாங்கப் பணம் கொடுப்பாள். ஆரம்பத்தில் மாமா தினமும் வந்து பார்ப்பார். ஆனால் அது படிப்படியாகக் குறைந்தது.

ஏதாவது சமையல் புத்தகம் கிடைத்தாலாவது கை கொடுக்கும் போல் இருந்தது. ஆனால் எங்கே எதை வாங்குவது என்றும் அவளுக்குத் தெரியவில்லை. ஆனால் இங்கு நடப்பது எதுவும் அத்தைக்குத் தெரியக் கூடாது என அஞ்சு உறுதியாக இருந்தாள். நாங்கள் நன்றாக இருக்கி றோம். மாமா எங்களை நன்றாக வைத்திருக்கிறார் என்று அத்தைக்குக் கடிதம் எழுதுவாள். இங்குள்ள உணவு ஆரபிக்குப் பிடிக்கவில்லை அத்தை சொதி, குழம்பு என்று கேட்கிறாள் எப்படி வைப்பதென எழுதி அனுப்புங்கோ எனக் கேட்டாள். அத்தை பக்கம் பக்கமாக ஆரபிக்கு என்ன பிடிக்குமோ அவற்றிற்கெல்லாம் குறிப்பெழுதி அனுப்பினார். அதைக் கொண்டு அனைவரும் காலம் தள்ளக்கூடியதாக இருந்தது. சித்திரமும் கைப்பழக்கம் எனபது போலப் பழகப் பழக ஒவ்வொன்றாக வேறு சமையலும் செய்யக்கூடியதாக இருந்தது.

காலையில் இருவரையும் பாடசாலையில் விட்டுவிட்டு ரெயினில் அஞ்சு தன் வகுப்புக்குப் போவாள். பாடசாலை விடும் நேரத்திற்கு வந்து

இருவரையும் கூட்டி வந்து கூண்டுக்கிளிகளாக வீட்டுக்குள்ளேயே இருப்பார்கள். ஆகவே மாலை மூன்று மணிக்குப் பின் நடக்கும் வகுப்பு களுக்குப் போக முடிவதில்லை. அதனால் வகுப்பில் அவள் தரம் குறைந்தது. அத்துடன் என்ன தான் கொழும்பில் ஆங்கிலத்தில் படித் திருந்தாலும் அந்த நாட்களில் விரிவுரையாளர் கூறுவது எதுவும் அவளுக்குப் புரியவில்லை. அதனால் பாடமும் விளங்கவில்லை. எப்பொழுதுமே வகுப்பில் முதல் மாணவியாக இருந்த அஞ்சுவுக்கு இதெல்லாம் அவமானமாக இருந்தது. வீட்டிலும் வீட்டு வேலை தம்பி தங்கையின் படிப்பென்று அவள் படிப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. மாமாவின் வருகையும் குறைந்ததால் சமூகநலப் பணம் செலவுக்குப் போதவில்லை. படிப்பதை விடுத்து ஏதாவது வேலை செய்து தம்பி தங்கையையாவது நன்றாகப் பார்ப்போம் எனத் தீர்மானித்தாள். எங்கே போய் வேலை தேடுவதெனத் தெரியவில்லை. சமூகநலத்துறையில் போய்க் கேட்போம் என ஒருநாள் தம்பியையும் தங்கையையும் பாடசாலையில் விட்டுவிட்டுச் சென்றாள்.

அந்த நாள்தான் அஞ்சுவின் ஆஸ்திரேலிய வாழ்வில் ஒரு பொன்னான நாள் எனலாம். இப்போதென்றால் ஆஸ்திரேலிய அரச அலுவலகங் களில் எங்கு திரும்பினாலும் தெற்காசியர்களைக் காணலாம். ஆனால் அந்த நாட்களில் அப்படி இல்லை. எங்காவது அருமை பெருமையாக யாராவது இருப்பாகள். அன்று அஞ்சு அலுவலகத்திற்குப் போய் வரிசையில் காத்திருந்தபோது அவளை அழைத்தது பிரேமா என்ற ஒரு தமிழ்ப் பெண். அவர் என்ன வேண்டுமெனக் கேட்டபோது அஞ்சு "ஏதாவது வேலை ஒழுங்கு பண்ண முடியுமா" எனக் கேட்டாள். "அது எங்கள் வேலையில்லை. பக்கத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகத் திற்குப் போகவும்" எனச் சொன்னவர் பின் "உன்னைப் பார்த்தால் படிக்கும் பெண் போல் தெரிகிறது. ஏன் வேலை வேண்டுமென்கிறாய், என்ன கஷ்டம்" எனக் கேட்டார். அதைக் கேட்ட அஞ்சுவின் துயரம் மடை திறந்தது, அனைத்தையும் சுருக்கமாகக் கொட்டித் தீர்த்தாள்.

இப்பொழுது அஞ்சுவின் துயரில் ஒரு பகுதி பிரேமாவின் இதயத்தை அழுத்தியது. ஐயோ பாவமே! இந்த வயதில் இப்படிக் கஷ்டங்களா எனக் கலங்கியவள் "இதோ பாரம்மா பாடம் விளங்கவில்லை என்று யாரும் படிப்பைப் பாதியில் விடுவார்களா? அதை முயற்சி செய்து படித்து விளங்க வேண்டும் இல்லையா? தம்பி தங்கை என நீ படிக்காமல் விட்டால் அவர்கள் படித்து முடிந்ததும் உன்னை எவ்வளவு காலம்

பார்ப்பார்கள்? படிப்பு முக்கியம். அது உன் எதிர்காலத்திற்கு மிகவும் அவசியம் இல்லையா?" என அன்புடன் கூறினார். அஞ்சுவுக்குத் தன் அம்மாவையே பார்ப்பது போல இருந்தது. கண்கள் நிறைய எதுவுமே பேசாமல் உதடுகளைக் கடித்து அழுகையைக் கட்டுப்படுத்த முயன்று தோற்றாள். "அழாதே" என்றவர், "என் மகள் நீரஜாவும் இதே பாடம்தான் படிக்கிறாள். அவளிடம் சொல்கிறேன் அவள் உனக்கு உதவுவாள். உன் தம்பி தங்கையையும் பாடசாலைக்குப் பிறகு பிள்ளைகளைக் கவனிக்கும் எனது சினேகிதி ஒருத்தியிடம் சொல்லி ஒழுங்கு செய்கின்றேன். போய்ப் படி அம்மா. என்ன தேவை என்றாலும் என்னைத் தொடர்பு கொள்" எனத் தனது தொலைபேசி எண்ணையும் எழுதிக் கொடுத்தார். விழிகள் நிறைய நன்றி கூறிப் பெற்றுக் கொண்டாள். "கடவுள் இருக்கிறார் எல்லாம் பார்த்துக் கொள்வார் ஒன்றும் யோசிக்காதே" எனச் சொல்லி அனுப்பி னார்.

மறுநாள் நீரஜா அவளைத் தேடி வந்து பேசினாள். இருவருமாகச் சேர்ந்து படித்தபோது பாடத்தில் இதுவரை இருந்த கஷ்டமெல்லாம் கலைந்து போனது. நீரஜா அஞ்சுவின் புத்திக் கூர்மையைப் பாராட்டி னாள். "எதுவும் ஆரம்பத்தில் அப்படித்தான் இருக்கும் அஞ்சு உனக்கு ஆங்கிலம் தெரியாமலோ புரியாமலோ இல்லை. அவரின் உச்சரிப்புப் புரியவில்லை. அதற்காகக் கலங்காதே எனது குறிப்புக்களைப் பார்த்து எழுது. பின் நாங்கள் படிப்போம்'' என்பாள். அம்மாவைப் போலவே பெண்ணும் அடுத்தவருக்குத் தயங்காமல் உதவுகிறாள் என வியந்தாள். மிகவும் கலகலப்பாகப் பேசும் நீரஜா விரைவில் அஞ்சுவின் சினேகிதி யானாள்.

அதே போல அன்று அவள் பிள்ளைகளைக் கூட்டப் பாடசாலைக்குப் போனபோது அங்கே வழக்கமாகச் சில பிள்ளைகளைக் கூட்ட வரும் சியாமளா அவளிடம் வந்து "உன் தம்பி தங்கைகளால் உனக்கு வகுப்புக் குப் போக முடியவில்லை எனப் பிரேமா சொன்னாள். நீ விரும்பினால் நான் இவர்களை மாலையில் பார்க்கிறேன். நீ வகுப்பு முடிந்த பின் என் வீட்டில் வந்து கூட்டிக்கொண்டு போகலாம்" என்றார். அவரைத் தயக்கத் துடன் பார்த்தவள் "பிரேமா ஆன்ட்டி எல்லாம் சொன்னாங்களா" எனக் கேட்டாள். ''எல்லாமென்றால்!'' என்றவர்,''உன் நிலைமையைச் சொன்னார் வேறென்ன?" எனச் சிறிது சிந்தித்தவர், "நீ பண விசயம் சொல்கிறாயா இந்தத் தனிக்கட்டைக்கு எதற்கம்மா பணமெல்லாம்? இந்தக் குஞ்சுகளின் அன்பும் பாசமும் எனக்குப் போதும். இப்ப பாரேன்

ஓடி வந்து காலைக் கட்டினாங்களே அதற்கு எவ்வளவு பணம் கொடுக்கலாம்? இது தான் உண்மையான சந்தோஷம். ஆனால் மற்றவர்களிடம் பணம் வாங்குவேன். என் சீவியமும் போக வேண்டுமில்லையா? உன்ரை பாவம் எனக்கெதற்கு? நாளையிலிருந்து நான் பத்திரமாகப் பார்ப்பேன். நீ நிம்மதியாய்ப் போய்ப் படி" என்றார். ஆரபியிடம் "ஆன்ட்டியுடன் போகிறாயா?" எனக் கேட்க 'சரி' என்றவள், "இந்த ஆன்ட்டி பார்வதி அத்தை மாதிரியே இருக்கிறார் - நான் உங்களை அத்தை என்று கூப்பிடவா" எனக் கேட்டாள். "நீ எப்படி வேணுமானாலும் கூப்பிடு கண்ணு" என்று அவளை அணைத்துக் கொண்டார். அன்றிலிருந்து சியாமளா அவர்களுக்கு அத்தை ஆனார். அப்பொழுது தான் அஞ்சு நினைத்தாள் உணவும், படிப்பும் போதுமா பிள்ளைகள் பாசத்திற்காக ஏங்குகின்றார்கள் என உணர்ந்தாள். அதை எப்படிக் கொடுப்பதெனத் தெரியாமல் கலங்கினாள். முடிந்தவரை அவர்களிடம் அன்பைக் காட்டினாள்.

அந்த ஞாயிறன்று பிரேமாவும் அவள் கணவர் குமரேசனும் வந்தார்கள். "இந்த வழியால் தான் நாங்கள் சத்ய சாயி பாபா பஜனுக்குப் போவோம் அது தான் உங்களையும் ஒருக்கால் பாாப்போம் என வந்தோம்" என்றனர். பிறேமாவை ஆரபி "அம்மா" என்றாள் அஞ்சுவுக்கு அந்தரமாக இருந்தது. ஆனால், பிறேமா மகிழ்வாக "என்னம்மா" என அணைத்துக் கொண்டாள். அதைப் பார்த்த குமரேசன் அவளைத் தன் பக்கமாக இழுத்து "அப்போ ஆரபிக்குட்டிக்கு நான் அப்பா" என்றார். அன்றிலிருந்து அவர்கள் மூவருக்கும் பிரேமாவும் குமரேசனும் அம்மா அப்பா ஆயினர். அன்புதான் அள்ள அள்ளக் குறையாதது என எங்கோ வாசித்தது நினைவு வர இவர்கள் அப்படியானவர்கள் என நினைத்த அஞ்சுவின் விழிகள் குளமாயின.

ஒருவாறு ஆறு மாதங்கள் ஓடி மறைந்தது. கடந்த மூன்று மாதங்களாக மாமா அந்தப் பக்கமே வரவில்லை. இரண்டு மூன்று தடவை தொலை பேசியில் முயன்றும் "அவர் இங்கே இல்லை" என்ற பதில்தான் வந்தது. ஆஸ்திரேலியாவின் குளிரும் தொடங்க ஆரம்பித்தது. கையில் இருந்த பணத்தைக் கொண்டு பிள்ளைகளுக்கு ஓரளவுக்குக் குளிர் உடைகள் வாங்கினாள். ஆனால் குளிர் பற்றிச் சரியாகத் தெரியாததால் தன்னால் சமாளிக்க முடியும் என நினைத்தாள். ஆனால் எப்படி முடியும்? அவள் எதுவும் சொல்லாமல் குளிரில் நடுங்குவதைக் கவனித்த நீரஜா ஒரு நாள்

சில குளிர் உடுப்புக்கள் கம்பளிகள் எனக் கொண்டு வந்தாள். "அஞ்சு நீ தப்பாக நினைக்கக் கூடாது இவையெல்லாம் உனக்குத் தேவை" என வைத்துவிட்டுப் போனாள். அஞ்சு விழிகள் பனிக்கச் "சொல்லாமற் செய்வர் பெரியர்" என நினைத்துக் கொண்டாள். மறுநாள் வகுப்பு முடிந்து இருவரும் பேசிக் கொண்டிருக்கும்போது "நீரு! நீ உனது உடைகளை எனக்குத் தந்து விட்டு நீ என்ன செய்வாய்" எனக் கேட்டாள். "என்னுடையதா? இல்லையே. அவை எங்கள் சத்ய சாயி இளைஞர் குழுவினரிடம் சேர்த்தது. நாங்கள் அவ்வப்போது இப்படி ஏதாவது சேவை செய்வோம். இந்தத் தடவை உன் கதையைச் சொன்னதும் எல்லா வற்றையும் உனக்கே கொடுக்கச் சொல்லி விட்டார்கள். நீ விரும்பினால் அவினாஷ், ஆரபிக்குப் பாடம் சொல்லி கொடுக்கக்கூட ஆட்கள் இருக்கி றார்கள்" என்றாள். அப்பொழுதுதான் "நானும் பஜனுக்கு வரவா நீரு" எனக் கேட்டாள். "நீ விரும்பினால் எனக்கு ரொம்ப சந்தோசம் அஞ்சு. அங்கே உனக்கு இன்னும் பல நன்மைகள் காத்திருக்கின்றன" என்றாள். அவள் சொன்னது பொய்க்கவில்லை. அதன்பின் அஞ்சுவுக்குப் பகவான் பாபாவின் அருளால் பல விதமான உதவிகள் கிடைத்துக் கொண்டிருந்தன. அவினாஷும் ஆரபியும் அங்கு நடக்கும் பாலவிகாஷ் என்ற சமய பாட வகுப்புக்களுக்குச் சென்று வந்தனர். அங்குள்ள ஆசிரியர்களின் அன்பும் அரவணைப்பும் அவர்கள் கூறும் அறிவுரை களும் ஆரபியிடம் இருந்த எரிச்சல், சினம், எப்போதும் சிணுங்குவது போன்ற செயல்களைக் குறைத்து அவளைப் பழைய கலகலப்பான குழந்தையாக்கியது. அதைப் பார்த்த அஞ்சு ஒரு தாயாகிக் கண்ணீர் உதிர்த்தாள். எல்லோரையும் கவனித்தவள், தன் வயதுப் பெண்களுக்குக் கிடைக்கும் அன்பு, கேளிக்கைகள் எதையும் தான் அனுபவிக்க வில்லையே என்பதைச் சிறிதும் உணரவில்லை. அது அவளை அறியா மலே ஏக்கமாகி இதயத்தின் ஒரு பகுதியை அரித்துக் கொண்டிருக்கிறது என்பதும் அவளுக்கு அப்போது புரியவில்லை.

ஒருவாறு குளிரைச் சமாளித்தாயிற்று என அஞ்சு மூச்சு விட்ட வேளை யில் தான் வீட்டுத் தரகரிடமிருந்து கடிதம் வந்தது. 'மூன்று மாதமாக வாடகைப் பணம் கட்டாததால் முன் பணத்தில் கழித்துவிட்டோம். உடனே வாடகைப்பணம் கட்டவும் அல்லது வீட்டிலிருந்து வெளியேறவும்' என எழுதி இருந்தது. அதைப் பார்த்த அஞ்சு செய்வதறியாது திகைத்து நின்றாள்.

## 2

அப்பொழுது தான் அவர்கள் ஆஸ்திரேலியாவுக்கு வரும்போது அத்தை இரகசியமாக ஒரு பையைக் கொடுத்து இதைப் பத்திரமாக வை சில நேரம் தேவைப்படும் எனச் சொன்னது நினைவு வந்தது. ஓடிப் போய்ப் பெட்டியைத் திறந்து அதை எடுத்துப் பார்த்தாள். அதற்குள் ஐம்பதாயிரம் ரூபாய் பணமிருந்தது. விழிகள் புனல் உதிர்த்தன. ஆனால் அழுவதற்கும் நேரமில்லை. தமிழ்ப் படங்களில் நடப்பது மாதிரி வீட்டுத் தரகர் வந்து சாமான்களை எடுத்தெறிந்து எல்லோரையும் வெளியே துரத்தினால் எங்கு போவது எனப் பயந்தாள். இதை மாற்றினால் ஓரளவுக்கு உடனடித் தேவையைச் சமாளிக்கலாம் என நினைத்தவள் அதையும் கடிதத்தையும் கொண்டு பிரேமாவிடம் ஓடினாள். "எதற்கும் பதறாதே அஞ்சு" என்று ஆறுதல் அளித்தவர், "இந்தப் பணத்தை அங்கிளிடம் கொடுத்து மாற்றினால் தேவைக்கு உதவும். நீ அந்த வீட்டை விட்டுவிடு" என மிகச் சாதாரணமாகக் கூறினார். "ஆன்ட்டீ!" எனக் கூவினாள் "பொறம்மா பொறு!" என்றவர், "என்னுடன் வா" என அவளை வீட்டின் மறுபக்கத்திற்கு அழைத்துச் சென்று அந்தப் பகுதியைத் திறந்தார். அது ஒரு சிறு பகுதி ஒரு அறையும் சமையல் அறையும் கொண்டது. "இங்குள்ள பழக்கம் பழைய காலத்து வீடுகளில் வேலைக் காரருக்கு என்று இப்படி ஒரு அவுட் ஹவுஸ் கட்டியிருப்பார்கள். எங்களுக்கு அதற்கெல்லாம் எங்கே வசதி? வாடகைக்கு விடவும் பிடிக்க வில்லை. பூட்டி வைத்திருந்தோம். நீங்கள் இங்கே வந்து விடுங்கள். ஆமாம் அஞ்சு குழந்தைகள் இரண்டு பேரையும் வைத்துக் கொண்டு நீ தனிய இருப்பது சரியில்லை. நானும் அங்கிளும் இது பற்றிப் பேசி உன்னிடம் சொல்வோம் என இருந்தேன் அதற்கிடையில் கடிதம் வந்து விட்டது. எல்லாம் நன்மைக்கே" என்றார். "ஆன்ட்டீ!!" எனக் கைகளைக் கூப்பியவள் வார்த்தை வராமல் தவித்தாள். அவளை அன்புடன் அணைத்த பிரேமா "எனக்கு நீயும் நீருவும் ஒன்றுதான் அஞ்சு ஒன்றுக்கும் கலங்காதே. எல்லாம் பகவான் பார்த்துக் கொள்வார்" என்றார்.

பிரேமா ஆன்ட்டி வீட்டுக்குப் போகிறோம் என்றதும் எல்லோருக்கும் மட்டற்ற மகிழ்ச்சி. உடனேயே கையில் இருந்த பொருட்களைக் கொண்டு அங்கே குடிபுகுந்தனர். அந்த நேரமே நல்ல நேரமெனப் பிரேமா பகவான் பாபாவின் படம் ஒன்றை வைத்து விளக்கேற்றி வைத் தார். அங்கு வந்த பின்னரும் தொலைபேசியில் மாமாவை அழைத்துப் பதில் கிடைக்கவில்லை. அஞ்சுவுக்கு ஆச்சர்யமாகவிருந்தது. அவ்வளவு

பொறுப்பாக ஏன் கூட்டி வந்தார். பிறகு என்ன தவறாகிப் போனது என அவளுக்குத் தெரியவில்லை. வீடு மாறிய விபரத்தை அத்தைக்கு எழுதி னாள். வேறொன்றும் எழுதவில்லை. அத்தையிடமிருந்து அவ்வப்போது கடிதம் வரும். 'எனக்கு அடிக்கடி சுகமில்லை. இனி உங்களை எல்லாம் பார்ப்பேனோ தெரியாது' என எழுதிக் கொண்டிருந்தார்.

பிரேமா வீட்டில் அவர்களும் வீட்டுப் பிள்ளைகளாகவே இருந்தனர். பெயருக்கு அருகே இருந்தாலும் அநேகமாக முழு நேரமும் அவர்கள் வீட்டில் தான் இருந்தனர். சில வேளை ஒன்றாகச் சமைத்துச் சாப்பிட்டனர். அவினாஷும் அவர்கள் மகன் நிரோஷனும் ஒரே வகுப்பென்றதால் சேர்ந்து படித்தனர். நீரஜா, நிரோஷன் கூட அவர்களுடன் மிகவும் அன்பாகப் பழகினர். எந்த ஒரு பொறாமையும் இல்லை. அது எல்லாம் அவர்கள் பாலவிகாஷ் வகுப்பில் பழக்கப்படுகிறது என அறிந்தாள். அவினாஷ், ஆரபி அந்த வகுப்புக்களுக்குப் போகத் தொடங்கிய பின்னர் எவ்வளவோ மாறி இருந்தனர். முக்கியமாக ஆரபியிடமிருந்த பிடிவாத குணம் வெகுவாகக் குறைந்திருந்தது.

ஆனால் நிரோஷன், ஆரபி செல்லத் தகராறு மட்டும் எப்போதும் இருக்கும். அவன் ஆட்டுக்குட்டி என்று ஆரபியைக் கூப்பிடுவான். அவள் விடாமல் "ஆட்டுக்குட்டி அல்லடா ஆரபிக்குட்டி" என்று சண்டைக்குப் போவாள். எப்பொழுதும் இருவரும் ஒருவரை மற்றவர் சீண்டிக் கொண்டே இருப்பதைப் பார்த்து மற்றவர்கள் சிரிப்பார்கள். ஆனால் ஆரபிக்கு ஒன்றென்றால் எல்லோருக்கும் முதல் நிரோஷன் தான் நிற்பான். அப்படி ஒரு வெளியே காட்டாத பாசம் அவனுக்கு அவள் மேல் இருந்தது. கடந்த சில மாதங்கள் பட்ட கஷ்டங்களெல்லாம் மறைந்து அஞ்சுவால் நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது. அதனால் நன்றாகப் படிக்கவும் முடிந்தது.

அவளது பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்த்து எல்லோரும் மிக மகிழ்ந்தனர். "இப்படியே போனால் நீ மருத்துவம் படிக்கலாம் அஞ்சு, அடுத்த வருடத்திற்கு மருத்துவத்திற்கு விண்ணப்பிப்போம் அதுதானே உன் கனவென்றாய் கட்டாயம் கிடைக்கும் பாரேன்'' எனத் தானே அதற்கான விண்ணப்பப் பத்திரம் எடுத்து வந்து நிரப்பி அனுப்பச் செய்தாள். அவர்கள் எண்ணம் வீண் போகவில்லை. அடுத்த வருடம் அஞ்சு மருத்துவப் பிரிவில் சேர்ந்தாள். இராமயணத்தில் இராமர் குகனிடம் "உன்னுடன் ஐவரானோம்" என்றது போலக் குமரேசன்-பிரேமா தம்பதிகளின் குழந்தைகளின் எண்ணிக்கை ஐந்தானது. விபரம்

புரியாத ஆரபி எதிலும் சம பங்கு எதிர்பார்ப்பாள். அஞ்சுவுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும் ஆனால் நீரஜாவும், நிரோஷனும் ஒரு நாளும் மனம் சுருங்கமாட்டாாகள். அவள் கேட்பதைக் கொடுத்து விடுவார்கள். அஞ்சு தவறாமல் அவர்களுடன் சத்யசாயி பாபா பஜனுக்குப் போய் இறைவனுக்கு நன்றி சொல்வாள். முடிந்தபோது நீரஜாவின் இளைஞர் குழுவின் சேவைகளிலும் பங்கு பற்றுவாள். வீட்டின் குறை நிறைகளைப் பிரேமா அவ்வப்போது பார்த்துக் கொள்வதால் அவளது படிப்புக்கு எந்தத் தடங்கலும் வரவில்லை.

அஞ்சு அத்தைக்கு அடிக்கடி கடிதம் எழுதினாள். அவரிடமிருந்து வரும் கடிதங்கள் யாவும் கண்ணீரில் தோய்ந்தவையாகவே இருக்கும். “இனி உங்களை நான் பார்ப்பேனோ தெரியாது. என் தம்பியிடமே விரைவில் போய் விடுவேன். உங்களைக் கந்தசாமியார் என்றும் கைவிடமாட்டார்” போன்ற வர்ர்த்தைகள் ஒவ்வொரு கடிதத்திலும் இருக்கும். அதைப் பார்க்க அஞ்சுவுக்கு மிகவும் வேதனையாக இருக்கும். ‘எங்களுக்கு இங்கே ஒரு குறையும் இல்லை. நன்றாக இருக்கிறோம். இறைவன் அருள் இருந்தால் நிச்சயம் சந்திப்போம் மனத்தைத் தளர விட வேண்டாம்’ என அஞ்சுவும் விடாமல் எழுதுவாள்.

ஆனால் குழந்தைகளைச் சிறீகாந்த் அழைத்துக் கொண்டு போன பின்னர்தான் பார்வதிக்குத் தன் கணவரின் உண்மை சொரூபம் புரிந்தது. அவர்தான் ‘உன் தங்கை பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு போய்விடு. இல்லாவிட்டால் எங்காவது அநாதை ஆச்சிரமத்தில் விடப் போகிறேன்’ எனக் கடிதமெழுதிக் கூப்பிட்டிருந்தார். அவர்கள் போனபின் “அந்த அநாதைகளை வைத்து என் சொத்தெல்லாம் கரைக்கப் பார்க்கிறாயா” எனக் கேட்டு மனைவியைக் கோபித்துக் கொண்டார். “இந்த நிலபுலனுக் காகத்தானே உன்னை மணந்தேன். இரண்டு பெண் பிள்ளைகள் பிற் காலத்தில் சீர்செனத்தி, நகை நட்டு என்று எவ்வளவு வேணும். உனக்கு ஏதாவது அறிவிருக்கா? அதுதான் அவனை வரவைத்து அனுப்பினேன்” என்றார். அப்பொழுதே பார்வதி இடிந்து போனாள். ‘என் கணவரா இப்படி!’ என அவரால் அதைச் சீரணிக்கவே முடியவில்லை. அதிலிருந்து மன வேதனை பெரிய நோயாகி அவரை நாளுக்கு நாள் கொன்று கொண் டிருந்தது. அவரிடமிருந்து கடைசியாகப் பிரேமாவுக்கு ஒரு கடிதம் தன் உண்மை நிலையை விளக்கி, “என் குழந்தைகளை உங்களிடம் ஒப்படைக்கிறேன். அஞ்சுவுக்கு எதுவும் தெரிய வேண்டாம். எனக்கு எந்த நேரமும் எதுவும் நடக்கலாம்” என வந்திருந்தது. பிரேமாவின் ஆறுதல்

கடிதம் போய்ச் சேர்வதற்கு முன்னரே அவரது மறைவுச் செய்தி வந்து சேர்ந்தது. அதைக் கேட்டு அஞ்சு ஏங்கி அழுதாள். "அப்பாவும் அத்தையும் அவ்வளவு ஒட்டு. ஆன்ட்டி அதுதான் அப்பாவைப் பிரிந்த அத்தையால் முழுதாக இரணடு வருடங்கள் கூட இருக்க முடியவில்லை, எங்களுக்கிருந்த ஒரே உறவு அத்தைதான். அதுவும் இனி இல்லை. முழுக்க முழுக்க அநாதைகள் ஆகிவிட்டோம்'' என அழுதாள். பிரேமாவும் நீரஜாவும் அவளைத் தேற்றும் வகை தெரியாது தவித்தனர்.

அத்தை இறந்ததற்கு அனுதாபம் தெரிவித்து அஞ்சு மாமா குடும்பத்திற்குக் கடிதமெழுதினாள். அதற்கு எந்தப் பதிலும் வரவில்லை. அத்தையுடன் அந்த உறவு முடிந்தது என நினைத்துத் தன் வேலையைப் பார்த்தாள். அவளுக்கு எதையும் நினைத்து மனத்தை உழல விட நேரமிருந்தால் தானே! ஆனால் சுமார் ஆறு மாதங்களின் பின் கேசவனிடமிருந்து வந்த கடிதத்தை பார்த்த அவளது இதயப் பேழை ஆர்ப்பரித்தது. அதில் "இனக் கலவரத்தில் இறந்தவர்களுக்கு அரசு பணம் கொடுக்கிறது. உங்களுக்கும் ஒரு நியாயமான தொகை கிடைக்கும். அது உங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என நினைக்கிறேன். அதனால் இத்துடன் இருக்கும் விண்ணப்பப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து அனுப்பவும்'' என எழுதியிருந்தது. "அம்மா அப்பா உயிருக்குப் பணமா?" என அஞ்சு அழுதாள். ஆனால் பிரேமாவும் குமரேசனும், "ஏன் அஞ்சு அப்படி நினைக்கிறாய் அம்மா அப்பா தந்ததாக நினைத்துக் கொள். இது வந்தால் உங்களுக்குப் பிரயோசனப்படும்'' என்றனர். சரியென அந்த விண்ணப்பத்தை நிரப்பி அனுப்பியவள், அதனுடன் வந்த கடிதத்தை அந்த முறை பிறந்த நாள் பரிசாக நீரஜா கொடுத்த அந்த அழகிய வெல்வெற் பெட்டிக்குள் பத்திரப்படுத்தினாள். அவன் அந்நியச் செலாவணித் தரகர் ஒருவர் மூலமாக அனுப்பிய அந்தப் பணம் அவளுக்கு அப்பொழுது மிகவும் கை கொடுத்தது. அதற்கு நன்றி சொல்லிக் கடிதம் எழுதினாள். அதன் பின் எந்தத் தகவலும் இல்லை. ரஷ்மி கூடவா மறந்து விட்டாள்? என அஞ்சுவுக்கு ஏக்கமாக இருக்கும் இப்பொழுதெல்லாம் நீரஜாவின் அன்புதான் அவள் துயருக்கெல்லாம் மருந்தானது.

அஞ்சு டாக்டர் படிப்பின் இறுதி வருடத்தில் பயிற்சிக்காக அந்த மருத்துவ மனைக்குச் சென்றபோது தான் மாமா பற்றிய அவர்களின் புதிர் விடுபட்டது. அவளது மாமா சிறீகாந்த் அங்கே ஒரு கான்சர் நோயாளியாக நாட்களை எண்ணிக் கொண்டிருந்தார். அவளைப்

பார்த்ததும் கண்ணீர் சிந்தினார். "மேல்நாட்டு மோகத்தில் பெற்றவர் களுக்குச் செய்த துரோகம் இன்று நான் அநாதையாய் நிற்கிறேன்" என வருந்தினார். "ஏன் மாமா நாங்கள் இல்லையா? ஒரு வார்த்தை சொல்லி யிருக்கலாமே" என அஞ்சு கேட்டாள். "வேண்டாம் என்றுதான் விட்டேன். நீங்கள் எப்படியும் போராடி முன்னேறுவீர்கள் என்று தெரியும் அம்மா. அதற்கு என் நோய் ஒரு தடையாக இருக்கக்கூடாது மாமா ஏமாற்றி விட்டார் என்ற கோபமும் ஒரு வேகமாக மாறும் என நினைத்தேன்" என்றார். அஞ்சு நினைத்தாள், அது ஓரளவு உண்மைதான். ஆரம்பத்தில் பயமாகவும் திகிலாகவும் இருந்தாலும் பின்னர் நாங்களும் வாழ்ந்து காட்ட வேண்டுமென்ற ஒரு வேகம் வந்தது. துட்டகைமுனு 'வடக்கே தமிழரும் தெற்கே இந்து சமுத்திரமும் இருக்கும்போது எப்படிக் காலை நீட்டிப் படுப்பது' எனத் தன் அன்னையிடம் கேட்டானாம். அதே போல அங்கே கலகக்காரரும், இங்கே மாமாவும் கஷ்டப்படுத்துவதா என ஓர் உந்துதல் வந்தது உண்மைதானே! மாமா மனித மனங்களைப் படித்தி ருக்கிறார் போலும் என நினைத்தாள். அவர் இருக்கும்வரை அடிக்கடி போயப் பார்த்தாள்.

அவர் இறந்தபின் வங்கியிலிருக்கும் அவரது கணிசமான தொகைப் பணத்துக்கு உங்களை வாரிசாக்கி இருக்கிறார் என்று அவரது வக்கீலிட மிருந்து கடிதம் வந்தது. அஞ்சு பிரேமாவிடம் போய் "எங்களுக்கு எதற்கு அவர் பணம் ஆன்ட்டி நான் வேண்டாமென்று எழுதப்போகிறேன்" என்றாள். "கொஞ்சம் யோசி அஞ்சு. அந்தப் பணம் இப்பொழுது உனக்கு உதவியாக இருக்கும் அவினாஷும் வளர்ந்து விட்டான். ஓர் அறைக்குள் இரண்டு பெண் பிள்ளைகளுடன் இருக்க அவனுக்குக் கஷ்டமாக இருக்காதா? இதை முன் பணமாகப் போட்டு ஒரு வீடு வாங்கி னால் என்ன? பிறகு ஒரு நேரம் உன்னிடம் பணம் இருக்கும்போது ஏதாவது தான தர்மத்துக்குக் கொடுக்கலாம். அல்லது வேண்டாமென்று ஏன் எழுதுகிறாய் அதை நீயே வாங்கி பகவான் சத்ய சாயி பாபாவின் குடிநீர்த் திட்டத்திற்குக் கொடுத்துவிடு. உன் மாமாவுக்கும் புண்ணிய மாகும் ஸ்வாமி உங்களுக்கு வேறு வழி காட்டுவார்" என்றார். "இது நல்ல யோசனை ஆன்ட்டி அப்படிச் செய்வோம் ஸ்வாமி உங்களைக் காட்டி யதை விட இனி வேறென்ன எமக்குக் காட்ட வேணும்?" எனக் கண் கலங்கக் கூறினாள்.

ஆனால் ஸ்வாமி வழி காட்டத்தான் செய்தார். அன்று பிரேமாவைத் தேடி வந்த சியாமளா, "வயதாகியதால் சின்னனுகளை மேய்க்க ஏலாமல்

இருக்கு. இந்த மாதத்துடன் வேறு இடம் பார்க்கும்படி எல்லாப் பெற்றோரிடமும் சொல்லி விட்டேன். வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு விடப் போகிறேன் யாரும் நல்ல இடமாகப் பார்த்துத் தா பிரேமா'' என்றார். அவர் எதற்கும் பிரேமாவைத்தான் தேடி வருவார். பிரேமாவுக் கும் அவருக்கும் பழக்கம் சமூகநலத்துறை அலுவலகத்தில்தான் முதன் முதல் ஏற்பட்டது என அறிந்து அஞ்சு வியந்தாள். "நல்ல இடத்திலிருந்து நல்ல வேலை செய்கிறீர்கள் ஆன்ட்டி" எனப் பாராட்டினாள். "எல்லாம் ஸ்வாமியின் அருளால் நடக்கிறது என் கையில் ஒன்றுமில்லை. இப்ப பார் அஞ்சு உனக்குக் கை மேல் பலன் கிடைத்துவிட்டது, இது தான் ஸ்வாமி 'நீங்கள் என்னை நோக்கி ஓரடி எடுத்துவைத்தால் நான் உங்களை நோக்கி ஆயிரம் அடி எடுத்து வைப்பேன்' எனச் சொல்வார்'' என்றவர் ''சியாமளா! வாடகைக்கு ஆள் கிடைத்த மாதிரித்தான். அஞ்சுவை வீடு பார்க்கச் சொன்னேன். உங்களுடன் இருந்தால் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருக்கும் என்ன சொல்கிறீர்கள?'' எனக் கேட்டார்.

"கரும்பு தின்னக் கைக்கூலியா? எனக்குப் பூரண சம்மதம் நீ ஒன்றும் அதிகம் வாடகை தரவேண்டாம் அஞ்சும்மா உன்னால் முடிந்ததைத் தா'' என்றார். ஆனால் இது அங்கே யாருக்கும் பிடிக்கவில்லை. ஆரபி "நான் போகமாட்டேன் வேண்டுமானால் அண்ணாவும் அக்காவும் போகட்டும்'' என்றாள். நீரஜாவும், நிரோஷனும் "என்னம்மா இது? எங்களில் ஒருவ ராகத் தானே அவர்களும் இருந்தார்கள் திடீரென இப்படிச் செய்ய லாமா?'' என்றனர். "திடீரென இல்லை. இதுபற்றி நான் யோசித்துக் கொண்டிருந்தேன். அவினாஷின் கட்டில் வீட்டுக் ஹாலுக்குள் இருக்கு. ஒரு அறை வீட்டில் மூன்று வளர்ந்த பிள்ளைகள் எப்படி இருக்க முடியும்? இனி அஞ்சு அடுத்த வருடம் டாக்டர், அவினாஷ் பல்கலைக்கழகம் போவான் அப்போ அவர்கள் மரியாதையான ஒரு வீட்டில் இருக்க வேண்டாமா? சந்தர்ப்பம் பார்த்திருந்தேன் இது நல்ல வாய்ப்பு. சியாமளா அவர்களைப் பார்த்துக் கொள்வார். எனக்கு மட்டும் ஆரபிக் குட்டியைப் பிரிய மனம் வருமா? ஆனால் என்ன செய்வது அடிக்கடி போய் வருவோம் அவர்களும் வரட்டும்'' என்றார். தனிமையில் அஞ்சு நீரஜாவிடம் "நீ அம்மாவிடம் அப்படிப் பேசி இருக்கக் கூடாது நீரு. அவர் எப்பொழுதும் நல்லதைத்தான் செய்வார்'' என்றாள். "சரிங்கோ! நான் உடனே அம்மாவிடம் மன்னிப்புக் கேட்டு விடுகிறேன்'' என வேடிக்கை யாகச் சொன்னாள். ஆனால் அஞ்சு விடாமல் "முதலில் அதைச் செய்'' என உத்தரவிட்டாள்.

சியாமளா வீட்டுக்குப் போனது வசதியாகவும் ஆறுதலாகவுமிருந்தது. அநேகமான நாட்களில் அவரே எல்லோருக்கும் சமைத்து விடுவார். அஞ்சு "என்ன ஆன்ட்டி" எனக் குறைப்பட்டால் "என் கைகால் முடியும் வரை செய்கிறேன் அதன் பின் என்னையும் சேர்தது நீங்கள் தானே பார்க்கவேண்டும். அவினாஷ் இந்த அனாதைக்குக் கொள்ளி போடுவாய் தானே" என்பார். "நிச்சயமாகச் செய்கிறேன் ஆன்ட்டி அம்மா அப்பா வுக்குச் செய்யக் கிடைக்காதது உங்களுக்காவது கிடைக்கட்டும்" என விழிகள் பனிக்கக் கூறுவான்.

அடுத்த வருடம் அஞ்சு மிகச் சிறந்த சித்தி பெற்று டாக்டரானாள். நீரஜா தனது முதுநிலைப் பட்டத்தையும் பெற்று அவள் ஆசைப்படியே ஒரு சிறந்த பல்நாட்டு நிறுவனத்தில் உணவுப் பொருட்கள் பரிசோதிப் பாளர் பதவியில் சேர்ந்தாள். நிரோஷனும், அவினாஷும் எலக்ரோனிக் என்ஜினியரிங் படிப்பை ஆரம்பித்தனர். அது ஒரு மிகச் சிறந்த வருடமெனப் பிரேமா கூறுவார். அந்த வருடக் கடைசியில் அவர்கள் புட்டபர்த்தி சென்று பகவான் பாபாவின் தரிசனம் பெற்று வந்தனர்.

நீரஜாவுக்குத் திருமணம் செய்ய வேண்டுமெனப் பெற்றோர் பேச்செடுத்த வேளையில் ஒரு நாள், அவள் அஞ்சுவிடம் "நீ காதலைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" எனத் திடுதிப்பென்று கேட்டாள். அஞ்சு ஒரு நிமிடம் நிலை தடுமாறிப் போனாள். பின் ஒருவாறு சமாளித்து "ஏன் நீரு புதிதாக எந்த உணவுப்பொருளும் பரிசோதனைக்கு வரவில்லையா? காதல் ஆராய்ச்சியில் இறங்கி விட்டாய்" எனக் கிண்டல் பண்ணியவள், "என்ன அம்மா யாரிடமோ மாட்டுப்பட்டாரா" எனக் கேலி செய்தாள். "அப்படி என்றுதான் வையேன். இதை அம்மா அப்பாவிடம் சொல்லி எப்படிக் காயை நகர்த்துவது என்று தான் தெரியவில்லை" என்றாள்.

"நம்ம அம்மா அப்பா காதலுக்கெல்லாம் தடை போடமாட்டார்கள். நீ பார்த்திருக்கும் ஆள் அவர்களுக்குப் பிடித்திருந்தால் நிச்சயம் பச்சைக் கொடி காட்டுவார்கள் பயப்படாமல் சொல்லு" என்றாள். அவளை அணைத்துக் கொண்டவள் "அஞ்சுக் கண்ணா! நீயே சொல்லி விடு ப்ளீஸ்" என்றாள். "நான் சொல்வதானால் முதல் எனக்குத் திருப்தியாக இருக்க வேண்டும். உன் இதயச் சிறைக்குள் புகுந்த அந்த வண்டு எது நீரு" என்றாள்.

"இதுதான் நமக்கு ஏதாவது ஆக வேணுமென்றால் உடனே சாதுக்கள் கூட வீரர்களாக மாறிவிடுவார்கள்" என அலுத்துக் கொண்டவள் "உனக்குத் தெரியும் அஞ்சு வேறு யாருமில்லை நம்ம தீபக்தான்"

எனறாள். "ஆஹா! நினைத்தேன். எந்த நேரமும் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி நீங்கள் இருவரும் சுத்தும்போதே சந்தேகித்தேன். இப்போதுதானே எல்லாம் புரிகிறது" என விளையாட்டாகக் கூறியவள், "அம்மா அப்பா என்ன மக்குகளா இது அவர்களுக்குப் புரியாமலா இருக்கும்" எனக் கேட்டாள். அவளை ஓடி வந்து கட்டிக் கொண்டவள் "தெரியுமா அஞ்சு?" என்றாள். "சீ போடி" எனத் தள்ளிவிட்டவள் "காதல் என்றால் எல்லாரும் இப்படித்தான் வழிவார்களா?" எனக் கேட்டாள். "யாரிடம் வழிகிறேன் என் அஞ்சுவிடம்தானே!" என அவளை இறுக அணைத்துக் கொண்டாள். "என்ன ஐசா?" என அவளைப் பார்த்துப் புன்னகைத்தவள் "எல்லாம் நான் பேசுகிறேன் நீரு" என ஆறுதல் கூறினாள்.

நன்றி சொன்னவள், "உனக்கு அப்படி ஏதாவது இருக்கா அஞ்சு" என மெதுவாகக் கேட்டாள். "போடி உன் அவதி எனக்கும் வேண்டுமா?" எனக் கேட்டவளின் கண்களில் ஒரு சோகம் தேங்கியது. பின் "இரண்டு குழந்தைகளின் தாய்க்குக் காதல், கல்யாணம் எல்லாம் வரலாமா நீரு? எனக்கு இவர்கள் இருவரையும் ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வந்தால் போதும்" என்றாள். நீருவின் விழிகள் சுரந்தன. "போடி!" என்றவள் "அதன் பின் என்ன செய்வாய்?" எனக் கேட்டாள். "அது தான் நீ தேடித் தந்த தொழில் இருக்கே மக்கள் சேவையே மகேசன் சேவை. இதிலே என் வாழ்வைக் கழித்துவிடுவேன்" என்றாள். "அப்படியெல்லாம் உன்னை விடுவதாக இல்லை மறுபடியும் வருவேன்" எனச் சொல்லிப் போனாள்.

நீருவின் திருமணத்திற்கு அஞ்சு வேண்டிய ஒழுங்குகள் செய்தபோது நீரு அஞ்சுவை விடுவதாக இல்லை. அடிக்கடி திருமணப் பேச்சை எடுத்தாள். முடிவில் அஞ்சு தன் இதயப்பேழையைத் திறந்து நீருவுக்குக் காட்டினாள். "நீ என் உயிர்த்தோழி நீரு உன்னிடம் மறைக்கக் கூடாது அதுதான் அனைத்தையும் சொன்னேன். இது என்ன என உணர்வதற்கு முன்னரே விதி நம்மைப் பிரித்து விட்டது. அவருக்கு இப்போ திருமணம் ஆகியும் இருக்கலாம் ஆனால் எனக்கு இந்த நினைவுகள் மட்டும் போதும்" என்றாள். நீரஜாவின் கண்களிலிருந்து நீர் முத்துக்கள் உருண்டு அவள் கன்னங்களில் மாலையாயின. எதுவுமே பேசாமல் எழுந்து போய் விட்டாள்.

தீபக் - நீரஜா திருமணம் இனிதே நடந்தது. அதன் பின் ஒரு நாள் பிரேமா அவளது திருமணப் பேச்சை எடுத்தார். "உன் அத்தானுக்குத்

திருமணமாகியதோ என்னவோ? அப்படி அக்கறை இருந்தால் கடிதமாவது எழுதுவார் இல்லையா? நீ இப்படி எவ்வளவு காலத்திற்கு இருப்பாய் நல்ல பையனாகப் பார்த்துத் திருமணம் செய்து வைக்கிறேன்" என்றார். அனைத்தையும் மௌனமாகக் கேட்டவள், "இந்த ஒரு விஷயத்தில் மட்டும் உங்கள் சொல்லைத் தட்டுவதற்குத் தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள் ஆன்ட்டி" எனச் சொல்லிப் போனாள். பிரேமா வேதனையுடன் ஆனால் ஒருவிதப் பெருமையுடன் அவளைப் பாாத்துக் கொண்டு நின்றார். "ஸ்வாமி உனக்கு நிச்சயம் வழிகாட்டுவார் அஞ்சு" என அவர் வாய் முனகியது.

ஆரபியும் அவள் விருப்பப்படியே வக்கீலுக்குப் படித்தாள். அவினாஷ் படித்து முடிந்ததும் அவன் விரும்பிய பவித்ராவையே திருமணம் செய்து வைத்தனர். அந்த வேளையில் தான் எப்போதும் கீரியும் பாம்புமாக இருக்கும் நிரோஷனும் ஆரபியும் ஒருவரை ஒருவர் விரும்புகின்றார்கள் என அறிந்த அஞ்சு அதிர்ந்தாள். "உண்ட வீட்டுக்கே இரண்டகமா"? எனத் தங்கையைக் கோபித்துக் கொண்டாள். ஆனால் அவள் "எப்போதும் சண்டை போட்டுக் கொண்டே இருந்தோம். திடீரென ஒருவர் மனது மற்றவரிடம் என உணர்ந்து நாங்களே வியந்தோம். ஆனால் அம்மாவும் அப்பாவும் மனப்பூர்மாகச் சம்மதித்தால்தான் இந்தத் திருமணம் நடக்குமென்று உனக்கு வாக்குத் தருகிறேன் அக்கா" எனப் பெரிய மனிசி மாதிரிக் கூறினாள். அஞ்சு தங்கையைப் பெருமையுடன் அணைத்துக் கொண்டாள். ஆனால் விபரம் அறிந்த குமரேசன் பிரேமாவுக்கு மட்டுமல்ல தீபக் நீரஜாவுக்குக் கூட மட்டற்ற மகிழ்ச்சி. ஆரபிக் குட்டி மருமகளாவதைவிட வேறென்ன வேண்டுமென்றனர். அஞ்சுவுக்கு ஆச்சர்யம். இவர்கள் என்ன மனிதர்கள். எத்தகைய உயர்ந்த உள்ளம் என நினைந்து நினைந்து நெகிழ்ந்தாள். ஒரு கதவு மூடினால் இன்னொரு கதவு திறக்கும் என்பார்கள் அதே போல அம்மா அப்பாவைக் குரூரமாகப் பறித்த இறைவன் அன்பில் அவர்களுக்குச் சிறிதும் சளைக்காதவர்களைக் காட்டியதை நினைத்து நெஞ்சம் நெகிழ்ந்தாள். ஆரபியின் படிப்பு முடிந்ததும் அவர்கள் திருமணம் வெகு விமரிசையாக நடந்தது. அதன் பின் அந்த வீட்டில் சியாமளா ஆன்ட்டியும் அஞ்சுவும் மட்டுமே இருந்தனர். நீரஜாவும் அவள் கணவரும் அமெரிக்காவில் நல்ல வேலை கிடைத்ததால் சில காலம் எனப் போய் ஐந்து வருடங்கள் ஆகிறது.

நீரஜா அஞ்சுவுடன் அடிக்கடி போனில் பேசுவாள். "அம்மா அப்பா பாவம் நீரு வந்துவிடு" என்றால் "நீ இருக்கும்போது அவர்களுக்கென்ன குறை" என்பாள். "ஆஸ்திரேலியாவுக்கு வருவதற்கு முதல் இலங்கையில் ஒரு வேலை இருக்கிறது. அங்கு போய் மிஸ்டர் கேசவனை எப்படியாவது இழுத்து வரவேண்டும்" என்பாள். "உன் முயற்சி வெற்றி பெற என் வாழ்த்துக்கள். அங்கே உனக்கு அவர் பெண்டாட்டியிடமிருந்து மகத்தான வரவேற்பு விளக்குமாறு சகிதம் கிடைக்கும் கவனம்!" என வேடிக்கையாகச் சொல்வாள் ஆனால் பின் "வேண்டாம் நீரு அங்கு நிலைமை சரியில்லை. எனக்கு என் நீரு வேணும், அம்மா அப்பாவை இழந்தது போதாதா? தயவுசெய்து போகாதே" எனக் கெஞ்சுவாள். அந்தப் பயம் அவள் மனத்தை எவ்வளவு பாதித்திருக்கிறது என உணர்ந்து நீரு வருந்துவாள். "சும்மா ஒரு விளையாட்டுக்குச் சொன்னேன் அஞ்சுக் கண்ணா! ஒன்றும் பயப்படாதே! உனக்குத் தெரியாமல் எதுவும் செய்ய மாட்டேன்" என உறுதியளிப்பாள். அதன் பிறகுதான் அஞ்சு ஒரு மாதிரி ஆறுதல் அடைவாள். "தயவு செய்து விளையாட்டுக்கும் சொல்லாதே நீரு" எனக் குரல் கலங்கக் கூறுவாள். நீரஜாவுக்கு வேதனையாக இருக்கும். அவள் பயத்தை நீக்கும் வகை தெரியாது தவித்தாள்.

இந்த வேளையில் அஞ்சு காலத்தை வீணாக்காது மேலும் படித்து ஒரு சிறந்த இருதயச் சிகிச்சை வல்லுனரானாள். அவள் மதிப்பு உலகெங்கும் பரவியது. அவள் எழுதும் மருத்துவக் கட்டுரைகள் உலகின் பல சஞ்சிகை களில் வெளியாயின. கைராசிக்கார டாக்டர் எனப் பெயரெடுத்தாள். திருமணம் செய்யாமலே வாழ்வை வீணாக்குகிறாள் என்று எல்லோருக்கும் வருத்தம்தான் ஆனால் செய்யும் வகை என்னவென்று யாருக்கும் தெரியவில்லை.

அஞ்சுவின் இதயத்துள் அந்தத் தந்தப் பேழை பத்திரமாகவே இருந்தது. நேரம் கிடைக்கும்போது அதை மெதுவாகத் திறந்து பார்த்து ரசித்துக் கொள்வாள். அதைவிட வேறு எந்த ஆசையும் அவளுக்கு எழுந்ததில்லை. திருமணம் செய்ய வேண்டும் குழந்தை பெற வேண்டுமென்ற எண்ணம் எவையுமே அவளுக்கு எழவில்லை. பற்றின்றியே வாழ்ந்து வந்தாள். ஆனால் மற்றவர்கள் கேசவனின் மனநிலை அறிந்து இருவரையும் சேர்த்து வைக்கலாமா என முயன்றனர். இலங்கைக்குப் போகலாம் என்றதும் அவினாஷ் நிலமையறிந்து வர இலங்கை சென்றான்.

அங்கே கேசவனும் அஞ்சுவின் நினைவுடனேயே இருப்பது கண்டு மனம் நெகிழ்ந்தான். அவனும் "அஞ்சு எப்படி இருக்கிறாள்? திருமண மாகியதா?" என விசாரித்தான். கடைசியாக அவினாஷ் வரும்போது "அஞ்சு ஒரு தடவை இங்கு வருவாளா?" எனக் கெஞ்சுதலாகக் கேட்டான். அனுப்புகிறேன் என்று சொல்லி வந்தான். ஆனால் அஞ்சுவை அனுப்பு வது அவர்களுக்குப் பெரும் பாடாக இருந்தது.

## 3

**அ**ன்று கொழும்பில் அந்தத் தனியார் மருத்துவமனையின் டாக்டர் பிரியங்காவுக்கு வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை. உரிய நேரத்திற்கு முதலே கடமைக்கு வந்துவிட்டாள். அன்று தான் ஆஸ்திரேலியாவி லிருந்து அந்த இருதய சத்திர சிகிச்சை நிபுணர் வருவதாக இருந்தது. பிரியாங்காவும் ஒரு இருதய சிகிச்சை வல்லுனர்தான். அதனால் அந்த டாக்டரைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறாள். அவர் மருத்துவ சஞ்சிகைகளில் எழுதும் கட்டுரைகளைத் தேடிப் போய்ப் வாசிப்பாள். எல்லாவற்றிலும் வெறும் ஏ. சேகர் என்றுதான் இருக்கும். கட்டுரையாளர் பற்றிய விபரங்களோ ஆகக் குறைந்தது அவர் படம் கூடப் பிரசுரிக்க மாட்டார்கள். இது நம்ம அஞ்ஜனா சந்திரசேகராக இருக்காதா எனப் பிரியங்கா ஏங்குவாள். மற்றத் தோழிகள் ஆஷா, நிஷங்கா, மைத்ரேயி எல்லோரிடமும் "இது நம்ம அஞ்சுவாக இருக்குமா"? அவளும் நம்மைப் போல டாக்டராகி இருப்பாள் இல்லையா என மிகவும் ஆவலாகக் கேட்பாள். ஆனால் யாரிடமிருந்தும் ஆமாம் என்ற உறுதியான பதில் வராது ஒரு சோகமான வெறும் புன்னகைதான் வரும்.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் அந்தத் தனியார் பாடசாலையில் அவர்கள் ஐவரையும் தெரியாதவர்கள் கிடையாது. அவர்கள் நட்பைப் பற்றிப் பேசாதவர்கள் கிடையாது. ஐந்து பேரையும் எங்கும் எப்போதும் ஒன்றாகத்தான் காணலாம். தற்செயலாக ஒருவரைக் காணாவிட்டால் ஆசிரியர்களே எங்கே மற்றவர் என்று கேட்பாாகள். அப்படி ஒரு இன மத மொழி பேதமற்ற நட்பு. சினேகிதம் மட்டுமல்ல புத்தியும் அப்படித்தான். யாருக்கு அதிகம் புள்ளிகள் கொடுப்பதென ஆசிரியர்கள் தடுமாறுவார்கள். அநேகமாக எல்லா விடைகளும் ஒரே மாதிரித்தான் இருக்கும். ஒன்றாகப் படிக்கிறார்கள் சரி. ஒன்றாகவுமா நினைவில் வைத்து எழுதுவார்கள் என வியப்பார்கள். ஆயினும்

ஆசிரியர்களுக்கு அவர்களை நினைத்து என்றும் பெருமைதான். நிச்சயமாக அந்த வருடம் ஐந்து பேர் தம் பாடசாலையிலிருந்து மருத்துவம் படிக்கப் பல்கலைக்கழகம் போவார்கள் என்று நம்பினார்கள். அப்படித்தான் நடந்தது. ஐவருக்கும் வேண்டிய மதிப்பெண்கள் கிடைத்தன. ஆனால் கண்ணூறு பட்டது போல இனக் கலவரம் வந்து அவர்களிடமிருந்து அஞ்சுவைப் பிரித்துவிட்டது. அதன் பின் அஞ்சுவிடமிருந்து இந்த இருபது வருடங்களாக எந்தத் தகவலுமே இல்லை.

ஆனால் மற்ற நால்வரும் அஞ்சுவை மறக்கவில்லை. தவறாமல் அவளது பிறந்த நாளுக்குப் பிள்ளையார் கோவிலில் போய் அர்ச்சனை செய்வார்கள். எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்தால் முடிவில் பேச்சு அஞ்சுவிடமே போய் எப்படி இருக்கிறாளோ என நினைத்துச் சோகமாகப் பிரிவார்கள். பிரியாங்கா பல தடவைகள் அந்த ஏ. சேகருக்கு ஒரு ஈ-மெயில் அனுப்பவா என நினைத்திருக்கிறாள். ஆனால் இத்தனை காலத்தில் அஞ்சுவுக்குத் திருமணமாகிப் பெயர் மாறியிருக்கும். அதனால் இது அவளாக இருக்க வாய்ப்பில்லை என மற்றத் தோழிகள் கூறியதால் பேசாமல் விட்டாள். கொழும்பிலுள்ள அவளது மருத்துவமனையும் வேறு சிலவும் இருதயச் சத்திர சிகிச்சைக்காக அஞ்சுவைப் பல முறை அழைத்தும் வர மறுத்தவள் இந்தத் தடவை நான் வருகிறேன் என அறிவித்ததும் அனைவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சி. அப்போதுதான் பிரியங்கா தன் தலைமை டாக்டரிடம் அந்த டாக்டர் பற்றிய விபரங்களைக் கேட்டறிந்தாள். அவர் கூறிய தகவல்களைக் கொண்டு வருவது அஞ்சுதான் என்பது அவளுக்கு உறுதியானது அது நம்ம அஞ்சுதான் என மற்றவர்களிடம் மகிழ்ச்சியுடன் சொல்லித் தம் அருமைத் தோழியை ஆவலுடன் எதிர்பார்த்தாள். மற்றவர்கள் “சும்மா ஏமாறாதே பிரி, நம்ம அஞ்சு எப்படி இருக்கிறாளோ? இத்தனை வருடங்களாக ஒரு தொடர்புமே இல்லை. ஆனால் வருவது அவளாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அவளானால் உடனே சொல்லு பிரி” என்றனர். அது தான் ஆபரேஷன் தொடங்க முதல் அந்த டாக்டரை ஒருமுறை பார்த்துவிட வேண்டும் என நேரத்தோடேயே வந்திருந்தாள்.

கொழும்பு என்று நினைத்தாலே அஞ்சுவுக்கு ஒரு பயம். இதயம் நடுங்கும். யாரிடமும் காட்டிக் கொள்ளாமல் வளைய வந்தாலும் அந்த மண்ணில் பதிய அவள் கால்கள் அஞ்சின. அதனால் வந்த அழைப்புக்கள் யாவையுமே மறுத்து விட்டாள். ஆனால் இப்பொழுது அஞ்சு கொழும்புக்குச் செல்ல நினைத்ததற்கு இரு காரணங்கள் இருந்தன.

முதலாவது எல்லோரும் ஊருக்குப் போகின்றார்கள் என்றதும் "சிறு வயதில் வந்தது ஒரு தடவை போகவா" என அவினாஷ் கேட்டபோது அவளுக்குப் பயமாக இருந்தது. விழிகள் சுரக்க "வேண்டாம் தம்பி" என்றாள் அவள் பயம் அவளது குரலின் நடுக்கத்தில் தெரிந்தது. அவள் உடல் நடுங்குவதை அவன் கவனித்தான். அப்பொழுது தான் அவனுக் குப் புரிந்தது தங்களைவிட அக்காவின் மனம் எவ்வளவு பாதிக்கப் பட்டிருக்கிறது. எதுவோ எங்களுக்காக அனைத்தையும் மனத்தின் ஒரு மூலையில் புதைத்துவிட்டு வளைய வருகிறார். ஆனால் அவர் மனப் பயம் அப்படியே இருக்கிறது என உணர்ந்தான். அவளை அணைத்தவன் "எப்பவோ நடந்ததற்கு இப்போதும் பயமா அக்கா இப்போ ஒன்றும் இல்லை. நான் ஆஸ்திரேலியப் பிரசை. என்னை யாரும் ஒன்றும் செய்ய முடியாது" என்றான். "அப்படியானால் சரி. கவனமாகப் போய் வா அதிக நாட்கள் நிற்காதே" என அனுப்பி வைத்தாள். போய் வந்தவன் "கேசவ் அத்தான் இன்னும் திருமணமே செய்யவில்லை இனியும் செய்ய மாட்டா ராம். மாமாவும் இறந்துவிட்டார் ரஷ்மியும் திருமணமாகி லண்டனில் வசிக்கிறாளாம். தனித்து இருக்கிறார் பார்க்கப் பாவமாக இருக்கிறது" என்றான். அதைக் கேட்டதும் அவளுக்கு வருத்தமாக இருந்தது. அதன் காரணமறிந்து அவனுக்கு ஒரு திருமணம் செய்து வைப்பது தனது ஒரு தார்மீகக் கடமை என நினைத்தாள். அது அத்தைக்குச் செய்யும் ஒரு நன்றிக் கடன் எனத் தீர்மானித்தாள்.

அத்துடன் இளமைப்பருவத்து உணர்வுகள் அந்த வயதுப் பெண் களின் கேளிக்கைகள் எதையும் அனுபவிக்காமல் தம்பி தங்கைக்காக வாழ்ந்தது. எப்பொழுதும் ஏதாவது ஒரு பிரச்சினை தோன்றித் தலையில் ஒரு பாரமாக அழுத்தியது. சிரிக்கவோ! சிந்தித்து மகிழவோ! நேரமே இல்லாமல் அலைந்தது அனைத்தும் அவள் உள்ளத்தில் தேங்கி ஒரு பாறை போல உறைந்து அவ்வப்போது வலிக்கும். அதை அவள் என்றும் சட்டை செய்வதில்லை. ஆனால் ஒருநாள் இருதய ஆபரேஷன் செய்யும் போது அந்த வலி வந்து அவளை நிலைகுலைய வைத்தது. அதன் பின்னர் தான் என்ன இது ஓர் உயிரைக் கொல்ல இருந்தேனே என மேலும் உறைந்து போனாள். அன்றே ஒரு மனோதத்துவ டாக்டரிடம் போனாள். அவர் "இதற்குக் காரணம் உங்கள் அடி மனத்தின் பயங்கள், ஏக்கங் களாக இருக்கலாம். அவற்றை வெளியே கொணர்ந்து உங்கள் மனத்தை இலேசாக்க வேண்டும். ஒரு முறை நீங்கள் வளர்ந்த படித்த இடத்திற்குப் போய் உங்கள் நண்பர்களைப் பார்ப்பது நல்லது" என்றார். அதைக்

கேட்டு அஞ்சு வியந்தாள். நண்பர்களா எனக்கு அங்கே யார் இருக்கின்றார்கள். நீருவைத் தவிர எனக்கு வேறு யார் சினேகிதர் என நினைத்தாள் என்ன முயன்றும் யாரையும் நினைவில் கொணர முடியவில்லை. ஆனால், அந்த டாக்டரோ "அங்கேயே வளர்ந்து படித்தது என்கிறீர்கள் ஒருவருமா இல்லை?" என வியந்தார். துயரங்கள் புதைக்கப்பட்டது போல அவளது இளமைப் பருவ வாழ்க்கையும் மறைக்கப்பட்டிருந்தது. கொழும்பை நினைக்கும் போதெல்லாம் அம்மா அப்பா இனக்கலவரம், தம்பி தங்கைகளை வைத்துக்கொண்டு என்ன செய்வதெனத் தெரியாமல் பயந்து போய் இருந்தது போன்றன வந்து வேதனைப்படுத்தியதால் அந்த நினைவுகள் வேண்டாம் என ஒதுக்கியதால் வேண்டியவைகளும் மறைக்கப்பட்டுவிட்டன. இந்த இருபது வருடங்களாக அந்த நால்வரின் மேலான நட்பு ஒரு நாளும் அஞ்சுவுக்கு நினைவில் வரவேயில்லை. ஆனால், இதே உடல் நிலை தொடர்ந்தால் என்னவாகுமோ? ஆபரேஷன் செய்ய முடியுமோ என்ற பயம் வந்தது அதனால் டாக்டர் சொல்வது போல ஒருமுறை அங்கு போய் ஏதாவது நினைவில் வருகிறதா பார்ப்போம் என நினைத்தாள். பயம், தயக்கம் எல்லாம் இருந்தது பிரேமாதான் "ஒன்றுக்கும் பயப்படாதே எல்லாம் பகவான் பார்ப்பார்" எனச் சொல்லி அனுப்பினாள். அதன்பின்தான் இதுவரை தன்னை அழைத்த ஆஸ்பத்திரிகளுக்குத் தன் வருகையைத் தெரிவித்தாள். முதலாவதாகப் பிரியங்கா வேலை செய்யும் பராக்கிரமபாகு மருத்துவமனைக்குப் போனாள்.

அங்கே தன்னை நோக்கி டாக்டர் அங்கியுடன் வந்த பிரியங்காவைக் கண்ட அஞ்சுவின் உள்ளத்தில் எதுவோ ஓர் இருள் விலகுவது போல இருந்தது. பிரியங்காவுக்கும் அவளைத் தூரத்தில் கண்டதுமே தெரிந்து விட்டது. சும்மாவா? உயிரும் உணர்வும் ஒன்றிய நட்பல்லவா? எத்தனை வருடம் ஆனால் என்ன இதயம் கணடுகொண்டது. அவசரமாக அவள் அருகே வந்த பிரியங்கா அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு "அஞ்சு!" எனத் தயங்கித் தயங்கிக் கேட்டாள். "ஆமா" என்றவளுக்கு உள்ளத்தில் ஒரு வெளிச்சம் தெரிந்தது. திடுக்கிட்டவள் "பிரி!!"எனக் கூவினாள். "அஞ்சூ!!" என அவளை அணைத்துக் கலங்கியவள் சட்டெனப் "போடி" எனத் தள்ளிவிட்டு மீண்டும் விம்மினாள். விம்மலிடையே "எப்படி மறந்தாய் அஞ்சு" எனக் கேட்டாள். அஞ்சு வெட்கித் தலை குனிந்தாள். உன்னைக் காணும்வரை எனக்கு உன் நினைவே இல்லை என்று எப்படி ஓர் உயிர்ச் சினேகிதியிடம் சொல்வாள். அவள் கண்களும் கலங்கின.

பிரியங்காவும் ஒரு டாக்டர்தான் என்றாலும் அவளுக்குத் தன் நிலையைச் சொல்ல இது நேரமில்லை எனத் தீர்மானித்தவள் “தப்புத்தான் பிரி என்னை மன்னித்துவிடு. ஆஷா, நிஷா, மைத்தி எல்லோரும் எங்கே எப்படி இருக்கிறார்கள்? எல்லோரையும் நான் பார்க்க வேண்டுமே பார்க்கலாமா? இங்குதானே இருக்கிறார்கள் அல்லது எங்காவது வெளி நாட்டிலா?” என வினாக்களை அடுக்கினாள். “ஆமாம் இருபது வருடங் கள் எண்ணமே இல்லாமல் இருந்தவள் இப்போ வந்து எல்லோரையும் பார்க்க வேண்டுமாம் எப்படி அஞ்சு? எப்படியடி எங்களை மறந்தாய்?” என மீண்டும் கலங்கினாள். அஞ்சு மௌனமாக நின்றாள். “இங்கேயே. இப்போதே எல்லாவற்றையும் எப்படிச் சொல்வேன் பிரி. ஆபரேஷன் வேறு இருக்கிறது” என்றாள். “ஒரு நிபந்தனை அஞ்சு. நீ ஹோட்டலை விட்டு என்னுடன் வந்தால் எல்லோரையும் பார்க்கலாம் வருகிறாயா?” என்றாள். அவளைப் பார்த்துப் புன்னகைத்தவள் “இதைவிட எனக்கு வேறென்ன வேண்டும். இந்த ஆபரேஷன் முடிந்ததும் வருகிறேன். இங்கேயே இரண்டு மூன்று இருக்கும்போல் தெரிகிறது. மாலையிலும் வரவேண்டுமென நினைக்கிறேன் அதற்கிடையில் முடிந்தால் வருகிறேன் அல்லது மாலையில் வருகிறேன்” என்றாள். “நிச்சயமாக வருவாயா ஓடி ஒளியமாட்டாய்தானே?” எனக் கேட்டாள். பழைய நினைவுகள் ஒவ்வொன் றாகக் கிளர்ந்தெழ “நீ மாறவே இல்லைப் பிரி. சத்தியமாக உன்னுடன் வருகிறேன் போதுமா? இப்போ போய் ஆபரேஷன் செய்யவா?” எனக் கேட்டாள். சரியென அனுப்பி வைத்தாள் . ஆனால் அஞ்சு அந்த சத்திர சிகிச்சையை முடித்து வெளியே வர அந் நால்வருமே அங்கு காத்திருந் தனர். அறையைத் திறந்ததும் இடம் பொருள் ஏவல் எதையுமே சிந்திக்கா மல் தாயைக் கண்ட குழந்தைகளாக ஓடிச் சென்று அவளை அணைத்துக் கொண்டனர். இப்பொழுது அஞ்சுவின் கன்னங்களில் நீர் கோடிட்டது. இந்த மதுரமான நட்பை இத்தனை நாட்களும் எப்படி மறந்திருந்தேன். பெற்றவர்களின் திடீர் மறைவு, அதனால் தலையை அழுத்திய தம்பி தங்கை என்ற சுமை எல்லாம் சேர்ந்து என் மனத்தை அவ்வளவுக்கா பாதித்திருக்கிறது? அந்த மனோதத்துவ டாக்டர் ‘இது ஒரு வகை ஞாபக மறதி. சில விஷயங்களை நினைத்தால் உங்களுக்குப் பயம் என்பதால் அவற்றை உங்கள் மூளை மறைத்துவிட்டது’ என்று சொன்னார்.

இதைச் சொல்லி இவர்களைக் குழப்ப வேண்டாம் என நினைத்தவள் பழைய குறும்பு கிளர்ந்தெழ, “என்ன உங்களுக்கெல்லாம் வேலையே

இல்லையா?" என வேடிக்கையாகக் கேட்டாள். அதை யாரும் பொருட் படுத்தவில்லை. "எப்படி அஞ்சு!" என மீண்டும் கேட்டனர். ஆனால் அஞ்சு வுடன் மிக நெருக்கமான நிஷங்கா மட்டும் அஞ்சுவாக மறக்கவில்லை. இதற்குள் வேறு எதுவோ இருக்கிறது அஞ்சு சொல்லத் தயங்குகிறாள் எனப் புரிந்து "சரி வாங்கோ கன்டீனில் போய் இருந்து பேசுவோம். இது ஆப்பிரேஷன் தியேட்டர் வாசல்" என அழைத்துச் சென்றாள். அங்கே தேனீர் அருந்திவிட்டு அவரவரே பிரிந்தனர். அஞ்சுவுக்கும் அடுத்த ஆபரேஷன் காத்திருந்தது. அன்று மாலை பிரியங்கா வீட்டில் சந்திப்ப தாகத் தீர்மானித்தனர்.

மாலையில் திரும்பவும் அதே பேச்சு எழுவதற்கு முன் அஞ்சு முந்திக் கொண்டாள். "சரி எல்லோரும் உங்களைப் பற்றிச் சொல்லுங்கோ. இங்கே வந்து பிரியின் மணியான இரண்டு குழந்தைகளையும் அவள் கணவர் அனிலையும் பார்த்தேன். மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. நீங்களும் குடும்பத்துடன் வருவீர்கள் எனக் காத்திருந்தேன். தனித்து வந்திருக்கிறீர்கள்" என்றாள். "எப்போதும் போலவே...." என நால்வரும் ஒரே நேரத்தில் கோரசாக ஆரம்பித்து "பேச்சை மாற்றாதே அஞ்சு"! எனப் பிரியங்கா முடித்தாள். தனது ஒவ்வொரு அசைவையும் அவர்கள் மறக்க வில்லையே. இது எத்தகைய நட்பு எப்படி என் நினைவிலிருந்து மட்டும் அழிக்கப்பட்டது என வேதனைப்பட்டவள் மௌனமானாள்.

"எப்படி அஞ்சு எங்களை மறந்தாய்?" என ஆஷா கேட்டாள். விழிக் குளம் நிறைய அவளை நிமிர்ந்து பார்த்தவள் பேசாமல் தலை குனிந்தாள். எப்போதுமே உணர்ச்சி வசப்படும் மைத்ரேயி, "அகதிகள் முகாமுக்குப் போயிருந்தாயாம். ஏன் அஞ்சு நாங்கள் இருப்பது அப்போதே மறந்து போய் விட்டதா? அல்லது எங்களையும் எதிரிகளாக நினைத்தாயா?" எனக் கோபமாகக் கேட்டாள். திடுக்கிட்டுத் தலையை நிமிர்த்தியவள் மீண்டும் குனிந்து கொண்டாள்.

"நீ பரீட்சை முடிந்ததுமே அத்தை வீட்டுக்குப் போவதாகச் சொன்னாய். அதனால் நாங்கள் கவனக் குறைவாக இருந்து விட்டோம். ஏன் அஞ்சு என்ன நடந்தது" என ஆஷா கேட்டாள். "நீ யாழ்ப்பாணம் தானே போயி ருக்கிறாய் வகுப்புத் தொடங்கியதும் வருவாய் எனக் காத்திருந்தோம். ஆனால் நீ வரவேயில்லை. பேராதனையிலிருந்த மருத்துவ பீடத்திற்குச் சேர்ந்தவர்களின் லிஸ்டில் உன் பெயர் இல்லை. அதன் பின் தான் எங்கோ தப்பு நடந்துவிட்டது எனப் பதறிப்போனோம். உடனே கல்லூரிக்கு போன்

பண்ணிப் பிறின்ஸியிடம் கேட்டோம் அவர் பயப்படவேண்டாம் அஞ்சுவுக்கு ஒன்றுமில்லை. ஆஸ்திரேலியா போய் விட்டாள். அவள் அப்பா, அம்மாதான் இல்லை என்றார். நாங்கள் நால்வர் உன் தோழி களாக இருந்தும் உன் பெற்றவர்களைக் காப்பாற்ற முடியவில்லையே! உன் துயரத்தில் பங்கு கொள்ள முடியவில்லையே என எவ்வளவு வேதனைப்பட்டோம் தெரியுமா!" எனப் பிரியங்கா குரல் தழதழக்கக் கூறினாள்.

"நாம் ஐவர் என்ற நினைப்புப் போக எவ்வளவு நாட்கள் எடுத்தது தெரியுமா?" என நிஷா தன் பங்குக்குத் தொடங்கினாள். "வகுப்பில் அஞ்சுவுக்கென்று இடம் பிடிப்போம். வகுப்புத் தொடங்கும்போதுதான் ஓ! அஞ்சு இல்லை என்ற நினைப்பு வரும். எதையும் ஐந்தாகவே வாங்கி விட்டு அல்லது ஐந்து பங்காகப் பிரித்துவிட்டு ஐந்தாவது கையில் மிஞ்சி இருக்கும் போது தான் நம்ம அஞ்சு இல்லையே! என்ற எண்ணம் வந்து வேதனையாக இருக்கும்".

அஞ்சுவின் கண்கள் அருவியாயின மௌனமாகக் கண்ணீர் வடித்தாள். "உன் கடிதம் இன்று வரும் நாளை வரும் என எதிர்பார்த்து ஏமாந்ததுதான் மிச்சம்" எனப் பிரியங்கா குறைப்பட்டுக் கொண்டாள். "பின் உனது கட்டுரைகளைப் படிக்கும்போது இது நம்ம அஞ்சுவாக இருக்காதா என நினைத்துக் கொள்வேன். ஈ-மெயில் அனுப்பவா என்று கூட நினைத்தேன். ஆனால் தயக்கமாக இருந்தது உனது பிறந்த நாளுக்கு வழக்கம் போல நீ போகும் பிள்ளையார் கோவிலுக்குப் போய் அர்ச்சனை செய்வோம்" என்றாள்.

"போதும்! பிரி போதும்!" என அஞ்சு கதறினாள். தொடர்ந்து விம்மி விம்மி அழுதாள். நால்வரும் அவளைச் சூழ்ந்து கொண்டனர். நிஷா அணைத்துக் கொண்டாள். மற்றவர்கள் கையைப் பற்றிக் கொண்டு அமைதியாக இருந்தனர். அவர்களின் விழிப் பூக்களும் உதிர்ந்தன. அழுது ஓய்ந்த அஞ்சு எழுந்தாள். கண்ணைத் துடைத்துவிட்டுப் போய்த் தண்ணீர் குடித்துவிட்டு வந்தாள்.

அமைதியாக அவர்களைப் பார்த்தவளின் கண்கள் மீண்டும் பனித் தன. ஆனால் இவர்களுக்குத் தகுந்த விளக்கம் கொடுக்க வேண்டியது என் கடமை என நினைத்தாள். அதனால் அவர்களைப் பார்த்து "ஆஷா! பிரி! நிஷா! மைத்தி! நாமெல்லோரும் டாக்டர்கள். நான் பிரிந்து போனாலும் எப்படியோ படித்து எம் கனவை நனவாக்கி விட்டோம். அதனால் எமக்கு மற்றவர்களைவிட மனித உணர்வுகளை, அதன்

பாதிப்புக்களை அதற்கான காரணகாரியங்களை நன்கு அறிய முடியும் இல்லையா? நான் சொல்வதைத் தயவு செய்து அதிர்ச்சி அடையாமல் கேளுங்கள்'' என்றவள் பின் ''ஏன் மறந்தாய் எனக் கேட்டீர்களே? பிரியைக் காணும் அந்த நிமிடம் வரை எனக்கு உங்கள் யாரையுமே ஏன் எமது பாடசாலை வாழ்க்கை எதுவுமே நினைவில் இல்லை என்றால் நம்ப முடிகிறதா?'' எனக் கெட்டவள் மேசையில் முகம் புதைத்து விம்மினாள். எல்லோரும் துடித்துப் போனார்கள். அங்கே நரம்பியல் நிபுணராக இருந்த நிஷங்கா அனைவரையும் மௌனமாக இருககும்படி சைகை காட்டினாள். சிறிது நேரத்தில் தெளிந்த அஞ்சு தொடர்ந்தாள்.

"கலவரம் நடக்கும்போது உங்களிடம் வரவில்லை எனக் கூறினீர்களே யாவும் என்ன திட்டமிட்டா நடந்தது? வீட்டின் முன் பக்கத்தை காடையர்கள் உடைத்துத் தகர்க்க முயன்றபோது பின் பக்கத்தால் வெளியேறினோம். அது எத்தகைய பயம் தெரியுமா? உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடுவது என்பாாகளே அதை அன்று நான் நிதர்சனமாக உணர்ந்தேன். எங்கு போவதென்றே யாருக்கும் தெரியவில்லை. வழியில் கண்ட பொலிஸ் கொண்டு போய் அகதிகள் முகாமில் விட்டார்கள். அங்கே இருக்க எங்களால் முடியுமா? நிலத்தில் படுத்துக் நுளம்புக் கடியெல்லாம் தாங்கிப் பழக்கமா? எமது கஷ்டத்தைப் பார்க்க முடியாத அப்பாவும் அம்மாவும் வீட்டில் போய் ஏதாவது பொருட்கள் இருந்தால் எடுத்து வருகிறோம் அல்லது வாங்கி வருகிறோம் எனப் போனவர்கள் வரவே இல்லை நிஷா!" எனக் கதறினாள். அதைத் தொடர்ந்து ஏங்கி அழுதாள். இதுவரை தான் தளர்ந்தால் தம்பியும் தங்கையும் துவண்டு விடுவார்கள் எனப் பயந்து அனைத்து உணர்வுகளையும் காட்டாமல் மறைத்ததால் அவள் உள்ளத்திலேயே உறைந்திருந்த துயரம் யாவும் கண்ணீராகக் கரைந்து கொண்டிருந்தது. நால்வரும் கண்கலங்க அஞ்சுவைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அழுது ஓய்ந்தவள் தொடர்ந்தாள். "அதன் பின் புயலில் அகப்பட்ட சருகுகள் போல எப்படியோ அடிபட்டு ஆஸ்திரேலியா போய்ச் சேர்ந்தோம். அங்கே என்னென்ன கஷ்டங்கள் தெரியுமா? பதினேழு வயதில் இரு குழந்தைளுக்குத் தாயானேன் என்று தான் கூற வேண்டும்'' என விழி சுரக்கக் கூறி இதழ்களைக் கடித்து எழுந்த விம்மலை அடக்கினாள் "ஆனால் அதற்கான பலன் கிடைத்தது. அவினாஷும் ஆரபியும் இன்று நன்றாக இருக்கிறார்கள். அது எவ்வளவு பெரிய ஆறுதல் தெரியுமா? அத்துடன் எப்படியோ சில நல்லவர்கள் உதவியால் நானும் படித்தேன்.

அது ஒரு அதிசயம் கடவுள் செயல் என்றுதான் சொல்ல வேண்டும். கொழும்பை அம்மா அப்பாவை நினைக்க மனம் நடுங்கும். அதனால் அதை ஒதுக்கி ஒதுக்கி அத்துடன் சேர்ந்த என் இளமைக் காலமும் மழுங்கி விட்டது. பின் உங்கள் நினைப்பு எப்படி வரும்?"

"அவ்வப்போது நெஞ்சில் ஒரு வலி இருந்தது. அண்மையில் அதிக மாகி டாக்டரிடம் காட்டியபோது உங்கள் இளமைக்கால நண்பர்களைக் கண்டு பேசுங்கோ என்றார். யார் யார் என்று நினைத்தேன் வரவே இல்லை மைத்தி!" என மைத்ரேயியின் கையைப் பற்றினாள். "பிரியைக் கண்டதும் தான் புற்றிலிருந்து வெளியாகும் ஈசல் போல எல்லா நினைவுகளும் ஒவ்வொன்றாக வந்தன. எத்தகைய உயர்ந்த நட்பை இவ்வளவு நாட் களும் மறந்திருந்தேன் உங்களுடன் கடிதத் தொடர்பாவது இருந்திருந் தால் என் மனப் பாரத்தை ஓரளவுக்காவது இறக்கியிருக்கலாம். ஆனால் நான் அதிர்ஷ்டமற்றவள்" எனக் கண்ணீரிடையே கூறி முடித்தாள்.

அங்கே ஒரு பலத்த மௌனம் நிலவியது. அனைவர் கண்களிலும் ஆழ்ந்த ஒரு சோகம் தெரிந்தது. அதைப் பிரியங்காதான் கலைத்தாள். "போதும் அஞ்சு, பழசையெல்லாம நினைத்து உன்னை மேலும் வருத்தாதே நீ திரும்பக் கிடைத்ததே எமக்குப் போதும், எல்லோரும் வாங்கோ சாப்பிடுவோம்" என அழைத்தாள். யாரால் சாப்பிட முடியும் சாப்பிட்டதாக எதுவோ பெயர் பண்ணி விட்டுக் கனக்கும் நெஞ்சங்களு டனும் குற்ற உணர்வுடனும் சென்றனர். ஆனால் பல வருடங்களுக்குப் பின் அன்று அஞ்சுவின் உள்ளம் மிகவும் அமைதியாக எந்தச் சலனமு மற்று இருந்தது நிம்மதியாக உறங்கினாள்.

மறுநாள் காலையில் அவள் எழுவதற்கு முன்னரே பிரியங்கா ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டாள். அஞ்சுவுக்கு அடுத்த ஆபரேஷன் அன்று மாலையில்தான் இருந்தது. வீட்டு வேலைக்காரியிடம் எல்லாம் சொல்லி விட்டுப் போனாள். ஆனால் அவள் கண்விழித்தபோது அவள் கட்டிலின் ஒரு பக்கத்தில் நிஷங்கா இருந்து அவளையே பாரத்துக் கொண்டிருந்தாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன. விழித்த அஞ்சு "என்ன நிஷி உனக்கு இன்று வேலை இல்லையா இங்கே இருக்கிறாய்" எனக் கேட்டாள். "இரவெல்லாம் தூக்கமே இல்லை அஞ்சு" என வேதனையுடன் கூறினாள். "நான் இன்று தான் நன்றாகத் தூங்கினேன்" என்றாள் புன்னகையுடன். அவளைப் பார்த்து வேதனையாக முறுவலித் தவள் "எதுவும் மற்றவர்களுககு வந்தால் தெரியாது அஞ்சு நம்மைச் சேர்ந்தவர்களுக்கு வந்தால்தான் புரியும். உன் கஷ்டங்கள் உன்னை ஒரு

நோயாளியாக்கும் அளவுக்குக் கொண்டு போனதைப் பாக்கும்போது தான் நம் நாட்டில் எவ்வளவு அநியாயம் நடக்கிறுது என உணர முடிகிறது. நாங்கள் நால்வர் உன் நண்பர்கள் என இருந்தும் நீ இப்படி யெல்லாம் அவதிக்குள்ளாக வேண்டியிருந்ததே என நினைக்கும்போது என்னால் தாங்க முடியவில்லையே! அஞ்சு" என விம்மினாள்.

அவள் கைகளை அன்புடன் பற்றியவள் "நிஷி டார்லிங்! நடந்த தெல்லாம் நடந்து விட்டது. இதைத்தான் விதி என்பது. ஆனால் கடவுள் செயலால் மீண்டும் ஒன்று சேர்ந்துவிட்டோம். நல்ல வேளையாகப் பிரியைக் கண்டதும் எனக்கு மறுபடியும் யாவும் ஞாபகம் வந்தது. இல்லா விட்டால் எவ்வளவு கொடுமை நினைத்துப் பார்? என்னால் எதையும் உங்களுக்கு விளக்கி இருக்க முடியாது. நான் உங்களைப் பார்த்தும் பாராமல் போக நீங்கள் என்ன நினைத்திருப்பீர்கள். எவ்வளவு உயிராக இருந்தோம் இப்படிக் கர்வம் பிடித்துக் கண்டும் காணாமல் போகிறாளே! என்று தானே நினைத்திருப்பீகள். நம்ம அஞ்சுவா! இது என எவ்வளவு வேதனைப்பட்டிருப்பீர்கள். அல்லது மைத்தி கேட்டதுபோல எங்களை யும் எதிரிகளாக நினைத்துவிட்டாளே! என வருந்தியிருப்பீர்கள். ஆனால் அதிர்ஷ்டவசமாக அப்படி எதுவும் நடக்கவில்லை. எனக்கு இது போதும். எல்லோரும் பாராட்டிய அதிசயித்த அந்த அமிர்தமான நம் நட்பு மீண்டும் புத்துயிர் பெற்றுவிட்டது. இன்று நான் இந்த இருபது வருடங்களும் இல்லாத பாதுகாப்பை உணர்கிறேன் என்னைச் சுற்றிப் பாதுகாப்பாக நான்கு அரணகள் இருக்கின்றன எனக்கு இது போதாதா?" எனக் கேட்டாள்.

நிஷா அவளையே பார்த்துக் கொண்டு புன்னகை மாறாமல் இருந்தாள். "என்ன அப்படிப் பார்க்கிறாய்" எனக் கேட்க "அதே அஞ்சு உன்னில் ஒரு சிறிதும் மாற்றமில்லை" என்றாள். "நீ மட்டும் என்னவாம்" எனச் செல்லச் சிணுங்கலாகத் தோழியை அணைத்துக் கொண்டாள். "இல்லை அஞ்சு நாங்கள் அன்று தப்புச் செய்துவிட்டோம் உன்னைக் காக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லையே! வருவாய் எனக் காத்திருந் தோம் நீ வரவில்லை. பின்னரும் உன் கடிதத்தை எதிர்பார்த்தோமே யல்லாமல் நாமாக எதுவும் செய்யவில்லையே!" என வேதனையுடன் கூறினாள். "போதும் நிஷி எதுவும் யார் தவறும் இல்லை. அனைத்தும் அவரவர் கர்மா. அனுபவித்துத் தானே ஆக வேண்டும். ஆகவே வீணாக வருந்தாதே. எனக்காக வேதனைப்பட்டு உன்னைக் கஷ்டப்படுத்தாதே நிஷி. எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்குத் தெரியுமா இத்தனை

வருடமும் எந்தத் தொடர்புமே இல்லாமல் கல்லுப்போல இருந்த என்னைக் கண்டதும் வாரி அணைத்துக் கொண்டீர்களே இதைவிட வேறென்ன வேண்டும்? இந்த அன்புக்கு நான் என்ன கைமாறு செய்ய?" எனக்கேட்டாள். நிஷாவும் விடாமல் அதைப் பிடித்துக் கொண்டாள். "ஒன்றே ஒன்று செய் அஞ்சு என்னுடன் ஆஸ்பத்திரிக்கு வா. உன்னை நான் பூரணமாகப் பரிசோதிக்க வேண்டும். ஆஸ்திரேலியாவில் நவீன வசதிகள் அதிகம் இருக்கென்று எனக்குத் தெரியும். ஆனால், இது என் மன ஆறுதலுக்காக" என்றாள். அஞ்சு நெகிழ்ந்து போனாள். "கட்டாயம் வருகிறேன். உன் மனத் திருப்திக்காக நீ எதுவும் செய்யலாம். போதுமா?" எனக் கேட்டாள். சரியென நிஷா போனாள். அங்கு நின்ற அந்த ஒரு வாரமும் அஞ்சுவின் வாழ்வில் மிகவும் அமிர்தமான நாட்கள். ஐவரும் தம் வயது குடும்பம் குழந்தைகள் அனைத்தையும் மறந்து தாம் குழந்தைகளாகிக் கொட்டமடித்தனர். அவர்களுடன் பழகப் பழக அஞ்சு வுக்குத் தன் இனிமையான பாடசாலை நினைவுகள் ஒவ்வொன்றாக வந்து அவளது பிற்காலத் துயரங்கள் சிறிதாகியது, அஞ்சுவின் மன அழுத்தமும் நாளுக்கு நாள் குணமடைந்து அவள் புதிய பிறவி எடுத்துக் கொண்டிருந்தாள். அந்த நான்கு டாக்டர்களின் திட்டமும் நோக்கமும் கூட அதுதானே. அதில் அவர்கள் வெற்றியும் கண்டனர்.

அஞ்சு தனக்குள் வியந்தாள். எத்தகைய ஓர் உன்னதமான அன்பு அனைவருக்கும் திருமணமாகிக் குடும்பம் குழந்தை இருந்தது. அவர்களுக்கென்று தொழில் இருந்தது. எல்லோரும் சிறந்த பதவியில் இருந்தனர். ஆஷாவும் மைத்தியும் மகப்பேற்றில் சிறப்புப் பட்டம் பெற்றி ருந்தனர். டாக்டர்களாக அந்த நால்வருக்கும் நல்ல பெயரும் புகழும் இருந்தது. ஆனால் எதுவும் அவர்கள் நட்பைப் பாதிக்கவில்லை. போதா தற்குத் தன்னையும் அள்ளி அணைத்துக் கொண்டார்களே. இவர்கள் அல்லவா உண்மைச் சினேகிதிகள் என அகமிகமகிழ்ந்தாள். அவர்கள் மட்டுமா? அவர்களின் கணவர்கள், குழந்தைகள் பெற்றோர்கள் கூட அவளிடம் அன்பு காட்டினர். நிஷாவின் அன்னை மாத்தறையிலிருந்து அவளுக்காக வந்திருந்தார். "இவ்வளவு தூரம் ஏன் வந்தீர்கள் அம்மா?" என அஞ்சு கேட்டாள். "நீ வந்திருக்கிறாய் என்று நிஷா சொன்னதும் உன்னை ஒரு தடவை பார்க்க வேண்டுமென்று வந்தேன். ஐந்து பேராக இருந்து நீ போனதும் அவர்களுக்குத் தங்களில் ஒரு பகுதியே போன மாதிரி அடிக்கடி கவலைப்படுவார்கள். நானும் கதிர்காமம் போகும்போது அஞ்சு எங்கிருந்தாலும் நன்றாக இருக்க வேண்டுமெனப்

பிரார்த்திப்பேன்'' என்றார். விழிகள் பனிக்கக் கேட்டுக் கொண்டிருந் தவள் ''உங்கள் எல்லோரின் பிரார்த்தனையும்தான் எங்களை இவ்வளவுக்குக் காப்பாற்றி இருக்கம்மா'' என்றாள். 'யாரோ செய்த தவறை நினைத்துப் பயந்து இந்த உன்னதமான நட்பை மறந்தேனே!' என வருந்தினாள். பின் 'அது இப்போதாவது கிடைத்ததே!' என்றும் மகிழ்ந்தாள்.

அஞ்சுவுடன் மற்ற நால்வரும் பிள்ளையார் கோவிலுக்குப் போனார் கள் அங்கே நின்ற குருக்கள் "என்ன ஐந்து பேராக வருகின்றீர்கள் காணாமல் போனவரைக் கண்டு பிடித்துவிட்டீர்களா?" எனக் கேட்டார். அஞ்சு நல்ல மனநிலையில் இருந்ததால் "என்ன அவிவேக பூரண குருவின் மட்டி மடையன் கதையா? எண்ணத் தெரியாமல் எண்ணிவிட்டு குருக்களிடமும் அழுதீர்களா'' எனக் கேலி செய்தாள். "ஆமா இப்ப சொல்லு. எங்கள் வேதனை எங்களுக்குத்தான் தெரியும்'' என்றனர். "மக்குகளா! நான் எங்கே போனேன்? என்றும் உங்களுடன் உங்கள் நினைவில் கலந்து தானே இருந்திருக்கிறேன்'' என்றாள். "ஆமா என்றைக்கு நாங்கள் உன்னை மறந்தோம்? எப்படியும் பேச்சு முடிவில் உன்னைப் பற்றித் தானே இருக்கும்'' எனப் பிரியங்கா வியந்தாள். "இதற்குத்தான் அஞ்சு வேண்டுமென்பது. எவ்வளவு பெரிய உண்மை யைச் சுலபமாகச் சொல்லி விட்டாள்'' என அனைவரும் அவளைப் பாராட்டினர். "இதைச் சொல்ல இருபது வருடம் கழித்து நான் ஆஸ்திரே லியாவிலிருந்து வரவேண்டியிருந்தது" என மேலும் கேலி செய்தாள். 'உனக்குச் செய்கிறோம் பார்' என நிஷா அவள் காதைக் கிள்ளினாள். அதைப் பார்த்த கோவில் குருக்களும் 'இதுவல்லவோ நட்பு, இனம் மொழி அறியாதது' என நெகிழ்ந்து நின்றார்.

அஞ்சு யாழ் நகர் போக வேண்டுமென்றதும் "ஆமா அஞ்சு அங்கே உன் அத்தை ஆ! உன் கேசவ் அத்தான் எல்லோரும் எப்படி" என நிஷா கேட்டாள் "அங்கே அவர் மட்டும்தான் இருக்கிறார்" என்றதும் "அவரைப் பார்க்கத்தான் நீ போகிறாயா அஞ்சு? அவருக்குத் திருமணமாகி விட்டதா?" எனப் பிரியங்கா கேட்டாள். "இன்னும் இல்லை" என்றதும் "ஆஹா!! அதற்குத்தான் வந்தாயா?" எனக் கேலி செய்தனர். "போங்கடி" எனக் கோபித்துக் கொண்டவள் "முடிந்தால் அவருக்கு ஒரு திருமணம் செய்து வைக்கலாமென நினைக்கிறேன்'' என்றாள். ''ஏன் அஞ்சு அவரைத்தானே நீ விரும்பினாய்? நீயே செய்யலாம்தானே!" என ஆஷா கேட்டாள். "இல்லை ஆஷா" என்றதும் மைத்ரேயி வழக்கம்போல "என்ன

இல்லை. உன்னைப் பிடித்து அவர் கையில் கொடுக்கிறோம் பார்" என்றாள் அதிகாரத் தோரணையில் எல்லோரும் மனம் நிறைந்து சிரித்தனர். அஞ்சு முயன்று அந்தப் பேச்சைத் திசை திருப்பினாள்.

## 4

அன்று காலையில் கண்விழித்த கேசவனின் உள்ளம் மிகவும் பரவசமாக இருந்தது என்றுமில்லாத ஒரு குதூகலம் அவன் நெஞ்ச மெல்லாம் நிறைந்திருந்தது. முதல் நாள் தான் அவினாஷ் தொலை பேசியில் "அக்கா அங்கே வந்திருக்கிறார். யாழ் நகரில் ஹோட்டலில் தங்கியிருக்கிறார். நாளை எங்கள் கந்தசாமி கோவிலுக்கு வருகிறார்" என்று சொன்னான். "எப்போ வந்தாள்? எந்த ஹோட்டல்? என்றெல்லாம் பரபரப்படைந்தவன் பின் நாளைக்குக் கட்டாயம் வருவாள்தானே அவினாஷ்" எனக் கெஞ்சலாகக் கேட்டான். "ஆம் அத்தான் கட்டாயம் வருகிறேன் என்றார்" என அவன் உறுதியளித்தான்.

அதன் பின் அவன் கால்கள் நிலத்தில் பதியவே இல்லை. வேலைக் காரரைக் கூப்பிட்டு வீட்டைச் சுத்தம் செய்யச் சொன்னான். அறையை அழகுபடுத்தினான். கட்டில், மெத்தை, திரைச் சீலை எல்லாம் மாற்றினான். அதற்காக அயலில் இப்பொழுது கட்டட உட்புற அலங்காரக் கலை படிக்கும் ஒரு பெண்ணிடம் பணத்தைக் கொடுத்து "நீதான் இதை ஓர் ஐந்து நட்சத்திரக் ஹோட்டல் மாதிரிச் செய்ய வேண்டும். வருவது ஒன்றும் சாதாரணமான ஆள் இல்லை ஆஸ்திரேலியாவில் பெரிய டாக்டர் தெரியுமா?" எனச் சொன்னான். மின்சாரம் அடிக்கடி தடையா வதால் ஜெனரேட்டர் ஒழுங்கு செய்தான். அவன் செய்கைகளைப் பார்த்த அயலவர்களுக்கு அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது. எதுவோ நினைத்து இவன் இதெல்லாம் செய்கிறான். ஆனால் மேல் நாட்டில் இத்தனை வருடங்கள் இருந்தவள் வந்தும் இங்கே வராமல் ஹோட்டலில் நிற்கிறாளாம். என்ன மாதிரியோ என வருந்தினர். ஆனால் சீதேவி மட்டும் "அது புள்ளை உன்னைப் பாாக்கத்தான் தம்பி வருது. தம்பியார் போய்ச் சொன்னதும் மனம் கேளாமல் தான் வருது. அப்பவே அதுக்கு உன்மேல ஒரு இது. நீ ஒண்டும் யோசிக்காதை. அது வந்ததும் நான் பேசி உங்கள் கலியாணத்தைச் செய்து வைக்கிறன். இந்தக் கட்டை அதைப் பார்க்காமல் போகாதெண்டு சொன்னேன் பார்த்தியா? எல்லாம் கந்த சாமியார் பார்த்துக் கொள்வார்" என்றாள். ஆனால் வழக்கம் போலவே கேசவன் "ஏய் கிழவி! ஏதாவது தத்துப் பித்தென்று உளறாதே. அவள்

இங்கு இரண்டு நாட்கள் நின்றாலே எனக்குப் போதும். கல்யாணம் கத்தரிக்காய் என்று ஏதாவது பேசிக் காரியத்தைக் கெடுத்தியோ! பின் நான் மனிசனா இருக்க மாட்டன். உன்னைக் கொண்டு போய் எங்கை யாவது வைத்துப் பூட்டிவிடுவேன்" என மிரட்டினான்.

அந்தக் கிராமத்தில் கேசவனுக்கு நல்ல மதிப்பிருந்தது. அவன் தொட்டதெல்லாம் துலங்கியது. நல்ல ஒரு விவசாயி. எத்தனையோ பேர் வளைத்துப் போட்டுத் தம் பெண்களுக்குக் கட்டி வைக்க நினைத்தனர். ஆனால் அவன் எல்லாவற்றையும் மறுத்துவிட்டான்.

தன் தந்தை திட்டமிட்டுத தன்னையும் அஞ்சுவையும் பிரித்தார் என அறிந்தபோது அவன் உள்ளம் வெறுத்துவிட்டது. அஞ்சுவின் மனம் அவனுக்குத் தெரியாது. ஆனால் அவள் அன்பு, பொறுமை, பண்பு எல்லாம் அவனுக்கு நிரம்பப் பிடித்தவை. அதனால்தான் அவனை அறியாமலேயே அவன் உள்ளம் அவளிடம் சென்றது. அதை அப்படியே தனக்குள் போட்டுப் புதைத்து விட்டான். அவள் வருவாள் திருமணம் செய்வாள் என்றெல்லாம் அவன் நினைக்கவுமில்லை, எதிர்பார்க்கவும் இல்லை. அவள் எங்கிருந்தாலும் நன்றாக இருக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தான். அதே போலத் தனகு இப்பிறப்பில் திருமணம் என்ற பேச்சிற்கே இடமில்லை எனவும் முடிவு செய்தான். அஞ்சுவின் கடிதங்கள் வரும்போதெல்லாம் தந்தை "என்ன அந்த அநாதைகளின் கடிதமா என்னவாம்" எனக் கேட்பதைச் சகிக்காமல் கடிதத் தொடர்பையே விட்டு விட்டான். நெஞ்சில் நிறைந்து இருக்கும்போது கடிதம் வேறு எதற்கு? அவன் அவளை மறந்தால்தானே மீண்டும் நினைப்பதற்கு?

அண்மையில் எதிர்பாராதவிதமாக அவினாஷ் வந்தான். அவர்கள் எல்லோரும் நன்கு படித்து நல்ல நிலையில் இருக்கிறார்கள் என அறிந்து புளகிதம் அடைந்தான். "மாமா செய்த புண்ணியம் அம்மாவின் பூஜா பலன் யாவும் வீண் போகவில்லை" எனக் கூறி மகிழ்ந்தான். பின் "அஞ்சு எப்படி இருக்கிறாள். திருமணமாகியதா? குழந்தைகள் இருக்கா?" எனக் கேட்டான். அவினாஷ் "ஆமாம் அத்தான்! இரண்டு குழந்தைகள் அக்கா பெறாமலே பெற்றவர்கள்" எனக் கண் கலங்கக் கூறினான். அவனை அணைத்து ஆறுதல் படுத்தியவன் "அஞ்சு இங்கே வருவாளா? அவளை நான் ஒருமுறை பார்க்க வேண்டுமே!" என்றான்.

"அக்காவுக்கு இங்கே வரப் பயம் அத்தான். என்னையே பல கவனங்கள் சொல்லித் தான் அனுப்பினார். எங்களுக்கு பெற்றவாகள் இல்லை எனற கவலை மட்டும்தான் இருந்தது. ஆனால் அக்காவுக்கு

எங்கள் இருவரையும் எப்படி வளர்த்து ஆளாக்குவது என்ற பயமும் இருந்தது. பலரின் இதயங்களைப் பரிசோதித்து அதன் பிழைகளைச் சரி செய்யும் எங்கள் அக்காவின் உள்ளம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது அத்தான். அதை எப்படிச் சரி செய்வதெனத் தெரியவில்லை. அக்கா மகிழ்ச்சியாக நீண்ட காலம் வாழ வேண்டும். அது எப்படி என்றுதான் தெரியவில்லை. இங்கு வந்தால் சில வேளை அவருக்கு ஒரு மாற்றம் தெரியலாம் முயற்சி செய்து அனுப்பப் பார்க்கிறேன்" என்றான்.

அவன் போன பின் எந்தத் தகவலும் இல்லை. அவள் வரமாட்டாள். இனி அவளைப் பார்க்கவே முடியாது என வருந்திய வேளையில் தான் இன்ப அதிர்ச்சியாக அவினாஷ் போன் பண்ணினான். அவளை எப்படி வரவேற்பது என நினைத்தவன் கோவிலுக்குத்தானே வருகிறாள். கோவிலில் ஓர் அபிஷேகம் செய்வோம் எனத் தீர்மானித்தான். அவன் தான் கோவில் தர்மகர்த்தாவாக இருந்தான் அதனால் நினைத்தவுடன் குருக்கள் கேட்கும் பொருட்களைக் கொடுத்தால் அபிஷேகம் செய்ய லாம். அவனுக்குத்தான் பால், பழம், இளநீர் எல்லாம் வேண்டிய அளவுக்கு அவனிடமே இருந்தனவே அதனால் எதுவித பிரச்சினையும் இல்லாமல் அபிஷேகத்திற்கும் ஒழுங்கு செய்தான். அக்கா கோவிலுக்கு வருகிறார் என்று தானே அவினாஷ் சொன்னான். அதனால் அங்கேயே போய் நிற்போம் எனக் காலையிலேயே புறப்பட்டுப் போய் விட்டான்.

அஞ்சுவுக்கு யாழ் நகரில் கால் பதித்ததும் என்னென்னவோ நினைவு கள் வந்து அவள் நெஞ்சைப் பிசைந்தன. அவள் பயணத் தரகர் ஒழுங்கு செய்தபடி ஹோட்டலின் வாகனம் விமான நிலையத்தில் காத்திருந்து அவளையும் வேறு சிலரையும் அழைத்துச் சென்றது. அவள் யாழ் நகர் போகும் விபரம் தெரிந்ததால் அவினாஷ் போன் பண்ணி யாழ்ப் பாணத்தில் என்ன வேலை எனக் கேட்டான். "இங்கே எனக்குப் பெரிதாக வேலை ஒன்றுமில்லை. ஆஸ்பத்திரியில் இரண்டொருவரைப் பார்க்கச் சொல்லிக் கொழும்புக்கு போன் பண்ணியிருந்தார்கள் வந்து பார்ப்ப தாகச் சொல்லியிருக்கிறேன். அதன் பின் கந்தசாமி கோவிலுக்குப் போக வேணும் அத்துடன் அத்தானையும் பார்ப்பேன்" எனறாள். "அப்போ நான் அத்தானிடம் சொல்கிறேன்" என்றான். "அதெல்லாம் தேவையில்லை" என்றாள். ஆனால் அவனுக்கும் பிரேமா குடும்பத்தினருக்கும் இருவர் மனமும் புரிந்ததால் இருவரையும் இணைக்க முயன்று கொண்டிருந் தனர். அதனால் அவன் கேசவனிடம் முன்கூட்டியே சொன்னான்.

அஞ்சு திட்டமிட்டபடி யாழ் ஆஸ்பத்திரியில் இருந்த சில நோயாளி களைப் பார்வையிட்டாள். அதில் சிலருக்கு ஆபரேஷன் செய்ய வேண்டி யிருந்தது. ஆனால் அங்கே வசதிகள் இல்லை. கொழும்பில் தான் செய்ய வேண்டுமென்றனர். கொழும்புக்கு அனுப்புங்கோ பத்து நாட்கள் கழித்துப் போய்ச் செய்கிறேன் என்றாள். பின் திட்டமிட்டபடி ஒரு டாக்ஸியில் கோவிலுக்குச் சென்றாள். கிராமத்துக்குள் டாக்ஸி செல்லும் போது அவளைப் பல்வேறு உணர்ச்சிகள் ஆட்கொண்டன. ஒரு காலத்தில் மிகவும் இன்பமாக இருந்த நாட்கள் அதன்பின் இதயத்தை கசக்கிப் பிழிந்தது போல மிகப் பயங்கரமாக எல்லோரிடமிருந்தும் பிரிக்கப்பட்டது இன்று ஏன், எதற்காக வருகிறாள் அவளுக்கே வியப்பாக இருந்தது எதுவோ உணர்ச்சி வசப்பட்டு வந்து விட்டேனா? கேசவன் எப்படி வரவேற்பானோ? என என்னென்னவோ நினைத்துக் கலங்கினாள். ஆனால் "எத்தகைய புறக்கணிப்பும், அவமதிப்பும் என்னை ஒன்றும் செய்யாது. நான் இதுவரை சந்திக்காததவையா?'' என நினைத்துக் கொண்டாள்.

அங்கே மிக ரம்மியமாக இருந்த இடங்கள் யாவும் இன்று பாழடைந்து பாாப்பதற்கு மிகவும் வருத்தமாக இருந்தது. இவை எல்லாம் மக்களின் ஆசை, பொறாமை, கர்வம் இவற்றால்தானே ஏற்பட்டவை. இந்த மனிதருக்கு ஏன் இந்த ஆசையும் அதிகார வெறியும்? தமக்குக் கிடைப் பதைக் கொண்டு திருப்தி கண்டு எல்லோரிடமும் அன்பு காட்டி யாரையும் துன்புறுத்தாமல் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் பகவான் சத்தியசாயி பாபா இதைத்தானே திரும்பத் திரும்பச் சொல்கிறார். ஆனால் சாண் ஏற முழம் சறுக்குவது போலத் தான் எல்லாம் நடக்கிறது என வருந்தினாள்.

அஞ்சு கோவிலுக்குப் போய் கால் கழுவிவிட்டு உள்ளே போனபோது கோவிலில் எதுவோ விசேஷம் போல மாவிலை தோரணங்கள் கட்டி அலங்கரிக்கப்பட்டிருந்தது. முருகனுக்கு அபிஷேகத்திற்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. அங்கே கேசவன் வெள்ளை வேட்டி சால்வையுடன் ஆஜானுபாகுவாக நின்றான். எத்தனை வருடங் கள் ஆனால் என்ன எப்படி மாறி இருந்தால் என்ன அவள் உள்ளம் அவனைக் கண்டுகொண்டது. அடுத்து ஒர் அடி எடுத்து வைக்க முடியவில்லை. இனம் புரியாத இன்ப அதிர்ச்சிக்கு ஆட்பட்டுத் 'தன்னை மறந்தாள்; தன் நாமம் கெட்டாள்' என அப்பர் சுவாமிகள் பாடியது போல அப்படியே உறைந்து நின்றாள்.

அவளைக் கண்ட கேசவனுக்கும் இன்ப அதிர்ச்சி ஏற்பட்டது. ஆனால், உடனே சமாளித்துக் கொண்டு அவளருகே சென்று "வா! அஞ்சு வா! வா!" எனப் பரபரப்படைந்தவன், எத்தனை வருடங்களின் பின் வந்திருக் கிறாய். உனக்காகத்தான் இந்த அபிஷேகம் வந்து தர்ப்பையைப் போட்டுக் கொள்" என்றான். அவனை நிமிர்ந்து பார்த்தவளின் கண்கள் மழைக் காலத்து ஏரிகளாகி உடைப்பெடுக்க ஆயத்தமாகின. உதடுகள் துடித்தனவேயன்றி வார்த்தைகள் வர மறுத்தன. அஞ்சு தன்னை மறைக்க அரும்பாடுபட்டாள். அதிலேயே ஓவென்று அழுதுவிடுவாள் போல் இருந்தது. ஆனால் மேலை நாகரிகத்தில் வளர்ந்தவள். எப்பொழு தும் அவர்களைப் போலவே முகத்தைத் துடைத்தது போல எந்த உணர்வையும் காட்டாமல் இருக்கப் பழகியவள் முயன்று சமநிலைக்கு வந்து அவனைப் பார்த்து ஒரு புன்னகையை மட்டும் உதிர்த்துவிட்டு மெதுவாக நடந்து போய் அபிஷேகத்திற்கு அமர்ந்தாள். அவளுக்கு வியப்பாக இருந்தது இத்தனை வருடங்கள் கழித்து வந்த தனக்கு எதுவோ "பூரண கும்பமும் முதல் மரியாதையும்" கிடைத்த மாதிரி இருந்தது. கைகள் குருக்கள் சொன்னவற்றைச் செய்தன. கண்கள் முருகனைப் பாாத்தன. ஆனால் உள்ளம் என்னவெல்லாமோ நினைத்து வியந்தது, மகிழ்ந்தது வேதனையும் பட்டது.

அபிஷேகம் முடிந்ததும் "வீட்டுக்கு வா" என அழைத்துச் சென்றான். அங்கே ஒரு பெண் ஆரத்தி சுற்றி அவளை வரவேற்றாள். "என்ன சந்தியா இது' எனக் கேசவன் கோபித்தான். "நான் இல்லை எல்லாம் சீதேவிப் பாட்டிதான் சொல்லிச்சு" என்றாள். உள்ளே போனவளை "என்ரை ராசாத்தி வாணை" எனச் சீதேவி வரவேற்றது. அஞ்சு இதுவரை யாரிடமும் வாயைத் திறந்து ஒரு வாாத்தையும் பேசவில்லை. அவரவர் சொன்னவற்றைச் செய்து கொண்டிருந்தாள். உள்ளே போனவளை மாமா, அத்தை, அம்மா, அப்பா எல்லோரும் படங்களில் இருந்து வரவேற்றனர். கண்கள் மீண்டும் நிரம்பி வழிந்தன. அதைப் பார்த்த கேசவன் "வா அஞ்சு!" என அவளை அழைத்துக் கொண்டு போய் ஓர் அறைக்குள் விட்டு, "நீ இங்கேயே இருக்கலாம் அஞ்சு ஹோட்டலுக்குப் போகத் தேவையில்லை. உனக்கு வேண்டிய வசதி எல்லாம் இங்கேயே இருக்கிறது. எங்காவது போவதானால் கார் இருக்கிறது. முகம் கழுவி விட்டு வா சாப்பிடலாம்" என்றான். அஞ்சு அவனையே பார்த்துக் கொண்டு வியந்து நின்றாள். ஆனால் சிறிது நேரத்தில் சந்தியா "அக்கா சாப்பிட வாங்கோ" என்றாள். சரியென்று போய்ச் சாப்பிட்டாள்.

சாப்பிட்ட பின் உள்ளே போன கேசவன் ஒரு பெட்டியைக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்தான். 'என்ன!' என நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். "இதைக் கட்டாயம் உன்னிடம் ஒப்படைக்கும்படி அம்மா தன் கடைசி நேரத்தில் சொன்னார். நான் எப்படியாவது நீ வந்துவிட வேண்டு மென முருகனை வேண்டினேன். இப்போ என் பொறுப்புத் தீர்ந்தது" என்றான். அதைத் திறந்தவள் அதிர்ந்தாள். அதற்குள் பார்வதியின் அத்தனை நகைகளும் இருந்தன. "அத்தையின் நகைகள்!!" என ஆச்சர்யமாகக் கூறியவள் "இவை ஏன் எனக்கு? ரஷ்மிக்கல்லவா போக வேண்டும்'' என முதல் தடவையாக வாயைத் திறந்து அவனிடம் கேட்டாள். ஆனால் அவன் "இல்லை அஞ்சு. அம்மா இது உனக்குத் தான். இதிலிருந்து ஒரு குன்றுமணி கூட எடுக்கக்கூடாது. ரஷ்மிக்கு வேண்டியதை நீயே செய்து போடு என்று சொன்னார். நான் அப்படித்தான் செய்தேன்'' என்றான். இனியும் முடியாது என்பது போல விம்மல் வெடித்தது. உடைந்து அழுதாள். அதைப் பார்க்க முடியாது அவன் வெளியே போய் விட்டான்.

சந்தியா வந்து சிறிது நேரம் அவளிடம் பேசிக் கொண்டிருந்தாள். அவள் தமது தாத்தாவின் தம்பியின் பேர்த்தி. அவளும் கேசவனுக்கு ஒரு முறைப் பெண்தான் என அறிந்து அவளைப் பற்றி மேலும் விபரங்கள் அறிந்தாள். நாட்டுப் பிரச்சினையால் தெல்லிப்பழையில் இருக்க முடியாமல் இங்கு வந்தோம். அத்தான் பெரிய மனசுடன் "நான் தனியத் தான் இருக்கிறேன் இங்கேயே இருங்கள் என இடம் தந்தார். இப்போ நீங்கள் வந்துவிட்டீர்கள் இனி என்னவாகுமோ?'' என்றாள். "நான் வந்ததற்கும் நீங்கள் இங்கே இருப்பதற்கும் என்ன சம்பந்தம் சந்தியா? நான் ஆகப் பத்து நாட்கள் தானே நிற்பேன்" எனக் கேட்டாள். "இல்லை அத்தானுக்கும் உங்களுக்கும் கல்யாணம் என்று ஊரில் எல்லோரும் பேசிக் கொள்கின்றார்கள்" என்றவள் மேலும், "அக்கா தயவுசெய்து எங்கள் அப்பாவின் பேச்சு எதையும் மனத்தில் போட வேண்டாம். வயதாகி விட்டதே தவிர விபரம் போதாது. எங்களை அத்தான் இங்கே வைத்திருப்பதே பெரிய விஷயம். அதைவிட அதிகக் கனவுகள்! எதையும் பொருட்படுத்த வேண்டாம். உங்களுக்கும் அத்தானுக்கும் திருமணம் நடந்தால் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. அத்தான் பாவம் அக்கா. அவர் யார் யாருக்கோ நல்லது செய்கிறார். எப்பொழுதும் மாடு மாதிரி உழைத்து எல்லோருக்கும் தான தர்மம் செய்கிறார். கேட்டால் இதெல்லாம் ஒரு பிராயச்சித்தம் என்கிறார். எனக்கு எதுவுமே புரியவில்லை, அவர்

நன்றாக வாழவேண்டும், பாவம் தனித்து எவ்வளவு காலம் இருப்பார். கந்தசாமி மாமா இருக்கும்வரை கல்யாணம் செய்யச் சொல்லி ஒரே சண்டை. ஆனால், அத்தான் பிடிவாதமாக மறுத்துவிட்டார். இங்கே எல்லோரும் அவர் உங்களுக்காகக் காத்திருக்கிறார் எனப் பேசிக் கொள்கிறார்கள். அவினாஷ் வந்து போனதன் பின் அவள் பெரிய படிப் பெல்லாம் படித்தவள் இவனைச் செய்வாளா? என முகத்துக்குப் பின்னால் கேலியும் பேசுவார்கள்" எனச் சொல்லி முடித்தாள். அவளைப் பார்த்துப் புன்னகைத்தவள் 'என் வேலையைச் சுலபமாக்கியதற்கு மிகவும் நன்றி சந்தியா' என மனத்திற்குள் நினைத்துக் கொண்டாள். ஆனால் வெளியே வரச் சீதேவிக் கிழவி "அத்தை மகராசியாய் போட்டுது புள்ளை. ஆனால் உங்கள் கல்யாணச் சாப்பாடு சாப்பிடாமல் இந்தக் கட்டை வேகாது. கெதியிலை போட்டு என்னையும் அத்தைக்கிட்ட அனுப்பி விடுங்கோ" என்றாள். "என்ன சீதேவி இப்படிப் பேசுகிறாய்" எனச் செல்லச் சிணுங்கலாகக் கூறிவிட்டுப் போய்விட்டாள்.

மாலையில் வந்த கேசவன் "என்ன எல்லாம் வசதியாக இருக்கிறதா? வேறு ஏதாவது வேண்டுமானால் சொல்லு வாங்கி வருகிறேன்" என்றவன் "உனக்கு வசதியாக இருக்குமென்று தான் கம்ப்யூட்டரையும் இங்கே வைத்தேன்" என்றான். அவனது கவனம் மிகவும் அதிகமானது போல இருந்தது. 'நானும் உங்களில் ஒருத்திதான். இங்கிருந்துதான் போனேன், புதிதாக இப்பொழுது கொம்பொன்றும் முளைக்கவில்லை' எனச் சொல்ல நினைத்து வெறும் புன்முறுவலுடன் "ஒன்றும் தேவை யில்லை" எனச் சொன்னாள். "நான் தோட்டப்பக்கம் போகிறேன் வருகி றாயா" எனக் கேசவன் கெட்டான். இது தான் நல்ல சந்தர்ப்பம் காலம் கடத்த முடியாது வந்த வேலையை முடித்துவிட்டு விரைவில் போக வேண்டுமெனத் தீமானித்துச் சரி என அவனுடன் சென்றாள்.

இருவருமாக நடந்து போகும்போது பார்த்தவர்கள் பொருத்தமான ஜோடி என மகிழ்ந்தனர். மேல் நாட்டில் வளர்ந்து டாக்டராக இருந்தாலும் எவ்வளவு பவ்வியமாகப் புடவை கட்டிப் பண்பாக இருக்கிறாள் என வியந்தனர். அஞ்சுவுக்குக் கேசவனிடம் சரளமாகப் பேச வராது. சிறு வயதில் கூட அவள் அவனிடம் என்றும் நேருக்கு நேர் பேசியதில்லை. எப்பொழுதும் ஒரு மதிப்பும் மரியாதையும் சங்கோசமும் இருக்கும். ரஷ்மி அல்லது தம்பி தங்கைகள் யாராவது தூது வேலை பார்ப்பார்கள். இத்தனை காலமாக எந்தத் தொடர்பும் இல்லாமல் இருந்துவிட்டு இப்பொழுது எதிலிருந்து ஆரம்பிப்பது என்று தெரியவில்லை. எதைப்

பேசினால் அவனுக்குப் பிடிக்கும் எனறும் புரியவில்லை. ஆனால் அவனுடன் தனித்துப் போகும்போது உள்ளத்தை எதுவோ ஒரு இனம் புரியாத இன்பம் ஆட்கொண்டு மிகவும் ரம்மியமாக இருந்தது. எத்தனையோ மருத்துவப் பட்டங்கள் பெற்றபோது இல்லாத மகிழ்வு, தம்பிக்கும் தங்கைக்கும் திருமணம் செய்து கண்கலங்கி நின்றபோது இல்லாத புளகிதம் இன்று அவள் இதயமெங்கும் வியாபித்திருந்தது. என்றுமில்லாத ஒரு மன நிம்மதியும் பாதுகாப்பும் கிடைத்த மாதிரி இருந்தது. ஆனால் அடிபட்ட காயப்பட்ட நெஞ்சம் அனைத்தையும் புறக் கணித்து "நீ ஒரு கடமையைச் செய்ய வந்தாய். செய்துவிட்டு உடனே புறப்படு. இதுவல்ல உனது இடம். உனக்கு அடைக்கலம் அளித்த இடத் திற்கே நீ போய்விடு" என அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தது. அன்பிற்கும் மனப் போராட்டத்திற்கும் இடையே அஞ்சு திண்டாடினாள்.

எப்படிப் பேசுவதென ஒருவாறு சிந்தித்துத் தெளிந்து "அத்தைக்கு என்ன நடந்தது?" எனப் பேச்சை ஆரம்பித்தாள். "என்னவென்று சொல்வது? மன வேதனைதான் மாமா குடும்பத்தை அப்படியே இழந்த மாதிரி உடைந்துபோனார். அதிலிருந்து நோய் சிறிது சிறிதாக ஆரம்பித்து முடிவில் உயிரையே பறித்துவிட்டது" என வேதனையுடன் கூறினான். தாயின் மேல் அவனுக்குள்ள அன்பு அவளுக்குத் தெரியுமாகையால் ஆறுதல் வார்த்தையின்றி இதழ்களைக் கடித்துத் தன் துயரை விழுங்கினாள்.

"ஏன் கடிதமே எழுதாமல் விட்டீர்கள்? ரஷ்மி கூட எழுதவில்லை. மாமா வின் மறைவு, ரஷ்மியின் திருமணம் இவற்றை அறிவதற்குக் கூடவா நாங்கள் அருகதை அற்றவர்களாகி விட்டோம்?" எனக் குற்றம் சாட்டுவது மாதிரிக் கேட்டாள். "வேண்டாம் அஞ்சு அதை எல்லாம் மறந்து விடு. அந்த நேரத்தில் எதுவுமே என் கையில் இருக்கவில்லை. இல்லாவிட்டால் உங்களை ஆஸ்திரேலியா போக விட்டிருப்பேனா?" என வேதனையுடன் கூறினான். அவனை நிமிர்ந்து பார்த்தவள், அவன் துயர் கண்டு எதுவும் பேசாமல் தலை குனிந்தாள்.

பேச்சை மாற்ற நினைத்து "வீட்டில் சில விவசாயப் புத்தகங்கள் கண்டேன். என்ன புதிய யுக்திகள் எதையாவது கையாள்கின்றீர்களா?" எனக் கேட்டாள். "ஒரு வகையில் அப்படித்தான். நான் தபால் மூலம் படித்துப் பட்டம் வாங்கினேன் படித்தவற்றைப் பயன்படுத்தி வெற்றியும் கண்டுள்ளேன். அப்போதெல்லாம் மாமாவைத்தான் நினைப்பேன்" என்றான். "வாவ்! எவ்வளவு சந்தோசமாக இருக்கிறது" என்றாள்.

“இதற்குப் பின்னால் ஒரு ‘ரை’ இருக்கிறது அஞ்சு உனக்குப் புரிகிறதா?” எனக் கேட்டான். விழி மலர்த்தி ஆச்சர்யமாக அவனைப் பாாத்தாள். “ஆமாம். அன்று அம்மாவிடம் ஒரு பக்கக் கதையைத்தான் சொன்னேன். ஆனால் சிலர் “பெரிய பட்டதாரி மாதிரி ‘ரை’ கட்டிக் கொண்டு கூட்டத் திற்கு வந்திருக்கிறார் பார்” எனப் பின்னால் பேசினர். அதனால் அதற்குத் தகுதியானவனாக வேண்டுமென்ற ஒரு மன உறுதியுடன் படித்து வெற்றி யும் பெற்றேன் ஆகவே இது உனது வெற்றி அஞ்சு” என்றான். விழிக் குளம் ததும்ப அவனை அண்ணாந்து பார்த்து அதிசயித்து நின்றாள்.

“அதெல்லாம் சரி ஏன் தனித்து இருக்கிறீர்கள், மாமா எப்படி விட்டார்?” எனக் கேட்டாள். “என்னை விடு. நீ ஏன் இப்படியே இருக் கிறாய்?” எனக் கேட்டான். “எனக்குப் பொறுப்பிருந்தது. அவினாஷ், ஆரபி படித்து முடிந்து திருமணம் செய்து வைத்து நிமிர்ந்தபோது தலை நரைத்துவிட்டது. இனி என்ன திருமணம் என விட்டுவிட்டேன்” என விளையாட்டாகக் கூறினாள். அவனும் குறும்பாக “ஏன் அஞ்சு தலை நரைத்தவர்கள் யாரும் அங்கே இல்லையா” எனக் கேட்டான். “வெள்ளைத் தலைக்குத்தான் அங்கே பஞ்சமில்லையே ஆனால் எவனுமே கவர்ச்சியாக இல்லை” என்றாள் அதே குறும்புடன். “இங்கே உன்னைச் சுற்றி எவனாவது கவர்ச்சியானவனாக உனக்காகவே காத்துக் கொண்டு இருப்பான் கவனித்தாயா?” எனக் கேட்டான். அதிர்ந்து அவனை நிமிர்ந்து பார்த்தாள். இதயமெங்கும் ஓர் இன்ப ஊற்றுப் பாய்ந்தது மௌனித்து நிலம் நோக்கினாள். ஆனால் அவளது துவள்ந்த நெஞ்சம் “இதற்கெல்லாம் மயங்காதே அஞ்சு!” என எச்சரித்தது

“அதனால் அப்படி எதுவும் என் கண்ணில் படவில்லையே...” என வார்த்தைகளை இழுத்தவள் “நான் பெண். என்னைப் பற்றிக் கவலை இல்லை. ஆனால் உங்களுக்குக் கட்டாயம் ஒரு துணை வேணும். தம்பி வந்து சொன்னதும் எனக்கு வருத்தமாக இருந்தது. அதுதான் வந்தேன். சந்தியா நல்ல பெண்ணாகத் தெரிகிறாள், சித்தப்பாவுக்கும் விருப்பம் போல் தெரிகிறது. நீங்கள் அவளை மணக்கலாமே!” என்றாள். அவளை வியப்புடன் பாாத்தவன், “சந்தியாவுக்கும் எனக்கும் எவ்வளவு வயது வித்தியாசம் தெரியுமா? அவள் குழந்தைப்பிள்ளை. மாமாவுக்குப் பணத்தாசை. அதுதான் வேறொன்றும் மனத்தில் படவில்லை. அவளுக்கு நான் ஒரு நல்ல வரன் பார்த்திருக்கிறேன். விரைவில் திருமணம் நடக்கும். மாமா திருப்திப்படுவது மாதிரி சொத்தில் ஒரு பகுதியையும் கொடுக்கப் போகிறேன். இந்தச் சொத்தென்றாலே எனக்கு வெறுப்பு. இதுதான்

உங்களை ஆஸ்திரேலியா அனுப்பியது. அம்மாவை அற்பாயுசில் கொண்டு போனது" என எங்கோ பார்த்துக் கொண்டு கூறினான். அவன் கண்கள் கலங்கிக் குரல் தளர்ந்தது. வருத்தத்துடன் அவனைப் பார்த் தவள் "நடந்தவையை நினைத்து வருந்துவதால் என்ன பயன் அத்தான்? ஆனால் உங்களுக்கு ஒரு துணை அவசியம் வேண்டுமில்லையா?" என்றாள். "எனக்கு மட்டுமில்லை அஞ்சு துணை உனக்கும்தான் வேணும். நீ அம்மாவின் நகைப் பெட்டியைப் பார்த்தாயா?" எனக் கேட்டான்.

"இல்லை. அதைப் பார்க்க அத்தையே நேரில் நிற்பது மாதிரி வேதனை யாக இருந்தது" என்றாள். "அதை நன்றாகப் பார் உனக்கு எல்லாம் புரியும்" என்றான். இது என்ன புதிர் என வியந்த அஞ்சு "சரி" என்றாள். இருவருமாகச் செல்லும்போது சிறு வயதில் விளையாடிய இடங்கள், அவள் மாட்டுக்குப் பயந்து ஓடியது, ஆடு இழுத்து விழுந்து அழுதது என ஒவ்வொன்றாகக் காட்டி அவளைக் கேலி செய்து கொண்டே வந்தான். "அப்போதெல்லாம் நீ ஒரு பயந்தாங்கொள்ளி. இப்போ எப்படி ஆபரேஷன் எல்லாம் செய்கிறாயோ?" என அவளை வம்புக்கு இழுத் தான். அவனது அதீதமான மகிழ்வைக் காண அஞ்சுவுக்கு வியப்பாக இருந்தது. அதிசயமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள். மனம் நிறைந்த வர்களின் புகழும் அதைப் பற்றிப் பேசுவதும் ஓர் இன்பம் என எங்கோ படித்தது நினைவில் வர அவனைப் பரவசத்துடன் நோக்கினாள். போகும் போது வழியில் ஒரு கல்லைக் காட்டி "இது நினைவில் இருக்கா" எனக் கேட்டான். புரியாமல் அவனை நிமிர்ந்து பார்த்தாள். ஒரு நாள் எல்லோருமாகத் தோட்டத்திலிருந்து ஓடி வரும்போது அவன் விழுந்து அந்தக் கல்லில் தலை அடிபட்டு நெற்றியில் காயம் அஞ்சு பயந்து போனாள். உடனே அந்தப் பத்து வயதில் தனக்குத் தெரிந்த முதலுதவி யாக தன் கையிலிருந்த கைக்குட்டையை அந்த இடத்தில் வைத்து அழுத்திப் பிடியுங்கோ எனச் சொல்லி கையைப் பிடித்து அழுதழுது வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போனாள். அதை ஞாபகப்படுத்தியவன் "அன்று என் இரத்தத்தை விட உன் கண்ணீர்தான் அதிகமாகப் போனது நினைவிருக்கா?" என இதழ்களில் குறும்பு தவழக் கேட்டான். "அன்று இரத்தத்தைப் பார்த்து அழுத அஞ்சு இன்று ஆபரேஷன் செய்கிறாள் என்று அவினாஷ் சொன்னபோது என்னால் நம்பவே முடியவில்லை தெரியுமா?" என்றான் அந்த வார்த்தைகளில் ஒரு பெருமை தொனித்தது. 'அட அசட்டு அம்மாஞ்சியே! ரத்தத்துக்கு யார் பயந்தார்கள், அன்று என்

விழிகள் உனக்காகவல்லவா நீர் உதிர்த்தன' எனத் தனக்குள் நினைத் தவள் எதுவுமே பேசாமல் நாணித் தலை கவிழ்ந்தாள். "இந்தக் கல் எனக்கு ஒரு நினைவுச் சின்னம் அஞ்சு! அன்று நாமெல்லாம் கள்ளம் கபடமின்றி விளையாடியதை ஞாபகப்படுத்தும்" என்றான். அவன் என்ன சொல்கிறான் எனப் புரிந்தும் பிடிவாதமாகப் புரியாத மாதிரி இருந்தாள்.

வீட்டுக்குப் போய் அந்த நகைப் பெட்டியைத் திறந்து ஒவ்வொன்றாக வெளியில் எடுத்தாள். அதன் அடியில் ஒரு சிறு துண்டுக் காகிதம் இருந்தது எடுத்து விரித்தாள் அத்தையின் கையெழுத்தை நீண்ட நாட்களின் பின் காணக் கண்ணீர் பொலபொலத்தது. அதிலே,

"அஞ்சும்மா!, இந்த நகைகள் மட்டுமல்ல என் பிள்ளையும் நீ என்று வந்தாலும் உனக்காகக் காத்திருப்பான். உன் மனம் எனக்குத் தெரியும் கண்ணம்மா! அதிக காலம் கடத்தாமல் வந்து இரண்டையும் ஏற்றுக் கொள். நீ விரைவாக வரவேண்டுமென்று கந்தசாமியாரிடம் வேண்டி யுள்ளேன்" என இருந்தது.

'என்ன இது வந்து வசமாக மாட்டிக் கொண்டேனோ?' என இருந்தது. அத்தையின் சொல்லைத் தட்டவும் முடியவில்லைத் தன் மனவுறுதியைத் தளர்த்தவும் அவள் ஆயத்தமாக இல்லை. அநாதைகளாக ஆதரவற்று ஆஸ்திரேலியாவில் நின்றதை அவள் நெஞ்சம் என்றும் நினைவூட்டியது. அத்தையின் அன்பு கூடக் கிடைக்காமல் செய்தார்களே என உள்ளம் வெதும்பியது. எல்லோரும் அப்படி அப்படியே இருப்பதுதான் நல்லது. கல்யாணம் மணவாழ்க்கை என்ற எல்லா இளம் பெண்களுக்கும் இருக்கும் எந்தக் கனவும் அவள் மனத்தில் அந்த வயதில் வரவே யில்லையே! காலம் கடந்த பின் அவையெல்லாம் தேவையில்லை. அதனால் இங்கு நடப்பது நடக்கட்டும் நான் போவோம் எனத் தீர்மானித்தாள்.

ஆனால் மறுநாள் ஆஸ்திரேலியாவிலிருந்து பிரேமா உட்பட அனைவரும், ரஷ்மி, நீரஜா குடும்பங்களும் சொல்லாமல் கொள்ளாமல் வந்திறங்கியபோது அஞ்சு பத்ம வியூகத்துக்குள் அகப்பட்ட அபிமன்யு போல மீள வகை தெரியாமல் தவித்தாள். பிரேமா "நீ என் பெண்ணா னால் கல்யாணத்துக்குச் சம்மதி. தாலி கூறை எல்லாம் கொண்டு வந்து விட்டேன். புட்டபர்த்தியில் பகவான் தொட்டு ஆசீர்வதித்தார். இதைவிட உனக்கு வேறென்ன வேண்டும்" எனக் கேட்டார். எல்லோரும் சுற்றி நின்று ஒன்றையே சொன்னபோது அவளுக்குத் தலை சுற்றியது, எதுவுமே புரியவில்லை பேசாமல் எழுந்து போய்விட்டாள்.

ஆஷா தொலைபேசியில் "திருமணம் எப்போது? அஞ்சு எல்லோரும் வர இருக்கிறோம். ஒரு வான் ஒழுங்கு செய்திருக்கிறேன். இதைச் சாக்காக வைத்து நாகதீபம் போவதற்கு நிஷங்காவின் அம்மா ஆயத்தம் செய்கிறார்'' என்றாள். இவர்களும் விடமாட்டார்களா என எரிச்சல் மூண்டது. "அதெல்லாம் ஒன்றுமில்லை ஆஷா. நான் விரைவில் அங்கு வந்து ஆஸ்திரேலியா போகிறேன்'' எனச் சொல்லித் தொடர்பைத் துண்டித்தாள்.

தனிமையில் நீரஜாவிடம் "இதற்குத்தானா எல்லோருமாகச் சேர்ந்து என்னை இங்கு அனுப்பி வைத்தீர்கள்?" எனக் கேட்டாள். "நாங்கள் எங்கே அனுப்பினோம் நீயாகத்தானே வந்தாய்" என்றாள் வார்த்தைகள் சிறிது சூடாக வந்தது. "அது சரி அஞ்சு நீ ஏன் வந்தாய்?" எனக் கேட்டாள். "ஒரு அக்கறை அனுதாபம் என்று வையேன்'' என்றாள். "அது ஏன் உனக்கு அவரிடம் வர வேண்டும் அஞ்சு?"என மீண்டும் மடக்கினாள். "இதென்ன மடத்தனமான கேள்வி நீரு. அவர் என் அத்தை மகன். நாங்கள் சிறு வயதில் ஒன்றாக வளர்ந்தோம் அந்த அன்பு இருக்காதா"? "அந்த அன்பு மட்டும்தானா? வேறு ஒன்றுமில்லையா? ஒன்றுமே இல்லையா! அஞ்சு உன் மனத்தைத் தொட்டுப் பார்த்துப் பதில் சொல்லு" என்றாள். அஞ்சு மௌனமானாள். "அவருக்குத் திருமணம் செய்து வைக்க இவ வந்தாவாம். அவர் இன்னொரு பெண்ணின் கழுத்தில் தாலி கட்டுவதை உன்னால் பார்க்க முடியுமா? அதை உன் மனம் தாங்குமா? சும்மா வீம்புக்குப் பிடிவாதம் செய்யாதே அஞ்சு. நீ பட்ட கஷ்டங்கள் துன்பங்களுக்கெல்லாம் காரணம் நம் விதிப் பயன் கர்மா என்று தெரிந்துமா? இப்படிச் செய்கிறாய். அனைவரிடமும் அன்பு செய் அகந்தையை அகற்று என்ற பகவானின் வார்த்தைகள் எல்லாம் வெறும் ஏட்டுப்படிப்புக்கு மட்டும்தானா? அதன்படி நீ நடக்க மாட்டாயா"? எனக் கேட்டாள். அஞ்சு அமைதியாக இருந்து கண்ணீர் வடித்தாள். "அம்மா எவ்வளவு ஆசையாக 'என் பெண்ணின் திருமணம்' என்று வந்தார். எங்கள் திருமணத்திற்குப் புட்டபர்த்திக்குப் போனாவா? வீட்டிலேயே "ஸ்வாமி எல்லாம் நன்றாக நடக்க வேண்டும்" எனப் பிராத்தித்தார். ஆனால் உனக்காக அங்கே போய் தர்ஷனில் பல நாட்கள் காத்திருந்து பகவானிடம் ஆசீர்வாதம் வாங்கி வந்தார். அத்தகைய ஒரு பாக்கியம் யாருக்குக் கிடைக்கும்? அதையெல்லாம் வீணாக்கப் போகிறாயா?" எனக் கோபமாகக் கேட்டாள்.

அப்பொழுது அங்கே வந்த ரஷ்மி "உனக்கு நானும் சில விளக்கங்கள் தர வேணும் அஞ்சு. உங்களை ஆஸ்திரேலியா போகவிட்டது அங்கே

போய் நீங்கள் கஷ்டப்பட்டது எல்லாம் உனக்குக் கோபம் என்று எனக்குப் புரிகிறது. ஆனால் இங்கிருந்தால் நிலைமை இன்னும் மோசமாக இருந்திருக்கும். அப்பா, அவினாஷையும் அண்ணா மாதிரி ஒரு விவசாயி ஆக்கியிருப்பார். உன்னையும் ஆரபியையும் எங்கள் வீட்டு மாட்டுத் தொழுவத்தில் வேலை செய்ய விட்டிருப்பார். அதைப் பார்த்து நீ இரத்தக் கண்ணீர் வடித்திருப்பாய். அங்கே நீங்கள் குளிரிலும் பனியிலும் பட்ட கஷ்டத்தைவிட இது மேலான மனக் கஷ்டமாக இருந்திருக்கும். இன்னும் ஒன்று தெரிந்து கொள், ஒவ்வொரு தடவை உன் கடிதம் வரும் போதும் 'என்ன அந்த அநாதைகளின் கடிதமா? அதிர்ஷ்டம் கெட்டதுகள் தாய் தகப்பனை முழுங்கியதுகள்' என அப்பா சொல்லிக் கொண்டே இருந்தார். அதைக் கேட்க முடியாமல் தான் கடிதம் எழுதாமல் விட்டோம். நீங்கள் கஷ்டப்பட வேணுமென்று யாரும் நினைக்கவில்லை அஞ்சு! நாளும் பொழுதும் எமது பிரார்த்தனை நீங்கள் நன்றாக இருக்க வேண்டு மென்றுதான் இருந்தது. அதற்குப் பலன் கிடைத்துவிட்டது. உங்கள் எல்லோரையும் இன்று நல்ல நிலைமையில் பார்க்க மிகவும் மகிழ்ச்சி யாக இருக்கிறது. அது போதும். யாருக்கும் உங்கள் மேல் அன்பு குறைய வில்லை, அண்ணாவும் அப்படியேதான் இருக்கிறான். அம்மாவின் கடைசி ஆசையும் உங்கள் திருமணம் நடக்க வேண்டுமென்பதுதான். இது நடந்தால் அலையும் அந்த ஆத்மா பார்த்துச் சந்தோஷப்படும், இனி முடிவு உன் கையில்" எனக் கூறினாள்.

அஞ்சு கண்களில் குறும்பு மின்ன இருவரையும் பார்த்துச் "சபாஷ்" எனக் கூறி முறுவலித்தாள். அதை வியப்புடன் பார்த்தவர்கள் என்ன எனக் கேட்டனர். "இருவரும் எங்கே அடிக்க வேண்டுமோ அங்கே அடித்து என்னை வீழ்த்திவிட்டு முடிவை என்னிடம் விட்டீர்களா?" எனக் கேட்டாள். இருவரும் அவளின் இரண்டு பக்கத்திலும் இருந்து அணைத்துக் கொண்டு "அப்படியானால் என்ன அஞ்சு" எனக் கேட்டனர். "நான் அம்மா அப்பாவிலும் மேலாக மதிக்கும் பிரேமா அம்மாவையும், அத்தை யையும் சொல்லி என்னைப் பேசவிடாமல் செய்து விட்டீர்கள். எல்லோரின் விருப்பும் அதுவானால் இனி நான் என்ன சொல்ல? எதுவோ செய்யுங்கோ" எனக் கூறி வெட்கித் தலை கவிழ்ந்தாள். "ரொம்ப நன்றி அண்ணி!" என இருவரும் அவளை இறுக அணைத்து இரு கன்னத்திலும் முத்தமிட்டனர். "சீ விடுங்கோ" என அவர்களைத் தள்ளியவள், "என்ன இது உனக்கென்ன அண்ணி?" என்றாள் நீரஜாவைப் பார்த்து. "ஆமாம் கேசவன் அண்ணா என்னைத் தங்கையாகத் தத்தெடுத்துக் கொண்டார்" என்றாள். "அதுதான் திடீரெனக் கட்சி மாறினாயா? இரு! இரு!

உன்னைப் பின்னர் கவனிக்கிறேன்” என்றவள், “இருந்தாலும் நீரு உன் திட்டத்தின் மகத்தான வெற்றிக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள், அமெரிக்காவில் இருந்து கொண்டே சத்தமில்லாமல் காரியத்தைத் திறம் படச் சாதித்துவிட்டாய்” என்றாள். “எல்லாம் உனக்காகத்தான் அஞ்சு” என நீரஜா அவளை அன்புடன் அணைத்துக் கொண்டாள்.

அஞ்சு சம்மதித்த பின் அந்த வீடு களைகட்டியது. எல்லோரின் மகிழ்ச்சி யையும் கண்டு அஞ்சுவும் மகிழ்ந்தாள். குமரேசன்-பிரேமா தம்பதிகள் பெற்றவர்கள் ஸ்தானத்தில் முன்னின்று பாணிக்கிரணம் செய்து மண மகளை மணமகன் கையில் கொடுக்கத் திருமணம் வெகு விமரிசையாக நடந்தது. ஆஷா உட்பட அனைவரும் வந்து வாழ்த்தினர். அளவிடற்கரிய ஆனந்தம் எல்லோர் முகங்களிலும் தெரிந்தது. “இன்றுடன் உன் துன்பம் எல்லாம் மறையட்டும் அஞ்சு” என நீரஜா கண்கள் பனிக்கக் கூறினாள்.

அன்று இரவு படுக்கைக்குப் பக்கத்தில் இருந்த அந்தத் தந்தப் பேழையைப் பார்த்து அஞ்சு ஆச்சர்யமடைந்தாள். ஆர்வம் மேலிட அதை எடுத்துத் திறந்தவளுக்கு அதற்குள் ஓர் இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. சிறு வயதில் அவள் கேசவனுக்குக் கொடுத்த பரிசுப் பொருட்கள் அவர்கள் இருவருமாகச் சிறு வயதில் எடுத்துக் கொண்ட சில படங்கள், அத்துடன் அந்தக் கைக்குட்டையும் இரத்தக் கறை சிறிதுமில்லாமல் துவைத்து அழகாக மடித்து வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்து வியந்தவள் அவளையே வைத்த கண் வாங்காமல் விழிகளில் அன்பும் இதழ்களில் குறும்பும் ஒளிரப் பார்த்துக் கொண்டிருந்த கணவனிடம் “அப்போதேவா?” எனக் கண்களில் நாணம் மின்னக் கேட்டாள். “ஆம்” என அவன் விழிகள் குறும்புடன் விடை பகன்றன. அதைப் பார்த்த அந்த மேலை நாட்டு அதி மேதாவி டாக்டர் வெட்கித் தலை குனிந்து செய்வ தறியாது அந்தக் கிராமத்து விவசாயியின் மார்பிற்குள் தன் முகத்தை மறைத்துக் கொண்டாள். அவளை அன்புடன் அணைத்தவன், குனிந்து அவள் காதிற்குள் “உனக்கு எப்போது அஞ்சு” எனச் செல்லமாகக் கேட்டான். அஞ்சனங்களை மெதுவாக நிமிர்த்தி அவனைப் பார்த்த அஞ்ஜனா “தெரியாது” எனக் கூறி எழுந்த நாணத்தை மறைக்க மேலும் தன்னை அவன் பரந்த மார்புக்குள் புதைத்துக் கொண்டாள். அது கேசவனின் இதயத்தை ஊடுருவி அவனைப் பேரின்பப் பெரு வெள்ளத் தில் ஆழ்த்தியது. இதுவரை காத்திருந்தது வீணில்லை என அவன் உள்ளம் உவகித்தது. தன்னுள் எழுந்த அபரிமிதமான அன்பையும்

அளவிடற்கரிய ஆனந்தத்தையும் இயம்ப வார்த்தையின்றித் தத்தளித் தவன், தன் மனைவியை அன்புடன் அணைத்து அவள் நெற்றியில் தன் இதழ்களை முதன்முதலாகப் பதித்தான். உடனே அஞ்சுவின் இதயப் பேழை சுநாதம் இசைத்தது. அங்கே அஞ்சு தன்னையும் தான் ஒரு பிரசித்திபெற்ற டாக்டர் என்ற தனது பெயர், புகழ் அனைத்தையும் மறந்து கேசவனுள் ஐக்கியமாகிக் கொண்டிருந்தாள். அவள் உள்ளம் ஆழ்கடல் போல் எதுவித சலனமோ வேதனையோ அற்ற அமைதியில் திளைத்தது. அவள் உடலெங்கும் ஓர் இன்ப ஊற்றுப் பரவி அவளை மெய்மறக்கச் செய்தது. அந்நிலையில் அஞ்சு "இதுதான் என்றென்றும் நிரந்தரம், எந்தப் பெண்ணுக்கும் மிகவும் அவசியம்" என உணர்ந்து உவகை யுற்றாள்.

• • •

கலப்பை - தை, சித்திரை, ஆடி, ஐப்பசி 2003



## எழுத்தாளர் "சாயிசசி" ஓர் அறிமுகம்

திருமதி இராசலட்சுமி சிவஞானப்பிரகாசம் (இராஜி) அவர்கள் யாழ் குடாநாட்டைச் சேர்ந்த 'கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்'. ஏறத்தாழப் பதினைந்து வருடங்களாக அவுஸ்திரேலியாவின் சிட்னி மாநகரில் வசித்து வருகின்றார். முன்னாள் இலங்கை வங்கி அலுவலரான இவர் தற்பொழுது அவுஸ்திரேலிய அரசாங்க அலுவலகத்தில் வரியியல் சட்ட வல்லுனராகப் பணிபுரிகின்றார்.

சிறு வயதிலிருந்தே தமிழார்வம் மிக்க இவர் மாணவர் சங்கங்களில் பதவிகளை வகித்து மேடைப்பேச்சுக்கள், விவாதங்களில் பங்குபற்றியதுடன் "மனோன்மணீயம்" போன்ற தமிழ் இலக்கிய நாடகங்களையும் இயக்கிக் கல்லூரியின் முக்கிய வைபவங்களில் மேடையேற்றியுள்ளார்.

அண்மையில் இராமநாதன் கல்லூரி பழைய மாணவர் சங்க சிட்னி கிளையின் "பத்தாவது ஆண்டு நிறைவு விழா மலர்" ஆசிரியராக இருந்து அம்மலரை அழகுற வெளியிட்டுப் பலரின் பாராட்டையும் தமது சங்கத்துக்குத் தேடிக்கொடுத்தார். அதில் வெளியான இவரது படைப்பான "தேவரிஷி நாரதர் தரிசித்த கலைக்கோயில்" என்ற உருவகக் கதை அனைவராலும் பாராட்டப்பட்டது.

"தந்தப்பேழை" குறுநாவலுடன் பல நெடுங்கதைகளும் சிறுகதைகளும் இந்நூலில் அடங்கியுள்ளன. தமிழ் இலக்கிய ஆற்றலும் இறை நம்பிக்கையும் மிக்க சாயிசசி அவர்களின் ஆக்கங்களைப் படிப்பவர் பயனுறும் வகையில் இலக்கிய நயமும், ஆன்மிகக் கருத்துக்களும் பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபாவின் அருளுரைகளும் ஆங்காங்கே புதைந்துள்ளமை போற்றுதற்குரியது.
புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் அன்றாடப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டுள்ள இவரது படைப்புக்கள் அவுஸ்திரேலியாவில் மட்டுமன்றி இலங்கை, இந்தியாவிலும் கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, இங்கிலாந்து போன்ற நாடுகளில் உள்ள வாசகர்களின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சாயிசசி அவர்களின் கலைத்தொண்டு மென்மேலும் தொடர வாழ்த்துகின்றோம்!